
காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

# அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்



டாக்டர். ந.சுப்புரெட்டியார்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்

(ஆசிரியரின் 89 அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன பொன்னடி'
'வைணவ இலக்கியமாமணி' 'கலைமாமணி'
'ஆய்வுத் தமிழ அரசு' 'தமிழ் வாகைச் செம்மல'

பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்புரெட்டியார்

M.A., B.Sc., L.T., Vidwan, Ph D., D Lit.,

(1) பேராசிரியர் தமிழத்துறைத் தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக்கழகம

(2) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்
தமிழ் இலக்கியத் துறை (செ ப க )

## அவ்வை

எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 55688527

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | **காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்** |
| நூலாசிரியர் | : | **டாக்டர் ந.சுப்புரெட்டியார்** |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| ஆண்டு | : | டிசம்பர் 2004 |
| நூல் வகை | : | கட்டுரை |
| பக்கங்கள் | : | XIV + 190 = 204 |
| நூல் அளவு | : | கிரவுன் |
| ஒளி அச்சு | : | கிளாசிக் டிசைன்ஸ், சென்னை - 17 |
| அச்சிட்டோர் | : | ஜே.எம்.ப்ராசஸ், சென்னை - 5 |
| விலை | : | ரூ. 55.00 |

*வெளியீடு :*

**அவ்வை**

எண்.1, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
☎ 55688527

காஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரிய சுவாமிகள்

தொண்டே செய்து
　　என்றும்தொழுது வழியொழுகப்
பண்டே பரமன்
　　பணித்த பணிவகையே (திருவாய் : 10.4:9)
- நம்மாழ்வார்



## வைகுந்தவாசி
## பி.ப. அண்ணா சுவாமிகள் அவர்கள்

தோன்றில் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று (236)

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன் (294)
- திருவள்ளுவர்

பிரதிவாதி பயங்கரம்

# அண்ணா சுவாமிகளை

## நெஞ்சில் நிறுத்தும்
## நேற்றைய இன்றைய நாளைய
## பக்தசீலர்கட்கு

### அன்புப் படையல்

*"நீவிரே என்றன் சீடர்" என் றென்னை*
*நெஞ்செலாம் நெகிழ்த்திடத் தமது*
*நாவினால் என்றன் மெய்யெலாம் சிலிர்ப்ப*
*நவின்றிடு பெருந்தகை! சால்பு*
*மேவிய அண்ணா சாமிதம் நினைவை*
*மேன்மையாய் நெஞ்சினில் நிறுத்தும்*
*ஆர்வலர்க் கெல்லாம் அடியனேன் படைக்கும்*
*அன்புறு படையல்இப் பனுவல்!*

**Dr. V.K.N.S. Raghavan**
Professor and Head
Dept. of Vaishanavism

University of Madras
Chepauk, Triplicane,
Chennai - 600 005.

## அணிந்துரை

"தங்கக்காப்பு அண்ணா" என்று புகழ்மிக்க ஸ்ரீ உ.வே. காஞ்சி பி.ப அண்ணங்கராசாரிய சுவாமிகள் எனும் இனிய நூல் பேராசிரியர், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களால் மிகநேர்த்தியாகவும், திறம்படவும் இயற்றப்பட்டுள்ளது. ஆதலின் இதற்கு அணிந்துரை என்பதே இன்றியமையாததல்ல. இருப்பினும் மேன்மைமிகு பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அடியேன் சிறிய ஞானத்தன் சில மேற்கோள்களைத் தெரிவித்து அமைய விழைகிறேன்.

தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஜோதி காஞ்சி பி.ப. அண்ணா ஸ்வாமி... ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு அரும்பாடுபட்டவர், உபந்யாஸம் செய்கையில்... ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாசம், புராணங்கள், ஆழ்வார் - ஆசார்யர் ஸ்ரீ ஸூக்திகள் எல்லாவற்றையும் கடல்மடை திறந்தாற்போல் தட்டுத்தடங்கலின்றி மேற்கோள் காட்டுவார்.

"ஆணல்லன், பெண்ணல்லன்", (திருவாய் 2.5:10) விளக்கத்தில் - "...பரப்பிரமமம் சூனியப்பொருள் என்று சொல்வது அழ்வாருக்கு உடன்பாடாகில் சொல்லிலக்கணத்திற்குப் பொருத்தமாக அவர் அருளிச் செய்திருப்பார். அங்ஙனமின்றி ஆண்பாலுக்குரிய 'அன்'

விகுதியையிட்டு அருளிச் செய்திருக்கையாலே எம்பெருமான் சாதாரணபுருஷன் அல்லன, புருஷோத்தமன் என்று தெரிவிக்கப்பட்ட தாகாதோ?' என்று அருளிச்செய்தார் ஒரே சாதியிலுள்ள மற்றைய பொருள்கள் இவற்றினின்றும் விலக்கிக் காட்டியது உளங்கொள்ளத் தக்கதாகும்.

ஸ்ரீ உபவே. காஞ்சி மஹாவித்துவான் பி.ப. அண்ணா ஸ்வாமிகள்.

***''அத்யாத்மக்ரந்தநிர்மாணம், அந்யேஷாம் ச அவபோதநம் அர்ச்சாவதார - ஸேவாச...''***

என்ற சுலோகத்திற்கிணங்க ஸ்ரீவைஷ்ணவ ஆன்மிக நெறிப் பாதுகாவலராக விளங்கியவர் என்பதை, பேராசிரியர் மிக உன்னதமான சான்றுகளுடன் விளக்கிக்காட்டியுள்ள பாங்கு அனைத்துத் தமிழ் வல்லுநர்களாலும் பாராட்டத் தக்கதேயாம்.

ஆகவே இந்நூல் அனைத்து வைணவர்களாலும், மற்றும் தமிழர்களாலும் படித்துப்படித்து, சுவைத்துச் சுவைத்து இன்புறத்தக்கது என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. மற்றும் அனைத்து நூலகங்களையும் அலங்கரிக்கத்தக்கது இந்நூல் என்பது மிகையாகாது.

சென்னை - 5
31.10.2004.

- ஸ்ரீவைஷ்ணவதாஸன்
வ.கி.ஸ.ந. இராகவன்
(VKNS. Raghavan)

# நூல் முகம்

*'ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப*
*ஒருகாலும் காமருசீர் அவுணன் உள்ளத்து*
*எண்மதியும் கடந்துஅண்ட மீது போகி,*
*இருவிசும்பி னூடுயோய் எழுந்து மேலைத்*
*தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்*
*தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு*
*மண்முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை*
*மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே'*

- திருமங்கையாழ்வார்

திருப்பதியில் ஏழுமலையான் திருவடிவாரத்தில் இயங்கி வரும் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் என் முயற்சியால் தமிழக அரசின் நிதி உதவியால் தொடங்கப் பெற்ற தமிழ்த் துறையின் பேராசிரியன்- துறைத் தலைவனாகப் பணியாற்றியபோது (1960-1977) 'நாலாயிரமும் நம்மாழ்வார் சமயத் தத்துவமும்' என்ற தலைப்பில் என் பிஎச்.டி. பட்டத்திற்கு ஆய்ந்தபோது, திரு. பு.ரா. புருஷோத்தம நாயுடுவின் திருவாய்மொழி - ஈட்டின் தமிழாக்கம், காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய

*1. திருநெடுந் - 5*

சுவாமிகளின் நாலாயிரம் திவ்வியார்த்த தீவிகை ஆகிய இரண்டும் துணையாக அமைந்தன. வைகுண்ட வாசியாகிய நம்பிள்ளையும் பூவுலக (காஞ்சி)வாசியாகிய பி.ப. அண்ணா சுவாமிகளும் ஏகலைவனுக்கு துரோணர் மானசீகமாக ஆசி கூறியது போல எனக்கு ஆசி கூறி உதவி வந்தனர்.

அக்காலத்தில் அண்ணா சுவாமி அவர்களை நேரில் பார்த்ததும் இல்லை; அவர்தம் திவ்வியார்த்த தீபிகையைக் கேள்வியுற்றதும் இல்லை.[2] அக்காலத்தில் திருப்பதியில் பல்கலைக்கழகக் கீழ்த்திசை ஆராய்ச்சித் துறையில் பணியாற்றி வந்த வடமொழிப் புலவர் திரு. சீநிவாசவரதன் (அண்ணா சாமியின் அணுக்கத் தொண்டர்) புருஷகாரமாக அமைந்து திவ்வியார்த்த தீபிகையின் அனைத்துப் பகுதிகளையும் என்னிடம் சேர்ப்பித்தார். (அதன் விலை ரூ.400/அவரிடம் தந்தாக நினைவு).

தீபிகையின் பக்கங்கள் 'பிழை மலிந்த சருக்கங் களாகக்' காட்சியளித்தன. வடசொற்களின் பிழையை அறிந்து கொள்ளாமல் படிக்க இயலாது. அப்போது மயிலை விவேகாநந்தர் கல்லூரியில் பணியாற்றிய திரு. வேங்கடராகவாசாரியர் என்பவர் திருப்பதியில் ஏற்படுத்தப் பெற்றுள்ள வடமொழி ஆய்வு நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றி வந்தார். நான் ஆறு ஆண்டுகள் குடும்பமின்றி மாணியாக வாழ்ந்தது போல் அவரும் குடும்பமின்றி மாணியாகவே வாழ்ந்து வந்தார். அவர் கோவிந்தராஜ சுவாமி சந்நிதித் தெருவில் ஓர் இல்லத்தில் தங்கியிருந்தார். நான் தங்கியிருந்த அறைக்கும் அவர் இருந்த இல்லத்திற்கும் குறுக்கு வழி இருந்தது. மாலை நேரங்களில் சுமார் 8 மணி வரையில் அவர் இல்லத்தில் தான் இருப்பேன். தமிழை நன்கு அறிந்தவராதலால் என்னிடம் எழும் அனைத்து ஐயங்களையும் போக்குவார்;

2 திருவாய்மொழி பற்றிய வியாக்கியானங்களைப் பார்த்ததுண்டு. மணி பிரவாளநடையிலமைந்த அவற்றைப் படித்தும் புரிந்து கொள்ளும் ஆற்றலும் இல்லை. நெறிகாட்டக் கூடிய அறிஞர்களும் இல்லை.

தீபிகையிலுள்ள வடமொழிப் பதங்களை பிழை நீக்கி விளக்குவார்.

உவமை சொல்லும் இடங்களிலும் பிற சிக்கலான இடங்களிலும் அவ்வப்போது எழும் ஐயங்களை விளக்கு மாறு அண்ணா சாமிக்கு எழுதுவேன். மறு தபாலில் அஞ்சலட்டையில் விளக்கம் வந்து விடும். இப்படி வந்தவை நூற்றுக்கு மேலிருக்கும். அவற்றைப் பாதுகாத்து வைக்க வில்லை.

அண்ணாசாமியின் சதாபிஷேகத்தின்போது அவருக்கு **'மலை நாட்டுத் திருப்பதிகள்'** நூலை அன்புப் படைய லாக்கி ஆசி பெற்ற பிறகு அடிக்கடிப் பார்க்கும் பேறு இருந்து வந்தது. ஒரு சமயம் அவரிடம் ''டாக்டர். உ.வே. சாமிநாத அய்யருக்கு கி.வா. ஜகந்நாதன் துணையாக அமைந்ததால் அவருடைய நூல்களில் பிழையே மருந்துக்குக் கூடக் கிடைப்பதில்லை. திவ்வியார்த்த தீபிகையின் பக்கங்கள் பிழைமலிந்த சருக்கங்களாகக் காணப்பெறுகின்றன. தாங்கள் ஒரு குத்து விளக்கு போன்ற ஒருவரைக் கூட சீடராகக் கொள்ளவில்லையே'' என்று வருத்தத்துடன் கூறினேன்.

கோவிலுக்குப் பிரசாதத்துக்காக சில வைணவ இளைஞர்கள் வருவார்கள். "வாருங்கள் ஏதாவது சொல்லுகிறேன்; தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லலாம் என்று திரும்புவதற்கு முன்னர் 'படிக்க விரும்பாதவர்கள்' மாயமாய் மறைந்து விடுவார்கள். நீங்கள் விபூதி அணிந்து கொண்டு ஆர்வமாய் வைணவ தத்துவங்களைத் தெரிந்து கொள்ளத் துடிக்கின்றீர்கள். நீங்கள்தான் என் பிரதம சீடர்" என்று சொன்னார்கள். எனக்கு ஒரே அதிரிச்சி; உரோமங்கள் சிலிர்த்தன. கண்கள் ஆனந்தக் கண்ணீர் நிறைந்த குளங்க ளாயின. இந்த நினைவுகளுடனும் உணர்வுகளுடனும் இந்த நூல் உருவாயிற்று.

தாம் பிறந்த குலம் வடகலையாக இருந்தாலும், வடகலை தென்கலை வேற்றுமை பாராது இராமநுசர் வைணவத்தை உள்ளத்தில் பதித்து வாழ்பவர். என் நெடுநாளைய நண்பர் டாக்டர். V.K.S.N. இராகவன்; சென்னைப் பல்கலைக்கழக வைணவத்துறையில் பேராசிரிய ராகவும் துறைத் தலைவராகவும் பணியாற்றி வருபவர். 'விசிட்டாத்வைத இலக்கிய வரலாறு' என்ற இவர் தம் (பிஎச்.டி. பட்டத்திற்குரியது) ஆங்கில நூல் மிகு புகழ் பெற்றது. இது தவிர பல அரிய வைணவ ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வரைந்தவை - வைணவ அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றவை. இத்தகைய உழுவலன்பர் இந்த நூலுக்கு அணிந்துரை அளித்தது இந்நூலின் பேறு; என் பேறுங்கூட. அணிந்துரை அருளிய அன்பருக்கு என் இதயங் கனிந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலின் கைப்படியைத் தமிழ்ப் பணியே தெய்வப்பணி என்ற குறிக்கோளை முன் வைத்துப் பணியாற்றிவரும் அவ்வை பதிப்பகம் அன்புடன் ஏற்று அச்சு வடிவம் பெறச் செய்து அம்பலத்திற்குக் கொணர்ந்து தமிழ்கூறு நல்லுலகம் எங்கும் நடமாட விட்ட பதிப்பக உரிமையாளர் இறையுணர்வு மிக்க திருமதி. தேவகி ராமலிங்கம் அவர்கட்கு என் அன்பு கலந்த நன்றி என்றும் நிலையானது.

இந்நூல் அச்சாகும்போது மூலப்படியுடன் பார்வைப் படிகளை ஒப்பிட்டுத் திருத்தம் செய்து உதவிய என் அபிமான புத்திரி டாக்டர். மு.ப. சியாமளாவுக்கு என் ஆசி கலந்த நிலையான நன்றி என்றும் உரியது.

ஆசாரியப் பெருந்தகையின் திருவருள் வியக்கும் வண்ணம் அவர்தம் அன்புச் சீடராகிய அடியேன் பக்தியுடன் வரைந்த நூலை அண்ணாசாமியை உள்ளத்தில் பதித்த வண்ணம் அவர்தம் புகழ் பரப்பி வரும் ஆர்வலர் அனைவர்க்கும் பக்தி கலந்த அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன்.

என் வாழ்நாளின் இறுதிக் காலப் பகுதியில் (அகவை 89ஐ கடந்த நிலை) இந்த நூல் வரைவதற்குரிய சிந்தனையும், எழுதுங்கால் நல்ல உடல், உள நலங்களையும் கூரிய கண்ணொளியையும் நல்கிவரும் என்னுள்ளே நிலையாக எழுந்தருளியிருக்கும் அல்லிக்கேணி அச்சுதனை வாழ்த்தி வேதவல்லித் தாயாரின்மூலம் எண்ணற்ற சரணா கதி வணக்கங்கள்.

*முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை, மூவா*
*மூவுலகும் கடந்துஅப்பால் முதலாய் நின்ற*
*அளப்பரிய ஆரமுதை, அரங்கம் மேய*
*அந்தணனை, அந்தணர்தம் சிந்தை யானை*
*விளக்கொளியை, மரகதத்தைத் திருத்தண் காவில்*
*வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு*
*'வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக!' என்று*
*மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே!*[3]

– திருமங்கையாழ்வார்

'வேங்கடம்'
AD-13-14, அண்ணா நகர்
சென்னை – 600 040.
31.10.2004

ந. சுப்பு ரெட்டியார்
26211583

3. திருநெடுந் - 14

# உள்ளுறை

அன்புப் படையல் v

அணிந்துரை vi

நூல் முகம் viii

ப.எண்

1. தோரணவாயில் 1
2. பிறப்பும் வளர்ப்பும் 4
3. திருமண வாழ்க்கையும் மேற்கல்வியும் 9
4. மறைந்தும் - மறையாத சோதி 36
5. எழுத்தோவியங்கள் 50
6. சுவாமியின் தமிழ்ப்புலமை 58
7. சுவாமியின் இறையநுபவம் 78
8. தீபிகையின் நயப்பகுதிகள் 96
9. திவ்வியார்த்த தீபிகை - வழிநூல் 132
10. சம்பிரதாய வைணவ மரபுகள் 147
11. அகப்பொருள் தத்துவம் 153
12. முடிவுரை 184

## பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள்

பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள்

# 1. தோரணவாயில்

*ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும்*

(திருவாய் 3.3:1)

ஒரு காலத்தில் மன்னர்குல பரம்பரை பற்றிய வரலாறே நாட்டு வரலாறு என்று கருதப் பெற்றது. நாடு விடுதலை பெறுவதற்குமுன் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வரலாறு படித்த மாணவர்கள் மன்னர் பரம்பரை வரலாறு படித்து வந்ததை நினைவு கூரலாம். நாளடைவில் மனித மனம் விரிந்தது. மனித நாகரிகம் வளர்ந்த வரலாற்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. பல்வேறு துறைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதன் விளைவாக தன்- வரலாறு, வாழ்க்கை வரலாறு, இலக்கிய வரலாறு, மொழிவரலாறு, அறிவியல் வரலாறு என்ற துறைகளிலெல்லாம் வரலாறுகள் தோன்றத் தொடங்கி வளர்ந்து வருகின்றன.

பக்தி இலக்கிய காலம் முகிழ்க்கின்றது. சைவ சமயக் குரவலர்கள் இறையருளால் அருளிச் செயல்கள் பாடுகின்றனர். ஆழ்வார்களின் பாசுரங்கள் அருளிச் செயல்களாகத் தோற்றமாகின்றன. மக்கள் அவற்றில் உள்ளத்தைப் பறிகொடுத்துப் பாடி மகிழ்கின்றனர். வைணவ ஆசாரியர்கள் தோன்றுகின்றனர். மணிப்பிரவாள நடையில் வியாக்கியானங்கள் வரையப்பெறுகின்றன; சாத்திரங்களும் தத்துவ நூல்களும் தோன்றுகின்றன.

இதுகாறும் இறைவனையே வணங்கி மகிழ்ந்த மக்கள் தமது இம்மை பற்றியும் மறுமை பற்றியும் சிந்திக்கத் தொடங்குகின்றனர். 'ஆன்மா' என ஒன்று உண்டு என்ற நம்பிக்கை உருக்கொள்ளுகின்றது. 'அரிது அரிது மானிட ராதல் அரிது. மானிடராயினும் கூன் குருடு பேடு நீங்கப் பிறத்தல் அரிது. பேடு முதலியவை நீங்கப் பிறந்த காலையும் ஞானமும் ஒழுக்கமும் வாய்த்தல் அரிது..." என்ற முறையில் மக்கள் சிந்திக்கத் தொடங்குகின்றனர். வியாக்கி யானங்களும், இராமாநுசருடைய **ஸ்ரீபாஷ்யம்,** விஷ்ணு சக்ஸ்ரநாம உரைகளும் இவர்கட்குக் கைகொடுத்து உதவுகின்றன. எங்குப் பார்த்தாலும் சத்சங்கங்கள், காலட்சேப கோஷ்டிகள் முதலியவை நடைபெற்ற வண்ணம் உள்ளன. மக்கள் தத்துவ விசாரணையில் தலை காட்டத் தொடங்கு கின்றனர். பெரும்பாலும் இவை பொதுமக்களுக்குப் படிக்க எட்டாப் பழமாக இருந்தன. நம் பி.ப. அண்ணாசாமியின் எளிய முறையில் விளங்கக் கூடிய சொற்பொழிவுகளும் தொடர்ச்சியாக சுவாமி அவர்களின் தீபிகைக் கட்டுரைகளும் பருவ வெளியிடுகளில் வெளி வரத் தொடங்குகின்றன. ஞானாசிரியன்போல் நம் சுவாமிகள் தம் பேச்சாலும் எழுத்தாலும் மக்கள் மனத்தைக் கவருகின்றார்கள். பருவ வெளியீடுகளில் வெளிவந்தவை நாளடைவில் **'திவ்வி யார்த்த தீபிகை'** என்ற பெயரில் தொகுதி தொகுதிகளாக மக்கள் கைகளுக்கு 'எட்டும் பழம் போல்' - ஞானக் கருவூலங்களாகக் கிடைக்கின்றன. நாமும் அப்பெருமகனார் வாழ்ந்த காலத்தில் வாழ்கின்றோம் என்ற பெருமிதத்தை அடைகின்றோம். பலருக்கு அப்பெருமகனாரின் தரிசனமும் ஆசியும் கிட்டுகின்றன. சுமார் இருபதாண்டுக் காலம் அவரைத் தரிசிக்க முடியாத நிலையில் அவர்தம் நூல்களில் ஆழங்கால்பட்டுப் பயனடைந்த அடியேன் அவர்தம் சதாபிஷேகம் நடைபெற்ற காலம் முதல் அவர்தம் தரிசனமும் ஆசிகளும் அடியேனுக்குக் கிட்டுவதாயின. ஏகலைவனுக்கு

நேரில் காண முடியாத நிலையில் இருந்த துரோணர் பின்னர் நேரில் கண்டு மகிழ்ந்து அவருடைய ஆசாரியர் ஆனாற்போல அடியேனும் பல்லாண்டுகள் நேரில் காணா நிலையிலிருந்து இறையருளால் காணப்பெறும் நிலையை அடைந்து - குருநாதராக அடைந்து - பிரதிவாதி பயங்கரச் சுவாமிகளை வாழ்க்கையில் பெறற்கரிய எல்லாப் பேறுகளையும் பெற்ற நிலையில் அவர்தம் சீரிய வாழ்க்கை வரலாற்றையும் பக்தியுடன் சுமார் எழுபது ஆண்டுக் காலம் ஆற்றிய வைணவத் தமிழ்த் தொண்டையும் மிக்க பக்தியுடன் பதிவு செய்கின்றேன்.

# 2. பிறப்பும் வளர்ப்பும்

*தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று*[1] *(236)*

இறையன்பு கொண்டவர்கள் அடியார்களின் வரலாறுகளைப்பற்றி அறிந்துகொள்வது சாலப் பயன் தரும். அத்தகைய அடியார்களில் தலை சிறந்த ஒருவர் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணாச்சாரிய சுவாமிகள். அவர்களைப்பற்றி ஒரு சில நூல்கள் வந்திருந்த போதிலும் அவை பொது மக்களுக்கு எட்டும் நடையில் அமையவில்லை. வைணவ உலகில் ஒரு துருவ மீன் போல் திகழும் அந்த சுவாமிகள் பற்றி வைணவர்களல்லாத பிறரும் அறிந்து கொள்வது மிகவும் இன்றியமையாதது. அவருடன் சுமார் ஐம்பது ஆண்டுகள் நெருங்கிப் பழகியும், அவர்தம் படைப்புகளில் ஆழங்கால் பட்டும் இத்தனைக்கும் மேலாக அவர்தம் அன்பையும் ஆசிகளையும் கொள்ளை கொண்ட இந்த ஆசிரியர் அவர்தம் வரலாற்றை மிக்க பக்தியுடன் பதிவு செய்கின்றார் இந்த நூலில்.

**முன்னோர்கள்** : உடையவர், எம்பெருமானார் என்ற திருநாமங்களால் ஒளி விட்டுப் பிரகாசிக்கும் இராமாநுசரால் நிறுவப் பெற்றது வைணவ சித்தாந்தம்.[2] இந்த சித்தாந்தம்

*1. திருக்குறள் - புகழ்-6.*

*2. நினைப்பிற்கும் எட்டாத நெடுங்காலமாக திருமால் வழிபாடு இருந்ததேயன்றி சித்தாந்தமாக ஒரு முறை இருந்ததில்லை. சைவ சமயத்துக்கு மெய்கண்டார் ஒரு முறை வகுத்தருளியதுபோல் வைணவத்திற்கு ஒரு முறைகண்டு நிறுவியவர் இராமாநுசர் என்ற வைணவ சோதி.*

உலகில் பரவுவதற்கும் நிலை பெறுவதற்கும் அப் பெரு மகனார் நியமித்தருளிய சிம்மாசனாதிபதிகள் எழுபத்து நால்வர். இந்த வைணவ சீலர்களில் ஒருவர் **முடும்பை நம்பி** என்பார். இவர்தம் வழித் தோன்றலும் **பிள்ளை உலக ஆசிரியரின்**[3] சிறிய தந்தையாரின் திருப் பேரனாருமாகிய **அஸ்திகிரி அண்ணா** என்ற பெரியார். இப் பெரியார்தாம் பாண்டவ கௌரவ வம்சத்தினருக்கு அமைந்த பிதாமகன் பீஷ்மர் (வீடுமர்) போல் நம் சுவாமிகளின் மூல புருடர். இவர் சமய தத்துவங்களைப் பிற சமயத்தாருக்கு விளக்கும் பொருட்டு வாதம் புரிவதில் வல்லவரானபடியால் வேதாந்த தேசிகர் என்ற வைணவப் பெருமகனாரால் **'பிரதிவாதி பயங்கரம்'**[4] என்ற மகுடம் சூட்டப் பெற்றவர். பிற்காலத்தில் வைணவ சித்தாந்தத்தை நிலைநாட்டும் பொருட்டு **மணவாள மாமுனிகள்**[5] என்ற வைணவ ஆசாரியப் பெருமகனாரால் நியமிக்கப்பெற்ற அஷ்டதிக்கெஜ ஆசாரியர்களுள் ஒருவராக நியமிக்கப்பெற்றவர் **பிரதிவாதி பயங்கரம் அண்ணன் சுவாமிகள்.**

**பெற்றோர்கள்** : நம் சுவாமியின் திருத்தந்தையார் அண்ணாஅரங்காசாரியார் என்று வழங்கப்பெறும் அரங்க நாதாரியார்.[6] திருத்தாயார் அலர்மேல்மங்கை அம்மை.[7] இவர்

*3. இவர் திருவரங்கம் வடக்குத்திருவீதிப்பிள்ளையவர்களின் திருக்குமாரர். இவர் வைணவ சமயத்தின் அடிப்படை நூல்களாக முமுட்சுபடி முதலான 18 இரகசியங்களை வெளியிட்டருளிய மகான்.*

*4. இப்பட்டப் பெயர் அவர்தம் குலத் தோன்றல்கள் அனைவருக்கும் இன்றளவும் சேர்க்கப்பெற்று வழங்கி வருகின்றது.*

*5. இப்பெருமகனார் வைணவ இரகசியங்கள் பலவற்றிற்கு விளக்கவுரை அருளியவர்.*

*6. பிரதிவாத பயங்கரம் அண்ணன் திருவம்சத்தினர்.*

*7. திரு சஷ்டி வரதாசாரியார் (பிற்காலத்தில் காஞ்சி அழகிய மணவாள சீயராக எழுந்தருளியிருந்த மகான்) அவர்களின் திருமகளார்.*

தம் ஒரே ஆண் மகவாகப் பிறந்தவர் நம் சுவாமி. பிறந்த ஆண்டு 1891. சுவாமிகளின் உடன் பிறப்பு மூன்று பெண் பிள்ளைகள்.

**பெற்ற கல்வி** : தந்தையார் பரம வைதிகராதலால் நம் சுவாமிக்கு இளமையில் உபநயனம் முதலியவை உரிய காலங்களில் செய்விக்கப்பெற்றன. தொடக்கத்தில் தந்தையாரே மகனுக்கு ஆசிரியராக அமைந்தார். சிறிய வயதிலேயே **சப்தமஞ்சி, இராமாயண சங்கிரகம்** (சுருக்கம்) முதலிய நூல்களின் பாடங்களைப் பயிற்றுவித்தார். காஞ்சி புரம் சந்நிதித் தெருவில் உள்ள வானமாமலை மடத்தில் உள்ள சமஸ்கிருதப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய தந்தையார் மைந்தனுக்கு இப்பாடசாலையில் தான் தொடக்கக் காலக் கல்வி நடைபெறச் செய்தார். யாது காரணத்தாலோ சுவாமியின் 12-வது அகவையில் அப்பாட சாலை நடைபெறாமல் நின்று விட்டது. பின்னர் **தேவப் பெருமாள் சந்நிதி வசந்த மண்டபத்தில்** நடைபெற்று வந்த **'சடகோபன் நிலையம்'** என்கின்ற சமஸ்கிருதப் பாட சாலையிலும் பயில நேரிட்டது. மேலும் காஞ்சிபுரம் அண்ணா சந்நிதியில் ஜகத்குரு ஸ்ரீமத் காதி அனந்தாசாரியர் சுவாமியால் நிறுவப்பெற்ற **'வேதாந்த வைஜயந்தி'** என்ற பாடசாலையில் தந்தையார் தலைமையாசிரியராகப் பணியாற்றியபோது அங்கும் நம் சுவாமி பயில நேரிட்டது. ஆனால் ஏழு எட்டு திங்களுக்குள் தந்தையார் நோய் வாய்ப் பட்டு நடமாட முடியாத நிலையில் தம் இல்லத்திலேயே வகுப்புகள் நடத்த நேரிட்டது. இதனால் எல்லா வகுப்புப் பாடங்களையும் ஒரே சமயத்தில் கற்கும் வாய்ப்பு நம் சுவாமிக்குக் கிடைத்தது. இந்த வாய்ப்பினால் சுவாமியின் கல்வியறிவு விரைவாக வளர்ந்தது.

**ஆங்கிலக் கல்வி** : தந்தையாருக்கு சிகிச்சை செய்ய வந்த மருத்துவர் தந்தையார் வேண்டுகோளின்படி நம் சுவாமிக்கு ஆங்கிலம் கற்பிக்க அதனால் சுவாமிக்கு

ஆங்கில அறிவும் ஏற்பட்டது. இப்போது சுவாமியின் வயது 14. இந்த வயதில் சுவாமியின், திருத்தந்தையாரும் ஆசாரியன் திருவடிகளையடைந்தார். இதுவும் சுவாமிக்குப் பெரும் பேரிழப்பு.

**நாலாயிரம் முதலியவற்றில்** சுவாமியின் தாய்வழிப் பாட்டனாரும் அப்போது அழகிய மணவாளஜீயர் பீடத்தை அலங்கரித்தவருமான **சஷ்டிஜீயர்சுவாமி** தமிழில் தன்னிகரற்ற புலவர். திருநாராயணபுரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த இவர் காஞ்சிபுரம் திரும்ப நேரிட்டது. இதனால் நம் சுவாமிக்கு நல்ல வாய்ப்பு. அவரிடம் சுமார் இரண்டாண்டுகளில் நாலாயிர திவ்வியப்பிரபந்த வியாக்கி யானங்கள், கம்பராமாயணம், திவ்வியகவியின் அஷ்டப் பிரபந்தம், நன்னூல் முதலானவற்றை ஆர்வத்துடன் கற்று அவற்றில் நல்ல புலமை எய்தினார்.

**தங்கக்காப்பு அணிதல் :** ஒரு சமயம் மைசூர் பண்டித ரத்னம் **கஸ்தூரி அரங்காசாரிய சுவாமி** காஞ்சிக்கு எழுந்தருளியபோது சடகோப நிலையத்தில் ஒரு தேர்வு நடத்தினார். அங்குக் கீழ் வகுப்பில் அமர்ந்திருந்த சுவாமி மேல் வகுப்பு மாணவன் ஒருவனால் விடையளிக்க முடியாத வினாவுக்கு விடையளித்தார். அதனால் மெச்சின பண்டித ரத்னம் சுவாமி நம் சுவாமிக்கு இரண்டு சவரன் டாலர் பரிசாக அளித்தார். ஏனையோர்க்கெல்லாம் அவரவர் தகுதிகட்கேற்ப ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் வீதம் பரிசளிக்கப்பெற்றன. சுவாமியின் பெற்றோர் அதனைக் கொண்டு தங்கக் காப்பு செய்து தம் மகனுக்கு அணிவித் தார்கள். சுவாமி அவற்றைத் தம் 26, 27 அகவை வரை அணிந்து கொண்டிருந்தார். அதனால் நம் சுவாமி **'தங்கக் காப்பு அண்ணா'** என்று வழங்கப் பெற்றார்.

**இளமையில் பெற்ற பரிசுகள் :** நம் சுவாமி 12 அகவையில் சமஸ்கிருதத்தில் சுலோகங்கள் கட்டுரைகள்

எழுதும் அளவுக்குத் திறமை பெற்றிருந்தார். பிராமணப் பட்டு **அரங்காசாரிய சுவாமி** என்பவர் நம் சுவாமிகட்கு வித்வான்கள் பாராட்டை நம் சுவாமி பெற வேண்டும் என்று விரும்பினார்கள். ஒரு சமயம் நம் சுவாமி தம் பெற்றோர் களுடன் திருப்பதி சென்றிருந்தபொழுது அங்கு பிராமணப் பட்டு சுவாமி வித்வான்களின் அவையைக் கூட்டி அவர் கட்குமுன் நம் சுவாமியை அறிமுகப்படுத்தி அவருடைய கட்டுரைகள் சிலவற்றைப் படிக்க வாய்ப்பளித்தார். கூடியிருந்த வித்வான்கள், குறிப்பாக **புரிசை அரங்காசாரிய சுவாமி** முதலானோர் நம் சுவாமியின் அகவைக்கு மீறின மதிநுட்பத்தைக் கண்டு மகிழ்ந்து மங்களாசாசனமும் சன்மானமும் செய்து பாராட்டினார்கள்.

> ***அறிவு அற்றம்காக்கும் கருவி செறுவார்க்கும்***
> ***உள்அழிக்கல் ஆகா அரண் (421)***[6]

# 3. திருமண வாழ்க்கையும் மேற்கல்வியும் பிறவும்

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது (45)*[1]

*தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றஅனைத்து ஊறும் அறிவு (396)*[2]

இந்த இயலில் நம் சுவாமியின் மேற்கல்விபற்றியும் அவர்தம் திருமண வாழ்க்கைப்பற்றியும் விளக்குவோம். சுவாமிக்குக் கலைமகளின் திருவருள் இளமையிலிருந்தே வெள்ளம் கோத்து அவர்மீது பாய்ந்தது. புருஷகார பூதையாகிய பெரிய பிராட்டியாரின் பேரருளும் அவர்மூலம் எம்பெருமானின் பேரருளும் நம் சுவாமி பெற்றார். நம் சுவாமியின் பிராரப்தம் (நுகர்வினை) காரணமாக அனைத்தும் சுமுகமாகவே செயற்பட்டன. காஞ்சி தேவப்பெருமாளின் கடைக்கண் நோக்கும் இவர்மீது பாய்ந்தது.

**காதிசுவாமியிம் தொடர்பு :** புஷ்கம் **ஆத்ய அனந்தாசாரியரின்** பேரருடைய குமாரர் **ஜகத் குருகாதி அனந்தாரியர்** ஒரு புகழ் மிக்க வித்வான். தொடக்கக் காலத்தில் இவர் நம் சுவாமியின் திருத்தந்தையாரிடம் சில ஆண்டுகள் கல்வி பயின்றார். இவருக்குச் சீடர் குழாமும் அதிகம். பலமுறை இவர் வடநாட்டுப் பயணங்களை மேற் கொண்டு விசிட்டாத்வைதத்தைப் பரப்பிய பெருமகனார். மும்பையிலும் திருவேங்கடமுடையானுக்கு ஒரு

1. *திருக்குறள் - இல்வாழ்க்கை - 5*
2. *மேலது - கல்வி - 6.*

திருக்கோயிலைக் கட்டுவித்த பெருமையும் இவருக்கு உண்டு. நம் சுவாமியின் திருத்தந்தையார் திருநாட்டுக்கு எழுந்தருளிய சில மாதங்களுக்குள் காஞ்சி திரும்பினார் இப் பெருமகனார். நம் சுவாமி அவரைத் தம் ஆசானாக ஏற்று அவருடைய சுவீகார புத்திரனாகவே மாறி விட்டார். அவருடைய திருமாளிகையிலேயே நம் சுவாமி தங்கி அவரிடமே சாத்திரப் பயிற்சிகளும் பெற்றார்.

**சுவாமியின் முதல் மேடைப் பேச்சு :** ஒரு சமயம் சீடர்களின் வேண்டுகோட் கிணங்கி காதிசுவாமி ஐதராபாத்தில் **சீதாராம் பாக்** என்னும் இடத்தில் எழுந்தருள நேர்ந்தது. நம் சுவாமியும் அவருடன் ஏகினார். ஓராண்டுக்கு மேல் அங்கேயே தங்கி சாத்திரங்கள், சுவரூபகிரந்தங்கள் முதலியவற்றை அவரிடம் கற்று,, கற்றுத் துறை போய வித்தகரானார். காதி சுவாமியின் நியமனத்தின் பேரில் நம் சுவாமி **'எம்பெருமானார் பெருமை'** என்ற தலைப்பில் முதலில் தமிழிலும், அடுத்து இந்தியிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தி ஆசாரியனின் ஆசியையும் அனைவர் பாராட்டு தலையும் பெற்றார். காதிசுவாமிகள் கொல்கொத்தா எழுந்தருளவே, நம் சுவாமி காஞ்சி திரும்பினார்.

**சுவாமியின் முதல் நூலின் அச்சு வடிவம் :** ஒரு சமயம் திருநீர்மலை **கண்ணாமாசாரியர்** என்பவர் காஞ்சி தேவப்பெருமாள் சந்நிதி மண்டபம் ஒன்றில் திவ்வியப் பிரபந்தப் பெருமைகள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். அதனைச் செவிமடுத்த ஒரு **தாதாசார்யர் சுவாமி** என்ற குதர்க்கவாதி "தமிழ் ஒரு மிலேச்ச மொழி. அதில் தோன்றின பிரபந்தங்களை உயர்வாகப் பேசுதல் தகாது" என்று மறுத்தார். ஆனால் சொற்பொழிவாற்றின **கண்ணமாசாரியர்** பல சான்றுகளுடன் ஆழ்வார்கள் அருளிச்செயல்கள் **'திராவிட வேதங்கள்'** என்று மெய்ப்பித்து அனைவரையும் மகிழ்வித்தார். இதனைப் பொருளாகக் கொண்டு நம் சுவாமி

**'திவ்விய பிரபந்த வைபவ விவேக்'** என்ற வடமொழி நூலாக வெளியிட்டு குதர்க்கவாதியின் மறுப்புக்கு ஆப்பு அடித்தார். இதுவே சுவாமி பதிப்பித்த **முதல் நூல்.** இது நம் சுவாமிக்கு பெரும் புகழை ஈட்டித் தந்தது.

**தென்னாட்டுத் திருத்தலப் பயணம் :** நம் சுவாமி தம் பதினாறாவது அகவையில் திருவரங்கத்திற்கு எழுந்தருளினார். அங்கே **குவளக்குடி சிங்கம் ஐயங்கார் சுவாமி** என்ற ஒருவர் எழுந்தருளி இருந்தார். இவர் ஒரு சிறந்த வித்வான்; செல்வச் சிறப்பும் உடையவர். இவர் நம் சுவாமியின் திறமைகளைக் கேள்வியுற்று ரூ.100/- அன்பளிப்பு சன்மானமாக வழங்கினார். அக்காலத்தில் இது ஒரு பெருந்தொகை. இத் தொகையைக் கொண்டு நம் சுவாமி சீவில்லிப்புத்தூர், ஆழ்வார் திருநகரி, சீவைகுண்டம், வானமாமலை, திருக்குறுங்குடி முதலான திவ்விய தேசங்களைச் சேவித்து மங்களாசாசனம் செய்து பற்பல பெரியோர்களின் உகப்புக்குப் பாத்திரரானார். இதனாலும் நம் சுவாமியின் புகழ் ஓங்கியது.

**விநோதத் தேர்வு :** திருவல்லிக்கேணி **'வேதவர்த்திநீ சபை'** இன்றும் புகழுடன் திகழ்கின்றது. ஆனால் அறுபது ஆண்டுகட்குமுன் மிகு புகழுடன் ஒளிர்விட்டுத் திகழ்ந்தது. நம் சுவாமி தம் 19-வது அகவையில் இந்த விநோதத் தேர்வு கொடுத்தார். இதன்படி "திவ்வியப் பிரபந்தத்திலும் அதன் வியாக்கியானங்களிலும் எதனைக் கேட்டாலும் மறுமொழி சொல்லுதல்; தவறினல் நாக்கை அறுத்து விடுதல்" என்பது. இத் தேர்வு. வினா விடுத்தவர்களின் கருத்தையுணர்ந்து மின்வெட்டுகள்போல் அவற்றிற்கேற்ற விடைகள் தந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார் நம் சுவாமி. இதனால் பிற்காலத்தில் விளையும் பயிர் முளையிலே தெரிந்தது.

**சுவாமியின் திருமண வாழ்க்கை** : 20 வயதுக்கு முன்னரே இல்லற வாழ்க்கையில் புகுந்தவர் நம் சுவாமி. **திருமலை அனந்தாண் பிள்ளை வேங்கட வரதாசாரியரின்**[3] திருமகளான **கோமளம்மாள்** சுவாமியை மணந்து இல்லக் கிழத்தியானார்கள். சுவாமிக்கு இவர்கள் மூலம் இரண்டே பெண் பிள்ளைகள் பிறந்தனர். இளைய பெண்ணின் கணவர் **மணவாள திருமலாசாரியர்**. இவர்கள் குமாரனும் சுவாமியின் திருப்பேரனுமான **செல்வமணி** என்கின்ற **அரங்கநாதனை** சுவீகார புத்திரனாக்கிக் கொண்டார் நம் சுவாமி. சுவாமியின் தர்ம பத்தினி கோமளம்மாளை நடு வயதிலேயே இழக்கும் துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. முதல் மருமகனான T.A. **சம்பத் குமாராசாரியரும்** அண்மையில் திருநாடலங்கரித்துவிட்டார். அவருடைய மகனான **அனந்தாழ்வானும்**, செல்வமணியின் மகனான **இராஜஹம்சமும்** சுவாமிகளுக்கு அன்றாடத் தொண்டுபூண்டொழுகியவர்கள்.

**திருமறைக் கல்வி** : சுவாமிக்கு திருமறை பயில வேண்டுமென்ற ஆர்வம் இளமையில் இருந்தபோதிலும் அதற்குச் சரியான வாய்ப்பு ஏற்படவில்லை. ஒரு சமயம் சுவாமியின் 22-ஆம் அகவையில் திருமலைக்குச் சென்றிருந்த பொழுது ஆங்கு வேத பாராங்கதரான திருமலை விஞ்சிமூர்மாம் பள்ளம் சுதர்சனாசாரிய சுவாமியைச் சேவிக்க நேர்ந்தது. அவர்தம் கம்பீரமான குரல் எடுப்பும் வேதம் ஓதும் அழகும் சுவாமியை ஈர்த்து விட்டன. சுவாமியின் வேண்டுக்கோளுக்கிணங்கி அந்த ஆசாரியப் பெருமகனாரும் காஞ்சிக்கு எழுந்தருளி சுவாமிக்கு வேதாத்யயனம் கற்பிக்க

*3. இவர்தம் பேரர்களான திரு. தி.அ. கிருஷ்ணமாசார்யர் சுவாமியும் திரு. தி.அ. கோபாலாசாரிய சுவாமியும் திருப்பதியில் வாழ்ந்து வருகின்றனர். இருவரும் சிறந்த புலவர்கள். சமய சாத்திரங்களைக் கற்றுத் துறையேகிய வித்தகர்கள். இருவரும் நம் சுவாமியின் அன்புக்கும் ஆசிக்கும் நல்ல பாத்திரர்கள்.*

இசைவு அருளினார். வேண்டுகோள் விடுத்த மறுநாளே காஞ்சிக்கு எழுந்தருளினார். அவர் தங்கியிருக்க வேண்டிய வசதிகள் செய்யப் பெற்றன. ஒரு நல்ல நாளில் அழகிய மணவாள ஜீயர் மடத்தில் அத்யயனம் தொடங்கப் பெற்றது. அப்போது நம் சுவாமியின் அகவை 22. ஆறு ஆண்டுகளில் பல்லோர் வியக்கும் வண்ணம் அத்யயனம் நிறைவு பெற்றது.

ஜீயர் சுவாமிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்ட போது பின்மாலை[4] வேளைகளில் மடத்தில் அத்தியயனம் ஓதுவது வசதியற்றதாகி விட்டது. எனவே சில நாட்கள் வெவ்வேறு இல்லங்களில் வேதாத்யயனம் நடைபெற வேண்டிய தாயிற்று. இதிலும் பற்பல வசதிக்குறைவுகள் ஏற்பட்ட படியால் வேதாத்யயனத்திற்கென்று சொந்தமாக ஒரு கட்டடம் வாங்கத் தீர்மானித்தார் நம் சுவாமி. காஞ்சி அத்திகிரி பெருமாள் கோயில் கீழண்டை மாட வீதியில் இரண்டு திருமாளிகைகளை விலைக்கு வாங்கினார். அவற்றுள் ஒன்றை பாடசாலையாகவும், மற்றொன்றை உணவு விடுதியாகவும் நிர்மாணம் செய்வித்தார் நம் சுவாமி. இது (1916-18) இல் நடை பெற்றது. 1964 முதல் நம் சுவமி வாழ்ந்து வந்தது இவ்விரண்டு திருமாளிகளுள் ஒன்றிலேயேயாகும்.

**திருவீதி வலம் :** ஒரு சமயம் இவருக்கு வேதாத்யயனம் கற்பித்த மாம்பள்ளம் சுவாமி நாடோறும் வீதிவலம் வரும் கைங்கரியம்[5] செய்ய வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அப்படிச் செய்யும் போது அத்யயன காலங்களில் வேதபாராயணமும் அனத்யயன காலங்களில் தோத்திர

*4. பின்மாலை - விடியற்காலை. இது வைணவர்களின் பேச்சு வழக்கு.*

*5. கைங்கர்யம் - அடிமைத் தொழில். கிங்கரன்- வேலையாள். கிங்கரன் செய்யும் செயல் கைங்கரியம்*

பாராயணமும் செய்வதென்று ஏற்பாடு. இதனால் கற்றவை மறவாமலிருப்பதோடு நாட்டிற்கும் நன்மை விளையும் என்று கூறினார் மாம்பள்ளம் சுவாமி. அதன்படி திருவீதி வலம் வருதல் அன்று மாலையே தொடங்கப் பெற்றது. நாடோறும் பின்மாலை வேளைகளில் செய்யப் பெற்று வந்த வேத பாராயண குழுவைச் சேவிப்பதற் கென்றே பலர் வெளியூர்களிலிருந்து வருவார்கள். இடைவிடாமல் பல்லாண்டுகள் நடை பெற்று வந்த இந்தக் கைங்கரியம் 1964-இல் (சுவாமிக்கு இதயக் கோளாறு வந்த பிறகு) நிறுத்தப்பட நேர்ந்து விட்டது.

**நம்பிள்ளை சந்நிதி** : வேதாத்யாயத்திற்கென்று ஒரு பாடசாலையை நிறுவியதுபோல அதிலேயே நம்பிள்ளைக்கு[6] ஒரு சந்நிதி ஏற்படுத்த வேண்டும் என்பது நம் சுவாமியின் பேரவா. ஆனால் அப்போது ஆசை நிறைவேறவில்லை. 1939-40 இல் சந்நிதித் தெருவில் ஒரு மாளிகையை விலைக்கு வாங்கி அதனை நம்பிள்ளை சந்நிதியாக்கினார். இந்தச் சந்நிதியில் நம்பிள்ளையோடு வடக்குத் திருவீதிப் பிள்ளையும்[7] பெரியவாச்சான் பிள்ளையும்[8] எழுந்தருயுள்ளனர். கார்த்திகை மாதத்தில் நம்பிள்ளைக்கு 10 நாட்கள் உற்சவமும் வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ஆனி மாதம் 5 நாட்கள் உற்சவமும், பெரிய வாச்சான் பிள்ளைக்கு ஆவணி மாதம் 5 நாட்கள் உற்சவமும் தவறாது சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவற்றைச் சிறப்பாகப் பரிபாலிக்க **'சென்னபுரி ஆஸ்திக ஸ்ரீவைணவ சமிதி'** என்ற நிறுவனத்தால் நிர்வகிக்கப் பெற்று வருகின்றது.

*6. நம்பிள்ளை - முப்பத்தாறாயிரப்படி வியாக்கியான ஆசிரியர் - ஈட்டாசிரியர் என்றும் வழங்கப் பெறுபவர்.*

*7. நம்பிள்ளை சபையில் சாதித்ததை ஏட்டில் எழுதி உபகரித்தவர். இது 'ஈடு' ஆக வெளியிடப் பெற்றது.*

*8. நாலாயிரத்திற்கும் வியாக்கியானம் படைத்தவர்.*

**வடநாட்டுத் திருத்தலப் பயணம்** : நம் சுவாமி திருத்தலப் பயணம் மேற்கொள்ளும் போது தனியொருவராகச் செல்லும் வழக்கம் இல்லை. மிகப் பெரிய குழுவுடன்தான் செல்வார். ஆங்காங்குள்ள சீடர் குழாம் செலவினை ஏற்றுக் கொள்ளும். 23 **முறை ரிஷிகேசம் வரை பயணமும், ஏழு முறை பஞ்ச துவாரகப் பயணமும், மூன்று முறை பதரியாச்சிரமப் பயணமும்** மேற்கொண்டுள்ளார். சாளக்கிராமப் பயணம் மட்டிலும் வாய்க்க எம்பெருமான் திருவருள் இல்லை. ஒரு முறை நேபாளத்திலிருந்து வந்த **மஹந்த்** (வடநாட்டுத் துறவியின் பெயர்) ஒருவர் சாளக்கிராமப் பயணத்திற்குத் தாமே ஏற்பாடுகள் செய்வதாகவும் சுவாமி தட்டாமல் எழுந்தருள வேண்டும் என்றும் வேண்டுகோள் வைத்தார்; சுவாமியும் இசைவு தெரிவித்தார். இரண்டு மூன்று நாட்களில் புறப்படவேண்டிய நிலை. ஆனால் அதற்குள் வாரணாசியில் **சப்ரா** என்னும் இடத்தில் சுவாமியின் ஆசாரியரான **காதி சுவாமி** பரமபதித்து விடவே அங்குச் செல்ல நேர்ந்து விட்டது. அதனால் சாளக்கிராமப் பயணம் நின்று விட்டது.

**சுவாமியின் மணிவிழா**[9] : இது 1951-ஆம் ஆண்டு சுவாமிக்கு நடைபெற்றது. இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குப் பிரமுகர்கள் பலர் கூடி செயற்குழு ஒன்று அமைத்தனர். முதலில் 17.3.1951 முதல் 27.3.1951 வரை (10 நாட்கள்) அதாவது பங்குனி விசாகம் முடிவாக சுவாமியின் திருமாளிகையில் திவ்வியப் பிரபந்த, வேதபாராயண நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சற்றேறக் குறைய 200 சுவாமிகள் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர்.

*9. அகவை 60-இல் வருவது; (Diamond Jubilee) 70-இல் வருவது முத்து விழா; 75-இல் வருவது பவள விழா (Platinum Jubilee); 81-இல் வருவது சதாபிஷேகம்; பெருமங்கலப் பெருவிழா என்றும் இதனை வழங்குவர்; 25-இல் வருவது வெள்ளி விழா (Silver Jubilee) ; 50-இல் வருவது பொன் விழா (Golden Jubilee).*

தவிர சமயச் சொற்பொழிவுகளுக்கும் இசை நிகழ்ச்சி களுக்கும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. பிறகு சென்னையில் இவ்விழா பெரிய விழாவாகக் கொண்டாடப் பெற்றது. சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி **P.V. இராஜ மன்னார்** விழாவினைத் தொடங்கி வைத்தார். நகரில் மிகப் பெரிய கொட்டகை அமைத்து சுவாமியை ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்தனர். இவ்விழா **ஐந்து** நாட்கள் சென்னையில் நடைபெற்றது. பிறகு புது தில்லி மாநகரிலும் இது போலவே சிறப்பாக விழா கொண்டாடப்பெற்றது. மத்திய அமைச்சர்களும் உச்சநீதி மன்ற நீதிஅரசர்களும் விழாவில் கலந்துகொண்டு விழாவிற்குப் பொலிவும் பெருமையும் சேர்த்தனர்.

**சுவாமியின் பேச்சுத் தொண்டு** : பேச்சுத் தொண்டு என்று நினைக்கும்போது திரு.வி.க. மறைமலையடிகள், ஞானியார் சுவாமிகள், தந்தை பெரியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், வாரியார் சுவாமிகள், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் நினைவிற்கு வருகின்றனர். ஒவ்வொருவரும் அவரவர் செய்த பணி அற்புதமாக இருந்தாலும் நம் சுவாமிகளின் பேச்சுத் தொண்டு தன்னிகரற்றது,

**(1) சென்னைப் பொழிவுகள்** : திவ்வியார்த்தத் தீபிகை உரை பருவ இதழ்களில் வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்தே சென்னை வாழ் பெருமக்கள் சுவாமிகளின் சொற்பொழிவுகளைக் கேட்க ஆர்வமுற்றனர். **M.R.G. நாயுடு** என்பார் சுவாமிக்கு திருவல்லிக்கேணியில் நிரந்தர வாசத்திற்கு தக்க இருப்பிடம் ஏற்பாடு செய்வதாகவும் திருவல்லிக்கேணியிலும் பூங்கா நகர்ப் பகுதிகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார். சுவாமி காஞ்சி தேவப்பெருமாள் கைங்கரியத்தை விட விரும்பவில்லையாதலால் திரு நாயுடு அவர்களின்

வேண்டுகோளுக்கு ஒருப்படவில்லை. இறுதியான வாரம் ஒருமுறை சனிக்கிழமை மாலையிலும் ஞாயிறு முற்பகலிலும் சொற்பொழிவு நிகழ்த்த முடிவு செய்து 1931 சூலை முதல் வாரம் தொடங்கி சொற்பொழிவுகள் தொடங்கப் பெற்றன; இவை 1964வரை இடையீடின்றி நீடித்தன.

**'பகவத் கதா பிரசங்க சபை'** என்ற ஒரு சபை தொடங்கப்பெற்று இதன் ஆதரவில் சுவாமியின் சொற்பொழிவுகள் நடைபெற்றன. இச்சபையின்மூலம் சுவாமி பல பிரமுகர்களுடன் தொடர்பு கொள்ள வாய்ப்புகள் ஏற்பட்டன. இங்கு **இராமாயணம், பாகவதம், ஸ்தோத்திர ரத்னம், சதுர்ச்லோகி, அஷ்டச் சுலோகி, அமலனாதிபிரான், திருமந்திரார்த்தம், ஆசார்ய ஹிருதயம் பகவத்கீதை** முதலியனபற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

பின்னர் 1936 ஆண்டு முதல் **பகவத் விஷயம்** பற்றிய பொழிவுகள் தொடங்கப்பெற்றன. **திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு** முதலியன தொடங்கப் பெற்றன. அடுத்து **திருவாய்மொழி** பற்றிய பொழிவுகள் நடைபெற்றன. **'உலகம் உண்ட பெருவாயா'** (திருவாய் 6.10) சாற்றுமுறை திருமலையிலும் **'கங்குலும் பகலும்'** (மேலது-7.2), திருஅரங்கத்திலும் (கோயில்) திருவாய்மொழி 7-ஆம் பத்து சாற்று முறை திருவாறன்விளையிலும் (மலைநாடு) நடைபெற்றன. 'கங்குலும் பகலும்' சாற்று முறை நிறைவு பெற்றதும். சுவாமி திருமாலிருஞ் சோலை மலைக்குச் (பாண்டி நாடு) சென்று (பண்டு இராமாநுசர் செய்தது போல) அழகருக்கு நூறு தடா வெண்ணையும் அக்கார அடிசிலும் கண்டருளப் பண்ணி மகிழ்ந்தனர் அடியார் குழுவினர். தவிர மார்கழித் திங்கள் முப்பது நாளும் திருப்பாவைப் பொழிவுகளும் நடைபெற்றன. இவையனைத்தும் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் உள்ள பெரிய மண்டபத்தில் நடைபெற்றன.

**சத்காலட்சேப சபை :** 1954-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இச்சபை தொடங்கப் பெற்றது. அதுமுதல் சுவாமியின் பொழிவுகள் அனைத்தும் இதன் ஆதரவில் தான் நடைபெற்றன. முன்போலவே சனி ஞாயிறுகளில் நடைபெற்ற பொழிவுகள் தொண்டை மண்டலம் உயர் நிலைப் பள்ளியிலேயே நடைபெற்றன. மார்கழித் திங்களில் நடைபெறும் திருப்பாவைப் பொழிவுகள் மட்டிலும் வேறு மண்டபங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப் பெற்றது. 1964ஆம் ஆண்டு சுவாமிக்கு இருதயக் கோளாறு ஏற்பட்டதால் பற்பல பொழிவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் நேரிட்டது. எனவே 1964க்குப் பிறகு வாரந்தோறும் நடைபெற்று வந்த பொழிவுகள் இல்லாமல் போயின. ஆயினும் ஒவ்வோர் ஆண்டும் மார்கழித் திங்களில் நடைபெறும் திருப்பாவைப்பொழிவுகள் மட்டிலும் தொடர்ந்து சென்னையில் நடைபெற்று வந்தன.

**திருப்பாவைப் பொழிவுகள் :** இவை தாம் சுவாமியின் ஈடும் எடுப்பும் அற்ற நிகழ்ச்சிகளாகும். இவற்றைச் சென்னையில் முதன் முதலில் தொடங்கி வைத்தது நம் சுவாமி அவர்களே. 1931-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்த இப்பொழிவுகள் 1983-ஆம் ஆண்டு வரை தடைபெறாமல் நடை பெற்று வந்தன.[10] மிகு புகழ் பெற்ற இப்பொழிவுகளைச் செவிமடுக்க ஆயிரக்கணக்கான ஆர்வலர்கள் தொலைவிலிருந்தும் வந்து குவிந்து[11]

*10. பல ஆண்டுகளாக நாடெங்கும் திருப்பாவை - திருவெம்பாவைப் பொழிவுகள் காஞ்சி சங்கர மடம் நியமனப்படி நடைபெற்று வந்தாலும் இம்முறைக்கு முதன் முதலில் வித்திட்டவர் நம் சுவாமியே என்பது மறுத்தற்கில்லை.*

*11. ஒரு சமயம் நான் திருப்பதியில் பணியாற்றிய காலத்தில் (1968 என்பதாக நினைவு) ஏதோ காரியமாக சென்னைக்கு வர நேரிட்ட போது இப்பொழிவு ஒன்றைக் கேட்டு அநுபவித்ததை நினைவு கூர்கின்றேன்.*

கொண்டிருந்தனர். நம் சுவாமி **51 ஆண்டுகளில் 53 முறை திருப்பாவைப் பொழிவுகள்** நிகழ்த்தியுள்ளார் என்பதை வியந்து மகிழ்ந்து நினைவு கூரல் வேண்டும்.

**அரையர் சேவை** : திருவரங்கம் சீவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, திருநாராயணபுரம் (கர்நாடகம்), போன்ற திவ்விய தேசங்களில் நடைபெற்று வரும் இச்சேவை மிகு புகழ் வாய்ந்தது. அரையர் என்போர் எம்பெருமான் திரு முன்பு திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களை கையில் தாளங் கொண்டு இசையுடன் சேவிப்பது வழக்கம். நம் சுவாமி இதில் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள். இதனால் தாம் நிகழ்த்தி வந்த திருப்பாவைப் பொழிவுகளில் ஒருநாள் பொழிவை அரையர் சேவையாக நடைபெறச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அரையர்கள் போலவே பட்டுக் கிரீடம் அணிந்து கையில் தாளத்துடன் கொண்டாட்டம், அபிநயம், பாசுரவியாக்கியானம் இவற்றைக் கணீர் என்ற குரலில் நம் சுவாமி சேவிக்கும் அழகே தனி. இறுதியாக (1982-83) மார்கழித் திங்களில் நிகழ்த்திய திருப்பாவைப் பொழிவுகளிலும் ஒரு நாள் அரையர் சேவையை மேற்கொண்டார் என்பது நினைவுகூரத் தக்கது.

**இதரப் பொழிவுகள்** : திங்கள் ஒன்றுக்கு நான்கு பொழிவுகள்வீதம் **நான்கு ஆண்டுகள்** வேலூரில் இராமாயணப் பொழிவுகள் நிகழ்த்தினார். 1938-39-இல் **ஆழ்வார் திருநகரியில்** ஆசாரிய ஹிருதயம்பற்றி சுமார் 120 சொற் பொழிவுகள் சுவாமி அவர்களால் நடைபெற்றன . இது தவிர இந்திய நாடெங்கும் நடைபெற்றுள்ள சுவாமியின் பொழிவுகள் கணக்கில் அடங்கா.

**எழுத்துப் பணி** : சுவாமியின் எழுத்துப் பணி ஈடும் எடுப்பும் அற்றது; இமயப்புகழ் வாய்ந்தது. இதனை ஈண்டு விரிக்கவில்லை. பின்வரும் இயல்களில் கண்டு தெளியலாம்.[12].

*12. இந்நூல் - பக். 50*

**இந்நூலாசிரியரின் தொடர்பு :** சுவாமியுடன் அடியேன் கொண்ட தொடர்பு ஏழுமலையான் திருவருளால் ஏற்பட்டது என்பதை இன்றளவும் பக்தியுடன் அடிக்கடி நினைவுகூர்வது வழக்கம். இதற்குப் புருஷகாரமாகச் செயற்பட்டவர் புலவர் திரு. **சீநிவாச வரதன்** (திரு வேங்கடவன் பல்கலைக் கழகக் கீழ்த்திசை ஆய்வுத் துறையில் பணி யாற்றி வந்தவர்) என்ற என் கெழுதகை நண்பர். தமிழகத்தில் சுமார் 20 ஆண்டு காலமாக டாக்டர் பட்ட ஆய்வுக்கு இசைவு கோரி முயன்றும் கிடைக்காத இசைவு திருவேங்கடவன் அருளால் டாக்டர் கோவிந்த ராஜுலு நாயுடு அவர்கள் (துணைவேந்தர்) வழங்கினார். 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வாரின் சமயம், தத்துவம்', என்ற பொருளை தேர்ந்தெடுத்து ஆய்ந்து கொண்டிருப்பதை என் நண்பர் கண்டார். திரு. **பு.ரா.புருடோத்தம நாயுடுவின் 'ஈட்டின் தமிழாக்கம்'** பகுதி பகுதியாக வெளிவந்து கொண்டிருந்த காலம். என் நண்பர் நாலாயிரம் முழுமைக்கும் திருவாய் மொழிக்கும் வியாக்கியானம் **'திவ்வியார்த்திக தீபிகை'** கிடைக்கும் என்று கூறினார். என் வேண்டுகோளின்படி காஞ்சியிலிருந்து தீபிகை அனைத்தும் வாங்கி வந்து உதவினார் (1960). [13] அவற்றில் ஆழங்கால்பட்டு நிறைந்த பயனை அடைந்தேன்.

*13. இந்த ஆய்வின் அடிப்படையில் 108 திவ்விய தேசங்களையும் சேவிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்பால் எழுந்தது. நண்பர் துணைக் கொண்டு தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தின் முதல் சுற்று தொடங்கியது. காஞ்சியில் உள்ள தலங்கள், காஞ்சிக்குப் புறத்தேயுள்ள திருப்புட்குழி, திருவிட எந்தை, திருநீர்மலைவரை திவ்விய தேசங்களைச் சேவிக்கவும், அவற்றை அருகிலிருந்து விளக்கவும் துணை செய்தார். அவர் இப்போது அமரர்; நான் திருப்பதியிலிருந்தபோதே திருநாடு அலங்கரித்து விட்டார். அவருடைய திருக்குமாரன் அமெரிக்காவில் திருமால் ஆலயம் ஒன்றில் பணியாற்றி வருகிறான். என் அமெரிக்கப் பயணத்தின் போது (2002 - மார்ச் 30 - 2002 ஜூன் 20) திருமால் தலங்களைச் சேவிக்கும்போது அப் பையனைப் பார்க்க முடியவில்லை. அங்கு ஒருவராலும் அவனைப்பற்றிச் சரியான தகவல் தர இயலவில்லை.*

சுவாமியை நேரில் கண்டதில்லை. படிக்கும்போது அறிவும் அநுபவமும் குறைவுள்ளவனாதலால் நிறைந்த ஐயங்கள். ஐயம் ஏற்படும் போதெல்லாம் கடிதம் எழுதுவேன். சுவாமியிடமிருந்து மறுநாளே ஐயத்தைப் போக்கிக் கடிதம் வரும். தெளிவு பிறக்கும்; மேலும் படிப்பை தொடர்வேன். இங்ஙனம் தீபிகையைப் படித்து ஓரளவு தெளிவு பெற்றேன். ஆய்வு முடிந்து டாக்டர் பட்டமும் பெற்றேன். இதுகாறும் சுவாமியைப் பார்க்கவில்லை. பார்க்க வேண்டும் என்ற துடிப்பு மட்டிலும் இருந்து கொண்டுதான் இருந்தது. கல்லூரிவேலைப் பளுவும் எழுத்துப்பணியும் இருந்து கொண்டே இருந்தமையால் எங்கும் நகர முடியவில்லை.

ஆயினும் 1960 முதல் சுவாமியின் திவ்வியார்த்த தீபிகை எனக்குத் திருமறைகளாக உதவின என்ற உணர்வு மட்டிலும் ஆழ் மனத்தில் இருந்து கொண்டே இருந்தது. ஏகலைவனுக்குத் துரோணர் மானசீகக் குருவாக நின்று அருளியது போல, அண்ணாசுவாமியும் எனக்கு மானசீக ஆசாரியன் ஆனார். தூலமாக அடியேனைப் பார்த்து அறியாத **அப் பெருமகனார் நூற்றுக்கணக்கான கடிதங்கள் மூலமாக** தீபிகையை ஆழ்ந்து நோக்கிக் கற்கும்போது நேர்ந்த ஐயங்களைப் போக்கின நிலையும் அடியேனைத் தம்முடைய சீடராகக் கருதின நிலையும் என் ஆழ்மனத்தில் இருந்து கொண்டே இருந்தன.

அடியேனுக்கு வரும் நல்லன தீயன அனைத்தும் என் நுகர்வினையாலும் ஏழுமலையப்பன் திருவருளாலும் வந்தன என்று கருதுபவன். இந்நிலையில் நேரில் திவ்விய தேசங்களைக் கண்டு அநுபவத்தையும் நாலாயிரத்தில் ஆழங்கால் பட்ட அறிவையும் கொண்டு எழுதப் பெற்ற **'மலைநாட்டுத் திருப்பதிகள்'** (1971) என்ற முதல் நூல் நீதியரசர் **எஸ். மகராசன்** அவர்கள் அணிந்துரையுடன் வெளி வந்தது. அதனை அண்ணாசாமிக்கு,

*வடமொழிச் சுவையை தென்றமிழ்ப் பயனை*
*மாநிலம் வியப்புறப் பருகித்*
*திடமுறு ஞானக் கொண்டலாய் வளர்ந்து*
*சேதநர் எனும்பயிர் விளைக்கக்*
*கடலுல குவக்க மழைபொழி அண்ணங்*
*கரரவர் திருவடி மலரில்*
*சுடர்முகப் பெற்று வயங்குக என்றுஇத்*
*தூயநூல் சமர்ப்பணம் புரிந்தேன்.*

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி அர்ப்பணித் திருந்தேன்.

**சுவாமியின் சதாபிஷேகம் :** இந்த நிலையில் சுவாமியின் **சதாபிஷேகம்** நடைபெறும் செய்தியை அறிந்தேன். இதனைப் பற்றாகக் கொண்டு 'மலை நாட்டுத் திருப்பதிகள்' என்ற நூலை விழாவில் அவர் திருவடியில் வைத்து வணங்கி அவர்தம் ஆசியை நேரில் பெறவேண்டும் என்ற உந்தலால் துறையில் விடுமுறை பெற்றுக் காஞ்சியை அடைந்தேன். சதாபிஷேக விழா சிறந்த பெரிய விழாவாகக் கொண்டாடும் (31.3.71 முதல் 10.4.71 வரை 10 நாட்கள்) வகையில் அமைந்திருந்தது. திவ்வியப் பிரபந்த வேத பாராயணங்களும், சொற்பொழிவுகளும் நடைபெற்ற வண்ணம் இருந்தன. இந்த நிலையில் காஞ்சி சென்ற அடியேன் போந்த நிலையை விவரங்களுடன் ஆள்மூலம் தெரிவித்தேன். சுவாமி எழுந்து அறை வாயிலுக்கு வந்தார்கள். நூலை அவர்தம் பாதார விந்தங்களில் வைத்து வணங்கினேன். மகிழ்ந்து ஆசி கூறி அன்றைய நிகழ்ச்சியிலும் கலந்து

உணவும் கொண்டு செல்லுமாறு பணித்தார். அங்ஙனமே செய்தேன்.[14]

முன்னதாகவே தில்லி மாநகரிலும் 21.3.71 இல் சதாபிஷேகச் சிறப்புகளும் சுவாமியின் சேவைக்குப் பாராட்டுக் கூட்டங்களும் நடை பெற்றன. தில்லி மாநகரிலுள்ள சுவாமியின் சீடர்களும் பல பிரமுகர்களும் உயர்நீதி, உச்சநீதி மன்றங்களின் நீதியரசர்களும் அரசு அதிகாரிகளும் கூட்டங்களில் கலந்து கொண்டு கூட்டத்திற்குப் பெருமையும் பொலிவும் சேர்த்தனர்.

**திருவல்லிக்கேணி நிகழ்ச்சிகள்:** சுவாமியின் சதாபி ஷேகத்தைக் கொண்டாட வேண்டுமென்று திருவல்லிக் கேணியில் **ஸ்ரீமத் பரமஹம்ச ஸ்ரீமத் நாராயண ராமாநுஜ ஜீயர் சுவாமி** தலைமையில் ஒரு குழு அமைக்கப் பெற்றுச் செயற்பட்டது. 11.4.1971 அன்று சுவாமி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சந்நிதிக்கு எழுந்தருளினார். அப்பொழுது அங்கே ஆசாரிய பெருமகனார்களுக்கு வழங்கப்பெறும் சிறப்பு மரியாதையாக **பஞ்ச முத்திரை ஸ்ரீ சடகோபன்** சாதிக்கப் பெற்றது. இந்த விழாவில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீமத் பரமஹம்ச திருமலை திருப்பதி **பெரிய சீயர் சுவாமி காஞ்சி வாதிகேசரி அழகிய மணவாள சீயர் சுவாமி** ஆகியோர் எழுந்தருளியிருந்தனர். பின்னர் திருக்கோயில் திருமண்டபத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

*14. பல சிறுவர்களும் இளைஞர்களும் பிரபந்தப் பாசுரங்களைச் சேவித்துக் கொண்டிருந்தனர். பல பெரிய சுவாமிகளும் இதில் பங்கு பெற்றிருந்தனர். அருகிலிருந்த இளைஞன் ஒருவனை "பாசுரங்களின் பொருளும் தாற்பரியமும் அறிவையா?" என்று வினவினேன். தெரிந்து கொள்ளத்தான் வினவினேன். அவனோ இங்குள்ள பெரியவர்களில் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் எங்களைப் போல் கிளிப் பிள்ளைகள் தாம். அவர்களைப் போல எங்கட்கும் பக்திக்கும் ஈடுபாட்டிற்கும் குறைவில்லை" என்று கூறி முறுவலித்தான்.*

இறுதியில் குழுவின் சார்பாக சுவாமிக்கு ரூ.8001/- அடங்கிய பொற்கிழி வழங்கப் பெற்று சிறப்பிக்கப் பெற்றார்.

**சுவாமியின் குணநலன்கள்** : இவைபற்றி எவ்வளவு கூறியும் சுவாமியைப் பொறுத்தமட்டிலும் நாம் கூற முடியாத நிலைமையைத் தான் உணர்கின்றோம். ஆயினும் சிலவற்றைக் கூற முயல்வோம்.

(1) **'ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது'** எல்லோருடனும் அவரவர் தன்மைக்கு ஏற்ப சமமாகப் பழகுவர். எல்லோரையும் ஈர்க்கும் பண்பு நிறைந்த பெரியார். ஈவும் இரக்கமுமுடைய குணசீலர். குழந்தை மனம் உடையவர். புரையறக் கலந்து பழகும் பண்பு நிறைந்த மாமனிதர்.

(2) இராமாநுசரைப் போல் பரந்த உள்ளம் உடையவர். பட்டரைப்போல் பணிவும் பண்பும் உடையவர். அகந்தையும் செருக்கும் அவரிடம் மருந்துக்குக் கூட காண முடியாது. பழகுவதற்கு எளியவர்.

(3) தமக்கு வரும் கடிதங்கட்கு உடனுக்குடன் சுருக்கமாக விளக்கமாக மறுமொழி எழுதும் பண்பு இவரிடம் மகத்தானது. தம் வாழ்நாளில் இதற்காக எவர் உதவியும் நாடுவதில்லை. தன்னந்தனியாக இயங்குவதன் அற்புதத்தை இவர் ஒருவரிடமே காண முடியும்.[15]

(4) எந்தப் பொருளைப்பற்றிச் சொற்பொழிவாற்றினாலும் கையில் யாதொரு குறிப்பும் வைத்துக் கொள்ளாது பேசும் ஆற்றலுடையவர். கடல் மடை திறந்தது போல் ஆற்றொழுக்காக வெளிப்படும் அமுதவெள்ளம் கேட்டார் பிணிக்கும் தன்மையுடையது. கேளாரும் வேட்ப மொழியும் பான்மையுடையது. கணீர் என்ற குரல் ஒலிப்பு சொல்லும்தரம் அன்று.

*15. என் வாழ்நாளில் டாக்டர் மு.வ., முத்தமிழ்க் காவலர் கீ.ஆ.பெ. விசுவநாதம் ஆகியவர்களிடமும் இதனைக் கண்டேன்.*

(5) வைணவர்கட்கே உரிய திருத்திப் பணி கொள்ளும் பண்பு நிறைந்த பெரியார். வரும் கடிதங்களில் குறையிருப்பினும் அதனை நாகரிகமாகச் சுட்டிக் காட்டும் பெருங்குணம் உடையவர். ஒரு முறை 'சப்தகிரி' என்ற திருமலை- திருப்பதி தேவஸ்தானப் பத்திரிகை இதழ் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையொன்றில் 'ஒரு மகள் தன்னையுடையேன், அவளைத் திருமால் கொண்டு போனார்' என்ற பெரியாழ்வார் கருத்து ஆண்டாளைக் குறிப்பதாக எழுதிவிட்டேன். அதனைப் பார்க்க நேரிட்ட சுவாமியிடமிருந்து இராமபாணம்போல் ஒரு கடிதம் வந்தது. "தாங்கள் எழுதியது பெருந்தவறு. அது தாய்ப் பாசுரமாக நடைபெறும் இடத்தில் வருவது. உடனே தவறுக்கு வருந்தி பிழைத்திருத்தம் என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தாங்கள் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருப்பதால் பிறர் அதனைப் பின்பற்றுவார்கள். போலி நாணயம்போல் அது பரவும். தவிர்த்திடுக" என்று குறிப்பிட்ட பாங்கு அடியேனை வியக்க வைத்தது. திரு M.A. வேங்கட கிருஷ்ணன் (திருவல்லிக்கேணி) திருவரதராசன் (திருப்பதி) இவர்களையும் இவ்வாறு திருத்திப் பணிகொண்டதையும் அறிந்து வியந்தேன். இளைஞர்களாயின் கடிதங்களில் காணும் இலக்கண பிழைகளையும் தவறான மரபுத் தொடர்கள் ஆட்சியையும் சுட்டிக் காட்டத் தயங்கார்.

(6) பரந்த நோக்கமும் உருகும் உள்ளத்தையும் கொண்டவர் சுவாமி. தாம் சொற்பொழிவு செய்யும்போது பேச்சில் சதுரர் என்பதாக யாராவது வந்திருந்தால் அவருக்கும் சில மணித் துளிகள் பேச வாய்ப்பு அளித்து மகிழ்வார். சுவாமியின் திருப்பாவை சொற்பொழிவுகட்குத் தவறாமல் வருகை புரிபவர்கள் இதனை நன்கு அறிவார்கள். இராமாநுசரிடம் இருந்த இப்பண்பு எப்படியோ நம் சுவாமியைத் தொற்றிக் கொண்டது. சொற்பொழிவு அமர்ந்து செய்யும்போது பல மணி நேரம் ஆயினும் கால்கள் ஆடாமல்

முதலில் இருந்தபடியே வைத்திருக்கும் நேர்த்தி சொல்லும் தரமன்று.

(7) சுவாமி ஒரு கல்விக் கடல். 'கற்றனைத்து ஊறும் அறிவு', 'கண்டது கற்கப் பண்டிதனாவான்' என்பவற்றின் உட்பொருளை நன்கு அறிந்தவர். ஆதலில் சதா படித்துக் கொண்டே இருப்பவர். இவர் படித்த நூல்கள் கணக்கில் அடங்கா.

(8) எழுத்தாற்றல் நிறைந்த பெருமான் நம் சுவாமி. அவர்தம் வாழ்நாளில் பாதிப் பகுதியை எழுதுவதிலேயே கழித்துள்ளார். அவர் அறிந்த எல்லா மொழிகளிலுமே அவர் கையெழுத்து மிக அழகாக இருக்கும். உடல் தளர்ந்த நிலையிலும் கையெழுத்தின் அழகு குறைவதில்லை. அடியேன் சிறுவயதிலிருந்தே அழகாக எழுதுபவன். உயர் நிலைப் பள்ளியில் பயிலும்போது தமிழ் ஆங்கிலக் கையெழுத்து முதல் பரிசு பல்லாண்டுகளாக அடியேனை விட்டுப் போகாது. உடல் தளர்ந்த நிலையில் அது மாறிப் போயிற்று. சுவாமியிடம் அது மாறவில்லை. அஞ்சல் அட்டையில் வரும் அவர் கையெழுத்தை முகத்தில் ஒற்றிக் கொள்ளலாம். நம் அருமை இராஜாஜியிடமும் இந்த அழகைக் கண்டவன்; டாக்டர் மு.வ. விடமும் இதைக் கண்டு மகிழ்ந்தவன்.

(9) தளர்ச்சியிலும் கடுமையாக உழைத்தவர். இந்நிலையிலும் உடன் பதில் தருபவர். சதா கட்டுரைகள் வரைந்த வண்ணம் இருப்பவர்.

(10) எல்லாத் துறைகளிலும் கைங்கரிய ஊற்றம் மிக்கவர். காஞ்சி தேவப்பெருமாள் சந்நிதியில் திவ்வியப் பிரபந்தக் குழுவில் சுவாமிக்கு இருந்த ஈடுபாடு அளவிடற் கரியது. வெளியூர் செல்லும் நாட்களைத் தவிர குழுவாகச் சேவிக்கும் முறையைத் தவிர்த்ததே இல்லை. கோவிலில் சிறப்பான நிகழ்ச்சிகள் உள்ளபொது சுவாமி வெளியூர் செல்வதைத் தவிர்த்து விடுவார். திருப்பாவை பொழிவிற்காக

முப்பது நாட்கள் சென்னைக்குச் சென்றிருந்தாலும் போகியன்று சொற்பொழிவுகளைக் காலையிலேயே சாற்று முறையாக நிறைவு செய்து விட்டு மாலை புறப்பாட்டிற்குக் காஞ்சி திரும்பிவிடுவார். அகவைக் கேற்ற தளர்ச்சி ஏற்பட்ட போதிலும் கூட குழுச்சேவையைத் தவிர்த்ததில்லை. திருநாட்டிற்கு எழுந்தருளுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் நடந்த பிரம்மோத்சவத்திற்குக்கூட ஒரு நாள் கூட தவறாமல் குழுச் சேவைக்குத் தொடக்கத்திலேயே எழுந்தருளி விடுவார். அருளிச் செயல் கைங்கரியத்தில் அளவிறந்த ஈடுபாடுடைய மற்றொருவரை இப்பூவுலகில் காண்டல் அரிது.

(11) அஞ்சாமையும் துணிவும் சுவாமியின் பிறவிப் பேறுகள். சுவாமிகள் தாம் கொண்ட சமய தத்துவக் கொள்கைகளில் ஊற்றம் மிக்கவராதலால் அவற்றை மறுத்து அல்லது எதிர்த்துச் சொல்பவர் எவராயினும் நேரிலேயே கண்டிக்கவும் தயங்கியதில்லை. காஞ்சி காம கோடி பீடம் திருப்பாவை திருவெம்பாவை மாநாடு நடத்தியபோது - "எங்கள் திருப்பாவையும் உங்கள் திருவெம்பாவையும் ஒன்றாகி விடுமா? நாங்கள் நாடோறும் கோயில்களிலும் எங்கள் குடில்களிலும் திருப்பாவை அநுசந்தானம் செயகின்றோம். அங்ஙனம் திருவெம்பாவையை உங்கள் மடத்திலாவது அநுசந்திப்பீர்களா?" என்று சங்கராசாரியரிடமே நேரில் கேட்டு விட்டனர். அங்ஙனமே எவரேனும் ஆட்சேபகரமான விஷயம் எழுதி வெளியிட்டால், அதன் மைஉலர்வதற்குமுன் சுவாமி கண்டனக் கட்டுரை அவர்கட்கே கிடைத்துவிடும்படி செய்து விடுவார்.

(12) **திருநாட்கள்** : வையம் கண்ட வைகாசித் திருநாளும் (தேவப் பெருமாள் பிரம்மோத்சவம்) பங்குனி விசாகத் திருநாளும் (சுவாமி அவதரித்தது பங்குனி விசாகத்தில்) மிக மிக முக்கியமானவை. முன்னதில் நாலாதிசைகளிலிருந்தும் அதனைக் கண்ணுற வரும்

அடியார்கள் சுவாமியை சேவித்து விட்டே தம் ஊர் திரும்புவார்கள். காஞ்சியில் அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்தது சுவாமியின் திருமாளிகையேயாகும் திருவிழா அன்று சுவாமி அருளிச்செயல் குழுவின் தலைவராய் எழுந்தருளியிருப்பார். பின்மாலை (அதிகாலை) நான்கு மணிக்கெல்லாம் பெருமாள் புறப்பாடு நடைபெறும். அதற்கு முன்பதாகவே சுவாமிகள் கண்விழித்துத் துயில் நீங்கி தீர்த்தமாடி பன்னிரு திருமண் காப்பும் பட்டுப் பீதாம்பரங்களும் திருமணித் தாவடங்களும் திருமேனியை அணி செய்ய குழுவிற்கு எழுந்தருள்வார். குழுவில் பங்கு கொள்பவர்கட்குத் தமது திருக்கைகளால் சம்பாவனை செய்து ஈத்துவக்கும் இன்பத்தைக் காண்பார்.

பின்னதில் சுவாமி அவதரித்த விசாகமும் ஒன்று படுகின்றது. அப்பொழுது சுவாமியின் திருமாளிகையில் விழா நடைபெறும். காலை, மாலை இருவேளைகளிலும் திவ்வியப்பிரபந்தக் குழு சேவை நடைபெறும். ஏறக்குறைய 100 அடியார்கள் இதில் பங்கு பெறுவார்கள். அத்துணை பேருக்கும் சுவாமி சம்பாவணை செய்து மகிழ்வார். சுவாமி யின் மணிவிழா முதலாகத் தொடங்கி 34 ஆண்டுகளாக இந்த ஏற்பாடு இடைவிடாமல் நடைபெற்று வந்தது. சுவாமியின் பிறந்த நாள் விழா என்பது திவ்வியப் பிரபந்த வேதபாராயணம், ஸ்ரீவைணவ ஆராதனம் ஆகிய இரண்டை மட்டிலும் அடிப்படையாகக் கொண்டது என்பது குறிப்பிடத் தக்கது.

## சுவாமியின் வாழ்நாளில் இரண்டு இறுதி நிகழ்ச்சிகள்: (சென்னையில்)

**(அ) இறுதிச்சொற்பொழிவு :** சொற்பொழிவு நிகழ்த்தி அடியார்களை வாழ்விப்பதையே தம் கடமையாகக் கொண்டவர்கள் நம் சுவாமி. தமது திருமேனி மிகவும் தளர்ச்சியடைந்தபோதிலும் 1982-83 மார்கழித் திங்கள்

திருப்பாவை சொற்பொழிவிற்கு எழுந்தருளினார். தமது ஆற்றலின்மையையும் பொருட்படுத்தாமல் நாடோறும் ஒருமணி நேரத்திற்குக் குறையாமல் சொற்பொழிவு நடைபெறும். "இங்குக் கேட்கும் பொருளை நீங்கள் வேறெங்கும் கேட்க முடியாது; அடுத்த ஆண்டு கேட்கவே முடியாது" என்று அருளிச் செய்தார். அப்படியே ஆகிவிட்டது. மார்கழித் திங்களிலேயே ஓரிரண்டு நாட்கள் உடல் நலக்குறைவு நேரிட்டும், விடாமல் திருப்பாவை சாற்று முறையை நிறைவு செய்து விட்டுக் காஞ்சிபுரம் திரும்பினார்.

**(ஆ) இறுதி நூல் வெளியீடு** : தாம் வெளியிடும் நூல் ஒவ்வொன்றும் சொற்பொழிவாளர்கட்குப் பேருதவியாக இருக்க வேண்டும் என்று கருதுபவர் சுவாமி. அதற்கேற்ப சுவாமி இறுதியாக வெளியிட்ட நூல் "**நகைச்சுவைக் கதைகளும் பக்திக் கதைகளும்**" என்பது. சொற்பொழிவுகட்கிடையே சொல்லக்கூடிய 40 கதைகள் அடங்கிய இந்நூல் 1983 மே மாதம் வெளியிடப் பெற்றது.

**சுவாமி பெற்றுள்ள விருதுகளும் பிறவும்** : பன்னிரண்டாம் அகவைமுதல் சுவாமி பற்பல பட்டையங்களும் விருதுகளும் பெற்றுத் திகழ்ந்தார். அவை யாவும் சுவாமியை அடைந்தமையால் பெருமை பெற்றன என்று கொள்ளலே பொருத்தம்.

**(1) உபய வேதாந்தாசார்யர்** : வைணவனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இப்பட்டத்தைப் பெறுவது இயல்பாக அமைகின்றது. உண்மையாக இது பெரும்பாலோருக்குப் பொருந்துவதில்லை. ஆனால் நம் சுவாமி உண்மையிலேயே திவ்வியப்பிரபந்தம், வேதம் ஆகிய இரண்டிலும் கரைகண்டவராதலால் இப்பட்டம் அவருக்கு நூறு விழுக்காடு பொருந்துகின்றது. இதில் சுவாமி தமக்குவமராகின்றார்.

(2) **திவ்வியப்பிரபந்தப் பேராசிரியர்** : இவர்தம் பேச்சும் மூச்சும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களே என்பதற்கு இவர்தம் வாழ்நாள் முழுவதும் இவர் மேற் கொண்ட பிரபந்தம்பற்றிய சொற்பொழிவுகளும் பிரபந்த உரைகளுமே சான்றுகளாக அமைகின்றன. இவற்றைக் கண்டு வியந்த **இராமநாதபுரசேது சமஸ்தான வித்துவான் பேராசிரியர் இராகவையங்கார் சுவாமி** இவ்விருது இவருக்குத் தகும் என்று வியந்து பாராட்டிப் பேசியதும் பெரிய சான்றாகத் திகழ்கின்றது.

(3) **செந்தமிழ்ச் செல்வர்:** தமிழ் இலக்கிய இலக்கியங் களைக் கற்றுத் துறை போய வித்தகராகத் திகழ்ந்து கவிபாடும் திறனையும் கண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளிவந்த செந்தமிழ் பத்திரிகை ஆசிரியர் **திரு நாராயண ஐயங்கார் சுவாமி** இவ்விருதைச் சுவாமிக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

(4) **மகா வித்துவான் :** வைணவ உலகில்'வித்துவான்' என்று பெயர் பெற்ற ஒவ்வொருவரும் சுவாமியின் நூல்களைப் பயின்று தெளிவு பெறுவதால், வித்வான்களுக் கெல்லாம் வித்வானாகத் திகழும் சுவாமியை **'மகா வித்வான்'** என்று பல வித்வான்கள் மதித்து இவ்வாறு அழைத்து வந்தமையால் இப்பட்டம் தானாக இவரை ஒட்டிக் கொண்டு தானும் பெருமை பெறுகின்றது.

(5) **பிரதிவாதி பயங்கரர்** : இது இவர்தம் குடிப் பெயராக அமைந்த ஒன்று என்றாலும் இவருக்கே இவர்தம் வாதமிடும் திறமையால் உண்மையான பட்டமாக அமைந்து விட்டது. சுவாமி இருபது அகவை முதற் கொண்டே பிரதிவாதிகளுக்கு உண்மையிலேயே பயத்தை விளைவித்த பெருமானாகத் திகழ்ந்தமையால் இப்பட்டமாக நிலைத்து விட்டது என்பதை எவரும் அறிவர்.

(6) **வியாக்கியான வாசஸ்பதி** : ஆழ்வார் ஆசாரியர்களின் அருளிச் செயல்களுக்கு தமிழ் மொழியில் மட்டுமல்லாமல் பிற மொழிகளிலும் (தெலுங்கு, இந்தி, வடமொழி) அற்புதமான வியாக்கியானங்களைப் படைத்தவராதலால், **சிவானந்த சரசுவதி** என்பார் இப்படைப்புகளைப் பாராட்டி வழங்கிய விருது இது.

(7) **மஹாமஹிமோத்யாயர்** : வடநாட்டில் பிரயாகை யிலுள்ள '**பாரதி பரிஷத்**' என்ற வித்வ சபையின் சார்பில் இந்தியத் துணை ஜனாதிபதி **ஸ்ரீபாதக்** என்பவர் கையால் 1971 இல் சுவாமிக்கு வழங்கப்பெற்ற பட்டையம் இது.

(8) **ஜகதாசாரிய சிம்ஹாசனாதிபதி** : நம் சுவாமியின் ஆசாரியரான காதி சுவாமி ஜகத் குரு எனப்பட்டார். எனவே முதல் சீடரான நம் சுவாமியை ஜகதாசார்ய சிம்ஹாசனாதிபதி என்று ஆசாரியர் வழங்குவது சாலப் பொருந்தும். எம் பெருமானால் நியமித்த 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவரது வழித் தோன்றலுமாய் ஸ்ரீவைணவ ஜகதாசார்யருமாய்த் திகழ்வதால் இப்பெயர் பட்டம்போல் அமைந்து விட்டது போலும்.

(9) **வேத பாரங்கதர்** : 22 அகவையிலேயே வேதம் ஓத முற்பட்டு, அதனைக் கசடறக் கற்று, வேத பாஷ்யங்களை ஆராய்ந்து, வேத லட்சண நூல்களையும் இயற்றி பல திவ்விய தேசங்களில் வேதபாராயண கைங்கரியத்திலும் அந்வயித்து தம் வாழ்நாள் முழுவதும் வேதமணம் கமழத் திகழ்ந்தவர் நம் சுவாமி. இவர்தம் சொற் பொழிவுகளில் வேதங்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற் கோள்கள் துள்ளி விளையாடும். இந்த விளையாட்டில் அவை இஃது இத்தனையாவது காண்டத்தில் இத்தனாவது பிரசனத்திலுள்ள இத்தனையாவது பஞ்சாதி என்று தம்மை அறிவித்துக் கொள்ளும். இத்தகைய நினைவாற்றலைப் பெற்றிருந்தவர் நம் சுவாமி. இந்த விருது **ரிஷிகேசம் சிவானந்தசரசுவதி** அவர்களால் சுவாமிக்கு வழங்கப் பெற்றது.

(10) **பத்மவிபூஷணம்:** இலக்கியப் பேரறிஞர்கட்கு மத்திய அரசு வழங்கும் குடியரசுத் தலைவர் விருது 1967-இல் நம் சுவாமிக்கு அளிக்கப்பெற்றது. இந்தப் பத்து விருதுகளும் முத்துமாலை போல் திகழ வாழ்ந்து வந்தார் நம் சுவாமி.

**சிங்கப்பெருமாள் சுவாமியின் திருவாக்கு:** வைணவ உலகில் நிகரற்ற பெரிய ஞானியாகத் திகழ்ந்தவர் **காரப்பங்காடு சிங்கப்பெருமாள் சுவாமி**. இவர்தம் அருமை பெருமைகளைக் கேள்வியுற்று இவரைச் சேவிப்பதற்காகவே ஒருமுறை திருஅரங்கம் எழுந்தருளினார் நம் சுவாமி. சோதிடத்திலும் நிகரற்ற புலமை கொண்டவர் சிங்கப் பெருமாள் சுவாமி. நம் சுவாமியின் சோதிடக்குறிப்பை ஆழ்ந்து நோக்கி அழுத்தம் திருத்தமாக உறுதிப்படச் சொன்னது." பிரதிவாதிபயங்கரர் என்ற குடிப்பெயர் உமக்கு உண்மையாகவே அமைந்தது. உலகிலுள்ள வித்வான்கள் அனைவரும் தாமாகவே உம்மிடம் எழுந்தருளி உம்முடைய திருவாக்கில் மாட்டிக் கொள்வார்கள்"

**அடியேனை ஆட்கொண்டது:** சதாபிஷேகத்தில் முதன்முறையாகச் சந்தித்தபிறகு சுவாமிகளை (நான் ஓய்வு பெற்ற பிறகு 1979). இருமுறை காஞ்சியில் சந்தித்தேன். இருமுறையும், திருமண் காப்பிட்டுக் கொள்ளும் சமயம். திருமண் காப்புடன் அவர்தம் தரிசனம் உடலையும் உள்ளத்தையும் உருக்கக் கூடியது. இளவயதிலேயே அடியேனை மனங்கவர்ந்த இராமாநுஜரையே நேரில் காண்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

சுவாமிகளிடம் என் பணிகளை முடித்துக் கொண்ட பிறகு சுவாமிகளிடம் அடியேன் அடக்கமாக விண்ணப் பித்தது. "டாக்டர் உ.வே.சாமிநாத அய்யருக்கு திரு. கி.வா. சகந்நாதனும், திரு. சுப்பிரமணிய அய்யரும் உடனிருந்து பல்வேறு திசைகளில் பணியாற்றியதுபோல், தங்கட்கு

உடனிருந்து பணியாற்ற தக்க சீடர்கள் ஒருவரும் இல்லையே. அய்யர்வாள் நூல்கள் அமைந்திருப்பன போல் தங்கள் திவ்வியார்த்த தீபிகை முதல் அனைத்து நூல்களும் அமையவில்லையே. தாங்கள் மட்டிலும் தனியாக இருந்து அனைத்தையும் செய்யவேண்டியிருந்ததால் தங்கள் நூல்களில் அச்சுப்பிழைகள் அதிகமாகக் காணப் பெறுகின்றன. சம்பிரதாயப் பெயர்கள், வைணவ மரபுச் சொற்கள், வடமொழி தற்சமச் சொற்கள் ஆகியவற்றில் பிழைகள் நேரிட்டால் தொடக்ககாலப் படிப்பாளர்கள் சரியாகத் திருத்திப் படித்துக் கொள்ள முடியாதல்லவா? அடியேன் தங்கள் நூல்கலைப் பயிலும்போது திருப்பதியில் வடமொழி ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணியாற்றிய **திரு வேங்கட ராகவாசாரியர்** (தமிழை நன்குகற்ற வடமொழிப் பேராசிரியர்) அருகில் இருந்தபடியால் பிழைகளைத் திருத்திக் கொண்டும் வடமொழித் தொடர்களின் பொருள்களை செவ்வனே அறிந்து கொண்டும் கற்க முடிந்தது. தங்கட்கு அருகிலிருந்து பணியாற்றக் கூடிய சீடர்கள் இல்லையே" என்று வருத்தத்துடன் தெரிவித்தேன்.

**சுவாமி உரைத்த மறுமொழி:** "ரெட்டியார்வாள், தாங்கள் நெற்றியில் விபூதி அணிந்து கொண்டு வைணவ நூல்களை ஆழ்ந்து கற்கின்றீர்கள். 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - நம்மாழ்வார் சமயம் தத்துவம்' என்ற பொருளில் டாக்டர் பட்டமும் பெற்றுள்ளீர்கள். சைவத்தில் ஏராளமான பொருள்களிருந்தும் அவற்றில் ஒன்றைக் கூடத் தேர்ந் தெடுத்துக் கொள்ளாமல் வைணவ சமய தத்துவத்தை ஆய்வுப் பொருளாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள். இது எனக்குச் சற்று வியப்பாகவே உள்ளது" என்றார்.

**அடியேன் உரைத்த மறுமொழி:** சிறுவயதில் படித்தபோது இராமாநுசர் வாழ்க்கை என்னைக் கவர்ந்தது. அவர்தம் பரந்த நோக்கம் - சாதி சமய நெறிகளையெல்லாம்

கடந்த பெருமனநிலை-என் உள்ளத்தைப் பிணித்தது. ஏழுமலையான் திருவருளால் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணி அவன் அருளால் தமிழக மானியம் பெற்று தமிழ்த்துறையை வளர்த்து எம்.ஏ., எம்.,பில்., பி.எச்.டி. முதலான பட்டங்கள் பெறும் நிலைக்கு உயர்த்தினேன்.

ஒரு சமயம் தேவரீரைப் போல என்னை ஆட்கொண்ட **சுவாமி சித்பவாநந்தரிடம்** (அத்வைதி) உரையாடிக் கொண்டிருந்த பொழுது என் ஆய்வுத் தலைப்பை அவரிடம் உரைத்தேன். அவரும் மிகவும் மகிழ்ந்து, 'வைணவம் ஓர் உயர்ந்த சமயம் - எல்லோரும் ஏற்கக் கூடிய (Cosmopolitary) சமயம். அதனை நிறுவிய இராமாநுசர் பரந்த விரிந்த போக்கை உடையவர். ஆதலால் அதனை ஆய்வது எனக்கும் மகிழ்ச்சியே. நன்கு செயற்படுக, வாழ்க'' என்ற வாழ்த்தினார். அதனால் அதனயே உறுதியாகப் பற்றிக்கொண்டு ஆய்ந்தேன். இதனால் தேவரீர் தொடர்பும் ஆசியும் பெறுவதற்கு வாய்ப்பு அளித்தான் ஏழுமலையான்"என்று பணிந்து உரைத்தேன். மேலும் 'தங்கட்குப் பிறகு தங்கள் நூல்களைப் பாதுகாத்து வெளியிட 'குத்துவிளக்கு' போன்ற ஒரு நற்சீடர் இல்லையே.' 'தேவரீர்போன்ற சோதிக்குப் பிறகு 'இருள்நிலை' ஏற்படுமோ என்று அஞ்சுகின்றேன்' என்றேன்.

**சுவாமிகள் தொடர்ந்து உரைத்தது:** "நீர் சொன்னதை உணர்கின்றேன். என்ன செய்வது? தேவப் பெருமாள் சேவைக்கு இளைஞர் சிலர் வருவார்கள்; நானும் அப்போது இருப்பேன். அவர்கட்கு ஏதாவது சொல்லி ஞானம் ஊட்ட நினைப்பதுண்டு. எம்பெருமானைச் சேவிப்பார்கள். பிரசாதம் பெற்றுக் கொள்வார்கள். ஏதாவது அவர்களிடம் சொல்லலாம் என்று திரும்புவேன். ஏதாவது சொல்லி வற்புறுத்தக் கூடும் என்று கருதி மாயமாய் மின்னல்போல் மறைந்து விடுவார்கள்" என்று தாமும் வருந்தி உரைப்பார்.

"வரதராசப் பெருமான்தான் காப்பாற்ற வேண்டும். சில்வாழ் சிற்றறிவுடைய பூச்சிகள் போன்றவர்கள் நாம். அவன் பார்த்துக் கொள்வான், தெய்விகத் திட்டமாக அமைந்து விடும். யார் அறிவார் அவன் திருவுள்ளத்தை?" என்றேன்.

'ஆம்' என்று அடியேன் கருத்தை ஆமோதித்தார். இவ்வாறெல்லாம் உரையாடிய சுவாமி இன்று பூவுலகில் இல்லை. வைகுண்டவாசியாகி விட்டார்.

*தொண்டேசெய்து என்றும்*
*தொழுது வழியொழுக*
*பண்டே பரமன்*
*பணித்த பணிவகையே.*[16]

*ஒழிவில் காலம்எல்லாம்*
*உடனாய் மன்னி*
*வழுஇலா அடிமை*
*செய்ய வேண்டும்.*[17]

16. திருவாய் 10.4:9
17. மேலது 3.3:1

# 4. மறைந்தும் - மறையாத சோதி

*நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்*
*வாள்அது உணர்வார் பெறின் (334)*[1]

மனிதன் நுகர்வினையின்படி (பிராரப்தம்) பிறக்கின்றான். நுகர்வினை அநுபவித்து முடிந்ததும் இப்பூவுலகை விட்டுப் பிரிய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. நம் சுவாமியும் இதற்கு விதிவிலக்கு அல்லர்.

சுவாமியின் திருமேனியில் தளர்ச்சி ஏற்படுகின்றது. தளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க தாம் செய்யும் கைங்கரியங் களை இனிச் செய்ய முடியாமல் போய்விடுமோ என்ற ஆற்றாமை அதிகமாகின்றது. 'கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ?'[2] என்ற நிலையில் ஏங்கி இருந்தார் சுவாமி. 21-6-1983 அன்று காலை திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது சுவாமிக்கு. அன்று வடக்குத் திருவீதிப் பிள்ளை சாற்று மறை.[3] அதனை விரைவாக நிறைவு செய்து வருமாறு தம் சுவீகாரபுத்திரனான செல்வமணியிடம் பணித்தார். அன்றைக்கு ஆனி (பெரியாழ்வார்சாற்று மறை) 'கருடன் எத்தனை மணிக்குப் புறப்பாடு?' என்றும் கேட்டார். 1964 முதல் சுவாமி தாம் நிர்மாணித்தருளிய பாடசாலையிலேயே

1. திருக்குறள் - நிலையாமை 4
2. திருவாய். 6.9:9
3. நூலில் பிள்ளை, முதல் என்று குறிப்பிடுவ தெல்லாம் பிள்ளை சாதிப்பிரிவுகளைப்பற்றியதல்ல. அவையாவும் பார்ப்பண வைணவர்களையே குறிக்கும்.

நிரந்தர வாசமாக எழுந்தருளியிருந்த அன்று தம்மைத் தம் திருமாளிகைக்கு இட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். அங்ஙனமே சக்கர நாற்காலியில் அமர்ந்தவண்ணம் திருமாளிகைக்கு கொண்டு செல்லப் பட்டார்'. அங்கே படுக்கை விரித்து சிலமிடறுகள் தீர்த்தம் பருகி விட்டு சயனித்ததுதான் தாமதம். பார்த்திருந்தவர் கண்கள் அனைத்திலும் நீர் குளமாக ஆசாரியன் திருவடி அடைந்து விட்டார். 93 ஆண்டுக் காலம் இப்பூவுலகில் நடமாடி, சுமார் 80 ஆண்டுக்காலம் வைணவ உலகில் ஒளிர்ந்த ஞானச் சுடர் அணைந்து விட்டது.

*நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்*
*பெருமை உடைத்துஇவ் உலகு (337)*[4]

என்பது தமிழ்மறை மொழி அல்லவா?

இறுதி நிமிடம் வரை சுவாமிக்கு நினைவு மாறவே இல்லை. அந்த நிமிடத்திலும் தேவப் பெருமாள் புறப்பாட்டிற்கு எழுந்தருள வேண்டுமே என்ற துடிப்பு இருந்து கொண்டே இருந்தது. பெரியாழ்வார் பரதத் துவத்தைக் கண்ட ஆனி தன்னில் சோதி நன்னாளிலே பர தத்துவத்திடமே சென்று சேர்ந்து விட்டார். காலம் நடையாடும் பூவுலக வாசத்தைத் துறந்து காலம் நடையாடாத, வைகுண்ட வாசியாகி விட்டார் சுவாமி.

*சூழ்ந்தகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில்*
*பெரும் பாழேயோ!*
*சூழ்ந்துஅத னில்பெரிய பரமன்*
*மலர்ச்சோ தீயோ!*
*சூழ்ந்துஅத னில்பெரிய சுடர்ஞான*
*இன்ப மேயோ!*
*சூழ்ந்துஅத னில்பெரிய என்அவா*
*அறச் சூழ்ந்தாயே!*[5]

4. திருக்குறள் - நிலையாமை - 7
5. திருவாய் 10.10:10

இப்பாசுரம் ஆழ்வாரின் காதல் எம்பெருமானுடைய மிகப் பெரிய காதலில் மூழ்கி விட்டதை அறுதியிடுகின்றது. மூன்று தத்துவங்களையும் (சித்து, அசித்து, ஈசுவரன்) விளாக்குலை கொண்டிருக்கும் தம் அவாவானது சிறிதாம் படி, அதாவது தம்முடைய காதல் குளத்தின் அளவு என்னும்படி, கடல் போன்ற காதலோடே எம்பெருமான் வந்து கலந்தான் என்பதைத் தெரிவிக்கின்றது.

இது நம் சுவாமியுடன் எம்பெருமான் வந்து கலந்தானோ என்று அடியேனின் மனம் எண்ணி மகிழ்கின்றது. தெய்விகத் திட்டத்தை யாரால் அறுதியிட முடியும்? மனிதமனங்கள் அவரவர் பக்குவங்களுக்கேற்பப் பலவாறு எண்ணும் என்ற பாங்கைக் கருதி மகிழ்கிறோம்.

உத்தராயணத்திலே சுக்கில பட்சத்திலே, ஏகாதசியன்று மாலை 4.30 மணிக்கு, தம்முடைய ஜன்ம நட்சத்திரமாகிய விசாகம் வந்த பிறகு திருநாடு அலங்கரித்தது வியப்பான சிறப்பர்கும். இப்படியெல்லாம் நம்மனம் எண்ணுகின்றது.

அன்றிரவே இச்செய்தி காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவி விடுகின்றது. வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இச்செய்தி அறிவிக்கப்பெற்றமையால் அவற்றின் மூலம் இந்த நிலை ஏற்பட்டு செய்தி பரவுகின்றது. வைணவ உலகமே குமுறுகின்றது. சுவாமியை அறிந்த அனைவரும் - சமயம் கடந்த நிலையில் - கண்ணீர் விட்டு அழுத நிலையில் காணப்பெறுகின்றனர்.

மறுநாள் காலை அனைத்து நாளேடுகளிலும் முக்கிய செய்தியாக வெளிவருகிறது. பக்தர்களும் பாகவதர்களும் திடுக்குற்று அதிர்ச்சியடைகின்றனர். சுவாமியின் திருமேனியைச் சேவிக்க நெடுந்தொலைவிலிருந்து மலர்மாலைகளுடனும் மலர்வளையங்களுடன் வந்து திரளுகின்றனர். சுமார் ஆயிரம் வைணவர்கட்கு மேல் திரண்டிருப்பர்.

சுவாமியின் அருமை பெருமைகளுக்கேற்ப சரம கைங்கரியத்தை நடத்தத் திட்டம் தீட்டப் பெற்றது. ஸ்ரீ வைணவர்கள் படைசூழ சுவாமிக்கு திருமஞ்சன தீர்த்தம் வேகவதி ஆற்றங்கரையிலிருந்து உபநிடதபாராயணத்துடன் எழுந்தருளப் பண்ணப்பெற்றது. சுவாமியின் திருமாளி கையின் வாயிலில் மிகப் பெரிய கொட்டகையை அமைத்தனர். திருத்தேர் (பிரம்மரதம்) உருவாக்கப் பெற்றது. பெரிய கொட்டகையின்கீழ் சிறப்பான ஒரு சிறிய கொட்டகையை பச்சைத் தென்னம் மட்டைகளைக் கொண்டு அமைத்தனர். அதனடியில் கலசங்கள் முறைப்படி அமைத்து அவற்றில் தீர்த்தங்களால் பூரிக்கச் செய்தனர். **மாம்பள்ளம் பாஷ்யகாராசாரியர் சுவாமி** புரோகிதராய் எழுந்தருளினார். சுவாமியின் சுவீகாரத் திருக்குமாரர் செல்வமணி என்கின்ற **பி.ப. அரங்கநாதாச்சாரியர்** சரம கைங்கரியங்களை "ஆளவந்தார் படி" என்னும் சிறப்பு முறைப்படி பிற்பகல் 12.30 மணிக்குத் தொடங்கினார். வைதிகப் பெருங்குழுவும் வைணவப் பெருந்திரளும் இவ்வரிய பெரிய சுவாமியின் சரம கைங்கரியங்களை இமை கொட்டாமல் சேவித்துக் கொண்டிருந்தன. சுவாமிக்கு சிறப்பான திருமஞ்சனம் ஆகி திருமேனி திருமண் காப்பு அணிவிக்கப்பெற்றது. தூய வெண்ணிறக் கரை பதித்த திருப்பரிவட்டமும் சமர்ப்பிக்கப் பெற்றது. சுமார் 700 ஸ்ரீவைணவர்கள் முன்னர் திருவிருத்தகுழாம் எழுந்தருள 'திருத்தேர்' தேவப் பெருமாள் மாட வீதிகளில் வலமாய் எழுந்தருளப் பண்ணப் பெற்றது. இத்தகைய புறப்பாடு நம் வாழ்க்கையில் காண்பதென்பது மிக அரிதான ஒன்றாகும்.

ஸ்ரீ சூர்ணபரிபாலனம் ஆன பின்னர் தேவப் பெருமாள் தான் உடுத்துக் களைந்த திருமஞ்சள் ஆடையினைத் திருப்பரி வட்டமாகவும், பூமாலைகளையும் தனது கைங்கரியபரர்கள் சூழ அனுப்பிவைக்க அவை சுவாமிக்கு வெகுமானமாயிற்று. பின்னர் தேவப் பெருமாள் சந்நிதி

நம்மாழ்வார் மணவாளமாமுனிகள் ஆகியோரது திருப்பரிவட்டமும் பூமாலைகளும் வெகுமானமாயின திருமலை. திருப்பதி, வேளுக்கை, திருவெஃகா, திருவல்லிக்கேணி ஸ்ரீபெரும் புதூர், கூரம், மற்றும் சென்னையிலுள்ள 'சில கோயில் களிலிருந்தும் சிறப்பான வெகுமானங்களும் சுவாமிக்கு வந்து சேர்ந்தன.

பின்னர் மாலை 3.00 மணி அளவில் சுவாமியின் சரமத் திருமேனியைத் திருத்தேரில் எழுந்தருளச் செய்து பின்குழுவாக ஆளவந்தார் தோத்திர அநுசந்தானத்துடன் சரமத்திருமேனி பயணப் புறப்பாடு நடைபெற்றது. சுவாமியை வேகவதி ஆற்றங்கரை மீது தேவப்பெருமாள் புண்ணிய கோடி விமானச் சாயையில் அமைந்துள்ள இடத்திற்கு எழுந்தருளச் செய்தனர். அங்கே பிரம்ம மேத சம்ஸ்காரம் என்னும் மிகப் பெரிய பிரக்கிரியையுடன் சுவாமியின் சரமத் திருமேனிக்கு உத்தமமான சம்ஸ்காரம் நடத்தப் பெற்று சுவாமியும் தமது பூதவுடலை விட்டு தெளி விசும்பு திருநாட்டிற்குப் பேரொளியாய் எழுந்தருளினார்.

சுவாமியின் திருமேனி இந்த இருள்தருமா ஞாலத்தினை விட்டு நீங்கி விட்டதே தவிர, சுவாமியால் அருளிச் செய்யப்பெற்ற ஆயிரக்கணக்கான இலக்கிய - சமய - தத்துவப் படைப்புகள் என்றும் நிலைத்து நிற்கும்.

*நான்உன்னை யன்றியிலேன்*
*கண்டாய் நாரணனே*
*நீஎன்னை யன்றி*
*இலை.*[6]

*தேடிய அகலிகை சாபம் தீர்த்ததாள்;*
*நீடிய உலகுஎலாம் அளந்து நீண்டதாள்;*
*ஓடிய சகடுஇற உதைத்து பாம்பின்மேல்*
*ஆடியும் சிவந்ததாள்; என்னை ஆண்டதாள்.*

-வில்லிபுத்தூராழ்வார்

6. நான் திருவங்-7

## சுவாமியைப்பற்றி...

### (அ) அறிஞர்களின் கருத்துகள்

(1) ஸ்ரீமத் பரம ஹம்சேத்யாதி 28-வது பட்டம் **வானமாமலை ராமாநுஜ ஜீயர்சுவாமி:** "உடையவரையும் மாமுனிகளையும் அநுபவிக்கப் பெறாத பேரருளாளன் தன் ஏமாற்றத்தைப் போக்கிக் கொள்ள 'இரண்டுருவும் ஒன்றா யிசைந்து' என்கின்றபடி எம்பெருமானாரையும் மாமுனி களையும் ஓர் உருவமாக அவதரிப்பித்து அநுபவிக்கத் திருவுள்ளங் கொண்டு நம் அண்ணங்கராசாரிய சுவாமியை அவதரிப்பித்து தம் திருவடிவாரத்திலேயே வித்யாப்பியாசங் களை நல்கி உபயவேதாந்தங்களையும் கற்பித்து அருளினான். அவருடைய உபய வேதபாராயண உபயவே தாந்த பிரவசனாதிகளாலே தாமும் தம் நாச்சிமாரும் பக்த ப்ரப்ருதிகளோடு அநுபவித்து எம்பெருமானார் - மணவாள மாமுனிகளை அநுபவிக்காத குறைதீர அநுபவித்து ஆனந்தித்தான்.

இதற்குப் போட்டியாக பெரிய பெருமாளைப் போலே ஆசை கொண்ட பரமபதநாதன் நித்தியசூரிகளாலே சதாசர்வ வித கைங்கரியங்களைக் கொண்டபோதிலும் நம் சுவாமியையும் விரும்பி அழைத்துக் கொண்டான், பரமபத நாதனும் மற்றும் அங்குள்ளாரும் ஆனந்திக்க, தேவப் பெருமாளும் மற்றுமுள்ள நாமும் சோகிக்கலாயிற்று. நம்மால் செய்கலாவது ஒன்றில்லை. ஒருவன் பெற்றால் மற்றொருவன் இழக்கை சகஜம். இதனால் சோகிப்பதைத் தவிர, வேறு வழி இல்லை.''

### (2.) பிள்ளைலோகம் ஸ்தல சயனத்துறைவார்

இவர் ஆர் கொல்!

நம் சுவாமியை நேரில் சேவித்தவர்கள் பலர். அவரது பெயரை மட்டிலும் அறிந்தவர்கள் சிலர்.

நேரில் சேவித்தவர்கள் வியக்கிறார்கள். காலாட்சேபங்களைக் கேட்டவர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். 'இப்படிப் பட்ட மகானை எம்பெருமான் எப்படித் தோற்றுவித்தான்! அவனே அவதரித்தானோ! இல்லை... ஆழ்வார்களுள் ஒருவரோ! எம்பெருமானாரோ! விசதவாக் சிகாமணியான மணவாளமாமுனிகளோ! இன்னாரென்றறியோம் என்கிறார்கள். இவரார் கொல்?

........................

பொய்யையே மெய்ம்மையாகச் சொல்லித் திரியும் அபார்த்தவாதிகளின் வாதங்களை நிரசிக்கக் கையில் எழுதுகோல் எடுத்த நம் சுவாமி இறுதிவரை அதைக் கீழே வைக்கவில்லை. உருவின வாளை உறையிலிடவில்லை.

........................

மணவாளமாமுனிகள் மிகவும் சாகத சுபாவ முடையவர். விசதவாக் சிகாமணி! ஆசாரிய இலட்சணங்கள் நிரம்பி, அரங்கனும் வரிக்கத்தக்க ஆசாரியராக விளங்கினார். மணவாளமாமுனிகளால் பகவத்விஷயம் பிரசாரம் ஆயிற்று! ஆகவே வைணவ உலகம் அவரை 'இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்' என்று வாழ்த்தியது.!

நம் சுவாமியும் சார்ந்த சமதமாதி குணங்களைக் கொண்டவர்; கல்விக்கடல்! அழகிய சொற்களைக் கூறுபவர். ஆசாரிய இலட்சணங்கள் நிரம்பி 'ஜகதாசாரியர்' என்ற பெருமையோடு குறிக்கப் பெறுகிறவர். பகவத் விஷயத்தைப் பலமுறை நூல்களாகப் பதிப்பித்தும் காலட்சேபங்களைச் சாதித்தும் எம்பெருமானின் பரிபூர்ண கிருபையைப் பெற்றவர். ஸ்ரீவைணவம் தழைத்தோங்க மணவாளமாமுனிகளை வைணவ உலகம் பிரார்த்தித்ததுபோலவே நாமும் 'அண்ணா சுவாமி இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்' என்று கீதாசாரியன் திருவடிகளில் பிரார்த்திக்கின்றோம்."

(3) **தீபம் நா. பார்த்தசாரதி** : பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியசுவாமிகள் இன்று நம்மிடையே இல்லை... சுவாமி ஒரு ஸ்தாபனமாகவே வாழ்ந்தார். அவருடைய நினைவும் ஒருஸ்தாபனமாகவே நம்மிடையே இயங்கும் என்பது என்னுடைய நம்பிக்கை.

.....................

சுவாமி அவர்கள் அவருடைய ஞானத்தாலும் நூலறிவாலும் உபதேசங்களாலும் '**திராவிட வேதசாகரமாக**' வாழ்ந்தார். திராவிட வேதசாகரமகத் தமது கிரந்தங்கள் மூலமாகவும், விரிவுரைகள் மூலமாகவும் சீரஞ்சீவியாக இனியும் வாழ்வார்... சுவாமி அவர்களின் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்பு நீடிக்கும். திராவிடவேத சாகரம் வற்றாது. ஏனெனில் அந்த மகா புருஷர் தொட்டசாகரம். வரும் தலைமுறைகளுக்கு வேண்டிய ஞானவளம் இந்தச் சாகரத்தில் நிச்சயமாக நிரம்பியிருப்பதுதான் காரணம்."

(4) **சாண்டில்யன்:** "காஞ்சியில் பிரதிவாதி பயங்கரர் குடும்பத்தில் ஒரு குழந்தை வீறிட்டு அழுது கொண்டே பிறந்தது. அதற்கு 'அண்ணா' என்று பெயரிட்டார்கள். உலகத்துக்கு ஒரு அண்ணா பிறந்தார், ஸ்ரீவைணவ சம்பிரதாயத்திற்கு ஒரு ஜகதாசார்யர்' தோன்றினார்."

(5) **டாக்டர் U.V. இராமானுஜம்:** P.B.A. சுவாமி நமது சம்பிரதாயத்திற்குச் செய்துள்ள தொண்டு வாசாம கோசரம்... நம் சுவாமி எளிய நடையில் பூருவர்கள் கூறிய சுவை குன்றாமல் யாவரும் புரிந்து பயன் பெறும்படி வெளியிட்டுள்ள திவ்யார்த்தங்கள் ஒரு முக்கியமான தேவையைப் பூர்த்தி செய்கின்றன. நாலாயிரப்பிரபந்தம் பூராவிற்கும் ஆழ்வான் பட்டர் இவர்கள் சாதித்துள்ள ஸ்தவங்களுக்கும் மற்றும் இரகசிய கிரந்தங்களுக்கும் சுவாமியின் வியாக்கியானங்கள் கைவிளக்குபோல பயன்படுகின்றன.

........................

நமது சுவாமி சத்சம்பிரதாயத்துக்கும் தகர்க்க முடியாத தொரு கோட்டையாக விளங்கினார் என்றால் அது மிகை இல்லை.... நம் சுவாமி சம்பிரதாயப் பாதுகாவலராக விளங்கி வந்தார்... பூர்வாசாரிய, கிரந்தங்களை மறுபதிப்பு செய்தும் அவற்றினுள்ள அரும் பெருங் கருத்துகளை எளிய நடையில் தெளிவாக யாவரும் அறியும்படி எழுதி வெளியிட்டும் மகோபகாரம் பண்ணியவர் நம் சுவாமி.

...........................

சுவாமியை நாம் இழந்து விட்டது ஈடு செய்ய முடியாத நட்டமாயினும் அவர் புகழுடம்புடன் நம்மிடையே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டே இருப்பார்.

## (ஆ) பருவ சஞ்சிகையில் வெளிவந்த கருத்துகள் :

(1) **ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம் :** பல மொழிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர் அவர் ஒருவரே.... மணவாள மாமுனிகளிடம் அவருக்குள்ள பக்தி அபரிமிதமானது.

(2) **யதிராஜ பாதுகா :** மேருமலை சரிந்து விட்டது. ஒரு மாபெரும் வைணவ ஜோதி மறைந்து விட்டது. ஆயினும் அந்த ஜோதி பரப்பிய ஒளி இருந்துகொண்டே இருக்கும்.... காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங் கராசார்ய சுவாமி இன்று நம்மிடையே இல்லை என்பதை நினைத்துப் பார்க்கவும் இயலவில்லை.... 1276 என்று கணக்கிடப் பெற்றுள்ள நூல்களின் மூலமும் எண்ணற்ற தம் பிவசனங்கள் மூலமும் அந்த அறிவொளியை நாமெல்லாம் அநுபவிக்கும்படி வாரி வழங்கிக் கொண்டிருந்தார். மணியோசையை யொத்த அந்தக் குரல் ஒடுங்கி விட்டதை நினைக்க நெஞ்சம் அதிர்கிறது.

(3) **ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா** : தென்னாசார்ய சம்பிரதாய ஜோதி மறைந்தது. காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமி புகழ்மிக்க ஸ்ரீ வைஷ்ணவர்களில் ஒருவர். ஸ்ரீ ராமானுஜ சித்தாந்தத்திற்கு அரும்பாடு பட்டுள்ளார்.

உபந்யாசம் செய்ய ஆரம்பித்தால் சுருதி, ஸ்ருதி இதிகாச புராணங்கள், ஆழ்வார் ஆசாரியர்களின் ஸ்ரீ சூக்திகள் எல்லாவற்றையும் கடல் மடை திறந்தாற் போல் தட்டுத் தடங்கலின்றி உபகரிப்பார்.

இத்தகைய ஜோதி மறைந்து விட்டது. இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

(4) **ஸ்ரீரங்கநாதபாதுகா** : பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமி திருநாடலங்கரித்தது நம் தர்சனத்துக்குப் பேரிழப்பாகும்.

(5) **சப்தகிரி** : பல துறைகளிலும் உயர்ந்தவர், பலமொழிகளிலும் தெளிந்தவர், பெரியோர்கள் பலரின் ஆற்றல்கள் பலவற்றையும் ஒருங்கே பெற்றவர். கலைகள் பலவும் கைவரப் பெற்றவர் எனப்படும் ஒருவரைக் காண்டல் அரிது. அவர்தாம் அவனி யெல்லாம் கொண்டாடும் அருங்கலை விநோதர் அண்ணங்கராசாரிய சுவாமிகள்.

இத்தகைய ஆற்றலும் சிறப்பும் பெருமையும் கொண்டு திகழ்ந்த அன்னாரின் மறைவு வைணவ உலகத்திற்கு மட்டுமல்ல; சமய உலகிற்கும் பாரத மண்ணிற்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். சுடரொளி பேரொளியானது. - ஆ. சீதாராமன், காஞ்சிபுரம்.

(6) **ஆனந்த விகடன்** : அண்மையில் தனது 93-வது வயதில் மறைந்த பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமிகள் இந்த நூற்றாண்டு கண்ட அதிசய மனிதர்களில்

ஒருவர். நடமாடும் ஒரு நூல் நிலையமாகத் திகழ்ந்தவர். வைணவ சித்தாந்தத்திலும் இலக்கியத்திலும் கரை கண்ட மேதை. பன்மொழி விற்பன்னர், நூலாசிரியர், இதழாசிரியர். சிம்மமெனக் கர்ஜிக்கும் குரல் வளம் நிறைந்த சொற் பொழிவுத் திலகம்.

இவர் ஒரு மேதை. இவர் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

**(7) கல்கி :** 94-வயதில் பழுத்த பழமான வைகுண்ட பதவியை அடைந்த அண்ணங்கராசார்ய சுவாமி பிரதிவாதி பயங்கரம் என்ற வமிசத்தில் உதித்தவர். வேத, சாத்திர, புராண, பக்தி, இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவர். இவற்றைப் பொறுத்த மட்டிலும் இவர் நடமாடும் கலைக் களஞ்சியம். 18 மொழிகளை அறிந்தவர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். இவர் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு எழுதிய 'திவ்வியார்த்த தீபிகை' என்ற உரை மிகு புகழ் வாய்ந்தது. 'இராமாநுஜன்' என்ற இதழின் ஆசிரியர்.

**(8) குமுதம் :** அண்ணாங்கராசார்ய சுவாமி அவர்களை மிஞ்சிய வேத விற்பன்னர் இலர். அவர் ஒரு சமுத்திரம்.

**(9) இதயம் பேசுகிறது :** தமிழகத்தில் அதிக நூல்கள் எழுதிய மாமேதை பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய சுவாமிகள். எழுதிய நூல்களின் தொகை 1276.

**(10) முத்தாரம் :** பிரதிவாதி பயங்கரம் அண்ணாசாமி பதினெட்டு மொழிகளைக் கற்றறிந்தவர். இவர் எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கை 1276. அவற்றுள் 'திவ்வியார்த்த தீபிகை' மிகு புகழ் வாய்ந்தது. 50 ஆண்டுகட்கு மேலாக 'இராமாநுசன்' என்ற வைணவ இதழின் ஆசிரியராகத் திகழ்ந்தவர்.

(11) **ஜூனியர் விகடன்** : உபய வேதாந்த பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமி தமது 93-வது வயதில் அமரராகி விட்டார். ஒரு வைணவச் சுடர் மறைந்து விட்டது. இது சமய உலகிற்குப் பேரிழப்பு.

(12) **ஞானபூமி** : கிறித்தவர்கள் விவிலியத்தையும் இஸ்லாமியர்கள் குர்ஆனையும் தம் சமய நூலாக வைத்துக் கொள்வதைப் போல் இந்துக்கள் பகவத் கீதையைத் தம் சமய நூலாக வைத்துக் கொள்ளலாம் என்கிறார் பிரதிவாதி பயங்கரம் அண்ணாசாமி என்ற மகான். வடகலை, தென்கலை கலைகளைச் சேர்ந்தவர்கள் துவேஷமில்லாமல் வாழ்ந்தால் போதும் என்பது அவர்தம் கருத்து:

(13) **திரு. இ.வ. கிருஷ்ணன், உரிமையாளர் குரு அச்சகம்** :

1970-ஆம் அண்டு என்று நினைவு.... பதினைந்து வயதுள்ள சிறுவன் பட்டை திருமண் தீட்டிய முகப் பொலிவுடன் என்னிடம் வந்து என்னை காஞ்சியில் ஒரு பெரியவரிடம் இட்டுச் சென்றான். அவர் சுமார் 75 அல்லது 80 வயது நிரம்பியவர். அமர்ந்த வண்ணம் புரூப்களைத் திருத்திக் கொண்டிருந்தார்.

"உன் பெயர் கிருஷ்ணன் என்கின்றாய், கிருஷ்ணன் ஏமாற்றுக்காரனாயிற்றே! உன்னை நம்பலாமா?" என்றார் சிரித்துக்கொண்டே. பிறகு ஒரு புத்தகத்தை எடுத்து 'இதை மறுபதிப்பு செய்ய வேண்டும். இன்றே வேலையைத் தொடங்கி விடு. நாளை 'புரூப்' அனுப்பு. இதை அட்வான்சாக வைத்துக் கொள் என்று கூறி ரூ.500/- க்கு ஒரு செக் கொடுத்தார். நான் திகைத்துப் போனேன்.

.... ... ...

பெரியவரிடம் இது பற்றிக் கேட்டேன். பெரியவர் சொன்னார். "உன் முகத்தைப் பார்த்தாலே நீ யோக்கியன்

என்று தெரிகிறது. மேலும் இவனைச் சிறுவன் என்று நினைக்காதே. இவன் சிபாரிசு செய்தால் நிச்சயம் அவன் நல்லவனாகத்தான் இருப்பான் என்று எனக்கு நம்பிக்கையுண்டு" என்றார்.

அந்தப் பெரியவர்தான் மகாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரி சுவாமி. அந்தச் சிறுவன்தான் கீதாசாரியன் ஆசிரியர் திரு வேங்கடகிருஷ்ணன். இவ்விருவருடைய சேர்க்கையால் என் வாழ்விலும் அச்சகத்திலும் ஒரு திருப்பமே ஏற்பட்டது.

.... ... ...

சுவாமியின் திருவுருவப் படத்தை மூவண்ணங்களில் அச்சிட்டுப் பார்க்க முயன்றேன். வியக்கத் தக்க வகையில் அப்படம் மிக அழகாக அமைந்தது. அன்று முதல் இன்று வரை பல படங்களை அழகாக அச்சிட்டு வரும் எனக்கு இவ்விஷயத்தில் முதன் முதல் அருள் புரிந்தவர் சுவாமிதானே! அப்படிப்பட்ட ஒரு பெரியவரை இழந்து விட்டோம் என்று நினைக்கும்போது துக்கம் நெஞ்சை அடைக்கின்றது".

(14) **கீதாசார்யன்** : பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் ஜூன் 21, 1983 அன்று தமது 93-வது வயதில் திருநாடு அலங்கரித்து விட்டார். இந்த ஈடு செய்ய முடியாத பேரிழிப்பு ஸ்ரீ வைணவ சமுதாயத்தின் மேல் இடிபோல் இறங்கியுள்ளது. ஒரு ஞானச் சுடர்விளக்கு அணைந்தது. இனிமேல் அவரது வெண்கலக் குரலைக் கேட்க முடியாது. இனி அந்தத் திருக்கைகள் எழுதப் போவதில்லை. இனி சுவாமி கோஷ்டியில் சேவிக்க முடியாது.

தேவப் பெருமாளை விட தேவப் பெருமாள் அருளிச் செயல் கோஷ்டியில் அதிக ஈடுபாடுடையவர் சுவாமி.

இறுதி மூச்சு உள்ளவரை கோஷ்டியைப் பற்றிய நினைவு கொண்டிருந்தார். அவருடைய திருவுள்ளத்திற் கேற்ப ஆங்காங்கேயுள்ள வைணவர்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களைக் கற்றுக் கொண்டு அருளிச் செயல் கோஷ்டியைக் கட்டிக் காப்பதே நாம் சுவாமிகளுக்குச் செலுத்தும் பொருத்தமான அஞ்சலியாகும்.

## (இ) நாளேடுகளில் கண்டவை :

(1)**தினமணி** : வைணவ இயக்கத்தின் பேரரகராதியாகத் திகழ்ந்தவர். பன்மொழிப் புலவராகப் புகழோங்கி நின்றவர். நெடுங்காலம் வைணவம் வளர்த்த அண்ணங்கராசார்யர் சுவாமிகளின் பெரிய நூல் வரிசை திவ்வியார்த்த தீபிகை.. கடல்மடை திறந்தாற்போல் பேசக் கூடிய ஆற்றல் படைத்தவர். அவர் மறைவு ஈடு செய்ய முடியாத போழிப்பு.

(2) **The Indian Express**

Maha Vidvan Sri PratiVadi Bhayankaram Annangaracharya Swami is a giant among Vaishnava Scholars. A profound scholar both in Tami and Sanskrit he was a great exponent of Vaishnavite tenets of Sri Ramanuja. He was a prolific writer and has left a number of commentaries on the works of Alwars and Acharyars. His work 'Divyartha Deepika' is a monumnental work on the Tamil works of Alvars. He was considered as a walking Encyclopaedia on Vedic and Puranic lore; he was the receipients of many awards including Presidents 'Bharat Bhushan'.

(3) **The Hindu :**

Considered as an Encylopaedia in Vedic and Puranic lore. He popularised the works of Alwars and Acharyas.

# 5. எழுத்தோவியங்கள்

படித்தல், பேசுதல், எழுதுதல் என்ற மூன்றும் ஒரு வளர்ச்சிக்குத் துணைபுரியும் வழிகளாக அமைபவை. இவை மூன்றும் சுவாமியிடம் இயல்பாகவே அமைந் திருந்தவை. அற்புதமாகச் செயல்பட்டவை. இந்நிலையில் சுவாமியின் எழுத்தோவியங்களை நோக்குவோம். இவை பல திறப் பட்டவை. இவை நல்ல தாளில், புதிய எழுத்துகளில் வெளிவந்தால் சிறக்கும். வைணவ நூல்களில் அழகான பதிப்புகள் வெளி வராதிருப்பது வருந்தத்தக்கது.

(1) **திவ்விய பிரபந்த உரைகள் :** நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திற்குத் தேனும் பாலும் கன்னலுமாகத் தித்திக்கும் வியாக்கியானங்களை எளிய நடையில் தெளிவாக எழுதியுள்ளார். இவையனைத்தும் ஆறு பதிப் புக்கு மேல் அச்சேறியுள்ளன. தற்சமயம் சில பகுதிகள் மட்டும் கிடைப்பதில்லை. அவை மறுபதிப்புச் செய்ய வேண்டிய நிலையிலுள்ளன. எவர் இதனைச் செய்வார் என்பது அந்த இறைவனுக்குத்தான் வெளிச்சம்.

(2) **ஆசாரியர்களின் தமிழ்ப் பிரபந்த உரைகள் :** ஆசாரியப் பெருமக்கள் அருளிச் செய்துள்ள 'உபதேசரத்ன மாலை' 'திருவாய் மொழி நூற்றந்தாதி' 'ஆர்த்திப் பிரபந்தம்' போன்ற தமிழ்ப் பிரபந்தங்கங்களுக்கும் அற்புதமான உரைகள் அருளியுள்ளார்கள் சுவாமிகள்.

(3) **பூர்வாசாரிய தோத்திர உரைகள் :** பூர்வாசாரிகள் அருளியுள்ள வடமொழித் தோத்திரங்களுக்கு சுவாமி

எழுதியுள்ளமை பேருதவியாகும். அந்தத் தோத்திரங்களுக்கு இதற்கு முன்னர் சுருக்கமான வடமொழி வியாக்கியானங்களே இருந்து வந்தன. வடமொழி அறிவில்லாத அறிஞர்களும் பாமரரும் படித்துச் சுவைக்கும் வகையில் 'பஞ்சஸ்தவம்', 'ஸ்ரீரங்கராஜஸ்தவம்' முதலிய சகல தோத்திரங்களுக்கும் மிகமிக அற்புதமான முறையில் தமிழுரைகள் அருளியுள்ளார் நம் சுவாமி.

**(4) ஆழ்வார் ஆசாரிய பெருமை நூல்கள் :** 'ஸ்ரீ ராமநுஜன்' என்ற திங்கள் இதழில் வெளிவரும் எல்லாக் கட்டுரைகளுமே ஆழ்வார் ஆசாரியர்களின் பெருமைகளைப் பற்றியேயாகும். இவற்றைத் தனித்தனியே தொகுத்து ஆழவார்களுடையவும் ஆசாரியர்களுடையுமான பெருமைகளை வெளியிட்டிருப்பது வைணவ உலகிற்குக் கிடைத்தற்கரிய கருவூலமாகும். 'ஆழ்வார்கள் கால நிர்ணயம்' என்ற நூல் சிறந்ததோர் ஆராய்ச்சி நூலாகும்.

**(5) இதிகாச, புராண வரலாற்று நூல்கள் :** திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் குறிப்பிடப் பெற்றுள்ள இதிகாசங்களை யெல்லாம் திரட்டி 'திவ்வியப் பிரபந்த பகவத் பக்தாம்ர்தம்' என்றொரு நூல்; வான்மீகி ராமாயணம் முழுவதையும் சுருக்கமாக உரைநடையில்; இவை போன்றனவும் மற்றும் பிறவும் இப்பகுப்பில் அடங்கும். இவையும் கிடைத்தற்கரிய கருவூலமாகும்.

**(6) இரகசியார்த்த விளக்க நூல்கள் :** ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தில் 'இரகசியங்கள்' என்று வழங்கப் பெறுகின்ற 'முமுட்சுப்படி', 'தத்துவதிரயம்', 'ஸ்ரீ வசன பூஷணம்', 'ஆசாரிய ஹிருதயம்' முதலிய நூல்களுக்கு மிக விரிவான வியாக்கியானங்களை எழுதியுள்ளார் நம் சுவாமி.[1]

1. திரு.பு.ரா. புருடோத்தம நாயுடு வெளியிட்டுள்ள ஆசாரிய ஹிருதயம், 'ஸ்ரீவசபூஷணம்' போன்று அழகாகப் பதிப்பிக்கப் பெறவில்லை.

**(7) வேதாந்தப் பெருமாள் விளக்க நூல்கள் :** சுவாமி அவர்கள் எழுதிய நூல்களுக்குள் மிகச் சிறந்தது 'ஸ்ரீ பாடிய சாராம்ருதம்' என்ற நூலே என்று சுவாமியே குறிப்பிட்டுள்ளார்கள். மற்றும் 'ஸ்ரீ பகவத் கீதாசாரம்', 'ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாம உரை' போன்ற பல நூல்கள் இப்பகுதியுள் அடங்கும். ஒரு முறை "திவ்வியப் பிரபந்தங்களை தமிழ் வேதம் என்று சொல்வது தகாது. ஸ்ரீ ராமானுசருக்கு தமிழே தெரியாது" என்றெல்லாம் மனம் போனபடி எழுதிய ஒரு வித்துவானுக்கு மறுப்பாக "திரமிடோபநிஷத் பிரபாவ சாரார்த்தம்" என்றொரு நூலை வெளியிட்டார்கள் நம் சுவாமிகள். நாடு முழுதும் உள்ள பற்பல அறிஞர்களால் பாராட்டப் பெற்ற நூல் அது.

**(8) வேத இலட்சண விசார நூல்கள் :** சுவாமிகள் அவர்கள் இருபத்திரண்டு அகவைக்குள்ளே வேதம் ஓத முற்பட்டதால் முதலில் ஒன்றும் புரியாமல் சிரமமாக இருந்ததாகவும், தம்முடைய ஐயங்களைப் போக்கிக் கொள்ள வேத இலட்சண நூல்களையெல்லாம் ஆராய்ந்து தெளிந்ததாகவும் தம் 'சுயசரிதை'யில் குறிப்பிட்டுள்ளார்கள். தம் ஆய்வின் பயனை அனைவரும் பெற வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு "வேதாத்யயன சர்வஸ்வம்' என்றொரு நூலை வெளியிட்டார்கள். இதனை ஆதரித்தும் மறுத்தும் பற்பல நூல்கள் வெளிவந்தன. இவற்றையொட்டி வேத இலட்சண விசார நூல்கள் பலவற்றை நம் சுவாமிகள் எழுதி வெளியிட்டார்கள். தம் 'சுயசரிதை'யில் சுவாமி இதைப் பற்றிக் கூறும்போது "வேதம் சுதந்திரம் என்றும், அது ஒரு கட்டுப் பாட்டிற்கு அடங்காதென்றும் அதில் நம்முடைய ஆராய்ச்சி செல்லாதென்றும், நினைத்திருப்பார் மலிந்த இவ்வுலகில் வேதத்தில் 'பதி பாடம்' மட்டும் சுதந்திரம் அன்றென்றும் அது சாத்திர வரம்புக்கு அடங்கியதே என்றும், அதில் நம்முடைய ஆராய்ச்சி தாராளமாகச் செல்லும் என்றும் நிறுவி வெற்றி பெற்றவன் கடல் சூழ்ந்த

இப்பூவுலகில் அடியேன் ஒருவனே என்பதை விருப்பு வெறுப்பற்ற பெரியோர்கள் அறிவார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

**(9) சத் சம்பிதாயார்த்த விளக்க நூல்கள் :** தென்னாச்சார்ய சம்பிரதாயத்தின் உண்மைப் பொருள்களை விரிவாக விளக்குவதற்காக எழுதப் பெற்ற நூல்கள் இவை. இவற்றுள் 'சத்சம்பிரதாயார்த்த சார நிதி' என்ற நூல் குறிப்பிடத்தக்கது.

**(10) லோகாபி ராம நல்வார்த்தை நூல்கள் :** உலகோர் இருக்க வேண்டிய விதம் யாது, ஸ்ரீ வைணவ லட்சணம் என்ன என்பது போன்ற நல் வார்த்தைகள் அடங்கிய நூல்கள் பல இப்பகுதியில் அடங்கும். "நல் வார்த்தை நானூறு" என்ற நூல் ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.[2]

**(11) உபன்யாசக சௌபாக்கிய நூல்கள் :** சொற் பொழிவாற்றுபவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான பொருள்களைக் கொண்ட நூல்கள் இவை. ஆயிரக்கணக்காண தலைப்புகளில் சிறு சிறு கட்டுரைகள் கொண்ட நூல்கள் இப்பகுதியில் அடங்கும். "உபன்யாச சத்திவ்யம்" என்ற இருநூறு பொழிவுகள் கொண்ட நூல் குறிப்பிடத்தக்கது. சுவாமி தம் வாழ்நாளில் இறுதியாக வெளியிட்ட நூல் இப்பகுதியைச் சார்ந்ததே. "நகைச்சுவைக் கதைகளும் பக்திக் கதைகளும்" என்ற பெயருள்ள அந்த நூல் சொற்பொழிவுகளிடையே சுவையூட்டுதற்காகச் சொல்லக் கூடிய நாற்பது கதைகள் கொண்டது. (இந்த நூல் 1983-ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது)

2. சுவாமியின் தமிழறிவு சங்க இலக்கியங்கள் அகநானூறு, புறநானூறு என்பன போன்ற நூற்பெயர்களையொட்டி இங்ஙனம் அமைக்கத் தூண்டியது என்று கருதலாம்.

(12) **வடமொழி நூல் திரள்** : தமிழ் மொழியில் எழுதியவை போலவே வடமொழியிலும் ஏராளமான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் நம் சுவாமி. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு சமஸ்கிருதத்தில் சுவாமி இயற்றிய வியாக்கியானம் மிக மிக அற்புதமானது என்று அறிஞர்களால் கொண்டாடப் பெறுகின்றது. முமுட்சுப்படி', 'தத்துவத் திரயம்' 'ஸ்ரீ வசன பூஷணம்' இவற்றை சமஸ்கிருத சுலோ சுரூபமாக 'இரகசிய ரத்னமாலிகா' என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். மணவாள மாமுனிகள் விஷயமாக 600 சுலோகங்கள் 'ஸ்ரீசைலேச பாதுகா சகஸ்ரம்' முதலியன ஆச்சரியமான தோத்திரங்களாகும்.

(13) **இந்தி மொழி நூல்கள்** : பெரும்பாலும் சுவாமியின் கட்டுரைகளை இந்தியிலும் மொழியாக்கம் செய்யப் பெற்றுள்ளன. சுவாமியின் பெரிய மாப்பிள்ளையான T.A. அக்காரக்கனி சம்பத் குமாரசாரியார் சுவாமி இம்மொழி பெயர்ப்புகள் பலவற்றில் பெரிதும் துணை புரிந்து வந்தார்.

(14) **தெலுங்கு மொழி நூல்கள்** : நாலாயிரத் திவ்வியப் பிரபந்த மூலத்தை முதன் முதலாகத் தெலுங்கு எழுத்தில் பதிப்பித்தவரே நம் சுவாமி தான். பெரும்பாலும் சுவாமியின் வியாக்கியானங்கள் அனைத்தும் தெலுங்கிலும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

(15) **பூர்வாசார்ய கிரந்த வெளியீடுகள்** : பூர்வாசாரியங்கள் அருளியுள்ள கிரந்தங்களை எல்லாம் பிழையின்றி அச்சிடும் பெரும்பணியில் ஈடுபட்டு "பகவத் ராமாநுஜ கிரந்த மாலா", "வேதாந்த தேசிக கிரந்த மாலா", "வரவர மூநீந்தர கிரந்த மாலா" முதலான பல நூல்களை வெளியிட்டுள்ளார் நம் சுவாமி. 'பகவத் விஷயம் ஈடு முப்பத்தாறாயிரம்' ஒரு முறையும், 'ஒன்பதினாயிரப்படி', 'இருபத்து நாலாயிரப்படி', ஈடு என்ற மூன்று வியாக்கியனங்களையும் சேகரித்து ஒரு முறையும் வெளியிட்டுள்ளார். ஸ்ரீ விஷ்ணு புராணத்தை

விஷ்ணு சித்திய வியாக்கியானத்தோடும், ஸ்ரீ விஷ்ணு சகஸ்ர நாமத்தை பராசர பட்டர் வியாக்கியானத்தோடும் வெளியிட்டுள்ளார். வேதாந்த தேசிகருடைய கிரந்தங் களனைத்தையும் நன்கு பரிசோதித்து பத்தே மாதங்களில் (ஆறு தொகுதிகளாக) வெளியிட்டது மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட அற்புதச் செயலாகும்.

(16) **வாதவிவாத நூல்கள்** : சுவாமியை ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம் என்றும், நடமாடும் பல்கலைக் கழகம் என்றும் மெய்ப்பிப்பவை இந்தத் தலைப்பிலுள்ள நூல்கள். ஆயிரக்கணக்கான வித்துவான்கள் கூடி நூற்றாண்டுகளில் நிறைவேற்றக் கூடியவற்றை சுவாமி ஒருவரே தனியாக நின்று ஓரேர் உழவன் போல் நிறை வேற்றியிருப்பதால் இப் பெருமகனாரை ஒரு நிறுவனம் என்று சொல்வது பொருந்தும்; ஒரு பல்கலைக் கழகம் என்று கூறினாலும் தவறு ஆகாது. ஒவ்வொருவரும் தத்தம் சமயங்களில் பற்றுக் கொள்வது மிகவும் இன்றியமையாதது என்பதை எவரும் மறுத்தற்கில்லை. அதே சமயத்தில் இதர சமயத் தவறைக் குறை கூறக் கூடாது என்பதும் இன்றி யமையாதது. பூர்வாசாரியார்களையும் அவர்தம் நூல்களையும் குறை கூறுபவர் எவராயினும் நம் சுவாமி அவர்களைக் கடுமையாகக் கண்டித்தே தீர்வர். இதன் காரணமாக வாத விவாத நூல்கள் எழுந்தன. தற்சமயம் தென்கலை - வடகலை என்று இரு பிரிவுகள் காணப் பட்டாலும் உண்மையில் பிள்ளை உலக ஆசிரியர், மணவாள மாமுனிகள், வேதாந்த தேசிகர் ஆகிய மூன்று பெரியார்களும் ஒரே கோட்பா டுடையவர்கள் என்பது சுவாமி அவர்களின் திடமானக் கருத்து. தவிரவும், தமது திடமான கருத்துகளுக்கு மறுப்புகளாக எழுதுபவர்கள் சம்பிரதாயத்தைச் சார்ந்த வித்துவான்களானாலும் கண்டிக்கத் தவறுவதில்லை. சுவாமி அவர்கள் எழுதிய நூல்களில் மூன்றில் ஒரு பகுதி இப்பகுதியைச் சார்ந்தவையாகவே இருக்கும்.

நான் திருப்பதியிலிருந்தபோது **தாத்தாச்சாரியார் சுவாமி** என்ற பெரியார் (வடகலை சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்) நாக்கில் நரம்பின்றி நம் சுவாமியை வைது எழுதிய நூலொன்றினைக் கண்டதுண்டு. அப்போது நான் திவ்வியார்த்த தீபிகையில் ஆழங்கால் பட்டிருந்த காலம். அருவருப்புடன் அதனைப் படித்தேன். கருத்துகளை மறுக்கலாம். மனிதரைத் திட்டலாகாது. இங்ஙனம் நம் சுவாமியை அந்த சுவாமி திட்டியதைப் படித்தேன். மனம் கூசியது. ஆனால் பெருந்தகை திரு. T.A. **கிருஷ்ணசாரியார் சுவாமி** (தென்கலையார்) அவரிடம் மிக அன்பாகப் பழகுவதையும் அவருடைய சொற்பொழிவுகளில் தாமும் கலந்து கொள்வதையும் சில சமயம் ஒட்டிப் பேசுவதையும் கண்டு மகிழ்வதுண்டு. அந்த சுவாமியின் உயர்ந்த பண்பாட்டைக் கண்டு இன்றும் மகிழ்கிறேன்.

ஏழுமலையான் கண்கண்ட தெய்வம்; என்னை ஆட்கொண்ட பெருமான். அவரை வணங்குவதுடன் என் கடமை நிறைவேறும். பெரியோர்கள் நேருக்கு நேர் மோதுவதை விரும்புவதில்லை. கருத்து மோதல்களை ஆர்வத்துடன் படிப்பதுண்டு.

**திங்கள் இதழ்கள் :** மலை நாட்டில் பட்டாம்பி என்ற ஊரிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'விஞ்ஞான சிந்தாமணி' என்ற சமஸ்கிருத இதழுக்கு பன்னிரண்டாம் அகவையிலேயே கட்டுரை வரைந்து அனுப்பிக் கொண்டிருந்தவர் நம் சுவாமி. பின்னர் இளமையில் ஸ்ரீமத் காதி சுவாமி துவக்கிய 'மஞ்சுபாஷிணீ' என்ற இதழின் ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார்கள் நம் சுவாமிகள். சில ஆண்டுகள் இது வார இதழாகவும் வெளிவந்து கொண்டிருந்தது. "வனமாலிகை", "பிரம்மவித்தியா" என்ற தமிழ் இதழ்களும் சில ஆண்டுகள் வெளிவந்தன. காதி சுவாமியின் காலத்திற்குப் பிறகு இவை நின்று விட்டன. 1932-இல் திருஅரங்கத்தில் "அம்ருதலகரீ" என்ற இதழ்

தொடங்கி இருபது ஆண்டுகள் நடத்தினார் நம் சுவாமி. 1948-இல் 'ஸ்ரீராமாநுஜன்' என்ற திங்கள் ஏடு தொடங்கப் பெற்று 480 இதழ்கள் வரை வெளிவந்துள்ளன. சமஸ்கிருதத்தில் 'வைதிக மனோகரா', தெலுங்கில் 'ஸ்ரீரா மாநுஜ பத்திரிகா', இந்தியில் 'ஸ்ரீ வைஷ்ணவாஸுதா' என்ற திங்கள் ஏடுகளும் சுவாமியால் நடத்தப் பெற்றன.

**சுவாமியின் ஒருநாள் நிகழ்ச்சி நிரல் :** ஒரு நாளில் 24 மணியில் 23 மணி நேரம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருந்தவர் நம் சுவாமி. பின்மாலையில் (அதிகாலையில்) எழுந்து வேத பாராயண பிரதட்சிணக் குழுவில் கலந்து கொண்டு விட்டு வெள்ளக்குளம் எழுந்தருளி தீர்த்தமாடிவிட்டு இராமாநுச நூற்றாந்தாதி அநுசந்தானத்துடன் நம்பிள்ளை சந்நிதிக்கு எழுந்தருளி கிரந்த காலட்சேபம் சாதிப்பார். அது நிறைவு பெற்றதும் நாடோறும் சுமார் 50 பக்கங்கள் எழுதுவார். அதற்குள் அச்சகத்திலிருந்து பார்வைப் படிவங்கள் (Proofs) வரும்; அவற்றைச் சரிபார்த்துத் திருத்தம் செய்வார். வந்த கடிதங் கட்குத் தம் கைப்பட மறுமொழிக் கடிதங்கள் எழுதி முடிக்கின்றனர். மாலையில் தேவப் பெருமாள் சந்நிதிக் குழுவில் கலந்து கொள்ளச் செல்வார். அது நிறைவு பெற்றதும் மீண்டும் எழுத்துப்பணி, பார்வைப் படிவங்களைச் சோதித்தல், கடிதங்கட்கு மறுமொழிக் கடிதங்கள் வரைதல் என்று இப்படி ஓய்வு ஒழிவின்றிப் பணிகள்.

# 6. சுவாமிகளின் தமிழ்ப் புலமை

பெரும்பாலும் வடமொழிப் புலமை மிக்கவர்கட்குத் தமிழறிவும் தமிழ்ப் புலமை மிக்கவர்கட்கு வடமொழியறிவும் அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் உள்ள தொடர்புதான். அதிலும் சில வடமொழிப் புலவர்கள் தமிழ் பேசினால் சகிக்காது. இதனால்தான் நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாக 'ஆரியர் கூறும் தமிழும்' கூறப் பெற்றுள்ளது. நம் சுவாமிகள் அத்திபூத்த மாதிரி இரண்டு மொழிகளிலும் பெரும் புலமை பெற்றுத் திகழ்ந்தவர். தமிழில் கவிபாடும் திறமையும் பெற்றிருந்தவர். தமிழின் உயிர் நாடியைக் கண்டவர். எடுத்துக்காட்டு ஒன்றால் இது தெளிவாகும்.

**'குவலயங் கண்ணி கொல்லியம் பாவை'** (பெரி.திரு. 2.7:1) என்ற திருவிடஎந்தைபற்றிய திருமொழிப் பாசுர அடியிலுள்ள **'கொல்லியம் பாவை'** என்பதற்குத் தீபிகையிலுள்ள குறிப்பு வருமாறு: **'வல்வில் ஓரி'** என்ற சிற்றரசனுக்கு உரியதாய்க் **'கொல்லி'** என்னும் பெயர் கொண்டான். மலையின்[1] கண்ணுள்ள ஒரு பெண்பாற் பிரதிமையே கொல்லியம் பாவையாகும். இது தேவ சிற்பிபோல் அமைக்கப்பெற்ற அழகிற் சிறந்த பதுமையாகும். அம்மலையிலுள்ள தேவரையும் மனிதரையும் துன்புறுத்த வருகின்ற அசுரரும் அரக்கரும் இப்பதுமையின் சிரிப்பைக் கண்டு மயங்கி உயிர் துறப்பார்களாம்(சித்திரமடல்). அசுரரும்

1. இது சேலம் மாவட்டம் - திருச்சி மாவட்டங்களில் (சேந்தமங்கலம் - துறையூர்) அருகில் பரவியுள்ள 'கொல்லிமலை' என்று கருத இடம் தருகின்றது.

அரக்கரும் அங்கு அணுகும்போது அவர்களது வாடை பட்டவுடனே அது தானே நகை புரியுமாறு பொறி வைக்கப்பெற்ற தென்பர். இப்பாவை கண்டார் உள்ளமும் விழியும் கவரப்படுவதாய் பெருங் காமவேட்கை உறுவித்து இறுதியில் கொல்லும் என்று கூறுவது. இது தெய்வ நிர்மாணம் என்பர். ஒரு காலத்தில் திருமகள் தம் முன் போர்க்கெழுந்த அவுணர் மோகித்து விழும்படி இக் கொல்லியம் பாவை உருக்கொண்டு ஆடினள் என்பதை,

*செருவெங் கோலம் அவுணர் நீங்கத்*
*திருவின் செய்யோள் ஆடிய பாவையும்*[2]

என்று சிலப்பதிகாரம் செப்பும். இக் கொல்லிப் பாவை கொல்லி மலையில் உள்ளது என்பதும், தெய்வத்தால் செய்யப்பட்டது என்பதும், காற்றினாலும் மழையினாலும் மற்றெல்லாவகை ஊறுகளாலும் தன் அழகிய நல் வடிவம் கெடாது என்பதும் நற்றிணையில் காணத்தகும். இப்பாவையின் அழகைத் தலைவியின் நலத்திற்கு உவமை கூறுதல் அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களிலும் சிறப்பாக உண்டு. சீவக சிந்தாமணி, குறுந்தொகை என்ற நூல்களிலும் இப்பாவைபற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆகவே தமிழ்க் கவிஞர்கள் கொல்லிப் பாவையை ஒப்புயர் வற்ற அழகிற் சிறந்த மாதர்க்கு உவமை கூறுதல் மரபு என்பது அறியப்படும்.இப்பாசுரத்தில் 'கொல்லியம்பாவை போன்றவள்' என்று கூறாமல் 'கொல்லியம் பாவை' என்றே சொல்லிவைத்தது முற்றுவமை(உருவகம்). 'தாவி வையங் கொண்ட தடந்தாமரைக்கே' என்றது போல.[3]

சுவாமிகள் தமது இளம் வயதில் **சீமத் பரமஹம்ச அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர்'** என்று புகழ் வாய்ந்த

2. சிலம்பு - கடலாடு - அடி (60-61)
3. வைணவ உரை வளம் - பா.38.

ஷஷ்டி ஜீயரிடமும், திரு. வை.மு. சடகோப ராமா நுஜாசாரியாரிடமும் தமிழ் பயின்றார். தாம் பயின்ற திறத்தை சுவாமியே '**செந்தமிழ் ஆராய்ச்சி**' என்ற நூலிலும், '**நான் கண்ட நல்லது**' என்ற நூலிலும் சிறப்பாகக் குறிப் பிட்டுள்ளார். அக்குறிப்பு வருமாறு :

"கீர்த்தி மூர்த்தியான வை.மு.சடகோப ராமாநுஜாசாரியார் சுவாமியைத் தமிழ் உலகமும் வைணவ உலகமும் இன்றைக்கும் என்றைக்கும் போற்றும் என்பது நிர்விவாதம்.... அருளிச் செயல்களை சுத்த பரம்பரையில் ஓதி நம் ஆசாரியர்களின் வியாக்கியானங்களை நல்லாசிரியர் திருவடி களிற் பலகாலம் பணிந்து குனிந்து கேட்டவர் என்பதே அவருக்கு விசேஷித்த பெருமை... ஸ்ரீமத் பரமஹம்ச சேத்தியாதி ஸ்ரீகாஞ்சி அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர் சுவாமி திருவடிகளில் அடியேன் இலக்கண விலக்கியங்கள் வாசித்துக் கொண்டிருந்தபோது ஜீயர் சுவாமி யாத்திரையாக எழுந்தருள நேர்ந்தது. அப்போது வை.மு. சடகோப ராமாநுஜாசாரியர் சுவாமி காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளி சில மாதங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அப்போது அவரிடத்தும் சில தமிழ் நூல்களை வாசிக்க அடியேனுக்குப் பாக்கியம் கிடைத்தது... (செந்தமிழாராய்ச்சி, 1943, பக்.45)

கீழே குறிப்பிட்ட இரு பெரியார்களிடத்தும் கம்பராமாயணத்தைப் பாடம் கேட்டுப் பயின்றவர் நம் சுவாமி (ஸ்ரீ ராமாநுஜன் - 350)

**தமிழ்ப் பயிற்சி** : தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளைக் கற்றுத் தோய்ந்த நம் சுவாமி 'வித்யா பரிச்ரம் பரீட்சா" என்ற கட்டுரையில் (ஸ்ரீ ராமாநுஜன் - 214) 'பகவத் விஷயதிகாரிகள் தமிழ் இலக்கண மரியாதைகளை நன்கு கற்றல் அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார். வடமொழியில் இல்லாது தமிழுக்கே சிறப்பாக உரிய மரியாதைகளை ஆழ்வார்கள் பிரயோகித்திருப்பதைச் சுட்டிக்

காட்டுகின்றார். அவற்றின் பொருள் உணர்ச்சிக்குச் சங்க நூல்களின் துணை தேவை என்றும் உணர்த்துகின்றார். **'துளையார் மென்குழல் ஆய்ச்சியர்'** (பெரி.திரு. 3.8:8) என்ற தொடருக்கு எவ்வாறு பொருள் எழுதுவது? குழலாகிய கூந்தலுக்குத் துளை உண்டோ? துளை பொருந்துவது புல்லாங்குழலுக்கே யாகும். 'துளை' என்ற அடைமொழி கூந்தலுக்கு ஏற்காது. எனவே, "துளைகள் நிரம்பிய புல்லாங்குழலைச் சொல்லக் கடவதான 'குழல்' என்ற சொல்லால் கூறப்படுகின்ற கூந்தலை யுடையவர் களான ஆய்ச்சிகள்" என்று பொழிப்புரை வரைய வேண்டும். இங்கே ஆழ்வார் சங்கப் பாடல்களில் வரும் அரியதோர் தமிழ் மரியாதையைப் பின்பற்றியுள்ளார். சங்க நூல்களிலிருந்து நம் சுவாமி எடுத்துக்காட்டுகளைத் தருகின்றார்.

(i) புல்லிலை வஞ்சிப் புரமதிலலைக்கும் பொருநை (புறம்-387)

(ii) "நெட்டிலை வஞ்சிக்கோ" (பரிபா, 102 பரிமேலழகர் உரை மேற்கோள்)

இவ்விரண்டிகளிலும் வஞ்சிமா நகர் விவட்சிதமே யல்லாது வஞ்சிமரம் விவட்சிதம் அன்று. ஆயினும் விருட்ச விசேடப் பொருட்கு உரிய புல்லிலை, நெட்டிலை என்னும் அடைமொழிகளை அம்மரப் பெயர் அடைமொழிகளை அம்மரப் பெயர் கொண்ட வஞ்சிமாநகர்க்கு ஏற்றியுள்ளார்கள்.

(iii) 'ஒளிதிகழ் உத்தி உருக்கெழு நாகம்'' (பரிபா.12)

'நாகம்' என்னும் சொல் புன்னை மரத்துக்கும் பாம்புக்கும் பெயர். பரிபாடலில் 'நாகம்' என்ற சொல்லை யிட்டுப் புன்னை மரத்தைப் பேசுங்கால் பாம்புக்குரிய அடைமொழியைப் புன்னைக்கு இட்டனர். இவ்வாறு தமிழில் ஒரு சொல்லுக்கு இரண்டு பொருள் இருந்தால்

ஒரு பொருளுக்கு இசையும் அடைமொழியை மற்றொரு பொருளுக்கும் உபயோகிப்பதுண்டு. 'இங்ஙனே தமிழ் நூல்களிலுள்ள சம்பிரதாயம் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலும் ஏறியுள்ளதை உணரவேண்டும்' என்பர் நம் சுவாமி.

நம் சுவாமி பெற்றிருந்த சங்க நூலறிவு பல சமயங்களில் அவருக்குக் கைகொடுத்துள்ளது; அவர்தம் இடையறாத தமிழ்ப் பணிகளுக்குப் பேருபகாரமாயிருந்தது. 'தமிழின் நரம்பறிந்தவன்' என்று தம்மைக் கண்டனக் கட்டுரைகளில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார் நம் சுவாமி.

**மறுப்புரை** : மறுப்புரை ஒன்றிலும் சுவாமியின் தமிழ்ப் புலமையைக் காணலாம். ஒரு சமயம் நாச்சியார் திருமொழியில் (3:9) 'கஞ்சன் வலை வைத்தவன்று காரிருள் எல்லில் பிழைத்து' என்ற இடத்தில் எல்லில் - இரவில் என்று சுவாமி பொருள் கூறியதை தமிழ்ப் புலவர் ஒருவர் மறுத்து எல்லி என்பது பகலையே குறிக்குமாதலால், 'அல்லில் பிழைத்து' என்று பாடத்தையே திருத்த வேண்டும் என்றும் எழுதினார். 'அல்லும் பகலும்' என்ற உலக வழக்கை அவர் தம் கருத்துக்கு அரணாகக் காட்டினார். ஆனால் நம் சுவாமியோ 'எல்லூர்ச் சேர்தரும் ஏறுடையினத்து' (குறுந்.275) என்ற குறுந்தொகைப் பாடலின் அடியையும் மலை படுகடாத்தில் (அடி 416) வரும் 'எல்லினிப் புதினே' என்ற தொடரையும் அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய 'இராக்காலத்தை யுடையயாயிராய்' என்ற பொருளையும் காட்டி நாச்சியார் திருவாக்கின் தூய்மையை நிலை நாட்டினார். (நான் கண்ட நல்லது 1949 பக்.7) பெரும் புலவரையும் மருள வைக்கும் மறுப்புரை இது.

**தீபிகை சிறப்பு விளக்கக் குறிப்புகள் :** இவற்றாலும் சுவாமிகளின் தமிழ்ப் புலமை பளிச்சிடும்.

(1) ஆழ்வார் பாசுரத்தின் பின்னணியில் இருக்கும் கருத்தினை எடுத்துக் காட்டுவர் ஆசாரியப் பெருமக்கள். அக்கருத்தின் உட்பொருளை எளிமையாக இன்று நாம் அறியும்படி தக்க எடுத்துக்காட்டுகளுடன் தெள்ளிதின் உணர்த்துவர் நம் சுவாமி. எடுத்துக்காட்டாக சாத்திரங்கள் எல்லாம் எம்பெருமானே எல்லாக் கல்யாணக் குணங்கள் உடையவன் என்றும், அவன் குற்றங்கட்கு எதிர்த் தட்டானவன் என்றும் குறிக்கின்றன. இதனைத் தெரிவிக்கும் வகையில்,

*பரிவதில் ஈசனைப் பாடி*
*விரிவது மேவ லுறுவீர்*
*பிரிவகை யின்றிநன் னீர்தூய்*
*புரிவது வும்புகை பூவே (திருவாய் 1.6:1)*

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் 'பரிவதில் ஈசன்' என்பதற்கு 'ஹேயப்ரத் யேகனான ஈசுவரனை' என்று பிள்ளானும் பெரியவாச்சான் பிள்ளையும் உரைப்பர். இதனை நம்பிள்ளை விவரித்து, கல்யாண குண யோகத்தையும் சேர்த்து உரைப்பர். எம்பெருமான் எப்படிப் பட்டவன் எனில் : 'பரிவதில் ஈசன்' என்கிறார். அதாவது துக்கம் இல்லாதவன்; எம்பெருமானுக்குத் துக்கம் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பிராட்டியைப் பிரிந்து பட்ட துக்கம் அனைவரும் அறிந்ததே! ஆனால் பிறர் படும் துன்பத்தைக் கண்டு தானும் துக்கப்படுகை என்ற தயை குணம் எம்பெருமான் ஒருவனுக்கே உள்ள தென்றாகையால் இந்தத் துக்கம் குற்றமன்று என்று கூறுவர் நம் சுவாமிகள். இதனால் எம்பெருமானின் தயை என்னும் கல்யாண குணம் சொல்லப்பட்டது.

உலகில் குழந்தைக்குத் துன்பம் நேர்ந்தால் அதனைப் போக்க வல்லவளான தாயும் கவனியாது இருந்து ஏமாந்து

போனால் உண்டாகும் துக்கம் மிகுதியானது. அவ்வாறே இதிகாசத்தைக் கண்ணுற்றால் திரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது கண்ணபிரானின் திருநாமமேயாயினும் தான் நேரில் சென்று உதவாத துக்கத்தைக் காட்ட, கண்ணன் திருவுள்ளம் புண்பட்டுக் கதறினது அனைவரும் அறிந்ததே. மேலும் எம்பெருமான் ஆனையின் துயரம் தீர அரைகுலைய தலைகுலைய மடுக்கரைக்கு ஓடி வந்து உதவினான். இது பிறர்க்காகப் படும் துக்கம் என்பதும் வெள்ளிடை மலை.

இவ்வாறு நம்பிள்ளை உரையின் உட்பொருளை, எடுத்துக்காட்டுகளுடன் தக்கவாறு காட்டியும் அதே சமயத்தில் எம்பெருமானுக்குள்ள கல்யாண குணத்தை நிலைநாட்டியும் சுவாமிகள் உரைப்பது அறியலாம்.

ஆனையின் துயரம் தீர எம்பெருமான் அரைகுலைய தலைகுலைய ஓடிவந்ததைப் **போதன்ன பாகவதத்தில்** சுவையாக விளக்கப் பெற்றுள்ளதை என் அரிய நண்பர் **டாக்டர். கோதண்ட ராமய்யா** (அமரர்) பாடிக் காட்டியதை (சுமார் 13 பாடல்கள்) மறக்க முடியவில்லை. இதனை 'இடைப் பிறவரல்' என்று கருத வேண்டா; சுவைக்காகக் காட்டுகின்றேன்.

யானையொன்று தடாகத்தில் ஆண்டுக்கு ஒன்றாக மலரும் தாமரைப் பூவை அதன் கரையில் அர்ச்சை வடிவமாக எழுந்தருளியிருக்கும் சீமந்நாராயணன் தலையில் போடுவது வழக்கம். 1008-வது மலரைப் போடும் ஆண்டு. தடாகத்தில் இறங்கி மலரைப் பறிக்கும்போது தடாகத்தில் வசித்து வந்த முதலை ஆனையின் காலைப் பற்றிக் கொண்டது. யானை, பக்தியின் துடிப்பால் 'ஆதிமூலமே!' என்று கதறுகின்றனது.[4]

அப்பொழுது வைகுண்ட நாதன் பெரிய பிராட்டியாராடு மகிழ்வுரையில் ஈடுபட்டுருந்தமையால் குரலைக் கேட்க

வில்லை. ஆனால் அவன் தாங்கிக்கொண்டிருக்கும் ஆயுதங்கள் ஒவ்வொன்றாகக் கிளம்பி வந்து கொண்டிருக் கின்றன. இறைவனுடைய திவ்வியாயுதங்களுக்கும் தனியாக இயங்கும் ஆற்றல் உண்டு என்பது வைணவ தத்துவம். அவை வரும் முறையை **போதன்ன** என்ற தெலுங்குக் கவிஞர் வெவ்வேறு சந்தங்களில் ('கதி' என்பர் தெலுங்கில்) அற்புதமாகப் படைத்துள்ளார். நண்பர் டாக்டர் கோதண்ட ராமய்யா அவர்கள் தமது இனிமையான குரலில், கதிக் கேற்றவாறு தமது குரலை மாற்றிக் கொண்டு பாடும் போது 'இன்னும் பாடுக, இன்னும் பாடுக' என்று கேட்கத் தோன்றும்.

(2) **இன்சுவை மிக்க பொருள் காட்டல் : (i) தோழிப் பாசுரமாக நடைபெறுவது :** 'தண்திருப் புலியூர், முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினள்' என்பதைக் கூறுவது. இதற்குச் சான்று காட்டுவதாக வருவது:

*திருவருள் கமுகு ஒண்பழத்தது*
*மெல்லிய செவ்விதழே (திருவாய் 8.9:6)*

'எம்பெருமான் திருவருளால் இத்திருப்பதியில் வளர்ந்த கமுகு - திருவருள் கமுகு - ஈன்ற செவ்விய பழத்தின் நிறத்தை யொத்துள்ளது இவளுடைய உதடுகளின் நிறம்' என்கின்றாள். 'திருவருள் கமுகு'

4. இந்தக் குரல் அண்டமெல்லாம் எட்டுகின்றது. ஒவ்வொரு கடவுளரும் நினைத்துப் பார்க்கிறார்களாம். தாம் 'ஆதிமூலம்' அல்ல என்று கருதி வராமலே இருந்து விட்டார்களாம். சீமந் நாராயணன் மட்டும் தாம் 'ஆதி மூலம்' என்று உன்னி வந்து முதலையைக் கொன்று யானைக்கு பூவை நல்கும் வாய்ப்பு அளித்தாராம். இப்படிச் சிந்தித்து வைணவ பக்தர்கள் மகிழ்வார்கள். ஆனால் அர்ச்சை வடிவமாக இருக்கும் நாராயணன் குளத்தில் இறங்கி பூவை ஏற்றுக் கொள்ள முடியாமையால் வைகுண்டநாதன் ஓடிவந்து முதலையைத் திருவாழி ஆழ்வானால் நிரசித்து யானை தந்த மலரை ஏற்றுக் கொண்டான் என்ற வைணவ தத்துவம் விளக்கப் பெறுகின்றது.

என்பதற்கு நம் சுவாமி இன்சுவைமிக்க ஈட்டின் ஸ்ரீ சூக்தியை எடுத்துக் காட்டுவார். அச்சூக்தி : "திருவருள் கமுகு 'என்று சில உண்டு; அதாவது நீரால் வளருகை யன்றிக்கே பெரிய பிராட்டியாரும் சர்வேசுவரனும் கடாட் சிக்க, அத்தால் வளருவன' சில". இதனை எண்ணி எண்ணி மகிழ வேண்டும். இப்பாசுரத்தால் "இந்த ஆன்மா பிற தெய்வங்கட்கு அடிமைப்பட்டது மன்று; தனக்குத்தானே உரியதுமன்று; பகவான் ஒருவனுக்கே உரியது" என்ற கருத்தாகிய 'அநந்யார்ஹ சேஷத்துவம்' தெளிவாக விளங்குகின்றது.

(ii) **சேதநலாபம் ஈசுவரனுக்கு** : என்பதை உறுதிப் படுத்தும் பாசுரம்.

*'வாரிக் கொண்டு உன்னை*
*விழுங்குவன் காணில்' என்று*
*ஆர்வுற்ற என்னை*
*யொழிய - என்னில்முன்னம்*
*பாரித்து தான்என்னை*
*முற்றப் பருகினான்*
*காரொக்கும் காட்கரை*
*யப்பன் கடியனே (திருவாய் 9.6:10)*

'திருவாய் மொழி ஆயிரத்தினுள் இப்பாசுரம் உயிரானது என்னலாம்' என்பர் நம் சுவாமி. ஈசுவர லாபம் சேதநர்களுக்குப் புருஷார்த்தமா? சேதநலாபம் ஈசுவரனுக்குப் புருஷார்த்தமா? என்றொரு விசாரம் சம்பிரதாய சுவைஞர்கள் செய்வதுண்டு; சேதநலாபம்தான் ஈசுவரனுக்குப் புருஷார்த்தம் என்பதே சித்தாந்தம். எம்பெருமான் சிருஷ்டி அவதாராதி முகத்தாலே கிருஷி பண்ணுவ தெல்லாம் 'ஒரு சேதநன் நமக்குக் கிடைப்பனா' என்கின்ற நப்பாசையினாலன்றோ? கீதையிலே '**ஸ மஹாத்மா ஸுதுர்லப:**' என்று கண்ணீர் பெருக நின்று சொல்லுகின்ற வார்த்தையன்றோ? '**வாஸு**

**தேவஸ்ஸர்வம்**' என்றிருக்கின்ற மகாத்மா எனக்குக் கிடைக்க வில்லையே! என்றன்றோ சொல்லுகின்றான்? பாடுபட்டுத் தேடிப் பார்த்தும் கிடைக்காமையாலே வருந்திச் சொல்லுகிற வார்த்தை இது என்று நன்கு தெரிகின்ற தன்றோ? எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தில் - ஸ்ரீ பாஷ்யத்தின் முடிவில் - ஜநாநி நம் லப்தவா" என்கின்ற அற்புதமான ஸ்ரீஸூக்தியில் இப்பரமார்த்தம் தன்னை ஆழ்வார் சுவாநுபவ முகத்தாலே இப்பாசுரத்தில் வைத்தருள்கின்றார்.

மேலும், இப்பாசுரத்தில் "**என்னில் முன்னம் பாரித்துத் தானென்னை முற்றப் பருகினான்**" என்றது சத்சம்பிரதாய சுவைஞர்களின் நெஞ்சை யுருக்கும் வார்த்தை. 'உன்னைக் காணில் வாரிக்கொண்டு விழுங்குவேன்' என்று தாம் ஆசைப்பட்டிருந்ததாகவும், தமக்கு முன்னே நெடுநாளாக எம்பெருமான் தம் விஷயத்தில் இங்ஙனே பாரித்திருந்து தன்னுடைய மநோரதமே வலிதென்றும் அதுதான் முற்பட்ட தாயிருந்து கார்யகரமாகின்ற தென்றும் சொல்லிற்றாயிற்று.

கீழ்ப்பாசுரங்களில் '**என் உயிருண்டமாயன்**' (7) என்றும் '**என்னுயிர் தானுண்டான்**' (8) என்றும் எம் பெருமான் உண்ட படியைச் சொன்னார்; உண்டவனுக்குத் தண்ணீரும் அபேட்சிதமாயிருக்குமே; தண்ணீர் குடித்தபடி சொல்லிற்று இப்பாசுரத்தில் "தான் என்னை முற்றப் பருகினான்" என்று. இவருடைய 'உண்ணுஞ்சோறு பருகு நீர்' அவன்; அவனுடைய 'உண்ணுஞ்சோறு பருகு நீர்' இவர். இங்கு தம்மை மறந்து இப்பாசுரத்தை நம் சுவாமிகள் அநுபவித்ததைக் காண முடிகிறது.

(3) **இலக்கணக் குறிப்புகள்** : சுவாமிகள் பாசுர விளக்கங்களில் இலக்கணக் குறிப்புகளைக் காட்டியுள்ளதை நோக்கும் போதும் அவர்தம் தமிழ்ப் புலமையையும் தமிழார்வத்தையும் தமிழ்ப் பற்றையும் காணமுடிகின்றது. ஈண்டு ஒரு சிலவற்றைக் காட்டுவேன்.

(i) **'ஆணல்லன் பெண்ணல்லன்'** (திருவாய் 2.5:10) என்ற திருவாய்மொழிக்கு விளக்கம் தரும்பொழுது "அப் பரம்பொருள் தேவன் அசுரன், விலங்கு இவைகளாக இல்லை, பெண்ணாகவும் இல்லை, ஆணாகவும் இல்லை, வேறுபட்ட பொருளாகவும் இல்லை, குணமாக இல்லை, கிரியையாக இல்லை, சேதநனுமாக இல்லை" என்று இருக்கு வேதம் ஆரண்யகம் (2.2), பாகவதம் (8.3:24) என்னும் வேத புராண வாக்கியங்களை மேற்கோள் காட்டி விளக்கம் தந்து கொண்டிருக்கிறார். அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த ஒரு தமிழ்ப் புலவர், "சுவமி, உலகத்திலுள்ள பொருள்கள் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்றில் சேர்ந்தல்லது இருக்கமாட்டாது; எம்பெருமான் இந்த மூன்றில் சேர்ந்திலன் என்றால் சூனியம் என்று சொன்னபடியாகுமே; பிரம்மம் சூனியம் என்றோ ஆழ்வார் அருளிச் செய்வது?" என்று கேட்க, அதற்கு விடையாகப் பட்டர், "பரம்பிரம்மம் சூனியப் பொருள் என்று சொல்வது ஆழ்வாருக்கு உடன்பாடாகில் சொல் இலக்கணத்துக்குப் (இயல் அறிவிற்குப்) பொருத்தமாக 'ஆண் அல்ல, பெண் அல்ல, அல்லா அலியுமல்ல' என்று அவர் அருளிச் செய்திருப்பர். அங்ஙனமின்றி, 'அல்லன், அல்லன், அல்லன்' என்றே (ஆண்பாலுக்குரிய 'அன்' விகுதியையிட்டு) அருளிச் செயதிருக்கையாலே 'எம்பெருமான் சாதார புருஷன் அல்லன், புருஷோத்தமன் என்று தெரிவிக்கப் பட்டதாகாதோ?" என்று அருளிச் செய்தார். ஒரே சாதியிலுள்ள மற்றைப் பொருள் வேறான சாதியிலுள்ள மற்றைப் பொருள் இவற்றினின்றும் விலக்கிக் காட்டியது உளங்கொள்ளத்தக்க தாகும்.[5]

(ii) **தீபிகை உரையில் கண்டவை. 'என் ஆனாய்'** (பெரி.திரு. 1.9:2) என்பதற்கு 'ஆனை' விளியுருபு ஏற்றால்

5. வைணவ உரை வளம் - பா. 131.

'ஆனாய்' என்றாகும்; ஆனை போன்றவனே என்றபடி. "தென்னானாய், வடவானாய், குடபாலானாய், குணபால மதயானாய்" என்று திருநெடுந்தாண்டகத்திலும் (10) அருளிச் செய்வர். "என்னானை, என்னப்பன், எம்பெருமான்" என்றார் நம்மாழ்வாரும் திருவாய்மொழியில்.

(iii) **'என் தந்தை'** என்பது (பெரி.திரு. 1.1:6) 'எந்தை' என மருவிற்று. 'வாழ்நாள்' என்பது 'வாணாள்' என மருவிற்று. 'கொள்ள' என்பது 'கொள' எனத் தொக்கி நிற்கின்றது; வெருக்கொள - அச்சங் கொள்ள என்றாயிற்று. பாடாவருவேன் (பெரி.திரு. 4.7:5) - உன்னுடன் பாடிக் கொண்டு வருகின்ற என்கை. 'பாடா' - 'செய்யா' என்னும் வாய்பாட்டுடன் இறந்த கால வினையெச்சம், இப்படிப்பல.

(iv) **'தொழுதாடித் தூமணி,** வண்ணனுக்கு ஆட்செய்த' (திருவாய். 4.6:11) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் அடியில் 'ஆட்செய்த நோய் தீர்ந்து' என்று தொடர் அமைந்திருப்பினும் 'உருபு பிரித்துக் கூட்டுதல்' என்ற முறைமையின்கீழ் 'நோய் தீர்ந்து ஆட்செய்த' என்று பொருள் கொள்ளத்தகும். 'ஆட்செய்த' என்று உருபு பிரித்துக் கூட்டியதால் 'சொல் திரிந்து பொருள் திரியா வினைக்குறை' (நன்னூல்-346) என்ற நன்னூல் நூற்பாவிற்கு ஏற்ப 'செய்து' என்பதை எச்சத் திரிபாகக் கொண்டு 'செய்ய' என்றும் பொருள் கொள்ளலாம் என்றும் கூறுவர். இவ்விடத்தில் சிறந்து விளங்கும் பொருளையும் வழங்குகிறார் சுவாமிகள். அஃதாவது, ஆழ்வாருக்கு இந்த நோய் தீருவதன்று. ஆன்மா உள்ளவரையில் தொடருமது. ஆகையால் 'நோய் தீர்ந்த' என்றது மோகம் தெளிந்து சற்று உணர்த்தி உண்டானமை பற்றியதாகும். இவ்வாறு இலக்கண வழி மூலமும் பொருட்சுவையை உணர்த்துகிறது என்று சுவாமிகள் தெளிவிப்பதால் சுவாமியின் தமிழ்ப் புலமை தெற்றென விளங்கும்.

(v) **பாட பேதம் காட்டல்** : திருவாய்மொழி (6.8) தலைமகள் பறவைகளைத் தூதுவிடும் பதிகமாகும். இதில் 8-ஆம் பாசுரத்தில் '**அருள் செய்து ஒரு நாள்**' (2-ஆம் அடி) என்ற பாடமே நம்பிள்ளை முதலாக ஆசாரியர்களின் காலத்தில் வழங்கி வந்தது. இப்பாடத்தில் வினைமுற்று (கிரியாபதம்) இல்லையாகிறது. குருகிடம் 'நீ போய்ச் சொல்ல வேணும்' என்கின்ற வேண்டுகோள் இருக்க வேணுமே; அஃது இங்கு இல்லை; ஆனாலும் வருவித்துக் கொள்ளலாம் என்பது நம்பிள்ளையின் திருவுள்ளம். பன்னீராயிரப்படி ஆசிரியர் வாதிகேசரி ஜீயர் 'அருள் செய் ஒருநாள்' என்று பாடம் காட்டுகின்றார்;" 'அருள் செய்து' என்று பாடமானபோது 'என்று சொல்' என்று வாக்கிய சேஷமாகக் கூடாது" என்று எழுதியுள்ளார். 'அருள் செய்து' என்று வினை எச்சமான பாடமே பிரசித்தம் என்று நம் சுவாமிகள் அதனையே கொள்வார். தொடர்ந்து ஈற்றடியின் முதலிலுள்ள '**ஏசறு**' என்பதை வினைமுற்றாகக் கொள்ளுகிற வழியையும் நம்பிள்ளை காட்டியருள்கின்றார் என்பதையும் சுட்டியுரைத்து தம் கருத்துக்கு அரணாக்கிக் கொள்வர். ஏசறு - துக்கப்படு. 'நான் படுகிற துக்கத்தை உன் வடிவிலே ஏறிட்டுக் கொண்டு காட்டு' என்பது தாற்பரியம். இவ்வாறு விளக்குவர் நம்சுவாமிகள்.

(vi) **சில மரபுகள்** : இதனைக் காக்க வேண்டும் என்பர் நம் சுவாமி. வியாக்கியானத்தில் 'சக்ரவர்த்தித் திருமகன்' என்று வருகிறது. அது பிழை என்று காட்டி விளக்கமும் தருவார் நம் சுவாமி. ''சக்கர வர்த்தி என்பது தசரதனைக் குறிக்கும். அவனுடைய மகன் என்ற பொருளில் 'சக்ரவர்த்தி திருமகன்' என்று ஒற்று மிகாது வரவேண்டும். வேற்றுமைத் தொகையன்றோ?" என்பர். இங்ஙனமே "பிள்ளை திருநறையூர் அரையர்" என்று ஒற்று மிகாது எழுத வேண்டும்" என்பர்.

(vii) **தமிழ் மரபுகளைக் காத்தருளல் :** சுவாமி தாம் எழுதிய உரைநடைகளில் வடசொற்களை யிட்டு எழுதுதல் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஆயின் அவற்றின் உருச் சிதைவினைச் சகிக்கமாட்டார். பெரும்பாலும் வடமொழி வடிவத்திலேயே பிரயோகித்து எழுதுவார். அவ்வாறு எழுதுவதிலும் அவர் செய்த சிட்சைகள் பல உள்ளன. சான்றாக 'ப்ரஹ்ம்' என்று எழுதுவதே நேர்மையானது; 'ப்ரம்ஹ' என்று எழுதுவோரைக் கண்டித்தார். தாம் எழுதிய செய்யுட்களில் சுவாமி தமிழ் வரம்புகளை மீறிய தில்லை. ஷ, ஜ, ஸ, ஹ என்ற கிரந்த எழுத்துகள் வரும் சொற்களைத் திரித்தே செய்யுளில் வழங்கவேண்டும் என்று வலியுறுத்துவார். ' ஸ்ரீ' என்ற சொல்லும் தமிழில் பயிலாது என்றும், அதனைத் 'திரு' என்று பெயர்த்தோ அல்லது 'சீர்' என்று திரித்துத் தற்பவமாகவோ தான் வழங்கவேண்டும் என்பது அவர்தம் கொள்கை. 'சீர் வசன பூடணம்' என்ற உபதேச ரத்ன மாலைப் பிரயோகத்தைக் காட்டி 'ஸ்ரீபாஷ்யம்' என்பது போன்று செய்யுளில் வழங்குவதைக் கண்டித் துள்ளார். (சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை; முதல் மலர், 1951)

(viii) **கொச்சையான சொற்கள் :** தமிழ் உரை நடையில் கொச்சையான சொற்களையோ பேச்சு வழக்கான சொற்களையோ இலக்கண வரம்பை மீறிய சொற்களையோ பயன்படுத்துதல் சுவாமிக்குப் பெரிதும் மனவருத்தத்தை ஏற்படுத்தும். கற்றறிந்த பெரியார் ஒருவர் தம் கட்டுரையொன்றில் "முயற்சிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" என்று எழுதியிருந்தார். அதனைக் கண்ணுற்ற நம் சுவாமி "முயற்சி என்கின்ற சொல் உண்டேயல்லது அதன் மேல் ஒரு ப்ரத்யய மேற்றி 'முயற்சிக்க' என்பது பரிஹாஸ்யங் களிலும் கடையானது" என்று கண்டித்தார். மற்றொருவர் "முயற்சிக்கிறேன்'' என்று எழுதியபோது 'முயல்கின்றேன் உன்றன் மொய் கழற்கன்பையே' (கண்ணி நுண்.10) என்ற மதுரகவிகளின் திருவாக்கினை நினைவுப்படுத்தித்

திருத்தினார். (சாஸ்த்ரார்த்த சந்த்ரிகை, மலர் மூன்று 1951). தீர்மானித்தல், தயாரித்தல் போன்ற சொற்களைக் கையாண்டு எழுதுவதையும் சுவாமி கண்டித்துள்ளார்.

(ix) சொற்றொடர்களை மிகவும் பிரித்தெழுவது தமிழின் நரம்பறியாத செயல் என்பர் நம் சுவாமி. சொற்கள் புணர்ந்து தொடருவதில் ஓசையின்பம் சிறக்கும் என்பது சுவாமியின் கருத்து. இவ்வாய்வு வுரை, வீற்று இருக்கும், நூற்று அந்தாதி, நூற்று எட்டுத் திருப்பதிகள் போன்ற தொடர்ப்பிரிவுகளைக் கண்டு சுவாமியின் திருவுள்ளம் புண்பட்டதுண்டு.

(x) **'லட்சித லட்சணை'** என்பது ஒரு மரியாதையாகத் தமிழ் நூல்களில் வரும் மரபாகும். பரிபாடலில் (3-30) கேசியை வதம் செய்த கண்ணபிரானைக் குறிப்பாக 'கூந்தல் எரிசினம் கொன்றோய்' என்று வருகிறது. இங்குப் பரிமேலழகர் "கேசி - குதிரையாய் வந்து பொருதான் ஓர் அசுரன். இப்பெயர் **கேசம்** என்னும் வடமொழி முதல் நிலையாக முடிந்தமையின் அதன் பொருண்மை பற்றிக் கூந்தல் என்றார்" என்று விளக்குகின்றார். முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரும் **'கூந்தல் வாய் கீண்டானை'** (இரண். திருவந். 93) என்று பிரயோகித்துள்ளார். தீபிகை யுரையில் சுவாமியின் குறிப்பு : "தலைமயிர்க்கு வாசகமான கூந்தல் என்னும் சொல்லாட்சி லட்சணை என்னும் வழியில் கேசி என்பவனைக் குறிக்கும். எங்ஙனமே என்னில்; கூந்தல் என்பதற்கு வடமொழிப் பெயர் 'கேசம்' என்பதாகும். அச்சொல் கேசியை நினைப்பூட்டும்" என்பதாகும்.

திருமங்கை மன்னனும், தம் திருமொழியில்,

*புள்ளுரு வாகி நள்ளிருள் வந்த*
*பூதனை மாள (10.9:1)*

என்று குறிப்பிடுகின்றார். நள்ளிருட்கண் வந்த பூதனை புள்ளுருவாகி வரவில்லை. அவள் பேய்ச்சியாக வந்தாள்.

இங்கு சுவாமி தம் தீபிகை உரையில் "மேலே சஞ்சரித்துக் குழந்தைகளை அனுங்கப் பண்ணும் சில பறவைகள் உண்டு; அப்படிப் பட்டவளாய் வந்தாள் என்று இவளது கொடுமையைக் குறிப்பிட்டவாறு" என்று வரைந்த உரை குறிப்பதாகும். பெரியவாச்சான் பிள்ளையும் இவ்வாறே உரைப்பார்.

என் அருமை மாணவர் (காரைக்குடியில் பி.டி. வகுப்பில் படித்தபோது) **டாக்டர் இரா. அரங்கராஜன்** (தமிழ்ப் பேராசிரியர், மதுரைக் கல்லூரி, மதுரை - 625 001) தம்மிடம் சுவாமி உரையாடியபோது நிகழ்ந்ததைக் குறிப்பிடுவார் : "இலக்கண மரியாதைகளைப் பற்றி விளக்கியருளினார். 'புள்ளுருவாகி நள்ளிருள் வந்த பூதனை' என்ற தொடருக்கு லட்சித லட்சணை வழியில் அரிய விளக்கம் அளித்தார். 'புள்' என்பது அலகை (=கேடு) உடையது அன்றோ! ஆதலால் அலகை (=பேய்மகள்) நள்ளிருள் வந்த பூதனை என்று தேறுகின்றது. வடமொழி தமிழ்மொழி இலக்கண மரியாதைகள் எல்லாம் சுவாமிக்கு நன்கு வசப்பட்டிருந்தது கண்டு பெருவியப்பு அடைந்தேன்"[6]. தொடர்ந்து கூறுவது: இத்தகைய தமிழ்நெறியை அறியாதார் சிலர் "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்' (பெரியாழ். திரு . 4.9:3) என்ற விஷ்ணு சித்தன் திருவாக்கில் உள்ள **'போலும்'** என்பதை ஐயப்பொருளாக்கி அவப்பொருள் கண்டனர். 'ஆங்கவுரை யசை' 'ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்' (தொல். சொல். 277, 278) என்ற நூற்பாக்களைக் கொண்டு **'போலும்'** என்பதை அசை நிலையாகக் கொள்வதே தமிழ் மரியாதைக்குச் சேரும் என்பது சுவாமியின் முடிபாகும்.

6. காஞ்சி பி.ப. அண்ணங்கராசாரிய சுவாமி ஆற்றிய வைணவத் தொண்டு (செ.ப.க. வைணவத் துறை வெளியீடு.) - பக். 129.

**மங்கை மன்னரும் காஞ்சி மன்னரும் :** முன்னவர் நாட்டையாண்ட மன்னர்; பின்னவர் வைணவத் தமிழுலகை யாண்ட மாமன்னர்.

முன்னவர் தம்மை 'இருந்தமிழ்நூற் புலவன்' (பெரி.திரு.1.8:10) என்று சிங்கவேள்குன்றத் திரு மொழியில் குறிப்பிடுவர். இவர்தம் ஆறு பிரபந்தங்களும் மாறன் அருளிய மாமறைக்கு ஆறு அங்கங்கள் என்று வகுத்துக் கூறுங்கால் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் 'இருந்தமிழ் நூற் புலவர் பனுவல் ஆறும்' என்று குறிப்பிடுவர். அதனால் 'இருந்தமிழ்' என்று கலியனால் கருதப்பெற்றது நம்மாழ்வாருடைய நான்கு திவ்வியப் பிரபந்தங்களாகும் என்பது தெளிவு.

திருமங்கையாழ்வார் தம்மை 'இருந்தமிழ் நூற் புலவன்' என்று குறிப்பிட்டுக் கொண்டது அவ்வாறே முற்றிலும் நம் சுவாமிக்குப் பொருந்துகின்றது. கலியனுக்குப் பிறகு நாம் கண்ட 'இருந்தமிழ் நூற்புலவர்' காஞ்சி சுவாமியே. முன்னவர் பரகாலர்; பின்னவர் பிரதிவாதி பயங்கரர். நம் சுவாமியின் இருந்தமிழ்ப் பணியே அருந்தமிழ்ப் பணியாகும். இத்தெய்வப்பணி வாய்ப்பணியாகவும் (சொற் பொழிவுகள்), கைப்பணியாகயாகவும் (எழுத்துப் பணி நூல்கள்) இருவகைப்பட்டு நடந்து கொண்டிருந்தன. அவை சுவாமிகளின் இறுதி மூச்சு வரை நடைபெற்று வந்தமை அவர் வழிபட்டு வந்த அருளாளப் பெருமானின் திருவருளாலேயாகும் என்று நாம் நம்புவோம்; வைணவ உலகமும் அவ்வாறே நம்புகின்றது.

**பாராட்டுரைகள் :** சுவாமியின் வாழ்நாள் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களாகவும் பேரறிவாளர்களாகவும் திகழ்ந்தவர்கள் மூவர் (1) ஒருவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பேராசிரியராகவும் சங்கம் வெளியிட்ட 'செந்தமிழ்' என்ற இதழ் ஆசிரியராகவும் திகழ்ந்த திருநாராயண ஐயங்கார்

சுவாமி. நம் சுவாமியால் கண்கண்ட அகஸ்தியர் என்று பலகாலும் கொண்டாடப் பெற்றவர். இத்தகைய பெரியார் நம் சுவாமியின் தெய்வத் திருப்பணியை 1914 இல் செந்தமிழ் இதழில் பாராட்டி எழுதி 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற விருது வழங்கிச் சிறப்பித்தார்.

> **பாராட்டுரை:** திவ்வியப் பிரபந்தங்கட்குத் 'திவ்வியார்த்த தீபிகை' என்னும் பெயரால் ஒரு தமிழுரை காஞ்சிபுரம் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகளால் எழுதப்பெற்று பதிப்பித்துப் பிரசுரம் செய்யப் பெற்று வருகிறது..... இவ்வாசிரியர் இளமைப் பருவம் பொருந்திய வராயினும் வடமொழி தென்மொழி தெளிந்த ஞானம் பெற்று சாஸ்திர சம்பிரதாயங்களை களங்கமறக் கற்று உபந்யாச வகையிலும் தேர்ச்சி பெற்றுள்ளார்....... ஆழ்வார்களின் அருளிச் செயல்கட்கு இவரால் எழுதி அச்சிடப்பட்டு வருகிற தமிழுரையை நோக்குங்கால் இவர் **'செந்தமிழ்ச் செல்வர்'** என்னும் சிறப்புப் பெயர் பெறுவதற்கு உரியவர் என்பது தெற்றென விளங்கும்.... மிக்க ஆராய்ச்சியுடன் எழுதப்பெறுகின்ற இவ்வுரை சம்ஸ்கிருத்ததில் பயிற்சி இல்லாத தமிழர்களும் பொருள் உணருமாறு எழுதப்பெற்றிருத்தலால் ஆத்திகர் அனைவருக்கும் இது அவசியமேயாகும்"

(2)அடுத்தபடியாக சேது சமஸ்தானம் மகாவித் துவானாக விளங்கியவரும் 'பாரி காதை' இயற்றிய பெருங்கவிஞராகத் திகழ்ந்தவருமான **ரா. இராகவையங்கார் சுவாமி** நம் அண்ணங்கராசாரிய சுவாமிகட்குப் புகழாரம் அணிவித்திருக்கிறார். அந்த மதிப்புரை வருமாறு :

> "நம் பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த வியாக்கி யானங்கள் அறிதற்கரியனவாய் அதிக வடமொழிக்

கலப்புடையனவாய் இருத்தலை நோக்கி நம் தமிழ் மக்கள் எளிதில் உணர்ந்து கொள்ளும் வண்ணம் இனிய தமிழ் நடையில் நூற்பொருளை நன்றாக விளக்கி இவ்விரிவுரை நிற்றலைக் கண்டு நாடொறும் கழிபேருவகை அடையா நின்றேன்.... ..... இவ்வினிய தமிழ் விரிவுரையின் பெருந்தகுதியை நோக்கி இவரை **'திவ்வியப் பிரபந்தப் பேராசிரியர்'** என்று சிறப்பித்துக் கூறுவே னெனின் அது கற்றார் பலருக்கும் உடன்பாடேயாம்...

*- செந்தமிழாராய்ச்சி, 1943. பக். 124.*

(3) **உ.வே.சா. பாராட்டு:** 'தமிழ் தாத்தா' என்று அன்புடன் வழங்கப்பெறும் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் நம் சுவாமியினிடத்து பெருமதிப்பு வைத்திருந்தார். சுவாமி முதன்முதலில் தம் 27-ஆம் அகவையில் (கி.பி. 1917) முதன்முறையாக உ.வே.சா.வை மதுரையில் சந்தித்தார். அதன் பிறகு 1937 இல் குழித்தலையில் சந்தித்து உரையாடினார். சுவாமியின் பகவத்விஷய காலட்சேபத்துக்கு ஐயரவர்கள் பலமுறை சென்று கேட்டு இன்புற்றிருக்கிறார். பின்னர் சுவாமியின் திவ்வியார்த்த தீபிகையுரையைப் படித்துப் பயின்ற ஐயரவர்கள் தம்முடைய பெருமகிழ்ச்சியைப் பாராட்டுரையாக அளித்துள்ளார்.

"காஞ்சிபுரம் பி.ப. ஸ்ரீமான் அண்ணங்கராசாரியர் அவர்களால் வரையப்பெற்று மாதந்தோறும் பதிப்பித்து வெளிப்படுத்தப்பெறும் 'திவ்வியப் பிரபந்த திவ்வியார்த்த தீபிகை' என்னும் அரியதோருரையை உடனுக்குடன் படித்து இன்புற்று வருகிறேன்.

திவ்வியப் பிரபந்த வியாக்கியானங்கள் தமிழ் நூற்பயிற்சி மட்டுமே உள்ளவர்களும் அறிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் சுவாமியின் உரை அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியர்கள் பழைய வியாக்கியானங்களில்

கருத்து முழுவதையும் எளிய நடையில் எழுதி இதில் வெளிப்படுத்துவதன்றிச் சிறந்த தமிழ் நூல்களையும் பழைய உரைகளையும் மிக ஆராய்ந்து உரிய இடங்களில் அவற்றை அமைத்துக் காட்டும் அழகு மிகவும் பாராட்டற்பாலது. பக்திமான்களுக்கு இவ்வுரை மிக்க பயனை அளிப்பதுடன் சிறந்த தமிழ்ப்பயிற்சி யையும் உண்டாக்கும் என்பது எனது கருத்து".

மும்மூர்த்திகள் போன்ற இந்த மூன்று பேரறிஞர்கள் பாராட்டுரைகள் 'வசிட்டர்வாயால் பிரம்மரிஷி' என்ற புகழுரை நம் சுவாமிக்கு அமைந்து விட்டது என்று வைணவ உலகமும் தமிழ் உலகமும் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றன.

# 7. சுவாமியின் இறையநுபவம்

காஞ்சியில் அவதரித்த நம் சுவாமியின் மீது அத்திகிரி அருளாளரின் திருவருள் வெள்ளங் கோத்துப் பாய்ந்தமையால் அவர் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால் பட்டு அவற்றின்மூலம் எம்பெருமானை நன்கு அநுபவிக்கின்றார். பாசுரங்களின்மீது இவர் கொண்ட ஆழ்ந்த நோக்கு இவர்தம் இறையநுபவமாக வெளிப்படுகின்றது. அந்த அநுபவம் இவர்தம் உரைகளில் பாய்ந்து அவை நமக்குத் தேனாய், பாலாய், கன்னலாய் அமுதமாய் இனிக்கின்றது. சில சமயம் பொருள்களுடன் இறைவனை ஒப்பு நோக்க வைத்து அநுபவமாக வெளிப்படுகின்றது. எடுத்துக்காட்டாக திருவாய்மொழியில் ஒரு பாசுரம் :

*பங்கயக் கண்ணன் என்கோ?*
*பவளச்செவ் வாயன் என்கோ?*
*அங்கதிர் அடியன் என்கோ?*
*அஞ்சன வண்ணன் என்கோ?*
*செங்கதிர் முடியன் என்கோ?*
*திருமறு மார்வன் எங்கோ?*
*சங்குசக் கரத்தன் என்கோ?*
*சாதிமா ணிக்கத்தையே!*

இந்தத் திருவாய்மொழியின் அவதாரிகையிலே, 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா, அடிமை செய்ய வேண்டும் நாம்' (திருவாய். 3.3:1) என்று எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும் என்று பாரித்த ஆழ்வாருக்குத் தாம் அவர் விரும்பியபடியே

செய்வதற்கு அநுகூலமாக எல்லாப் பொருள்களிலும் பிரவேசித்து எங்கும் நிற்கின்ற நிலையைக் காட்டிக் கொடுத்தான். அதுகண்ட ஆழ்வார் பெருங்காற்றில் வீழ்ந்த பழங்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளக் கருதுபவர்கள் 'அந்தப் பழத்தை எடுப்போமா? இந்தப் பழத்தை எடுப்போமா?' என்று அலமந்து கிடப்பதுபோல், அத்தைச் சொல்லுவேனா? இத்தைச் சொல்லுவேனா? என்று அலமந்து, எங்கும் எல்லாவகைப் பொருள்களுமாயும் தோன்றுகின்ற அப் பெருமானுக்கு **வாசிகமாகக்** கைங்கரியம் செய்ய நினைத்து 'சகல கல்யாண குணங்களுக்கும் கடலான அவ்வெம் பெருமானுடைய தன்மையை யான் என்னவென்று சொல்லு வேன்?' என்று நிர்வேதத்துடனே அவனது சர்வாத்மத்தைப் பேசுகின்றார் இத்திருவாய் மொழியில். அதில் **மூன்றாவது** பாசுரம் இது : இதற்குச் சுவாமியின் அநுபவ உரை இது :

"ஆழ்வார் தம்மைக் கடாட்சித்து தம்மோடு முதலுறவு பண்ணின திருக்கண்களின் அழகில் ஈடுபட்டு முதலில் **'பங்கயக் கண்ணன்'** என்றார். அந்தக் கண்ணோக்குக்குத் தப்பினாலும் தப்ப வொண்ணாத புன்முறுவலையுடைய வாயழகில் ஈடுபட்டுப் **'பவளச் செவ்வாயன்'** என்றார். அந்த நோக்கத்திலும் புன்சிரிப்பிலும் ஈடுபட்டுத் தோற்றுவிழும் நிலமாகிய திருவடிகளில் ஈடுபட்டு **'அங்கதிர் அடியன்'** என்றார். அத்திருவடிகளில் வீழ்ந்தவர் அநுபவிக்கின்ற வடிவழகில் ஈடுபட்டு **'அஞ்சன வண்ணன்'** என்றார். அவ்வாறு அநுபவிக்கும் வடிவழகையுடையவன் ஈடும் எடுப்பும் இல்லாத ஈசன் என்பதை விளக்குகின்ற திருமுடியழகில் ஈடுபட்டுச் **"செங்கதிர் முடியன்"** என்றார். திருமுடியினால் விளங்குகின்ற சுவாமித்துவத்தைக் கண்டு 'இப்பெரியோனை நாம் எவ்வாறு நெருங்குவது!' என்று கருதி பின் வாங்காதபடி எப்போதும் அப்பெருமானின் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று இருந்து புருஷகாரம் செய்யும் தாயான பிராட்டியின் சம்பந்தத்தைக் கருதித் **'திருமறுமார்பன்'** என்றார் பெருமாளும்

பிராட்டியுமான இச்சேர்த்திக்கு என்ன தீங்கு வருகின்றதோ என்று பொங்கும் பரிவினால் பாப சங்கை கொள்ளுகின்ற அடியார்களுடைய அச்சத்தைத் தவிர்ப்பனவான திவ்வியா யுதங்களைக் கருதி '**சங்கு சக்கரன்**' என்றார்.

"(**சாதி மாணிக்கத்தை**) போலியன்றிக்கே ஆதரத்திலே பிறந்து நன்றான மாணிக்கம் போலே நிர்த்தோஷமாய் (குற்றமில்லாததாய்) ஸ்வதசித்தமான வடிவழகுடையவனை" என்பது ஈடு முப்பத்தாறாயிரம். மறு - ஸ்ரீவத்சம் என்கின்ற மயிர்ச்சுழி.

உரையை ஊன்றிப் படிக்குங்கால் ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நம் சுவாமி அநுபவித்ததை அறிகின்றோம். உரை நம்மையும் மறந்து இறையநுபவத்தில் ஆழ்ந்து விடச் செய்கின்றது.

**ஒப்பீட்டு இறையநுபவம்** : நம் சுவாமி இறைவனை அவனது உடலாக இருக்கும் சில பொருள்களுடன் ஒப்பிட்டு அநுபவிக்கின்றார். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

1. **யானை** : 'கைம்மான மழகளிற்றை' (பெரி.திரு.5.6:1) எத்தனை முறை பார்த்தாலும் யானையொன்று தெருவில் நடந்து போகும்போது நாம் சற்று நின்று பார்ப்பதில் தவறுவதில்லை. அதன் கம்பீரமான தோற்றம் நம்மை ஈர்க்கின்றது.

ஒரு யானை கையையும் கால்களையும் பரப்பிக் கொண்டு கிடப்பது போலப் பள்ளி கொண்டிருக்கும் அழகில் ஈடுபட்டுச் சொல்லுகிறபடி இத்தொடர். "தென்னானாய், வடவானாய் குடபாலானாய், குணபால மதயானாய்" (திருநெடுந். 10) என்று மீண்டும் அருளிச் செய்வார் இந்த ஆழ்வார். "என்னானை என்னப்பன் எம் பெருமான்' (திருவாய்.3.9:1) என்றார் சடகோபரும். இத்தகைய யானைக்கும் எம்பெருமானுக்கும் பலவித ஒப்புமை உண்டு. அவற்றைச் சொல்லி அநுபவிக்கின்றார் நம் சுவாமி.

(1) யானையை எத்தனை முறை பார்த்தாலும் பார்க்கும் போதெல்லாம் அரிய பொருளைப் பார்ப்பது போல் பரமானந்தத்தைத் தரும்; எம்பெருமானும் "அப் பொழுதைக்கப்பொழுது என் ஆராஅமுதமே" (திருவாய் 2.5:4) என்று இனிப்பான்.

(2) யானையின்மீது ஏறவேண்டியவன் யானையின் காலைப் பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடம் சேர வேண்டியவர்களும் அவனது திருவடியைப் பற்றியே சேர வேண்டும்.

(3) யானை தன்னைக் கட்டத் தானே கயிறு கொடுக்கும்; "எட்டினோ டிரண்டெனும் கயிற்றினால்" (திருச்சந்த. 83) என்றபடி எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகின்ற கயிற்றை அவன் தானே தந்தருள்வான். "மதி நலம் அருளினவன்" (திருவாய். 1.1:1)

(4) யானையை நீராட்டினாலும் அடுத்த கணத்தி லேயே அஃது அழுக்கோடு சேரும்; எம்பெருமான் சுத்த பவித்திரனாய் சுத்த சத்துவமயனாய் இருக்கச் செய்தேயும் "பொய்ந் நின்ற ஞாலமும் பொல்லா அழுக்குடம்பும்" (திருவிருத்.1) உடைய நம் போலியருடன் சேரத் திருவுள்ள மாயிருப்பன், வாத்சல்யத்தாலே.

(5) யானையைப் பிடிக்க வேண்டுமானால் பெண் யானையைக்கொண்டு பிடிக்க வேண்டும்; பிராட்டியின் புருஷகாரமின்றி எம்பெருமான் வசப்படான்.

(6) யானை பாகனுடைய அநுமதியின்றித் தன் பக்கம் வருகின்றவர்களைத் தள்ளி விடும்; எம்பெருமானும் "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" (திருவாய்.4.6:8) என்றபடி பாகவதர்களை முன்னிட்டுப் புகாதாரை அங்கீகரித்தருளான்.

(7) யானையின் மொழியைப் பாகனே அறிவான்; எம்பெருமானின் மொழி திருக்கச்சி நம்பி போல்வாருக்கே தெரியும். பேரருளாளனோடே பேசுபவரன்றோ நம்பிகள்?

(8) யானையினுடைய நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல் முதலிய தொழில்கள் பாகனிட்ட வழக்கு; எம்பெருமானும், "கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டா...! உன்றன் பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்றும், "கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" (திருச்சந்த. 61) என்றும் சொல்லுகின்ற திருமழிசைபிரான் போல்வாருக்கு எல்லாவகையிலும் அடியன்.

(9) யானை உண்ணும்போது இறைக்கும் அரிசி பலகோடி நூறாயிரம் எறும்புகளுக்கு உணவாகும். எம்பெருமான் அமுது செய்து சேவித்த பிரசாதத்தாலே பல கோடி பக்த வர்க்கங்கள் உய்விக்கக் காண்கின்றோமன்றோ?

(10) யானைக்குக் கை நீளம்; எம்பெருமானும் "அலம்புரி நெடுந்நடக்கை ஆயன்" (பெரி. திரு. 1.6:2) அன்றோ? "நீண்டவத்தைக் கருமுகிலை" (பெரி.திரு. 2.5:2)

(11) யானை இறந்த பின்பும் உதவும்; எம்பெருமானும் தீர்த்தம் சாதித்துத் தன் சோதிக்கு எழுந்தருளின பின்பும் இதிகாச புராணங்கள், அருளிச் செயல்கள் மூலமாகத் தனது சரிதங்களை உதவுகின்றானன்றோ?

(12) யானைக்கு ஒரு கையே உள்ளது; எம் பெருமானுக்கும் கொடுக்கும் கையொழியக் கொள்ளும் கை இல்லையன்றோ? ''விரும்பப்பட்ட பொருள்களைக் கொடுப்பதில் உறுதியான எண்ணமுடையவன்" (அர்த்தி தார்த்த பரிதாந தீட்சிதம்)

(13) பாகனுக்கு வாழ்க்கைக்குரிய பொருள்களைச் சம்பாதித்துக் கொடுக்கும் யானை; எம்பெருமானும் அர்ச்சக பரிசாரகர்களுக்கு உதவுவான்.

சுவாமி அருளிய இவற்றைப் படிக்கும் நாமும் அவரோடு சேர்ந்து இறையநுபவத்தைப் பெறுகின்றோம்.

2. **நீர் :** (திருநெடுந். 8) **நீரகத்தாய்!** நீரின் இயல்பை உடையவனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலமாதல்பற்றி இத்தலத்திற்கு **'நீரகம்'**[1] என்ற திருநாமமாயிற்று. இவ்விடத்து எம்பெருமானை 'நீரகத்தாய்!' என விளிக்கின்றார்.

நீருக்கும் எம்பெருமானுக்கும் இயல்பாகவுள்ள ஒற்றுமைகளை நம் சுவாமி நிரல்படுத்தி அநுபவித்து மகிழ்கின்றார். அவற்றைக் காண்போம்.

(1) நீர் பள்ளத்திலே பாயும்; மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற்றால் குறைந்தவரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோர் என்று மார்பு நெறித்திருப்போரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்க்காகத் தூது எழுந்தருளும்போது 'ஞானத்தால் சிறந்தோம்' என்றிருக்கும் வீடுமரையும் துரோணரையும், 'செல்வத்தால்' சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொருளாக மதியாமல் இவையெல்லாவற்றிலும் தாழ்ந்தவராகத் தம்மைக் கருதியிருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று அமுது செய்தருளினான் கண்ணபிரான். ஆகவே பள்ளத்தை யோடிப் பெருங்குழியே தங்கும் இயல்பு ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமானின்றி ஒரு காரியமும் ஆகாது. ஒருவன் விரும்பியதை வேறொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தையுடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியேயாக வேண்டும்; அது போலவே எம்பெருமானையும்.

1. காஞ்சி உலகளந்த பெருமாள் சந்நிதியில் உள்ளது.

(3) நீருக்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி. எம் பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியாயிருக்கும் "நீரிலே நெருப்புக் கிளறு மாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்"[2] என்ற முமுட்சுப்படி திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேண்டும். "தரு துயரம் தடாயேல் உன் சரணல்லால் சரண் இல்லை"[3] என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கி வைக்கவும் ஓட விடவும் உரித்தாயிருக்கும். எம்பெருமான் இயல்பும் அப்படியே; ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்துப் புசிக்க நின்றான் எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்தாலே ஓலை கட்டித் தூது நடந்தான்.

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயுமிருக்கும்; தனிப்படத் தானே குடிக்கத் தக்கது மாயிருக்கும். எம்பெருமானுக்கும் **உபாயத்துவம், உபேயத்துவம்** என்ற இரு தன்மைகள் உண்டல்லவா? எம்பெருமானைக்கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும் எம்பெருமான் தன்னையே புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) அன்னம் முதலானவை தமக்குப் பிரதிநிதிகளைச் சகிக்கும்; அதாவது காய் கனி கிழங்கு வேர் பலா முதலியவற்றால் உடலைப் பாதுகாக்கலாம்; நீரானது அப்படிப் பிரதிநிதியொன்றையும் சகிக்கமாட்டாது நீருக்கு நீரே வேண்டும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணாநுசந்தத்தாலும் போது போக்குதல் அரிது. "ஒருநாள் காண வாராயே"[4] "அடியேன் தொழ வந்தருளே"[5] என்று பிரார்த்தித்துப் பெற்றே தீரவேண்டும்.

2. முமுட்சு - 127 3. பெரு.திரு. 5:1
4. திருவாய் 8.5:1 5. மேலது 5.7:6

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது; அப்படி நீர் வேறொன்றை விரும்புவதன்று. எம்பெருமானும் அப்படியே; உபயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேண்டும்; எம்பெருமான் இவற்றை விரும்பாதவன், "உன்னல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்."[6]

(9) கொள்ளும் பாத்திரங்களின் வேறுபாடின்றி நீர் தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பியிருக்கும் எம்பெருமானும் "கொள்ளக்குறைவிலன் வேண்டிற் றெல்லாம் தரும் கோதில் வள்ளல்"[7] கொள்வார் குறையே யத்தனை ஐசுவரியமே போதும் என்பாரும் கைவல்யமே போதும் என்பாருமாகக் குறையக் கொள்வார் குற்றமேயாகும்.

(10) நீர் ஐவகைப்பட்டிருப்பது போல எம் பெருமானும் ஐவகைப் பட்டிருப்பன். எங்ஙனே என்னில் (i) பூமிக்குள்ளே பொதிந்துகிடக்கும் நீர்; (ii) ஆவரண நீர்; (iii) பாற்கடல் நீர்; (iv) பெருக்காற்று நீர்; (v) தடாகங்களில் தேங்கும் நீர் என ஐவகைப்பட்டிருக்கும். பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என எம்பெருமானும் ஐவகைப் பட்டிருப்பான்.

(ii) நீரானது பரிசுத்தமாயினும் தான் இருக்கும் இடத்துக்குத் தக்கதாய்க் கொள்ளத்தக்கதாயும் விடத்தக்க தாயும் இருக்கும். அப்படியே தேவதாந்தரங்களில் அந்தர்மியான எம்பெருமான் விடத்தக்கவனாகவும் கூராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் கொள்ளத் தக்கவனாகவும் விடத்தக்கவனாகவும் இருப்பது தெளிவாகும்.

(12) நீர் தோண்டத் தோண்டச் சுரக்கும்; 'கொள்ளமாளா இன்ப வெள்ளம் கோதில் தந்திடும்"[8]

(13) நீர் தனக்கொரு பயனின்றியே பிறர்க்காகவே இருக்கும்; எம்பெருமானும் அவனைச் சேர்ந்தனவாயும் அவனை அடைத்தவர்க்காகவே இருக்கும்.

6. திருவாய் 5.8;3 7. மேலது 3.9:5 8. திருவாய் 4.7;2

(14) நீர் தானாகப் பெய்ய வேண்டுமேயன்றி ஒருவரால் வலிந்து பெய்விக்க முடியாது; எம்பெருமான் இயல்பும் அப்படியே.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உயிர் வாழப் பயன்படுவதாகாது; எம்பெருமானும் சாத்திரங் களிலிருந்து ஆசாரியர் முகமாக வந்தே அடையத்தக்க வனாகின்றான்.

(16) வசிட்ட சண்டாள வேறுபாடின்றியே அனைவரும் ஒரு துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி இருக்கும் நீர்; எம்பெருமானும் 'நிகரில் அமரர் முனிக் கணங்கள் விரும்பும் திருவேங்கடத் தானே"[9] என்றும், "கானமும் வானரமும் வேடும் உண்ட வேங்கடம்"[10] என்றும் சொல்லுகிறபடியே பெரியார் சிறியார் என்னும் வேற்று மையின்றி ஒக்க அடையலாம்படி இருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் இருப்பினும் உள்புகுந்து விடும்; எம்பெருமானுக்குச் சிறிது வியாஜமே போதும். 'திருமாலிருஞ்சோலை மலையென்றேன்; என்னத் திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்"[11]

(18) தீர்த்தச் சிறப்புகளிலே நீருக்கு மகாத்மியம் அதிகம். எம்பெருமானுக்கும் கோயில், திருமலை, பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புபொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்தில் தெளித்துக் கொள்வது, முதுகில் கொட்டுவது, உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல் "வாக்கினால் கருமந் தன்னால், மனத்தினால் சிரத்தை தன்னால், வேட்கை மீதூர வாங்கி"[12] விழுங்குவார்கள் எம்பெருமானையும்.

9. திருவாய் 6.10:10
10. நான், திருவந் 47
11. திருவாய் 10.8:1
12. திருக்குறுந் -4

(20) நீரில் சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமும் மிதக்கும்; எம்பெருமான் பக்கலிலும் பிரமாவாய் இழந்து போதல், இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யக் காணா நின்றோம். "நேரே, கடிகமலத்துள்ளிருந்தும் காண்கிலான் கண்ணனடிக் கமலந்தன்னை அவன்"[13] "மருவுநின் திரு நெற்றியில் சுட்டி அசைதர மணிவாயிடை முத்தும் தருதலும், உன்றன் தாதையைப் போலும் வடிவு கண்டு கொண்டுள்ளம் குளிர விரலைச் செஞ்சிறு வாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும், திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன், தெய்வ நங்கை யசோதை பெற்றாளே"[14] என்பன அடைவே பிரமாணம். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும், "ஊன் மல்கி மோடு பருப்பார் வாய்க்கமையில் நிற்றலும்"[15] கொள்க.

(21) நீர் வேண்டியவன் துளி நாக்கு நனைக்கக் கிடைத்தல் போதும் என்பன்; "கூரார் ஆழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால், வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே"[16]

இங்ஙனம் சுவாமிகள் எம்பெருமானையும் மற்றவற்றையும் சேர்த்து அநுபவித்ததைப்போல் நாமும் அநுபவித்து உளம் கரைகின்றோம்.

**3. மேகம். 'உலக மேகத்தும் காரகத்தாய்'.** காரகம் என்ற திவ்விய தேசமும் திருக்கச்சி மாநகரில் உலகளந்த பெருமாள் சந்நிதியில் உள்ளது. மேகத்தின் இயல்பு போன்ற இயல்புடையவன் வாழும் இடமாதலால் இத்தலத்திற்குக் **காரகம்** என்று திருநாமமாயிற்று என்பர்.

13. முத்.திருவந். 36
14. பெரு.திரு. 7:5
15. சிறுமாமனிசர் (திருவாய் 8.10:13) ஊன் மல்கி மோடு பருப்பார். (மேலது 3.5:7)
16. திருவாய் 6.9;1

எம்பெருமானுக்கு மேகத்தோடு ஒற்றுமை பல நிலைகளால் உய்த்துணரத் தக்கது.

(1) பெய்யவேண்டும் இடமளவும் சென்று பெய்யும் மேகம்; எம்பெருமான் "வந்தருளி யென்னெஞ்சிடங் கொண்ட வானவர் கொழுந்து"[17] என்று ஆங்காங்குச் சென்று அநுக்கிரகிப்பன்.

(2) மின்னலுள்ள காலம் நீர் நிரம்பியிருக்கும் மேகம்; எம்பெருமானுக்கும் பிராட்டியோடு கூடியிருக்கும் காலத்தில் கிருபாரசம் மிஞ்சியிருக்கும். "இவள் சந்நிதியாலே காகம் தலை பெற்றது; அஃது இல்லாமையால் இராவணன் முடிந்தான்"[18] என்ற முமுட்சுப்படியின் திவ்விய சூக்தியும் காண்க.

(3) மொண்ட இடத்திலும் பெய்யும் மேகம்; தனக்கு உபதேசித்தவர்களுக்கும் உபதேசிக்குமவன் எம்பெருமான். வசிட்டாதிகளுக்கும் ஞானப் பிரதானம் பண்ணினான் இராமபிரான். சித்திரகூடத்தில் வசிட்டன் பெருமாளிடம் சில தரும சூக்குமங்கள் கேட்கப் பெற்றானாயிற்று.

(4) பெய்யப் பெறாத காலத்திலே வறக்கும் மேகம்; நெஞ்சுலர்ந்து பேசினான்றோ எம்பெருமானும், திரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப்பெறாத குறைக்காக.

(5) இன்ன காலத்திலே மேகம் பெய்யுமென்று அறுதியிடவல்லார் எவரும் இலர். பெய்யவேண்டிய காலத்தில் பெய்யா தொழியவும், பெய்வதற்குச் சந்தர்ப்பம் இல்லாத காலத்தில் எண்ணாததாகவும் வந்து பெய்யவும் கடவது மேகம்; எம்பெருமான் படியும் அப்படியே; "வந்தாய் போல வாராதாய்! வாராதாய்போல் வருவானே"[19], திரௌபதிக்கு ஆபத்திலே வந்து முகங்காட்டாதொழிந்தான்;

17. திருவாய் 5.7:7 19. திருவாய் 6.10:9
18. முமுட்சு - 135.

விரும்புதலை எதிர்பாராமல் "தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக் கொண்டான்"[20]

(6) 'வனத்திடரை எரியாக வெட்டியாயிற்று. நீ மழை பெய்தாக வேண்டும்'[21] என்று வளைப்பிடவொண்ணாதது மேகம்; எம்பெருமான் படியும் இங்ஙனமாயிறே" "பெண்ணுலாஞ் சடையினானும் பிரமனும் உன்னைக் காண்பான் எண்ணிலா வூழியூழித் தவஞ் செய்தார் வெள்கி நிற்ப, விண்ணுளார் வியப்ப வந்து ஆனைக்கன்றருள வந்தவனிறே"[22]

(7) ஜலஸ்தல விபாகமின்றியே பெய்யும் மேகம். வேடன், வேடுவச்சி, பட்சி, குரங்கு, சராசரம், இடைச்சி, இடையர், தயிர்த்தாழி, கூனி, மாலாகாரர், பிணவிருந்து வேண்டடிசிலிட்டவர், அவர் மகன், அவன் தம்பி ஆனை அரவம், மறையாளன் பெற்ற மைந்தன்"[23] என்னும் படியிறே பகவத விஷயீகாரம் பெற்றவர்களிருப்பது.

(8) மேகம் சரத் காலத்தில் பெரு முழக்கமிட்டுப் போய் விடும், மழை பெய்யாது; பெய்யுங்காலத்தில் ஆடம்பரமின்றிப் பெய்யும். எம்பெருமான் குசேலனுக்கு அருள் செய்தபடி இங்ஙனேயிறே.

20. திருமாலை-35.
21. இரண். திருவந். 16
22. திருமாலை - 44
23. ஆசா. ஹிரு. 228 (புருடோத்தம நாயுடு பதிப்பு). வேடன்குகன்; வேடுவிச்சி - சபரி; பட்சி - சடாயு; குரங்கு - சுக்கிரீவன், சராசரம் - அயோத்தியில் வாழும் சராசரம்; இடைச்சி சித்தயந்தி; இடையர் - ததிபாண்டன்; தயிர்த் தாழி - ததிபாண்டனுடைய தாழி; கூனி - கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனுக்குச் சந்தனம் தந்தவள்; மாலாகாரர் - கண்ணன் காலத்து - பக்தர்; பிணவிருந்து - இதையிட்ட கண்டாகர்ணன்; வேண்டடிசில் இட்டவர் - பக்தவிலோசன ரிஷிபத்தினிகள்; அவன் மகன் - பிரகலாதன்; அவன் தம்பி - வீடணன்; ஆனை - கசேந்திராழ்வான்; அரவம் - சுமுகன்; மறையாளன் - கோவிந்த சாமி; பெற்ற மைந்தன் - மார்க்கண்டேயன் - ஆக பதினெண்மர்.

(9) விராடபர்வ காலட்சேபத்துக்கு வரும் மேகம்; பகவத் விஷய காலட்சேபங்களிலே வந்து நிற்பான் எம்பெருமான். **ஸ்ரீ சைலேஷ தயபாத்ர** (தனியன்) என்று வந்தானிறே அரங்கநாதன் பெரிய ஜீயர் கோஷ்டியிலே.

(10) சுக்திகளிற் பெய்து முத்தாக்கும் மேகம்; அடியார்க்கு இன்பமாரியாகிய (திருவாய் 4.5:10) கடாட்ச தாரையும் ஆழ்வார்கள் ஆசாரியர்களிடத்தே பிரவகித்து மிக்க பயன் விளைக்குமிறே.

(11) "விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்கள்"[24] இத்யாதிப்படியே தூது விடப்படும் மேகம்; எம்பெருமான்றானும் "இன்னார் தூதன் என நின்றான்" (பெரி.திரு. 2.2:3); கோதைவேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான். தூதனாய் மன்னவனால் சொல்லுண்டானிறே" (மேலது 11.5:7)

(12) மழை பெய்ய எல்லா மரங்களும் தளிர்க்கும்; எருக்கிலைபோல்வன வீழ்ந்தொழியும்; ஆகவே மழை சிலர்க்குத் தீங்கு, சிலர்க்கு நன்மை. எம்பெருமான் படியும் அப்படியே. "கஞ்சன் நாள் கவர் கருமுகில்; எந்தாய்"[25] "தாயர் மகிழ ஒன்னார் தளர"[26] இத்யாதி.

(13) "எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங்கூழ்கள், மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்"[27] என்கின்றபடியே பயிர்கள் வேறு புகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும் மேகம்; "களைவாய் துன்பம் களையா தொழில்வாய் களைகண் மற்றிலேன்"[28] என்று அநந்ய கதிகளால் எதிர்ப்பார்க்கப்படுகை ஒக்குமிறே.

24. நாச். திரு. 8:1
25. பெரு.திரு. 7:10.
26. பெரியாழ் திரு. 1.7:11
27. பெரு.திரு. 5:7
28. திருவாய் 5.8:3

(14) "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கும் துப்பாய தூஉம் மழை' (குறள்.12) என்கின்றபடியே அன்னத்தின் அபிவிருத்திக்கு ஏதுவாகையாலே போக சாதனமாயும் விடாய் தீரப் பருகுகையாலே ஸ்வயம் போக்கிய மாயுமிருக்கும் மேகம்; அடைவிப்பானாயும் அடையப் படுபவனாயுமிறே எம்பெருமான் இருப்பது.

(15) எத்தனை கண்ணநீர் விழவிட்டாலும் விருப்ப மில்லாதவன் என்று வாளாகிடக்கும் மேகம்; பரதாழ்வான் பலருடனே சித்திர கூடத்தருகே போந்து கண்ணநீரை விழ விட்டு வேண்டினவிடத்தும் தம் மனோரதம் பெறாமலே மீண்டானிறே'

இங்ஙனம் சுவாமிகள் மேகத்தையும் எம்பெருமானையும் ஒப்பு நோக்கிப் பகவதநுபவம் பெற்றதை அவர்தம் உரைகளில் காணும் நாமும் அவர்தம் அடியொட்டி இவற்றைப் பயின்று அவ்வநுபத்தைப் பெறுகின்றோம்.

4. **இரத்தினம்** : திருக்கண்ணபுரத்துச் சௌரிராஜர் மீது மங்களாசாசனத் திருமொழியில் (பெரி.திரு.8.9:11)

**கைமான மணியை:** இரத்தினத்திற்கும் பெருமானுக்கும் பல நிலைகளில் ஒப்புமை உண்டு.

(1) இரத்தினத்தைச் சொந்தமாகவும் அநுபவிக்கலாம்; விற்பனை செய்து வேறு பொருள்களையும் பெறலாம். அப்படியே எம்பெருமானைப் புருஷார்த்தமாகவும் கொள்ளலாம்; அவனை உபாயமாக்கி ஐசுவர்ய கைவர்த்திகளான வேறு புருஷார்த்தங்களையும் பெறலாம்.

(2) இரத்தினத்தின் மதிப்பை அறியாதவன் அற்ப விலைக்கு விற்பன்; மதிப்பறிந்தவன் உள்ள விலைக்கு விற்பன்; உத்தம அதிகாரி அதனை விற்பனை செய்யாமல் மார்பிலணிந்து அநுபவித்து மகிழ்வான். இங்ஙனமே எம்பெருமானைக்கொண்டு ஐசுவரியம் போன்ற கீழான

பலன்களைக் கொள்வாரும், அவனை மோட்சோபாயமாகக் கொண்டு மோட்ச புருஷார்த்தத்தைக் கொள்வாரும், அவனை 'எனக்குத் தேனே, பாலே, கன்னலே அமுதே' என்று தாமே அநுபவிப்பவர்களுமாக இருப்பார்கள்.

(3) இரத்தினத்தை இழந்தவன் கதறியழுவான். எம்பெருமானை இழந்தவனும் அப்படியே. இராம ரத்தினத்தை இழந்த பரதன் அவையில் கதறியழுதானன்றோ? "பழுதே பலபகலும் போயின என்று அஞ்சி அழுதேன்"[29] 'இன்பத்தை இழந்தபாவியேன் எனதாவி நில்லாதே"[30] "உன்னைக் காண்பான் நான் அலப்பு ஆய் ஆகாயத்தை நோக்கி யழுவன்"[31] என்றிப்படியெல்லாமாக கதறியழுவார்கள்.

(4) இரத்தினமுடையவன் மார்பு நெறிப்பன். எம்பெருமானைக் கைக்கொண்டவர்களும் "எனக்கு யாரும் நிகரில்லையே"[32] "மாறுள்ளதோ இம் மண்ணின்மிசையே"[33] "எனக் கென்னினி வேண்டுவதே"[34] "இல்லையெனக் கெதிரே"[35] என்று செருக்கிப் பேசுவார்கள்.

(5) இரத்தினம் பெற்றுள்ளவனை உலகமெல்லாம் தொடரும். எம்பெருமானைக் கைக் கொண்டவனையும் அப்படியே.

(6) இடையில் ஒரு புருஷனைக் கொண்டே இரத்தினம் வாங்கப்படும்; புருஷகாரமின்றி எம்பெருமானைப் பெற முடியாது. "வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து."[36]

(7) இரத்தினத்திற்குச் சிலசில ஆதாரங்களில் (ஆச்ரயங்களில்) மதிப்பு அதிகப்படும். எம்பெருமானுக்கும்

29. முதல். திருவந்.16
30. பெரு.திரு. 7:4
31. திருவாய் 5.8:4
32. இராமா. நூற். 47
33. திருவாய். 6.4:9
34. மேலது. 6.1:4
35. பெருந்தொகை. 1838
36. திருவாய் 4.6:8

அப்படியே. ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்து புறப்பட்ட திருப்பதிகளில் அன்றோ எம்பெருமானுக்கு மதிப்பு அதிகம்.

(8) இரத்தினம் ஒளியை விட்டு இராது: எம் பெருமானும் பிராட்டியை விட்டு இரான்.

(9) இரத்தினத்திற்கு ஒளியால் மகிமை; எம்பெருமானுக்கும் பிராட்டியால் ஏற்றம்.

(10) இரத்தினத்திற்கு ஒளியால் ஏற்றமென்றாலும், இரத்தினத்தின் சுதந்திரப் பெருமைக்கு ஒரு குறை இல்லை; எம்பெருமானுக்கும் அப்படியே.

(11) இரத்தினம் கடல், மலை முதலிய இடங்களில் உள்ளது. எம்பெருமானும் திருப்பாற்கடல், திருமலை முதலான இடங்களில் உள்ளான்.

(12) இரத்தினம் எவ்வளவு உயர்ந்த தாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி இருக்கும். எம்பெருமானும் பரத்துவத்தை மறைத்து (அர்ச்சையில்) சௌலப்பியத்தைக் காட்டுகின்றவனன்றோ?

(13) இரத்தினம் பெற்றவர்கள் இரவும் பகலும் கண்ணுறங்கார்; எந்த வேளையில் யார் கொள்ளை கொள்வாரோ என்று துஞ்சாதிருப்பார்கள். எம்பெருமானைப் பெற்றவர்களும் அப்படியே. "கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே"[37] என்கின்றபடியே காண்பதற்கு முன்பு உறக்கம் இல்லை; கண்ட பின்பும் இல்லை.

இப்படிச் சுவாமிகள் இரத்தினத்திற்கும் எம்பெருமானுக்கும் உள்ள உவமைப் பொருத்தங்களைக் கண்டு இறைய நுபவத்தில் திளைப்பார்கள். நாமும் அவர் வழியைப்

37. திருவிருத். 97

பின்பற்றி - இவ்வுரையைப் படித்து - இறையநுபவம் பெறுவோம்.

5. **நிதி** : “எய்ப்பினில் வைப்பினைக், காசினை **மணியை**” (பெரி.திரு. 7.10:4) என்று மங்கை மன்னன் திருக்கண்ண மங்கைத் திருமொழிப் பாசுரத்தில் பணிப்பார். அங்ஙனமே சடகோபரும் திருக்கோளூர்பற்றிய திருவாய் மொழியில் (6-7) அத்தலத்துப் பெருமானாகிய ‘**வைத்தமா நிதியை**’ப் பேசுவார் சடகோபர்.

நிதியையும் வைத்த மாநிதியையும் ஒப்பு நோக்கி நம் சுவாமிகள் அநுபவித்தவை: சுவாமிகளின் **சிந்தனையோட்டம்.**

(1) புதைத்து வைக்கப்பெறும் பொருள் ‘நிதி’ எனப்படும். தைத்ரீய உபநிடதத்தினால் எம்பெருமான் நிதியாக அறியப்பெறுபவன். **நிலத்தினுள் புதைத்து வைத்து** ஆளவேண்டியதாயிருக்கும் **நாட்டிலுள்ள** நிதி; எம்பெருமானாகிய **நிதி வைத்தமாநிதி அங்ஙனமின்றி நெஞ்சிலே புதைத்து** ஆளத்தக்கது. என்ற வேற்றுமை கண்டு மகிழத்தக்கது.

(2) நிதியானது தன்னையடைந்தவர்களை இரவும் பகலும் கண்ணுறங்க வொட்டாது; எந்த நேரத்தில் யார் கொள்ளை கொள்வாரோ என்ற அச்சத்தால் துஞ்சாதிருப்பர் நிதியுடையார். எம்பெருமானும் அப்படியே. “கண்ணாரக் கண்டு கழிவதோர் காதல் உற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே”[38]. காண்பதற்கு முன்பும் உறக்கம் இல்லை; கண்டாலும் காதல் மிகுதியால் உறங்குவதில்லை, நிதியானது ‘**சித்தாஞ்சனம்**’ அணிந்த சில பாக்கியவான் களுக்கே கிடைக்கும்; எம்பெருமானும் ‘**பக்தி சித்தாஞ்சனம்**’ பெற்ற ஆழ்வார்கள் போன்ற சில பாக்கியசாலிகட்கே கிடைப்பன்.

38. திருவிரு. 97

(3) நிதியுடையவன் மார்பு நெறிப்பன்; எம்பெருமானைக் கைக் கொண்டவர்களும் 'எனக்கு ஆரும் நிகரில்லையே'[39] 'மாறுள்ளதோ இம்மண்ணின் மிசையே'[40] 'இல்லையெனக் கெதிரில்லையெனக், கெதிரில்லை யெனக் கெதிரே'[41] என்று செருக்கிப் பேசுவார்கள். நிதி படைத்துள்ளவனை உலகமெல்லாம் போற்றிப் புகழும். எம்பெருமானைக் கைக் கொண்டவர்களையும் அறிஞர் புகழ்வர்.

(4) நிதியை இழந்தவன் கதறியழுவன். எம்பெருமானை இழந்தவனும் அப்படியே. சீராமனாகிய வைத்தமாநிதியை இழந்த பரதாழ்வான் சபையில் கதறியழுதானன்றோ? "பழுதே பல பகலும் போயின என்று அஞ்சி அழுதேன்"[42] "இன்பத்தை இழந்த பாவியேன் என தாவி நில்லாதே"[43] "எழில்கொள் நின் திருக்கண்ணின் நோக்கந்தன்னையும் இழந்தேன் இழந்தேனே"[44] "உன்னைக் காண்பான் நான் அலம்பு ஆய் ஆகாயத்தை நோக்கி யழுவன்"[45] "என சொல்லிப் புலம்புவனே"[46] என்று இப்படியெல்லாம் கதறியழுவார்கள் எம்பெருமானுடைய சிந்தனையை இழந்து ஒரு கணப்பொழுது கழியப் பெற்றாலும் கள்வர் எல்லா சொத்துகளையும் கொள்ளை கொண்டால் எப்படி கதறியழக் கூடுமோ அப்படிக் கதறியழவேண்டும் என்பர்.

இங்ஙனம் எல்லாம் சுவாமிகளின் இறையநுபவம் யானறிந்தவரையில் விரிவாகக் காட்டப் பெற்றது.

39. இராமா. நூற். 47
40. திருவாய். 6.4:9
41. பெருந்தொகை 1838.
42. முதல் திருவந். 16
43. பெரு.திரு. 7:4
44. மேலது 7:7
45. திருவாய். 3.8:4
46. திருவிருத். 86

# 8. தீபிகையின் நயப்பகுதிகள்

திவ்வியார்த்த தீபிகையின் நயப்பகுதிகளை காட்ட முயல்வேன். இவற்றை ஐதிகங்கள், இதிகாசங்கள், சம்வாதங்கள் என்ற மூன்று தலைப்புகளில் வகுத்தும் தொகுத்தும் காண முயல்வேன்.

## 1. ஐதிகங்கள்

**ஐதிகம்** என்பது சம்பிரதாயம் அடியாக வந்த ஒரு வார்த்தை. அதாவது முன் நடந்ததைத் தெரிவிப்பது. எ-டு. ஒன்றால் இதனை விளக்குவேன். **அம்மங்கி அம்மாள்**[1] என்ற ஓர் ஆசிரியர் நோயால் வருந்தியிருக்க, **நஞ்சீயரும்**[2] **நம்பிள்ளையும்**[3] அவரைக் கண்டு நலம் விசாரிக்கச் சென்றனர். அப்போது அவர் மிகவும் கிலேசப் படுவதைக் கண்டு நஞ்சீயர் 'சுவாமின்! தேவரீர் சாமானிய மனிதரன்றே; எவ்வளவோ பகவத் - பாகவத கைங்கரியங்கள் பண்ணியிருக்கின்றீர்; குணாநுபவத் தாலல்லது போது போக்கி அறியீர்; இப்படியிருக்க உம்மை மற்றவர்களைப் போல

1. அருளாளப் பெருமாள் எம்பெருமானாருடைய சீடர். 74-சிம்மாசனாதிபதிகளுள் ஒருவர்.
2. **நஞ்சீயர்** - பிறப்பிடம் திருநாராயணபுரம் (கர்நாடகம்). இவர் **வேதாந்தி** என்ற பெயர் கொண்ட **அத்வைதி**. பின்னர் வசிட்டாத்வைதி ஆனவர். திருவாய்மொழிக்கு **ஒன்பதினாயிரப்படி** வியாக்கியானம் செய்தருளினவர்.
3. **நம்பிள்ளை** - நம்பூரில் பிறந்தவர் வரதராசர் என்ற இயற்பெயரினர். பூரீரங்கநாதர் என்பது இவரது தாஸ்யத் திரு நாமம். திருவாய் மொழிக்கு **முப்பத்தாறாயிடற்ப்படி** (ஈடு) அருளிச் செய்தவர்.

இப்படிக் கஷ்டப்படுத்துகிறானே (இறைவன்) என்றாராம். அதற்கு அவர் "நீயாள, வளையாள மாட்டோமே" என்றானன்ற றோகலியன் பாசுரம். எம்பெருமானுக்கு வாழ்க்கைப்பட்டால் கிலேசப்பட்டு தானே ஆகவேண்டும்" என்றாராம். பிறகு வெளியே எழுந்தருளிய பின் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி 'பார்த்தீரா இவருடைய எண்ணத்தை? என்ன பாசுரம் எடுத்துக் காட்டினார்!" என்று அருளிச் செய்து மகிழ்ந்தாராம். (பெரி. திரு. 3.6:9 உரை காண்க). இங்கு முன் நடந்ததைப் பின்னர் சொல்வதால் **ஐதிகம்** ஆயிற்று. இந்த ஐதிகம் ரசோக்தியாகவும் வெளிப்படுவதுண்டு. இது பாசுரத்தின் பொருளுக்கேற்ப அமையுமாறு சொல்லப்பெறும்.

இத்தகைய ஐதிகங்கள் தீபிகையுரைகளில் நிறைய உள்ளன. உரையில் ஆழ்வோருக்கு இவை 'மிளகு மிட்டாய்' போல் இனிக்கும். இத்தகைய ஐதிகங்கள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

**ஐதிகம் - 1 'குடதிசை முடியை வைத்து'** (திருமாலை - 19) என்ற பாசுர உரையில் காணப் பெறுவது. "மேலைத் திக்கு - உபயவிபூதிக்கும் தலைமை வகித்தலைத் தெரிவிக்குமாறு தான் சூடின திருவபிடேகத்தையுடைய திருமுடியை வைப்பதானாலும், கீழைத்திக்கு - சகல லோகமும் உய்விக்கும்படி சரணமடையக்கூடிய தன் திருவடிகளை நீட்டுவதனாலும், வடக்குத் திக்கு - முரட்டு சமஸ்கிருதம் நடையாடுவதாகி ஆழ்வார்களின் செவிக்கினிய ஈரச் சொல் நடையாடாத தேசமாகையாலே அத்திக்கிலுள்ளா ரெல்லாரும் ஈடேறுவதற்கு ஏற்பட வேண்டிய பின்னழகை யெல்லாம் காட்டுவதனாலும், தெற்குத் திக்கு - தனது அந்தரங்க பக்தனான விபீஷணாழ்வானுக்காகத் தனது இரு கண்களை வைத்து அன்போடு நோக்குவதனாலும் என இவ்வாறு நான்கு திக்குகளும் பயன்படும் என்க. விபீஷணாழ்வான் சிரஞ்சீவியாய் என்றும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றான் என்பது நூற்கொள்கை.

**ஐதிகம் - 2 : 'அமலனாதி பிரான்'** (1), - இதன் உரையில் : **பிள்ளை திருநறையூர் அரையரைச்** சிலர் "பெரிய பெருமாளை அநுபவிக்க இருந்த இந்த ஆழ்வார் (திருப்பாணாழ்வார்) திருவேங்கடமுடையான் பக்கம் போவானேன்?" என்று கேட்க, "ஆற்றிலே அழுந்துகிறவன் ஒரு காலைத் தரையில் ஊன்றினால் பிழைக்கலாமோ என்று காலந் தாழ்க்குமாப்போலே, இவரும் பெரிய பெருமாள் அழகிலே அழுந்துகிறவராகையாலே திருமலையில் கால் தாழ்ந்தார்" என்றாராம். "ஒருவனைக் கவி பாடும்போது அவனுடைய வரலாறு சொல்லிக் கவி பாடவேணும்; பரமபதத்தில் நின்றும், வடமதுரையிலே தங்கித் திருவாய்ப் பாடிக்கு வந்தாப்போலே வைகுண்டத்தில் நின்றும் திருமலையிலே தங்கியாய்த்துக் கோயிலுக்கு வந்தது; அவ்வரலாற்றைப் பாடுகிறபடி" என்றும் ஒரு கால் அருளிச் செய்தாராம்.

**ஐதிகம் - 3 : 'கொண்டல்வண்ணனை'** (அமலனாதி - 10) என்பதன் உரையில் வருவது. கூரத்தாழ்வான் தம் **சுந்தர பாஹுஸ்வத்தில்** பண்டு யசோதைப் பிராட்டி முத்தங்கொடுத்த சுவடு இன்றும் **அழகர்** திவ்விய கன்னங்களில் திகழாநிற்கும் என்று அநுபவித்தாற் போல, இவரும் (திருப்பாணாழ்வார்) பண்டு வெண்ணெய் உண்ட முடைநாற்றம் இன்னும் பெரிய பெருமாள் திருப்பவளத்திலே கமழா நிற்பதாகக் கருதி அநுபவிக்கிறார் - **'வெண்ணெய் உண்டவாயன்'** என்று

தசரத சக்கரவர்த்தி தன்னுடைய அரசு ஐசுவர்யத்தைப் புசிக்கைக்கு 'எனக்கு ஒரு பிள்ளை வேணும்' என்று நோன்பு நோற்றுப் பெருமாளைப் (இராமனைப்) பெற்றதைப் போல நந்தகோபரும் "கானாயன் கடிமனையில் தயிருண்டு நெய் பருக நந்தன் பெற்ற ஆனாயன்" என்றபடியே திருவாய்ப்பாடியில் பால் முதலானவற்றின் நிறைவு

அடங்கலும் (கவ்ய ஸம்ருத்தி அடங்கலும்) பாழ்போக வொண்ணாதென்று இத்தை அமுது செய்கைக்காக நோன்பு நோற்றுப் பெற்ற பிள்ளையாய்த்து ஸ்ரீ கிருஷ்ணன். பெரிய பெருமாள் கொறுட்டை (உதட்டை) முகர்ந்து பார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறா நிற்குமாம்.

**ஐதிகம் - 4 'அருள் கொண்டாடும்'** (கண்ணிநுண் - 8) என்பதன் உரையில் வருவது. திருவாய்மொழியில் "எண்ணாதனகள் எண்ணும் நம் முனிவர் இன்பம் தலை சிறப்ப, பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத் தான் பாடி" (10.7:3) என்றவிடத்து அருள் செய்யும் பொருள் சிறப்பை ஈண்டு அநுசந்திக்க, எண்ண முடியாதவற்றை எண்ணுகின்றவர்களான நம் முனிவர்கள் பேரானந்தம் பெறும்படியாகத் திருவாய்மொழி அவதரித்ததாம். எண்ணாத வற்றை எண்ணுகையாவது என்? எனில்: திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்பு பல பெரியோர் அவைகூடி "எம்பெருமானுடைய சொரூப குண விக்கிரக விபூதிகளையெலாம் முற்றும் நிறைவாகப் பேச வல்ல பிரபந்தம் ஒன்று கூட இல்லை; அப்படிப்பட்ட பிரபந்தம் ஒன்று அவதரிக்க வேணுமென்று நாம் எம்பெருமானை வேண்டிக் கொள்ள வேணும்" என்று பேசி எழுந்து போனார்களாம். அவர்களே திருவாய்மொழி அவதரித்த பின்பு மறுபடியும் ஒரு பேரவை கூட்டி 'எம் பெருமானுக்கு இன்னமும் குணவிக்கிரக விபூதிகள் உண்டாக வேணும்' என்றார்களாம். உள்ள குணவிக்கிரக விபூதிகளையெல்லாம் திருவாய்மொழியில் பேசி முடித்து விட்டார் ஆழ்வார் என்பது இதன் கருத்து.

**ஐதிகம் - 5 : 'முற்றமுத்துக் கோல் துணையா'** (பெரி. திரு. 1.3:1) என்ற தொடரில் **'கோல் துணையா** என்ற விடத்து வியாக்கியானத்தில் **இரு ஐதிகங்கள்**

(அ) நஞ்சீயர் சந்நியாச்ரமத்தை மேற்கொண்ட நிலையில் திரிதண்டம் (முக்கோல்) தரித்துக் கொள்ளும் போது 'ஓ திரிதண்டமே! நீ எனக்குத் துணையாயிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்ற பொருளையுடைய மந்திரத்தை (**ஸகா மா கோபாய**) உச்சரிக்க வேண்டும் என்று கேட்டு "எல்லாவற்றையும் அறிய வல்லவரையும் முழு ஆற்றலையுடையவரையும் உள்ள எம்பெருமானையே துணையாகப் பற்ற வேண்டியிருக்க, அசேதநமான தண்டத்தை நோக்கி இங்ஙனம் சொல்லும்படியாக நேர்ந்ததே" என்று சாதித்தாராம். சாத்திரவிதிப்படி கோலைத் துணை கொள்ள வேண்டியது அங்கு; கிழத்தனத்தில் கோலைத் துணை கொள்வது ஆற்றலற்றமையினாலே இங்கு.

(ஆ) **இன்னுமோர் ஐதிகம்** : நஞ்சீயர் பட்டர் திருவடிகளுக்கு அந்தரங்கராய் இருக்கிற நாளிலே ஒரு கைசிக துவாதசியன்று பட்டர் பிரம்ம ரதத்தில் எழுந்தருளித் திருவீதி அலங்கரிக்கப்பட்டவாறே நஞ்சீயரும் ஸ்ரீபாதம் தாங்கப்புக, 'உத்தமாச்ரமியாய் திரிதண்டதாரியான உமக்கு இக்காரியம் தகாது' என்று பட்டர் முதலானோர் மறுத்துக் கூற, நஞ்சீயர் "எனக்குத் துணையாகி என்னை இரட்சிக்க வேண்டும்" என்ற மந்திரத்தைச் சொல்லி ஏற்றுக் கொண்ட இந்த முக்கோல்தானே இன்று எனக்கு விரோதியாகின்றதோ? இக்கோல் எனக்குத் துணையல்லவோ? சொரூப ரட்சணத்துக்கு இக்கோல் இடையூராயின் இஃது எனக்கு வேண்டா" என்று சொல்லித் திரிதண்டத்தை விட்டெறியப் போனாராம். அப்போது அவருடைய ஆசாரிய பக்தியைக் கண்டு அனைவரும் வியந்தனராம்.

**ஐதிகம் - 5 : 'ஓதலும் உன் பேரன்றி மற்றோதாள்'** (பெரி.திரு. 2.7:5) இந்தப் பாசுரத்தின் (இது தாய்ப் பாசுரம்) இக் காட்டிய அடிக்கு ஓர் **ஐதிகம்**. திருவாய்ப்பாடியில் கண்ணன் பிறந்து வளரும் காலத்தில் ஓர் ஆய மங்கை

இடைவிடாது கண்ணபிரானையே சிந்தித்துக் கொண்டு வியாமோகம் அடைந்திருந்தாள்; அதுகண்ட அவன் மாமியானவள் அந்த சிந்தனையை மாற்றிவிடக் கருதி, தயிர் பால் நெய் முதலியவற்றை அவளிடம் கொடுத்து 'இவற்றை விற்று வா' என்று சொல்லியனுப்பினான். அம் மங்கை கண்ணபிரானையன்றி வேறொன்றையும் அறியாத வளாகையாலே, மாமியின் நிர்ப்பந்தத்துக்காகக் கூடையைத் தலையிலே சுமந்து கொண்டு, தெருவழியே நடந்து செல்லும்போது, 'தயிர்! பால்! நெய்!' என்று விற்பது தவிர்த்து "கோவிந்த வாங்கலையோ கோவிந்தன்! தாமோதரன் வாங்கலையோ தாமோதரன்! மாதவன் வாங்கலையோ மாதவன்!" என்று இங்ஙனே கண்ணனின் திருநாமங்களையே கூவிக் கொண்டு சென்றாளாம். அது போலவே இப் பரகாலநாயகியும் 'ஓதிலும் உன்பேரன்றி மற்றோதாள்' என்றவளாக உள்ளாள்.

**ஐதிகம் - 6 : 'வாதமாமகள்'** (பெரி.திரு. 5.8:2) என்ற திருமொழிப் பாசுரத்தின் 'கோதில் வாய்மையி னாயொடும் உடனே உண்பன் நான்' என்ற அடிக்கு ஓர் **ஐதிகம்.** முன்பெல்லாம் வாழை இலையில் தாமரை இலையில் உள்ளது போலவே இடை நரம்பு இல்லாமல் இருந்த தென்றும், இப்பொழுது இராமன் அநுமனைத் தன் எதிரில் அமரச் செய்து தனது இலையில் ஒரு பாதியிலேயே அவன் உண்ணுமாறு அவ்விலை நடுவில் தனது கையால் ஒருவரையறை கீறினானாக, அதுமுதல் சங்கற்பத்தால் அவ்விலையில் இடை நரம்பு ஏற்பட்டதென்றும் கூறுவர். இராமபிரான் ஒக்க உண்ட செய்தி வாஸிஷ்ட இராமாயணத்தில் உள்ளது என்பர்.

**ஐதிகம் - 7 : 'பண்டை நாளாலே'** (திருவாய். 9.2:1) என்ற திருவாய்மொழியின் உரையில் **இரண்டு ஐதிகங்கள்** காட்டப் பெறுகின்றன.

**கோயில் சீய்த்து** (இரண்டாம் அடியில் உள்ள இதற்கு) **ஐதிகம்.** திவ்விய தேசங்களில் பண்ணும் கைங்கரியங்களில் தலையாயது இது. "கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினைக் களையலாமே' (திருவாய் 10.2:7) என்று மேலும் அருளிச் செய்வர். திருவலகிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் முதலியன செய்தலையே **'கோயில் சீய்க்கை'** என வழங்குவர். இங்கே ஈட்டில் திருக்கண்ணமங்கை யாண்டானின் இதிகாசம் ஒன்று உள்ளது. அஃது இது : **திருங்கண்ணமங்கையாண்டான்** திருக்கண்ணமங்கை என்னும் திவ்வியதேசத்திலே ஒரு மகில மரத்தடியிலிருந்து சருகைத் திரு அலகிடாநிற்க, கூட வாசித்து நாத்திகராயிருப்பான் ஒருவன் 'பகவான் உபாயம், நாம் வேறு பயன் கருதாதவர்கள், இப்போது செய்யும் *பணிக்குப் பயன் என்ன?'* என்றானாம். அப்போது திருக்கண்ணமங் கையாண்டான் திருஅலகு இட்ட இடத்தையும், திருஅலகு இடாத இடத்தையும் காட்டி, 'இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாயே; இங்கொருபலம் இல்லை என்று தோற்றியிருந்ததோ? என்று பணித்தாராம். இங்கு அறியவேண்டுவதாவது; நேரில் காணும் பயன் என்றும் நேரில் காணாப் பயன் என்றும் இருவகைப்படும். சந்நிதி வாசலை அலகிடுதல் முதலிய திருப்பணிகளை ஒருபயன் கருதாது செய்வதனால் ஒரு குறையும் இல்லை. இது பயனற்றது என்று கருதுதல் வேண்டா; திருவல கிடாத இடம் கண்கொண்டு காண வொண்ணாத்தாயும், திருவலகிட்ட இடம் கண்ணால் காண இனிதாயிருப்பதுவும் பயன்.

**ஐதிகம் - 8** : மேற்கட்ட பாசுரத்தின் மூன்றாவது அடியில் '**தாமரைக் கண்களால் நோக்காய்**' என்ற அடியின் பகுதியின் உரையில் கண்ட **ஐதிகம்** : வார்த்தையிலே தோற்றாத அன்பும் நோக்கிலே அநுபவிக்கும்படி குளிர நோக்கி அருள வேண்டும். கோயிலில் (திருவரங்கத்தில்)

**பிள்ளை தேவ பெருமாள் அரையர்** இப்பாசுரத்தைச் சேவிக்கையில் '**உன் தாமரைக் கண்களால் நோக்காய்**' என்று ஒரு தடவை சொல்லி நிறுத்தாமல் 'நோக்காய், நோக்காய், நோக்காய்....' என்று பலகாலும் சொல்லிக் கொண்டிருந்து மேலடியிலே போகமாட்டாதே நின்றாராம். அப்போது கோஷ்டியிலே வீற்றிருந்த அவரது திருத்தந்தையாரான **ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர்** எழுந்திருந்து "பிள்ளாய் நீ எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி இங்ஙனம் பலகாலும் சொல்லி நிர்ப்பந்திக்கலாமோ? அழகிய மிடற்றைத் தந்து, நல்ல பாசுரத்தைத் தந்து, பிள்ளைகளையும், செல்வத்தையும் தந்தருளியிருக்க ஒன்றும் செய்யாதாராக நினைந்து இன்னமும், 'நோக்காய் நோக்காய் .... என்றால் 'இஃஃது என்னே! மேலே பாடு' என்றாராம்.

**ஐதிகம் - 9 : 'கெடும் இடராய எல்லாம் கேசவா என்ன'** (திருவாய் 10.12:1) என்ற பாசுரத்தின் '**கொடுவினை செய்யும் கூற்றின்**' என்ற அடியின் பொருளுரைக்கும்போது வருவது:யமனுடைய துன்பத்திற்கு அஞ்ச வேண்டா என்னுமதற்கு ஐதிகம் காட்டுகிறார் ஈட்டாசிரியர். ஒரு திரு வேட்டையிலே பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாக இருக்க, 'மாலைப் பொழுது ஆயிற்று' என்று சிலர் விண்ணப்பம் செய்ய, "நாம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்று ஒரு நாளும் செய்ய வேண்டிய காரியத்திலே சிறிது தாழ்கின்றோம் என்றால் இது குற்றமாக எமன் கேட்கவோ? ஓர் அரசன் இருந்து நாட்டுக் கணக்கு கொடுவராநின்றால் அரசனுக்கு அந்தரங்கனாய் இருப்பான். ஒருவன் பெயரை வாசித்தால். 'ஓம் காண்! அது கிடக்க; மேலே செல்' என்றால், பின்னை ஒரு நாளும் அப்பெயரை எடுத்து வாசிக்கப்பெறான் காண்; இந்த விஷயத்திலே 'உனக்காகித்தொண்டு பட்ட, நல்லேனை வினைகள்

நலியாமை நம்பு தம்பி"[4] என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரம் அறியீர்களோ? அவனுக்குக்காகத் தொண்டுபட்டுப் போது போக்குபவர்களை வினைகள் நலியுமோ?' என்று அருளிச் செய்தாராம்.

**ஐதிகம் - 10 : 'புண்ணியம் செய்து நல்ல'** (திருவாய் 10.2:5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் **'எந்தை நாமம்'** என்பதிலுள்ள **ஐதிகம்.** இடறினவன் **'அம்மே'** என்னுமாறு போல திருநாமம் சொல்லுவதற்கு ஒரு தகுதியைத் தேடிக் கொள்ள வேண்டா. நஞ்சீயர், "திருநாமம் சொல்லும்போது பக்தியுடையவனாய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ?" என்று **பட்டரைக்** கேட்க, 'கங்கையிலே முழுகப் போமவனுக்கு வேறு ஓர் உவர்க்குழியிலே முழுகிப் போகவேண்டுமோ? மேல் உண்டான நன்மையைத் தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ?' என்று அருளிச் செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்.

**ஐதிகம் - 11 : 'கடுவினை களையலாகும்'** (திருவாய். 10.2:8). என்ற பாசுரத்தில் **'படமுடை அரவில்... சொன்னோம்'** (3-4 அடிகள்) என்ற அடிகளில் அநுசந்திக்கும் **ஐதிகம்.** ஆளவந்தார்க்கு எல்லாப் பொருளையும் உபதேசித்த **மணக்கால் நம்பி** 'யோகரகஸ்யம் மாத்திரம் **குருகைக் காவலப்பனிடத்திலே** பெறக் கடவீர்!' என்று சாதித்திருந்த படியாலே, ஒருகால் அதனை நினைத்துக் குருகைக் காவலப்பனிடம் சென்று 'அடியேனுக்கு யோக ரகஸ்யத்தை அருளிச் செய்ய வேண்டும்' என்று வேண்டினார். அவரும் ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் வந்து உபதேசம் பெறுமாறு சொல்லிப் போகவிட்டார். ஆளவந்தாரும் நம்பெருமாள் சந்நிதிக்கு எழுந்தருளினார். அந்தச் சமயம் திருவத்யயநோத்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

4. பெரி.திரு.6.3:9

அரையர் கோட்டியிலே சேர்ந்த அவர் சேவிக்கும் திருப்பாசுரங்களில் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார். அரையர் **'கடுவினை களையலாகும்'** என்கின்ற இந்தப் பாசுர அளவிலே வரும்போது,

*எழிலணி அனந்தபுரம்*
*படமுடை அரவில் பள்ளி*
*பயின்றவன் பாதம் காண*
*நடமினோ நமர்கள் உள்ளீர்!*
*நாம்உமக் கறியச் சொன்னோம்*

என்ற அடிகளைச் சேவிக்கும்போது, ஆளவந்தார் திருமுகத்தைப் பார்த்து ஊன்றி உறுத்திச் சேவிக்க, ஆளவந்தாரும் இதைக் கேட்டு 'ஆழ்வாருடைய தமர்களிலே தாம் சேரவேண்டில் திருவனந்தபுரம் சென்று சேவித்து வரப் பிராப்தம்' என்று சொல்லிக் கொண்டே அப்போதே ஸ்ரீபாதத்தை உடையாரைக் கொண்டு நம்பெருமாளிடம் விடைபெற்றுப் பயணமாகித் திருவனந்தபுரத்திற்கு எழுந்தருளி அனந்தபத்மநாபனை மங்களாசாசனம் செய்து வாழ்ந்து வந்தார்.[5] இந்த நிலையில் **குருகைக் காவலப்பன்** எழுதித் தந்த சிறு முறியைப் பார்க்க நேர்ந்த அந்நாளே அவர் குறிப்பிட்ட நாளாக இருந்தது. உடனே துணுக்குற்று அலைந்து 'ஐயோ, நாம் நினைத்தவுடன் எங்கும் சென்று சேரும் ஆற்றலுடைய பெரிய திருவடியும் அல்லோம்; சிறிய திருவடியும் அல்லோம். அங்குச் சென்று சேர்வதற்கு ஒரு புட்கவிமானம் பெற்றிலோமே' என்று சோகித்து எழுந்தருளியிருந்தார்.

5. அடியேனுக்கு அனந்தசயனத்தின்மீது தனிப் பிரீதி - 1948 முதன் முதலில் சேவித்தேன். அதன் பிறகு பல முறை சேவிக்கும் பேற்றைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தித் தந்தது. இறுதியாக ரெட்டியார் மாநாடு அந்த வாய்ப்பை (4 ஆண்டுகட்கு முன்னர்) நல்கியது.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி : "திருவத்யயனம் பாடாநிற்க இதைக் கேட்டருளி ஆளவந்தார் 'நமக்கு ஆழ்வாரோடே ஒரு சம்பந்தம் உண்டாக வேணும்' என்று அப்போதே ஸ்ரீ பாதத்தை உடையாரைக் கூட்டிக் கொண்டு எழுந்தருளினார்" (அனந்தபுரத்துக்கு)

**ஐதிகம் - 12 : "வானேற வழி தந்த வாட்டற்றான் பணிவகையே"** (திருவாய். 10.6:5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் '**நான் ஏறப் பெறுகின்றேன் நரகத்தை நகு நெஞ்சே** (இறுதி அடி) என்பதற்கு **ஐதிகம்**. பரமபதம் கிட்டிற்று என்னாக் கடுகக் கால்வாங்கிப் போகப் பாராதே காண்! பல நாட்கள் நம்மைக் குடிமக்கள் ஆக்கி எளி வரவு படுத்தின இவ்வுலக வாழ்க்கையைப் (சம்சாரத்தைப்) புரிந்து புரிந்து பார்த்துச் சிரி; 'உன்னை அடியறுத்தோமே' (உன்னை வென்றோமோ) என்று பார்த்துச் சிரி" என்கின்றார். **பின்பழகிய மணவாளப் பெருமாள் அரையர்** ஒரு நோயால் வருந்தாநிற்க. திருவரங்கநாதன் அவருக்குப் பரமபதம் கொடுக்கத் திருவுள்ளம்பற்றித் திருமாலை, திருப்பரி வட்டம் முதலான வரிசைகளைக் கைவிட்டருளின அளவிலே, 'நானேறப் பெறுகின்றேன். நரகத்தை நகு நெஞ்சே' என்று இப்பாசுரத்தைச் சொல்லிக் கிரந்தியை (கட்டியைப்) பார்த்துச் சிரித்தாராம். 'நரகத்தை நகு' என்ற இவ்விடத்திற்கு 'நரகலோகத்தைப் பார்த்துச் சிரி' என்று சிலர் பொருள் கூறுவர். அது வேண்டா; சம்சாரத்திற்கு '**நரகம்**' என்ற பெயராதலால் 'சம்சார பூமி' என்ற பொருளே ஈண்டுக் கொள்ளத்தகும்.

## 2. இதிகாசங்கள்

'**இதிகாசம்**' என்பது ஒரு வரலாறு, அல்லது கதை போல் வருவது. (எ-டு) '**தேனுகன் ஆவி போயுக**' (பெரி.திரு. 9.8:7) என்ற திருமொழியில் உள்ளது. கம்சனது ஏவுதலால் கழுதை வடிவம்கொண்டு காட்டுக்குள்ளே

கண்ணபிரானை நலிவதற்காக வந்தவன் தேனுகன் என்னும் அசுரன். கண்ணபிரான் பலராமனோடும் இடைச் சிறுவர் களோடும் மாடு மேய்த்துக் கொண்டு, பழங்கள் அழகாக மிகுதியாகப் பழுத்து மணம் வீசிக் கொண்டிருந்த ஒரு பனங்காட்டை அடைந்து அப்பழங்களை விரும்பி உதிர்த்துக் கொண்டு வருகையில் அவ்வனத்துக்குத் தலைவனும் கம்சன் பரிவாரத்தில் ஒருவனுமான கழுதை வடிவங் கொண்ட **தேனுகாசுரன்** சினம் கொண்டு ஓடிவந்து எதிர்த்துப் போர் செய்ய உடனே கண்ணன் அதிலாவகமாக அதன் பின்னங்கால்கள் இரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிரிழக்கும்படிப் பனை மரத்தின் மேலெறிந்து அழித்தனன் என்பது வரலாறு. இத்தகைய பல இதிகாசங்கள் தீபிகையை அழகு செய்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

**இதிகாசம் - 1 : 'துப்புடையார்கள்தம்'** (பெரியாழ். திரு.1.6:7) என்ற பெரியழ்வார் திருமொழிப் பாசுரத்தில் **'தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுகத் தனியொரு தேர்கடவி தாயொடு கூட்டிய** (3-வது அடி) என்பதில் உள்ளது: ஒரு வைதிக அந்தணனுக்கு நான்கு குமாரர்கள். முதற்பிள்ளை பிறந்து பூமியைத் தொட்டதும் காணப் பெறவில்லை. இரண்டாவது மூன்றாவது பிள்ளைகளின் நிலைமைகளும் அப்படியே. பெற்றவளும் கூட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்னவிடத்தில் போயிற்றென்று தெரியாமல் காணவொண்ணாது மூன்று பிள்ளைகளும் போய்விடுகையாலே நான்காவது பிள்ளையைக் கருவுயிர்க்கப் போகும் தருணத்தில் அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளையையாயினும் பாதுகாத்துத் தந்தருள வேண்டும்' என்று வேண்டினான். அதற்குக் கண்ணபிரான் அப்படியே செய்வதாக வாக்கு தந்தான். ஆனால் அன்று ஒரு வேள்வியில் தீட்சிதனாக இருக்க வேண்டியிருந்ததால் கருவுயிர்க்கும் இடத்திற்கு

எழுந்தருள முடியாத நிலையில் இருந்தான். அருகிலிருந்த பார்த்தன் 'நான் போய் இரட்சிக்கிறேன்' என்று வாக்கு தந்து அந்தணனையும் கூட்டிக் கொண்டுபோய்க் கருவுயிர்க்கும் இல்லத்தைச் சுற்றிக் காற்று கூட நுழைய வொண்ணாதவாறு 'சரக்கூடம்' அமைத்துக் காத்துக் கொண்டு நின்றான். அன்று பிறந்த பிள்ளையும் வழக்கப்படி மாயமாய் மறைந்தது. அதனால் மிக்க சோகமடைந்த அந்தணன் அர்ச்சுனனை மறித்து 'அதமனே, உன்னாலே யன்றோ என் பிள்ளை போம்படி ஆயிற்று. கண்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்?' என்று நிந்தித்து அவனைக் கண்ணபிரானருகே இழுத்துக் கொண்டு வந்தான். கண்ணன் அது கண்டு முறுவலித்து, 'அவனைவிடு, உனக்குப் பிள்ளையை நான் கொண்டு வந்து தருகின்றேன்" என்று அருளிச் செய்து அந்தணனையும் தன்னுடன் கொண்டு தேரேறி, அர்ச்சுனனைச் செலுத்தச் சொல்லி, அத்தேருக்கும் இவர்களுக்கும் திவ்விய ஆற்றலைத் தனது சங்கற்பத்தால் கற்பித்து இவ்வண்டத்துக்கு வெளியே நெடுந்தூரம் அளவும் கொண்டு சென்று, அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தன் நிலமான பரமபதத்தில் தானே புக்கு அங்கு நாச்சிமார் தங்கள், சுதந்திரம் காட்டுவதற்காகவும், கண்ணபிரானது திவ்விய செளந்தரியத்தைக் கண்டுகளிப்ப தற்காகவும் அழைப்பித்து வந்த அந்தப் பிள்ளைகள் நால்வரையும் அங்கு நின்றும் ஆதி உருவத்தில் ஒன்றும் குறையாமல் கொண்டு வந்து கொடுத்தருளினன் என்பது வரலாறு. இந்த இதிகாசம் **பெரியாழ்வார் திருமொழி** 4.8:2-லும், **பெரிய திருமொழி** 5.8:8 லும், **திருவாய்மொழி** 3.10:5லும் வந்துள்ளது. பண்டைய வேத, புராண, இதிகாசங்களில் காணப்பெறாத இந்த இதிகாசம் ஆழ்வார் பெருமக்களின் திருவுள்ளத்தினின்றும் வெளிப்பட்டது கண்டு வியப்புடன் மகிழத்தக்கது.

**இதிகாசம் - 2 : "சீமாலிகன் அவனோடு தோழமை கொள்ளவும்"** (பெரியாழ்.திரு.2.7:8) என்ற திருமொழி உரையில் வருவது. **சீமாலிகன்** என்பான் கண்ணபிரானின் உயிர்த் தோழன். மேன்மைப் பொருளைத் தரும் 'ஸ்ரீ' என்ற சொல் 'சீ' எனத் திரிந்து வந்து 'சீமாலிகன்' என்று அவன் பெயரோடு அமைந்து கிடக்கின்றது. இவன் கண்ணபிரானிடம் பலவிதமான ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றவன்; ஒருவர்க்கும் அஞ்சாமல் சாது சனங்களை இம்சித்துக் கொண்டிருந்தான். இதனைக் கண்ட கண்ணன் மிகவும் வருந்தி நண்பனாகிய இவனைக் கொல்வது தகாது; ஏதாவது செய்தாக வேண்டும்' என்று வருந்தி, ஒரு நாள் 'நீ இப்படிச் செய்வது தகாது' என்று அறிவுரை வழங்கினான். அசுர இயல்புள்ள அந்த மாலிகனும் தன் வாயில் வந்தபடி பிதற்றி, "நீ எல்லா ஆயுதங்களைக் கையாளும் முறையைக் கற்பித்தாய்; திருவாழிப் பயிற்சியை மட்டிலும் கற்பித்தாய் இல்லை' என்று கண்ணபிரான்மீது குறை கூறினான். கண்ணனும் 'இதில் பழகுவது உனக்கு முடியாது; எனக்கே அசாதரமானது' என்று சொல்ல, அவனும் 'என்னால் முடியாதது ஒன்று உண்டோ? நீ அவசியம் அந்தப் பயிற்சியைக் கற்பித்தேயாகவேண்டும்' என நிர்ப்பந்தித்தான். கண்ணன் அவனை யொழிக்க 'இதுதான் தக்க சமயம்' என்று திருவுள்ளம் கொண்டான். சக்கரப் படையை எடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலேயெறிந்து கையிலேற்றிக் காட்டினான் கண்ணன். 'இஃது எனக்கு அரிதாமோ?' என மாலிகன் சொல்ல, 'ஆம்; உனக்கு அரிதேயாகும்' என்று கண்ணன் வற்புறுத்திச் சொல்லவும் அதனை அவன் கேளாமல் அத்திருவாழியை வாங்கிச் சுழற்றியெறிந்துப் பிடிப்பதாக நினைத்துத் தன் கை விரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்துக் கொண்டு நின்றான். அப்போது அத்திருவாழி சுழன்று வருவதற்கு இடம் போதாமையால் அதன் வீச்சு இவன் கையில்

பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பது கதை. இந்த வரலாறு எந்தப் புராணத்திலும் காணப் பெறாதது. வான்மீகி முனிவர் நான்முகன் வரத்தினால் பகவதவதார வரலாறுகளைத் தாமாகவே நேரில் கண்டது போலவே ஆழ்வார் பெருமக்களும் தாமாகவே கண்டவற்றில் இவ்வரலாறு ஒன்று என்பதாகக் கொள்வர் பெரியோர். பெரியவாச்சான் பிள்ளையும், இத்திருமொழியின் 6-ஆம் பாசுரத்தின் வியாக்கியானத்தில் இதைத் தெளிவாக அருளிச் செய்துள்ளமை காணத்தக்கது.

**இதிகாசம் - 3 : "மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை ஓதுவித்த தக்கணையா உருவுருவே கொடுத்தான்"** (பெரியாழ். திரு. 4.8:1) என்ற திருமொழிப் பாசுரத்தின் உரையில் வருவது: கண்ணபிரான் கம்சனைக் கொன்று உக்கிரசேனனுக்கு முடி சூட்டிய பின்பு, அவந்தி நகரிலிருந்த சாந்தீபினி என்ற அந்தணர் பக்கல்' சகல சாத்திரங்களையும் கற்றான். குருதட்சிணை கொடுக்கும்நிலையில் இருந்தான். கண்ணனுடைய ஆற்றல் சிறப்பை அறிந்தவராகையால் பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு மேற்குக் கடல் பிரபாசத் தீர்த்தத் துறையில் நீராடும் போது மூழ்கி இறந்து போன தம் மகனைக் கொண்டு வந்து தரவேண்டும் என்று தம் விருப்பத்தைத் தெரிவித்தார். கண்ணபிரானும் 'அப்படியே செய்கிறேன்' என்று ஒப்புக் கொண்டு கடல் நீரில் வாழ்கின்ற '**பஞ்சஜனன்**' என்ற அசுரனே அவ் அந்தணச் சிறுவனைக் கொண்டு போயினன் என்பதை வருணனால் அறிந்து, கடலில் இறங்கி அவ்வசுரனைக் கொன்று அவன் உடலாகிய '**பாஞ்சசன்யத்தை**' எடுத்து வாயில் வைத்து முழக்கிக் கொண்டு யமபுரிக்கு எழுந்தருளி அங்கு 'யாதனையில்' கிடந்த அந்தச் சிறுவனை அவன் இறந்தபோது கொண்டிருந்த உருவம் மாறாதபடி கொண்டு வந்து தட்சிணையாகக் கொடுத்தான். "கடலில் மூழ்கிய குமாரனை மீட்கக் கொடுத்தருளியதுபோல், சம்சார

சாகரத்தில் மூழ்கிய என்னை மீட்டுப் பாதுகாத்தருள வேண்டும்" என்பது இப்பாசுரத்துக்குக் கருத்தாகக் கொள்ளத்தகும். இந்த இதிகாசம் பெரி.திரு. 5.8:7லும் வந்துள்ளது.

**இதிகாசம் - 4 : 'மொய்த்தவல் வினையுள் நின்று'** (திருமாலை - 4) என்ற தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பாசுரத்திலுள்ள **'மூன்றெழுத்துடைய பேரால் கத்திர பந்து மன்றே பராங்கதி கண்டு கொண்டான்'** (முதல் இரண்டடி) என்ற அடிகளின் உரையில் வருவது: (மூன்றெழுத்து - கோவிந்த' என்ற நாமம்). **இதிகாசம் : கத்திரபந்து** கொடிய நடத்தையுடையவன்; பல்வகைப் பாவங்களே உருவெடுத்தாற் போன்றவன். இவன் தாய் தந்தையர், மக்கள், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைவராலும் கைவிடப் பெற்றுக் காட்டில் திரிந்து உயிர்க் கொலை புரிந்து வயிறு வளர்த்துக் காலம் கழித்து வந்தான். இங்ஙனம் நெடுங்காலம் சென்றது. ஒருநாள் மாமுனிவர் ஒருவர் கொடிய நண்பகலில் வெப்பம் தாங்க மாட்டாமல் வழி தப்பிப் போகா நின்றவர் இப்பாவி திரியும் கானகத்தில் புகுந்து இவன் கண்ணுக்கு இலக்காயினர். அவரது பரிதாப நிலையைக் கண்ட இவனுக்குத் தன்னையும் அறியாமல் அவர்பால் இரக்கம் உண்டாயிற்று. அவரிடம் வழி தப்பியப்போவதைச் சுட்டிக் காட்டினான். அவரும் அதனை உணர்வராயினர். பொறுக்க முடியாத தாகவிடாயுடன் அவர் ஒரு தடாகத்தை நாடிச் செல்கையில் அருகே ஓர் அழகிய பொய்கையைக் கண்ணுற்றார். தாப மிகுதியால் தவறி அக்குளத்தில் விழுந்துவிட்டார். அப்போது அருகிலிருந்த கத்திரபந்து தன் கையிலிருந்த வில்லையும் அம்பையும் எறிந்து விட்டு அம்மாமுனிவரை நீரின்றும் அகற்றித் தாமரைக் கிழங்குகளை உணவாக நல்கி அவரது விடாயைப் போக்கி அவரை மகிழ்வித்தான்.

முனிவர் அக்குளக்கரையின் மீதிருந்த ஒரு மரத்து நிழலில் அமர்ந்து இளைப்பாறினார். கத்திரபந்து அவரது காலைப் பிடித்து அமுக்கி நோவு தீர உபசாரங்களையுப் புரிந்தான். முனிவர் அவனுடைய வரலாற்றைக் கேட்க அவனும் தான் சூரிய மரபில் வந்த விசுவதரன் என்பவருக்கு மகனாயப் பிறந்தவன் என்று தொடங்கித் தம்முடைய பாவச் செயல்கள் ஒன்றும் ஒளிக்காமல் அவரிடம் உரைப்பா ணாயினன். இவற்றைச் செவியுற்ற முனிவரும் அவனைத் நல்வழிப்படுத்த எண்ணி அவனுடைய தீச்செயல்களை விட்டொழித்து ஆருயிர்களிடம் அன்பு காட்டுமாறு பணித்தார். இவனும், தான் தீய குணங்கட்குப் பிறப்பிடமானவன் என்றும், இது தவிர வேறு நியமனம் பணிக்கப் பெற்றால் அதனைச் சிரமேற் கொள்ளக் காத்திருப்பதாகவும் கூறினான். எப்படியாவது இவனை உய்விக்கப் பேரவாக் கொண்ட முனிவரும், '**கோவிந்த், கோவிந்த்**' என்று சொல்லிக் கொண்டிருந்தால்[3] அஃது அவனுக்கு நன்மை பயக்கும் என்று உரைத்துப் போயினார். அது முதலாக **கத்திரபந்துவும்** அத்திருநாமத்தை இடைவிடாது சொல்லிக் கொண்டு காலத்தைப் போக்கினான். சில ஆண்டுகள் கழித்து அவன் காலகதி அடைந்தான். பின் அந்தணர் குலத்தில் முற்பிறப்பு உணர்வுடன் பிறந்தான். அவனுக்குக் கொடிய சம்சாரத்தில் வெறுப்பு உண்டாயிற்று. தனக்கு இவ்வுயர் குலத்தில் பிறவி நேர்ந்ததும், முற்பிறப்பின் நினைவு ஏற்பட்டதும் முன்பு பண்ணின கோவிந்த நாம சங்கீர்த்தனத்தின் பயன் என்பதை உணர்வானாயினான். அந்தக் கோவிந்தனையே ஆராதனம் செய்து 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும்

6. 'மூன்றெழுத்துடைய பேரால்' - இன்ன திருநாமம் என்னாதே இரகசியமாய்ச் சொல்லிற்று - ருசி பிறந்த பின்பு 'அந்தத் திருநாமம் என்ன? என்று விரும்பிக் கேட்டால் அப்போதைக்கு உபதேசிப்போம் என்றாம். 'மூன்றெழுத்தனை மூன்றெழுத்ததனால்' என்று பெரியாழ்வார் மறைத்தாற் போல (பெரியாழ்.திரு. 4.7:10)

நரம்பும் செரிதசையும், வேண்டா நாற்றமிகும்' உடலைவிட்டு 'மாயவன் சேற்றள்ளற் பொய் நிலத்தைக் கடந்து' 'நலமந்தம் இல்லதோர் நாடு புகும்' எண்ணத்துடன் துணிந்து அங்ஙனமே செய்து பரமபாகவதனாகி வீடுபேறு எய்தினன் என்பது வரலாறு.

**இதிகாசம் - 5 : 'நமனும் முட்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும்'** (திருமாலை - 12) என்பதில் வருவது: **முத்கலன் வரலாறு** : இவன் பெரும் பாவிகளின் தலைவன். அவன் ஒருநாள் கோதானம் செய்யும்போது **'கிருஷ்ணார்ப்பணம்'** என்று சொல்லித் தானம் செய்தான். பின்னர்அவன் காலகதி அடைந்தபோது யமதூதர்கள் வந்து நெருங்கி அவனை எமனிடம் கொண்டு சென்றனர். எமன் இவனை எதிர்கொண்டு மரியாதை செய்வானாயினன். முத்கலன் எமனிடம் தன்னைப் பாராட்டுவதன் காரணத்தை வினவ, யமனும் **'கிருஷ்ணார்ப் பணம்'** என்று கோதானம் செய்யும்போது சொன்னதில் **'கிருஷ்ணன்'** என்ற நாமம் ஒரு தடவை சொல்லிவிட்டதை நினைவூட்டினன். எமனுக்கும் முத்கலனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் நரகவாசிகளின் காதில் விழுந்தது. நரகமும் துக்கானுபவ நிலமாக இருந்த நிலை மாறி ஆனந்தானுபவ நிலமாகி விட்டது. நமன் **'கிருஷ்ணன்'** என்ற திருநாமத்தைத் தனக்கு நன்மை செய்யும் என்று கருதி உச்சரிக்கவில்லை; முத்கலன் வேண்டுகோட்கிணங்கி உபதேசிக்கவும் இல்லை; நரகவாசிகளின் காதில் இது விழுந்து அவர்கள் உய்வு பெற வேண்டும் என்று நினைத்தும் சொல்லவில்லை. இதனைக் கேட்பவர்களும், பாவம் செய்வதற்குக் கவன்று அதற்குக் கழுவாயாகச் செய்து கொள்ளக் கூடிய காலத்திலும் கேட்கவில்லை. பாவத்தின் பல்ன்களை அநுபவிக்கும்போது கேட்டனர். அப்போதும் விருப்பத்துடன் கேட்டார்கள் அல்லர்; எதிர்பாராத விதமாகவே அத்திருநாமம் அவர்கள் செவியில் விழுந்தது.

இப்படிப் பட்ட திருநாமம் இவ்வளவு பெருமையுடையது என்பது இவன் வரலாற்றால் வலியுறுத்தப்பெற்றது.

**இதிகாசம் - 6 : "குரங்குகள் மலையைத் தூக்க'** (திருமாலை - 19) என்ற பாசுரத்தின் '**குளித்துத் தாம் புரண்டிட்டு ஓடி, தரங்கநீர் அடைக்கலுற்ற சலமிலா அணிலும் போலேன்**' (முதல் இரண்டடி) என்பதன் உரையில் வருவது. இந்த **இதிகாசம்.** இராமாவதாரத்தில் பெருமாள்[7] இலங்கை நகர் எழுந்தருள்வதற்காகக் கடலில் அணைகட்ட நேர்ந்தது. அப்போது வானர வீரர்கள் மலைகளை உருட்டிக் கொண்டு வந்து கடலைத் தூர்த்தனர். இதனைக் கண்ணுற்ற அணிற் பிள்ளைகள் "இந்த வானரங்கள் தமது ஆற்றலும் கேற்றவாறு ஏதோ காரியங்களைச் செய்யும்போது நாமும் நமது ஆற்றலுக்கேற்றவாறு இப்பெரிய காரியத்தில் ஒன்றைச் செய்வோம்" என்று தீர்மானிக்கின்றன. உடனே எல்லா அணில்களும் கடலில் மூழ்குதல், அந்த ஈர உடம்புடன் கரையிலுள்ள உலர்ந்த மணலில் புரளுதல் உடலில் ஒட்டிக் கொள்ளும் மணலைக் கடலில் கொண்டு உதறுதல் - என்று காரியங்களைச் செய்து சேது கட்டும் செயலுக்கு உதவி புரிந்தன. இதனை ஆழ்வார் அருளிச் செய்கின்றார்.

**இதிகாசம் - 7 : "அக்கும் புலியின் அதளும்"** (பெரி.திரு.9.6:1) என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின் உரையில் கண்டது இந்த **இதிகாசம்.** ஒரு காலத்தில் சிவ பெருமான் தன்னை மதியாத தாருகவனத்து முனிவர்களுடைய கருவத்தைப் பங்கம் செய்யவும் அவர்கள் மனைவிமார்களின் கற்பு நிலையைச் சோதிக்கவும் கருதித் தான் ஒரு விட வடிவங்கொண்டு அவர் இல்லந்தோரும் சென்று பிச்சை

7. பெருமாள் - இராமன்; இளைய பெருமாள் - இலக்குவன்; பெரிய பெருமாள் - அரங்கத்தில் அறிதுயில் கொள்ளும பெருமாள்; பெத்த பெருமாள் (தெலுங்கு)

கேட்கும் நிலையில் தன்னை நோக்கிக் காதல் கொண்ட அம்முனி பத்தினிமாரின் கற்பு நிலையைக் கெடச் செய்ய, அது கண்டு பொறாமல் சீற்றங் கொண்டு அம்முனிவர்கள் அபிசாரயாகமொன்று இயற்றி. அவ்வோமத் தீயினின்று எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, சிங்கம், முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக் கொன்று வரும்படி ஏவ, சிவபெருமான் தன்மீது பொங்கி வந்த நாகங்களை ஆபரணங்களாகத் தரித்துக் கொண்டான்; பூதங்களைக் கணங்களாக்கிக் கொண்டான். மானைக் கையிலேந்திக் கொண்டான். புலித்தோலை உரித்துத் தன் ஆடையாகத் தரித்துக் கொண்டான்; சிங்கத்தை அம்பிகைக்கு வாகனமாக்கினான்; முயலகனை முதுகிற் காலால் ஊன்றி, வெண்டலையைக் கையால் பற்றிச் சிரமேல் அணிந்து இங்ஙனம் அவற்றையெல்லாம் பயனிலவாகச் செய்து விட்டனன் என்பது வரலாறு.[8]

**இதிகாசம் - 8 : 'புரங்கள் முன்றுமோர்'** (பெரி.திரு.10.2:9) என்ற பெரிய திருமொழிப் பாசுரத்தில், '**புரங்கள் மூன்றும் பொங்கெரிக்கிரை கண்ட** (முதல் அடி) என்பதில் உள்ள **இதிகாசம்**': 'முற்காலத்தில் **தாரகாசுரனுடைய** புதல்வர்களான **வித்யுத்மாலி, தாரகாட்சன், கமலாட்சன்** என்னும் மூவரும் மிக்க தவம் செய்து பிரமனிடம் பெரு வரம் பெற்று வானத்துப் பறந்து செல்லும் தன்மை வாய்ந்த மூன்று பட்டணங்களை அடைந்தனர். மற்றும் பல அசுரர்களோடு அந்நகரங்களுடனே தாம் நினைத்த விடங்களில் பறந்து சென்று பல இடங்களில் மேலும் இருந்து அவ்விடங்களைப் பாழாக்கி வந்தனர். இத் துன்பத்தை பொறுக்கமாட்டாத தேவர், முனிவர் முதலானவருடைய வேண்டுகோளினால்

8. இந்த வரலாறு கந்தபுராணத்திலும் உள்ளது. இதனைக் கொண்டு, பயங்கர அழிவைத் தரும் அணு ஆற்றலை, வாழ்க்கையில் பயனுள்ள வகையில் எப்படிப் பயன் படுத்தலாம் என்று நான் எழுதிய '**அணுவின் ஆக்கம்**' என்ற நூலில் பயன்படுத்திக் கொண்டேன்.

சிவபெருமான் பூமியைத் தேராகவும், சந்திர சூரியர்களைத் தேர்ச் சக்கரங்களாகவும், நான்கு வேதங்களைக் குதிரை களாகவும், பிரமனைச் சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், ஆதிசேடனை வில் நாணாகவும், திருமாலை வாயுவாகிய சிரகமைத்துக் கொண்ட அம்பாகவும் கொண்டு போருக்குத் தயாராகச் சென்று போர் தொடங்கும்போது சிரித்து அச்சிரிப்பினின்று உண்டான தீயினால் அவ்வரசுரர்களையும் அந்நகரங்களையும் எரித்திட்டனன்.

**இதிகாசம் - 9 :** மேற்படி பாசுரத்தில் **இலங்கு வெங்கதிரோன்தன் சிறுவன் :** (மூன்றாம் அடி) என்பதிலுள்ள **இதிகாசம்.** மேரு மலையில் நான்முகன் யோகம் பயின்று கொண்டிருக்கையில் அவர் கண்களில் நீர்த்துளித் ததும்பியது; அதை அவர் கையாலெடுத்துக் கீழே எறிந்தனர். இந்நிலையில் அஃது ஒரு குரங்காக மாறியது. அக் குரங்கு நான்முகனுக்கு ஒப்பான மகிமையும் மிக்க வேகமும் உடையோனாகி அம் மலையில் மரங்களும் கனிவகைகளும் நிறைந்த மரங்களடர்ந்த வனங்கள் தோறும் தாவித் திரிந்து விளையாடிக் காலம் கழித்தது. அஃது ஒருநாள் நாவரண்டு நீர் வேண்டி அம்மலையில் வடபால் சென்றது. அங்கு ஓர் தடாகத்தைக் கண்டு அதன் கரையில் நின்று தண்ணீரை எட்டிப் பார்த்தது. அதனுள் தன் நிழல் தோன்றுவதைக் கண்ணுற்றுத் தனக்குப் பகையான மற்றொரு வானரம் அக்கயத்தினுள் குடி கொண்டு தன்னை இகழ்கின்றது எனக் கருதியது. அதனை கொல்வான் வேண்டி அம் மடுவில் குதித்தது. குளத்தில் விழுந்து மெல்ல நீந்திக் கரையேறியதும் அஃது ஓர் அற்புதமான அணங்காக மாறியது. காண்போர் மனத்தைக் கவரவல்ல பொற்கொடியென ஒரு பெண்மணி தனது வடிவழகினால் எல்லாத் திசைகளையும் ஒளிபெறச் செய்து கொண்டு அப்பொய்கைக் கரையில் நிற்குங்கால் தேவேந்திரன் நான்முகனிடம் சென்று அவரை அடிபணிந்து பூசித்துத் திரும்பி அவ்வழியாக வந்து

கொண்டிருந்தான். அதே சமயம் சூரிய பகவானும் எங்கும் சுற்றித் திரிந்து இந்த அழகி நிற்குமிடத்திற்கே வரலாயினன். இந்த இரண்டு தேவர்களும் அந்தப் பெண்மணியை ஒரே காலத்தில் கண்ணுற்றுக் காமப் பரவசர்களாகி மெய்மறந்து கலங்கி நின்றனர். உடனே இந்திரனது விந்து வெளிப்பட, அதனை அவன் அவளது தலையில் விழுமாறு செய்தனன். அஃது அவ்வாறு முடிமீது விழாது, வாலில் வீழ்ந்தது.... தேவர்களின் விந்து ஒருபொழுதும் வீணாவதில்லை யாதலின், உடனே அது மிக்க பலசாலியான ஒருவானரமாக மாறியது. வாலினிறு தோன்றிய காரணத்தால் அது **வாலி** என்று பெயர் பெற்றது. ஆதித்தனும் அவ்வாறே அணங்கனுக்கு வசமாகித் தன் விந்துவை அவளது கழுத்தில் வீழ்த்தினான். கரீவையில் (கழுத்தில்) வீழ்ந்த அவ்விந்து **சுக்கிரீவன்** எனப் பெயர் பெற்று வானரமாகிவிட்டது. இந்த வரலாறு உத்தர இராமாயணத்தில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

**இதிகாசம்-10 : 'வார்புனல் அந்தநண் அருவி'** (திருவாய்.3.5:8) என்ற திருவாய்மொழிப் பாசுர ஈட்டு உரையில் **'மிளகாழ்வான் வார்த்தை'** என்று வருகின்றது. அஃது ஓர் **இதிகாசம்** தருகின்றது. அரசன் ஒருவன் பல பேர்களுக்குக் கிராம பூமிதானம் செய்வதாக **மிளகாழ்வான்** கேள்வியுறுகின்றான். இவனும் தானம் பெறச் செல்லு கின்றான். அவனைப் பார்த்து அரசன் "உனக்குத் தானம் கொடுப்பதில்லை" என்று சொல்ல, அது கேட்ட மிளகாழ்வான், "பிரபுவே, எனக்கு மாத்திரம் கொடுக்க முடியாதென்கைக்குக் காரணம் என்ன? வேதமோ சாத்திரமோ எதில் தேர்வு வைத்தாலும் நான் தேர்வு கொடுக்கத் தயாராக இருக்கின்றேன்" என்கின்றான். இதனைச் செவிமடுத்த அரசன் "உனக்கு அந்த யோக்யதைகள் இல்லை என்று நான் சொல்லவில்லை" என்கின்றான். உடனே மிளகாழ்வான் "ஆனால், ஏன் தானம் கொடுக்கமாட்டேன் என்கின்றாய்?" என்று கேட்க, அரசன், "நீர் ஸ்ரீ வைஷ்ணவனாகையாலே

உனக்குக் கொடுக்க விரும்புகின்றிலேன்" என்று மறுமொழி தருகின்றான். உடனே மிளகாழ்வான் பரமானந்தம் அடைந்து கூத்தாடுகின்றான். வைணவத்துவம் ஏதுவாக அந்த அவைணவன் கைவிட்டது தானே தமக்குப் பரமபுருஷார்த்தமாயிருந்ததாகக் கருதுகின்றான். **'பிறர் கூற'** (2வது அடி) என்ற சொற்றொடரின் அழுத்தம்தான் இந்த இதிகாசத்திற்குக் காரணம் என்பது கருத்து.

**இதிகாசம்-11 : "உறுமோ பாவியேனுக்கு"** (திருவாய் 8.10:3) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் 'அவனடியார் **சிறுமாமனிசராய்** என்னையாண்டார்' (3,4 அடிகள்) என்ற அடிகளில் **'சிறுமாமனிசர்'** என்பதற்கு பட்டர் அருளிய **இதிகாசம்.** பட்டர் சிறுவனாக இருந்தபொழுது ஒருநாள் அவர் தந்தை (கூரத்தாழ்வான்) திருவாய்மொழி அநுசந்திக்கும் போது இப்பாசுரத்தில் வரும் **'சிறுமாமனிசராய்'** என்ற சொற்றொடரைக் கேட்டு 'சிறுமாமனிசர்' என்றால் சிறியராயும் பெரியராயும் உள்ள மனிசர் என்பது பொருளல்லவா? ஒன்றுக்கொன்று எதிர்த்தட்டான சிறுமை பெருமை என்கின்ற குணங்கள் இரண்டும் ஒரு பொருளினிடத்து ஒன்று சேர்ந்திருக்குமோ? ஆழ்வார் 'சிறு மாமனிசர்' என்று இரண்டையும் ஒரிடத்தே அருளிச் செய்தது பொருத்துவது எங்ஙனம்? என்று தமது திருத்தந்தையாரை வினவா நின்றார். அதற்கு ஆழ்வான் ஆலோசித்து "பிள்ளாய்! நன்கு வினவினாய்; உனக்கு உபநயனம் ஆகாமையால் இப்போது வேத சாத்திரங்களைக் கொண்டு விடைசொல்லலாகாது; ஆயினும் பிரத்தியட்சத்தில் காட்டுகின்றோம் காண்" என்று சொல்லிச் சில பெரியோர்களைக் காட்டி, 'திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கின்ற **சிறியாச்சான் அருளாளப் பெருமாள் எம்பெருமானார்** போல்வாரைச் **'சிறுமாமனிசர்'** என்னத் தட்டில்லையே; முதலியாண்டான், எம்பார் முதலிய பெரியோர்கள் உலகத்தாரோ டொக்க அன்னபானாதிகளைக்

கொள்வதோடு எம்பெருமான் பக்கல் ஈடுபடுவதிற் பரமபதத்து நித்திய சூரிகளைப் போலுதலால் இப்படிப்பட்டடவர்கள் 'சிறுமாமனிசர்' என்னத் தக்கவர்கன்றோ? இங்ஙனமே வடிவு சிறுத்து மகிமை பெருத்தவர்களும், மனிதர் என்று பார்க்கும் போது சிறுமை தோன்றினும் பகவத் பக்தி, ஞானம், அநுட்டானம் முதலிய நற்குணங்களை நோக்குமளவில் நித்திய முக்தர்களிலும் மேன்மை பெற்று விளங்குபவர் களுமான மகாபுருஷர்களையே ஆழ்வார் **'சிறுமாமனிசர்'** என்று குறித்தருளினார் என்று அருளிச் செய்ய, பட்டரும் அது கேட்டுத் **'தகும் தகும்'** என்று இசைவு கொண்டனர்.

**இதிகாசம் -12 : 'தமருகந்த தெவ்வுருவம்'** (முத. திருவந். 44) என்ற பாசுரம் :

*தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே*
*தமருகந்த தெப்பேர் மற்றப்பேர் - தமருகந்து*
*எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே*
*அவ்வண்ணம் ஆழியான் ஆம்*

இப்பாசுரம் **பொய்கையார்** அருளிச் செய்தது.

அடியார்கள் இறைவனுக்கு அடிமை செய்யும்போது எந்த உருவத்தையும் எந்தத் திருப்பெயரையும் உகந்திருப்பர்களோ அந்தத் திருவுருவத்தையும் அந்தத் திருநாமத்தையும் அர்ச்சாவதார உருவமுடையவனாய்த் தன்னை அமைத்துக் கொண்டு அவர்களைக் கொள்வான் இறைவன் என்கின்றார் ஆழ்வார்.

தமர்கள் கல் மண் உலோகங்கள் இவற்றுள் எதனைக் கொண்டு இறைவனுடைய திருமேனியை அமைக்கின்றார்களோ அதனையே இறைவன் தனது ஒப்பற்ற திருமேனியாக ஏற்றுக்கொண்டு அதிலே சந்நிதானம் பண்ணி எழுந்திருப்பன்.

அந்தத் திருமேனிக்கு எந்தத் திருநாமத்தையிட்டு வழங்குகின்றனரோ அந்தத் திருநாமத்தையே நாராயணாதி நாமங்கள்போல் விரும்பி ஏற்றுக் கொள்வன்.

மற்றும் குணம் சேஷ்டிதம் (அற்புதச் செயல்கள்) முதலியவற்றில் எந்தக் குணசேஷ்டதங்களை அநுசந்தித்து நாள்தோறும் பாவனை பண்ணுவார்களோ அவற்றேயே கொண்டிருப்பன்.

இவ்வாறு எம்பெருமானின் அர்ச்சாவதார செளலப்பியத்தை இப்பாசுரத்தில் அருளிச் செய்கின்றார்.

**இதிகாசம் :** இப்பாசுரம் இராமாநுசரின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியுடன் பொருந்தி அமைகின்றது. இராமாநுசர் திருவரங்கத்தில் வாழ்ந்தபோது ஒரு சமயம் மாதுகரத்திற்கு (பிச்சைக்கு) திருவரங்கத் திருவீதி ஒன்றில் சென்று கொண்டிருந்தார். அப்போது இவரது உள்ளம் முதலாழ்வார்கள் மூவரிலும் முதலாழ்வார் என்று வைணவர்கள் குறிப்பிடும் பொய்கையாழ்வார் அருளிய கீழ்க் குறிப்பிட்ட பாசுரத்தின் பொருள் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தது. இறைவன் தன் உருவில் மனிதனைப் படைத்தான் என்கின்றது கிறித்தவர்களின் சத்திய வேதம் என்பதை நாம் அறிவோம். இதனை மறுத்து மனிதன் தன் உருவில் இறைவனைப் படைத்து விடுகின்றான் என்று அறிவியல் மனப்பான்மை தெரிவிக்கின்றது என்பதும் நமக்குத் தெரியும். இந்த வகை மனநிலைகளையும் சமரசப்படுத்துவதுபோல் அமைந்துள்ளது. பொய்கையாழ்வாரின் அருள்வாக்கு.

இவ்வாறு சிந்தித்துக் கொண்டே உடையவர் வீதி வழியாகப் போய்க் கொண்டிருந்தார். அப்போது தெருப் புழுதியில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். திருவரங்கத்துச் சிறுவர்கள் அல்லவா? திருக்கோயிலில் தாங்கள் கண்டவற்றை தங்கள் விளையாட்டிலும் பிரதிபலிக்கச் செய்தனர். பாவனை சிறுவர்கள் விளையாட்டின் முக்கிய கூறு என்பதை உளவியல் அறிஞர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆண்பிள்ளைகள் 'அப்பா விளையாட்டும்', பெண் பிள்ளைகள் 'அம்மா விளையாட்டும்' இருவரும்

'ஆசிரியர் விளையாட்டும்' விளையாடுவதை நாம் காணத்தான் செய்கின்றோம்.[9] கற்பனை யாற்றலால் ஊஞ்சல் கப்பலாக மாறிவிடுகின்றது! மரக்கட்டை குதிரையாகி விடுகின்றது! உயிரில்லாதவை உயிருள்ளவையாகி விடுகின்றன; பேசுகின்றன! கடை வைப்பதிலும் பள்ளிக்கூடம் வைப்பதிலும் பாலர்கட்கு அதிக ஆசை என்பதை நாம் அடிக்கடிக் காண்கின்றோம்.

சிறுவன் ஒருவன் மண்ணில் சில கோடுகளை வரைந்தான்; 'இதோ திருக்கோயில்' என்றான். இன்னொரு சிறுவன் வேறு இரண்டொரு கோடுகளைக் கீறி 'இதோ பெரிய திருமண்டபம்' என்றான். இந்த இடத்தை நெருங்கி வந்து கொண்டிருந்த இராமாநுசரைக் கண்டதும் பிறிதொரு சிறுவன் மேலும் இரண்டொரு கோடுகளைக் கிழித்து 'ஜீயரே, இதோ உம்முடைய பெருமாள்!' என்று காட்டினான். இராமாநுசர் வந்து பார்த்தார். மற்றொரு சிறுவன் 'அதோ பெருமாளின் திருவாழி, திருச்சங்கு' என்று சுட்டிக் காட்டினான், உடனே இராமாநுசர்,

*தமர்உகந்தது எவ்வுருவம்*
*அவ்வுருவம் தானே*

என்று சொல்லிக் கொண்டே, அந்தச் சிறுவரின் கீறல்களை நோக்கித் தண்டனிட்டார். இவரது திருவுள்ளம் அந்தக் கீறல்களை உண்மையாகவே எம்பெருமானின் திருமேனியாகவே கருதி பிரபத்தி பண்ணிவிட்டது.

*தமர்உகந்தது எப்பேர்*
*மற்று அப்பேர்*

அருகிலிருந்த இன்னொரு சிறுவன் ஒரு 'கொட்டாங்கச்சியில்' மண்ணை வாரி வைத்துக் கொண்டு சந்நிதியில் அருளிப்பாடுகள் சொல்லுகின்ற மாதிரியே

9. காக்கைகள் கூட்டமாக இருப்பதைப் பார்த்து சிறுவன் ஒருவன் காக்கா பள்ளிக் கூடம் வைத்திருக்கிறது என்பான் - இதைப் போல.

சொல்லிக் கொண்டு வரும்போது 'ஜீயரே!' என்று அருளிப்பாடு சொல்லிக் கூவினான். இராமாநுசரும், 'நாயிந்தே' என்று கோயிலில் சொல்லுவது போல் சொல்லிக் கொண்டே கையை நீட்டித் தம் மேலாடையில் அந்த மண்ணைப் பிரசாதமாக ஏற்றுக் கொண்டார். சிறுவர்களுக்கு ஒரே குதூகலம்; இராமாநுசருக்கோ பொய்கையாழ்வாரின் இதயத்தையே பார்த்து விட்டது போன்ற பரவசம்.

**இதிகாசமும் ஐதிகமும் - ஓர் அற்புதக் கலப்பு :** இந்த இரண்டும் கலந்த நிலையைச் சுவாமியின் உரையில் கண்ணுறும்போது அது நமக்குத் 'தேனும் பாலும் கன்னலும் அமுதும்' கலந்து அநுபவிப்பதுபோன்ற நிலையைத் தருகின்றது.

**"வேங்கடங்கள் மெய்ம்மேல்"** (திருவாய் 3.3:6) என்ற அடிகட்கு சுவாமி அருளும் உரை:

'கடன்கள் மேல் வினை முற்றவும் வேம் (இது)' என்று அந்வயித்துப் பொருளுரைக்க. கடங்கள் - கடன்கள். எம்பெருமான் நாம் செய்த பாவங்களை மன்னித்தருள்வது மாத்திரம் அன்றிக்கே பகைவர்கள் மேலும் போக்குவான், எத்தனையோ பிறப்புகளில் சஞ்சிதங்களாய் (பழவினைகள்) மலை மலையாய்க் குவிந்து கிடக்கும் பாவங்கள் நம்முடைய சிறிய முயற்சியால் தொலைந்திடுமோ என்று சிலர் ஐயுற்றார்களாம்; அவர்கட்குப் பட்டர் ரசோகதிகளுடன் ஓர் இதிகாசம் எடுத்துரைத்தாராம்; இராமபிரான் கடலரசனை நோக்கி மூன்று நாள் தரை கிடந்து தவம் செய்தார்; அவ்வளவில் கடலரசன் முகம் காட்டாதொழியவே சீறிச் சினந்து அக் கடல்மீது அம்பு தொடுத்து நின்றார். அது கண்டு கடலரசன் அஞ்சி நடுங்கி ஓடி வந்து, அவன் நாலடி வர நின்றபோது 'உனக்காக அம்பு தொடுத்தேன்' என்றுரைக்க நாணப்பட்டு "உன் விரோதிகளைச் சொல்லுக, அவர்கள்மீது இவ் வம்பைச் செலுத்துகிறேன்" என்று

சொல்ல, அப்படியே அவன் தன் விரோதிகள் இருக்குமிடம் குறிப்பிட அங்கே அம்பைச் செலுத்தி உபகாரம் செய்தாரென்து வான்மீகி இராமாயணத்தால் அறிகின்றோம்.[10]

வணங்கிய மாத்திரத்தில் சேதநன் பண்ணின பாவங்களையெல்லாம் மறப்பான் இறைவன் என்பதற்கு இந்த இதிகாசம் சான்று.

இவ்விடத்தில் இன்னுமோர் ஐதிகத்தையும் அருளிச் செய்வர் பட்டர். "பண்டு தலைமயிர் இல்லாத ஒருவன் நெல் அளந்து கொண்டு நின்றான்; அங்கே ஒருவன் சென்று 'மயிரைப் பேணாமல் நீர் தனியே நின்று நெல் அளக்கிறீரே!' என்ன, 'வந்தது என்!' என்ன, 'ஒன்று மில்லை கண்டுபோக வந்தேன்' என்ன, ஆகில் 'ஒரு கோட்டையைக் கொண்டு போகலாகாதோ?' என்று எடுத்து விட, அதனை அவன் கொடுவருகின்ற காலத்தில் எதிரே ஒருவன் வந்து, 'இது பெற்றது எங்கே!' என்ன, 'உன்தனை மொட்டைத் தலையன் தந்தான்' என்ன, அவன் சென்று அங்கேயுள்ள அவனைக் கண்டு 'இன்னான் உம்மை வைது போகின்றானே!' என்று அதனைக் கூற, 'அடா! என் நெல்லையும் கொண்டு என்னையும் வைது போவதே!' என்று தொடர்ந்து வர, அவன் திரும்பிப் பார்த்து 'ஏன்தான் குழல்கள் அலைய அலைய, ஓடி வாரா நின்றாய்!' என்ன, 'ஒன்று மின்று; இன்னம் ஒரு கோட்டை கொண்டு போகச் சொல்ல வந்தேன்' என்றானாம்; அப்படியே கடலை முகங் காட்டுவித்துக் கொள்ளுகைக்காகக் காலைப்பிடிப்பது, கோலைக் கோலைத் தொடுப்பதாக நிற்க, அவன் வந்து முகங்காட்டினவாறே 'உமக்கு அம்பு தொடுத்தோம்' என வெட்கி 'உன் பகைஞரைச் சொல்லு, நாம் இதனை விட' என்றார் அன்றோ?

10. கம்பரா. உயுத்த. வருணனை வழிவேண்டும் படலத்தில் 64-80 செய்யுட்களால் இந்த வரலாற்றைக் காணலாம்.

## 3. சம்வாதங்கள்

சம்வாதம் என்பது சம்பாஷணை; உரையாடல். எ.டு. **'வீவின்றி நின்றவர்'** (திருவாய் 7.5:11) என்ற தொடரை விளக்குவதற்கு நம்பிள்ளை நஞ்சீயரிடையே நடைபெற்றதைப் போன்றது. அதாவது, "அர்ச்சுனன் தான் எம்பெருமானைப் பெற்றானோ? இல்லையோ?" என்று நம்பிள்ளை நஞ்சீயரைக் கேட்க அதற்கு அவர் அளித்த மறுமொழி: "அர்ச்சுனன் பெற்றானோ? இல்லையோ? என்ற விசாரம் உமக்கு எதற்காக? யார் யார் பெற்றார்கள்? என்று அவர்களை யெல்லாம் ஆய்ந்து பார்த்தா நாம் பற்ற வேண்டும்? எம்பெருமானுடைய அருளிச் செயல் என்று இவ்வளவே கொண்டு நாம் பற்ற வேண்டுமேயொழிய, பெற்றவர்களைப் பார்த்தன்று காணும். குளிர்ந்ததண்ணீர் கண்டால் அது குடித்து விடாய் தீர்க்கின்றோம்; இது குடித்து யார் யார் தாக விடாய் தீர்த்தார்கள்? என்று விசாரித்துப் பார்த்தா பருகுகின்றோம்? இல்லையே" என்று அருளிச் செய்தாராம்.[11] இத்தகைய சம்வாதங்களும் பாசுரத்தின் பொருளுக்குப் புதிய ஒளி காட்டுவனவாக இருக்கும். சிலவற்றை ஈண்டுக் காட்டுவோம்.

1. சம்வாதம் - 1: எத்திசையும் அமரர் பணிந்தேத்தும் (நாச்.திரு.5:6) என்ற பாசுர உரையில் வருவது. தத்துவனை வரக்கூகிற்றையாகில்' (நான்காம் அடி) வரும் 'தத்துவன்' என்பதற்கு 'என்னுடைய உயிர்நிலைத்திருப்பதற்குக் காரணமானவன்' என்ற பொருள் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. வியாக்கியானத்தில் "இக்குயில் கூவியழைக்க வேண்டும்படி அவன் வரத்தாழ்க்கச் செய்தேயும் தன்

11. வேட்டார்க்கு இனிது ஆயின் அல்லது
நீர்க்கு இனிது என்று
உண்பரோ நீருண் பவர்
என்ற கலிப்பா (கலி.62) அடிகளில் வரும் தலைவன் கூற்றோடு வைத்து இஃது எண்ணத் தகும்.

சத்தை அவனென்றிருக்கிறாள் காணும்'' என்பது வியாக்கியான ஸ்ரீசூக்தி:இவ்விடத்தில் நஞ்சீயருக்கும் நம்பிள்ளைக்கும் ஒரு சம்வாதம் உண்டு.

நம்பிள்ளை: ''மாயாவியான இராவணன், இராமன் தலையறுப்புண்டு முடிந்தான்'' என்று தோற்றும்படி ஒரு மாயத் தலையைக் கொண்டு பிராட்டிக்குக் காட்டினான்.[12] அப்போது பிராட்டி இக்காலத்துப் பெண்டிர்கள் தமது கணவன்மார்களினுடைய இறப்பில் சற்றுக் கண்ணீர் பெருக்கவிட்டுக் கிடப்பதுபோல் சிறிது துக்கப்பட்டு உயிர் தரித்தாளேயன்றி காட்சியைக் கண்ட அந்தக் கணமே உயிர்போகப் பெற்றிலள். மெய்யான அன்பு இருக்குமாகில் அந்தச் சமயத்தில் கூடவா உயிர் பிரியாமல் இருக்கும்? உயிருக்குயிரான நாயகன் உயிர் இழந்தான் என்ற தலையைக் கண்டும் நம்பின பிறகும் அவர் தரித்திருப்பது பிலாக்கணம் (ஒப்பாரி வைத்துப் புலம்புதல்) பாடியமுதாள். அவள் இராமன்மீது கொண்டிருந்த அன்புக்கும் இப்படி யிருத்தற்கும் ஒரு தொடர்பும் இல்லைபோல் உள்ளதே'' என விண்ணப்பம் செய்தார்.

நஞ்சீயர்: ''வாரீர், நீர் கேட்டது அழகிதே; 'நாயகன் உயிரோடு உள்ளான்' என்று நினைத்துக் கொண்டால் உத்தம நாயகி உயிர் தரிப்பாள் என்றும், நாயகி இறந்து போனான் என்று நினைத்துக் கொண்டால் அவள் உயிர் விட வேண்டும்' என்றும் நீர் கருதியுள்ளீர் போலும். நாயகி உயிர் தரித்திருப்பதற்கும் உயிர் விடுவதற்கும் நாயகனுடைய பிழைத்திருத்தல், மரணித்தல் தெரிந்து கொள்வது காரணம் அன்று காணும்; பிறநாடு சென்ற நாயகன் வழி நடுவே இறந்து போனானாகில் இந்தச் செய்தியை ஊரிலுள்ள நாயகி தெரிந்து கொள்ள முடியாததால், 'நமது நாயகன் உயிரோடுதான் உள்ளான்' என்று மயங்கியிருக்கும்போது

12. இது வால்மிகி இராமாயணத்தில் வரும் நிகழ்ச்சி.

அவன் நலமாக உயிருடன் இருப்பதும், அவன் வெளிநாட்டில் நலமாக இருந்தும் சில வம்பர்கள் 'அவன் இறந்தான்' என்று பொய்ச் செய்தி கூறுவதை நம்பி உயிர் விடுவதும் உத்தம நாயகியின் செயல் என்று நினைக்க வேண்டா. உண்மையான நாயக - நாயகியின் உறவு மனமே சாட்சியாக நெஞ்சிற் பதிந்து கிடக்கும். அவன் உயிர் விடும் அதே கணத்தில் இவளுடைய உயிரும் தானாக விட்டு நீங்கும்; தம்பதிகளாகிய இருவரது நெஞ்சுக்கும் வியக்கத்தக்க அழகுடைய ஒரு தந்திப் போக்குவரத்து இருப்பதனாலேயே அந்தத் தந்தியைக் கொண்டே நாயகியின் உயிர் அந்தக் கணத்திலேயே பிரிந்து போகும். மானசத் தந்தி உண்மையான செய்தியை மனத்திற்கு எட்ட வைத்துக் கொண்டேயிருப்பதனால் அதன் காரணமாக உயிர் போகாமல் தரித்து நிற்கும். பிராட்டியும் இத்தகைய உத்தம நாயகியாதலால் இராவணன் மாயத் தலையைக் காட்டி எவ்வளவு வஞ்சித்தபோதிலும், உண்மையில் இராமனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் இருந்தமையால் அந்த அரக்கனுடைய மாயச்செயல் பயன்படாமல் அவளுடைய மனச்சாட்சியமே வீறு பெற உயிர் தரித்து நின்றது; ஆதலின் பிராட்டி உயிர்தரித்திருந்து பெருமான் உயிர் தரித்திருப்பதற்குக் காரணம் என்று கொள்ளீர்'' என்று மறுமொழி பகர்ந்தார்.

அற்புதமான **சம்வாதம்.**

**சம்வாதம்-2 'இண்டையாயின கொண்டு தொண்டர்கள் ஏத்துவார் வோடும்** (பெரி.திரு.2.1:3) என்ற அடியின் பொருளுரைக்கும்போது வருவது: 'இண்டை கொண்டு' என்னாமல் 'இண்டையாயின கொண்டு' என்று கூறுவதன் கருத்து யாது? எனில்; எம்பெருமானுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்கிற தூய்மையான நோக்கத்துடன் கொள்ளுகின்ற **மலர் எதுவாயிருந்தாலும்** குற்றம் இல்லை; 'செண்பக மல்லிகையோடு செங்கழுநீர் இருவாட்சி' என்று

சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற பூக்களாகவே இருக்க வேண்டும் என்கிற நியதி இல்லை; **ஏதேனும் ஒரு பூவாயிருக்கலாம்**' என்பது தோன்றும். "பூமாலையென்று பேர் பெற்றவற்றைக் கொண்டு" என்று வியாக்கியானித் தருளினார் பெரியவாச்சான் பிள்ளையும். இங்ஙனம் இன்னபூ என்று அறுதியிடாமல் பூ என்று பெயர் பெற்றிருக்கும் எதுவும் பொருந்தும் என்பதாயிற்று. 'பரிவதில் ஈசனை' (1.6:1) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை எடுத்து விளக்கும்போது 'புரிவதும் புகை பூவே' என்ற சொல்நயத்தைத் திருவுள்ளம் பற்றிப் பட்டர் "இவ்விடத்தில் அகிற்புகை என்றாவது, கருமுகைப்பூ என்றாவது சிறப்பித்துச் சொல்லாமையாலே ஏதேனும் ஒருபுகையும் ஏதேனும் ஒரு பூவும் எம்பெருமானுக்கு அமையும்; செதுக்கையிட்டும் புகைக்கலாம் என்று கூறினாராம். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நஞ்சீயர் 'கண்டகாலிபூ எம்பெருமானுக்குச் சாத்தலாகாது' என்ற சாத்திரம் மறுத்திருக்க, 'இப்படி அருளிச் செய்யலாமோ?' என்று கேட்டாராம், அதற்கு மறுமொழியாக "சாத்திரம் மறுத்தது மெய்தான்; கண்டகாலிப்பூ எம்பெருமானுக்கு ஆகாதென்று மறுக்கவில்லை; அடியார்கள் அப்பூவைப் பறித்தால் கையில் முள் பாயுமே என்று பக்தர்கள் பக்கல் தயையினால் சாத்திரம் நீக்கினதேயன்றி எம்பெருமானுக்கு ஆகாதபூ எதுவும் இல்லை"என்றாராம்.

இங்ஙனம் இந்த சம்வாதத்தைக் காட்டிய நம் **சுவாமி** மேலும் குறிப்பிடுவார் "திருவாய்மொழிக்குப் '**பதினெண்ணாயிரப்படி**' அருளிய **பரகால சுவாமி** இந்தச் சம்வாதத்தைக் கண்டு இரசிக்காமல் மறுத்துரைத்தது பற்றிக் கவலைகொள்ள வேண்டா. "'பக்தி வரம்பு கடந்தால் நூல் வரம்பில்லை' என்றதையும் அருளிச் செயல் தொடையழகையும் நோக்கி சுவைப்பொருள் உரைப்பதில் அறிவுடையார்க்குப் பணியன்று என்பதை நாம் உணர்ந்தால் போதும்" என்று.

**சம்வாதம் - 3: 'நாளுநின் நடுநம பழமை'** (திருவாய் 1.3:8) என்ற திருவாய்மொழிப் பாசுர உரையில் வருவது: **'நாளு நந்திருவுடை அடிகள்தம் நலங்கழல் வணங்கி** (3வது அடி) என்பதற்கு நம்பிள்ளை ஒரு சம்வாதம் அருளிச் செய்கின்றார். அதாவது 'சர்வேசுவரனை அடைந்தானாகில் அவன் பலனைக் கொடுக்கின்றான்; பிராட்டியைத் துணையாய்ப் பற்ற வேண்டுவது என்' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, "அவனையடையும் இடத்தில், இவன் குற்றம் பாராதே தன் நிழலிலே இவனை வைத்து அவன் பக்கல் முகம் பெற்றவாறே குற்றத்தைப் பொறுப்பிக்கும் அவள் முன்னாகப் பற்ற வேண்டும்" என்று கூறி "நாளும்நம் திருவுடை அடிகள்நம் நலங்கழல் வணங்கி" என்னா நின்றது கண்டீரே" என்று அருளிச் செய்தார் பட்டர்.

**சம்வாதம் -4 'சிக்கெனச் சிறிதோர் இடமும்'** (திருவாய் 2.6:2) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் **'எங்கும் பக்க நோக்கறியான்'** (ஈற்றடியில் வருவது) என்ற விடத்து ஈட்டில் ஓர் **ஐதிக உரையாடல்:** மணக்கால் நம்பி ஆள **வந்தாரைச்** சிறந்த கடைக்கண் நோக்கால் ஆட்கொண்ட பிறகு ஒருநாள் "குருகைக் காவலப்பனிடத்தில் ஒரு யோக ரகசியம் உண்டு" என்று ஆளவந்தாருக்குத் தெரிவித்தார். அந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பேரவா எழுந்தது ஆளவந்தாரிடம். உடனே காவலப்பன் எழுந்தருளியிருந்த கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்றார். அப்போது **காவலப்பன்** ஒரு குட்டிச் சுவரில் யோகத்தில் எழுந்தருளியிருந்தார். அவரது சமாதி நிலைக்கு ஊறு விளைவிக்க வொண்ணாது என்று எண்ணிய ஆளவந்தார் அவருக்கு இப்பால் நின்றார். யோக நிலையில் இருந்த அப்பனும் திரும்பிப் பார்த்து "இங்குச்

சொட்டைக்குலத்தார்[13] யாரேனும் வந்தாருண்டோ?'' என்று வினவினார். உடனே ஆளவந்தார் ''அடியேன்'' என்று எழுந்தருளி வந்து காண்கின்றார்; தண்டம் சமர்ப்பிக்கின்றார். ''அடியேன் இங்கு வந்து தேவரீருக்குத் தெரியாதபடி பின்னே நின்றேன். தேவரீர் அறிந்தது எப்படி?'' என்று வினவ, அதற்குக் குருகைக் காவலப்பன் அருளிச் செய்த வார்த்தை - ''எம்பெருமானும் நானுமாக அநுபவித்துக் கொண்டிருந்தால் பெரியபிராட்டியார் திருமுலைத் தடத்தாலே நெருங்கி அணைத்தாலும் அவளது முகத்தைக் கூடப் பாராத சர்வேசுவரன் என் கழுத்தை அமுக்கி நாலு மூன்றுதரம் அங்கே எட்டிப் பார்த்தான்; அப்படி அவன் பார்க்கும்போது சொட்டைக்குலத்திலே சிலர் வந்திருக்க வேண்டும் என்றிருந்தேன்'' என்றார். ஆழ்வார் பக்கலில் எம்பெருமான் பண்ணியிருந்த சிறப்பான கடைக்கண்நோக்கு அவர்க்குப் பிறகு, நாதமுனிகளின் திருவமிசத்தில் பெருகத் தொடங்கிற்று என்பது ஈண்டு அறியத்தக்கது. ''எங்கும் பக்க நோக்கறியான்'' என்ற இடத்திற்கு இது மிகப் பொருத்தமான உரையாடல் - சம்வாதம்.

**நண்ணா அசுரர் நலிவு எய்த** (திருவாய் 10.7:5) என்ற திருவாய்மொழிக்கு (முதல் அடி) ஈ.டு: 'அவ்யபதேஷ்யனுக்கு'[14] அநந்திரத்திலவன்'', தமப்பன் செய்ததைக்கேட்டு 'இவன் செய்தானானான்?' என்று சிரித்தான்; 'ஒரு மதிளை வாங்குங்காட்டில் அத்தர்சனம் குலையாதோ? திருவாய்மொழி என்றும் 'இராமாயணம் என்றும் வலியன இரண்டு பிரபந்தங்கள் உண்டாயிருக்க' என்றானாயிற்று! இப்படி உகவாதார் நெஞ்சு உளுக்கும்

13. சொட்டைக்குலம் - நாத முனிகளுடைய திருவமிசம், ஆளவந்தார் நாதமுனிகளுக்குத் திருப்பேரனார்
14. அவ்யப தேஷ்யன் - எடுத்துப் பேசுவதற்குத் தகாதவன்; நீசன் (கிருமி கண்டன்) அநந்திரத்தில்வன் - அவன் மகன் (விக்கிமசோழன்)

படியான பிரபந்தமாய்த்து''. திருவாய்மொழி விரோதிகள் அழிவதற்குக் காரணம் என்பதற்கு இது சம்வாதம்.

இதனை விவரிப்போம்: அவ்யபதேஷ்யன் என்றது **கிருமிகண்டசோழன்** இவன் பதினோராம் நூற்றாண்டில் (கி.பி.1070-1116) இருந்த முதற்குலோத்துங்கன் என்பர். இவன் தத்துவ ஞானிகளான பெரியநம்பி, கூரத்தாழ்வான் என்னும் பெரியார்கள் இருவருடைய திருக்கண்கள். போவதற்குக் காரணமாக இருந்த பெரும்பாதகன். ஆதலால் அவன் பெயரைச் சொல்லுவதற்கும் வாய்வராமல் அவ்யபதேஷயன்' என்கின்றார்.

*அவத்தம்புன் சமயச்சொல் பொய்யை மெய்என்று*
*அணிமிடறு புழுத்தான்தன் அவையின் மேவி*
*சிவத்துக்கு மேல்பதக்கு உண்டென்று தீட்டும்*
*திரிக்கூர வேதியார்கோன் செவ்வி பாடப்*
*பவத்துக்குப் பிணிநீங்க நரகம் தூரப்*
*பரமபதம் குடிமலியப் பள்ளி கொள்ளும்*
*நவத்துப்புச் செங்கனிவாய்க் கரிய மாணி*
*நம்பெருமாள் அரங்கேசர் ஆடீர் ஊசல்.*[15]

என்கின்றார் திவ்வியகவியும்.

கிருமி கண்டனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவன் அவன் மகன் விக்கிரமசோழன். இவன் காலம் கி.பி.1116-1134 தகப்பன் செய்தது திருக்கண்ணபுரத்தின் திருமதில்களை இடித்துத் தள்ளியது. இது வைணவ தரிசனத்திற்குச் செய்த விரோதமான செயல். தமப்பன் பெருமாள் கோயிலை இடித்துப் போட்டான் என்று கேள்வியுற்று, 'ஐயோ! ஒரு கோயிலை இடித்துப் போட்டதனால் என்னாகும்? இதனால் தர்சனம் குலைந்ததாகுமா? திருவாய் மொழியும் ஸ்ரீராமாயணமும்

15. சீரங்கநாயகர் ஊசல் - 20

ஆகிய இரண்டு பிரபந்தங்களன்றோ வைணவ தரிசனத்திற்குக் கல்மதில்களாக இருப்பவை? அவற்றை அசைக்க முடியுமோ ஒருவர்க்கு?'' என்றானாம் கிருமி கண்ட சோழனின் மகன், இதனால் திருவாய்மொழியான அசுரப்பிரகிருதிகள் மண்ணுண்ணும் படியாகவும் தேவப் பிரகிருதிகள் வாழ்ந்து போம்படியாகவும் அவதரித்தது என்னுமிடம் ஒரு சிறுவன் வாயினாலும் வெளி வந்தது என்று காட்டப் பெற்றது.

# 9. திவ்யார்த்த தீபிகை-வழிநூல்

சுவாமிகளின் படைப்புகளுள் '**திவ்வியார்த்த தீபிகை**' மிகச்சிறந்த படைப்பு. நாலாயிரத் திவ்ய பிரபந்தப் பாசுரங்களின் தாற்பரியத்தை பளிங்கெனக் காட்டும் ஒரு சிறந்த கைவிளக்கு. இந்த இருள்தருமா ஞாலத்தில் மக்களாகப் பிறந்த நாம் அறிய வேண்டிய பொருள்களை **பராசர பட்டர்;**

*மிக்க இறைநிலையும் மெய்யாம் உயிர்நிலையும்*
*தக்க நெறியும் தடையாகித் - தொக்கியலும்*
***ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன்***
*யாழின்இசை வேதத்து இயல்*[1]

என்ற தனியனில் விளங்கிப் போந்தார். இதன் விரிவான விளக்கம் இந்த ஆசிரியரின் நூல் ஒன்றில் தரப்பெற்றுள்ளது.[2]

'**தீபிகா**' என்ற வடசொல் ஐ விகுதி பெற்று '**தீபிகை**' எனத் தமிழ் உருவம் பெற்றுள்ளது. தீபிகை - விளக்கு மேற்குறிப்பிட்ட ஐந்து பொருள்களை உணர்த்த திருக்குருகைப் பிள்ளான் தொடக்கமாக (ஆறாயிரப்படி) நம்பிள்ளை ஈறாக (முப்பத்தாறாயிரப்படி)வுள்ள ஆசாரியப் பெருமக்கள் மணிப்பிரவாளத்தில் உரைகள் எழுதியுள்ளனர். அவ்வுரைகளை ஆசாரியர்கள் வாயிலாகக் கேட்டாலன்றி விளங்காத நிலையில் உள்ளவை. எனவே, வடமொழி தமிழ்மொழி ஆகிய இருமொழிப் புலமையும் மணிப்பிரவாள நடையின் நெறிமுறைச் சுவடுகளை அறிந்த திறனையும்

1. திருவாய்மொழி தனியன் - 16
2. **சடகோபன் செந்தமிழ்** - 13 அர்ந்த பஞ்சகம் - பக் 346 - 356.

உடைய நம் சுவாமிகள் முன்னோர் உரைப் பெருமை குன்றாமலும் அவற்றைத் தழுவியும் ஆழ்வார் பாசுரங்களுக்கு **'திவ்யார்த்ததீபிகை'** என்ற விளக்கவுரை வரைந்தருளினார். இருளிலுள்ள பொருளைக் காண்பதற்கு விளக்கு பயன்படுவதுபோல அறிவின்மையாகிய இருளிலுள்ள ஞானமாகிய உட்பொருளைக் காண தீபிகையாகிய விளக்கு இன்றியமையாத தாகின்றது. ஆழ்வார்கள் கையாண்டுள்ள சொற்களுக்கும் ஆசாரியப் பெருமக்கள் வழங்கியுள்ள சொற்றொடர்கட்கும் விளக்கும் பாங்கை எடுத்துக் காட்டுவதாக இருப்பதுபற்றி **அர்த்த தீபிகை** (அர்த்தம் - பொருள்) என்றும், திவ்வியமான (Divine) எம்பெருமான் பெருமையை நுவலும் நூலானது 'திவ்விய' என்ற அடை மொழியையும் கொண்டு **திவ்யார்த்த தீபிகை** என்னும் திருநாமம் பெற்று வழங்குவதாகக் கொள்வது பொருத்தமாகின்றது.

**தீபிகை-அமைப்பும் சிறப்பும்:**தீபிகையின் உரை ஆழ்வார் ஆசாரியர்கள் திறத்து அமைந்த அரியகருத்துகளை எளிய நடையில் சிறப்பாக விளக்குகின்றது. திருவாய் மொழிக்கு அமைந்த தீபிகை நம்பிள்ளை அருளிய ஈட்டுரையின் வழி முறையைத் தழுவி அற்புதமாக அமைந்ததாகும். ஒவ்வொரு திருவாய்மொழிப் பாசுரத்தின் தொடக்கத்தில் அவதாரிகை (முன்னுரை), தொடர்ந்து பாசுரத்தைக் காட்டல், சொற் பொருள் கூறுதல், விளக்க உரை என்று அமைந்துள்ளது. விளக்கவுரையில் பெரும்பாலும் நம்பிள்ளையின் உரைத் தொடர்கள் பளிச்சிடுகின்றன. ஏனையவற்றில் வேறுமுறை கையாளப்பட்டுள்ளது. ஒவ்வொரு திருமொழிக்கும் அவதாரிகை, பின்னர் பாசுரம்காட்டல், தொடர்ந்து சொற் பொருள், விளக்கவுரை என்று அமைந்துள்ளது. இங்கு சுவாமியின் விளக்கவுரை பெரியவாச்சான் பிள்ளையின் உரைத் தொடர்கள் விரவிவரும்முறையில் அமைந்துள்ளது. இரண்டிலும் பாசுரங்களில் இயைபுகாட்டல் தவறுவதில்லை. இரண்டிலும்,

*முன்னோர் நூலின் முடிபு ஒருங்கு ஒத்த*
*பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி*
*அழியா மரபின் வழிநூல் ஆகும்.*[3]

என்ற நூற்பாவின் அடிப்படையில் அமைந்திருப்பதால், **சுவாமியில் தீபிகை சிறந்த வழிநூலாகத்** திகழ்கின்றது. இரண்டு எடுத்துக்காட்டுகள் இதனைத் தெளிவாக்கும்

**எ-டு-1 திருவாய் (6.10:10)**

**உரைஅவதாரிகை:** கீழ்த்திருவாய்மொழில்(6.9) அபரிமிதமான ஆர்த்தி யோடே பரமபதத்தளவும் கேட்கும்படி, அஂஂதாவது,

*எனது ஆவி,*
*உள்மீ தாடி உருக்காட்*
*டாதே ஒளிப்பாயோ? (6.9:5)*

என்பதுபோல கூப்பிட்டார்.[4] ஆயினும் எம்பெருமான் வந்து முகம் காட்டவில்லை. இதனால் தளர்ந்து நோவுபட்ட ஆழ்வார், அப்பெருமான் சீவைகுந்தத்திலிருந்து நிலவுல கத்திற்கு வந்து இராமகிருஷ்ண அவதாரங்கள் பண்ணி அக்காலத்திலே இழந்தார்க்கும் இழக்க வேண்டாமல் திருவேங்கட மலையிலே நித்திய சூரிகளோடும், நித்திய சம் சாரிகளோடும், ஏனைய பிராணிகளோடும் வேறுபாடின்றி எல்லோரும் வந்து ஒன்று சேர்ந்து தரிசிக்கும்படி நித்திய சந்நிதி பண்ணியிருக்கும் நிலையை அநுசந்தித்து அத்திருவேங்கடமுடையான் திருவடிகளிலே பெரிய பிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய கதியற்ற நிலையை விண்ணப்பம் செய்து சரணம் புகுகின்றார் - இத்திருவாய்கொழியில்.

3. நன்னூல - நூற்பா.7
4. இதனால முன் திருவாய்மொழி இயைபு காட்டியவாறு

சாத்திரங்களில் விதிக்கப்பெற்றுள்ள பல்வேறு கருமங்களுக்குப் பல நியமங்கள் ஏற்பட்டுள்ளன. புண்ணிய தலங்களில்தான் செய்யவேண்டும், வேறிடத்தில், செய்யலாகாது என்ற **தேச (இட) நியமமும்,** வசந்தம் முதலிய காலங்களில்தான் செய்யவேண்டும் மற்ற காலங்களில் செய்யலாகாது என்கின்ற **காலநியமும்,** திருமுழுக்கு அதனைச் செய்யப்பெறும் நியமங்களோடு செய்யவேண்டும் வேறுவிதமாகச் செய்யலாகாது என்கிற **பிரகாரநியமும்,** சுத்தி அசுத்திகள் தேடவேண்டா, இருந்தபடியே செய்யலாம் என்ற **அதிகாரி நியமும்** வேண்டா; விஷய நியமமே இதற்கு உள்ளது.[5] அதாவது, பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்தனுள்ளும் சௌலப்பியம், சௌசீல்யம் முதலான முற்றிலும் நிறையப்பெற்ற இடவிஷயமாகை, எல்லாம் அறிந்த எம்பெருமானாலும் சொல்லித் தலைக்கட்ட முடியாத குணங்கள் நிறைந்திருப்பது அர்ச்சாவதாரத்தில், ஆகையால் ஆழ்வார் சரணாகதியை இப்போது அர்ச்சாவதாரத்தில் தலையான திருமலையில் செய்தருளுகின்றார். முதல் ஒன்பது பரசுரங்களால் சரண்யன் படிசொல்லி பத்தாம் பாசுரத்தில் சரணம் புகுகின்றார்.[5]

*'அகல கில்லேன் இறையும்'என்று*
*அலர்மேல் மங்கை உறைமார்பா!*
*நிகரில் புகழாய்! உலகம்மூன்று*
*உடையாய்! என்னை ஆள்வானே!*
*நிகரில் அமரர் முனிக்கணங்கள்*
*விரும்பும் திருவேங் கடத்தானே!*
*புகல்ஒன்று இல்லா அடியேன்உன்*
*அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே(10)*

5. ஸ்ரீவச.பூஷ. 24,25,26,27,29,30,31,34 காண்க

**(சொ.பொ):** அலர்மேல்மங்கை-பூவில் வாழ் மகளான பெரிய பிராட்டியார்; இறையும்-ஒரு கணமும்; அகலகில்லேன் என்று - பிரிந்திருக்கமாட்டேன் (என்று சொல்லிக் கொண்டு); உறை மார்பா - நித்தியவாசம் பண்ணப்பெற்ற திருமார்பை உடையவனே; நிகர்இல் - ஒப்பற்றதான; புகழாய் - புகழையுடையவனே; உலகம் மூன்று உடையாய் - சேதந அசேதநங்களுக்கும் சுவாமியே; என்னை ஆள்வானே - (நீசனான) அடியேனையும் அடிமை கொள்பவனே; நிகர்இல் - ஒப்பற்றவர்களான; அமரர் - தேவர்களும், முனிக்கணங்கள் - முனிவர் சமூகங்களும், விரும்பும் - விரும்பி வந்து பணியும் (இடமான); திருவேங் கடத்தானே - திருமலையில் வாழ்பவனே; புகல் ஒன்று இல்லா - அடையும்இடம் ஒன்றுஇல்லாத; அடியேன் - ஏழையேன்; உன் அடிக்கீழ் - உன்திருவடிவாரத்தில்; அமர்ந்து புகுந்தேன் - மிகப்பொருத்தமாக வந்து சேர்ந்து விட்டேன்.

**விளக்கம்:** (அகலகில்லேன்) கீழ் ஒன்பது பாசுரங் களாலும் சரண்யனான சர்வேசுவரனுடைய சொரூபத்தையும் தம்முடைய ஆற்றாமையையும் சொன்னார்; இப்பாசுரத்தில் தம்முடைய அபேட்சிதம் (= விருப்பம்) சடக்கென சித்திக்கைக் காகப் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக (தகவுரை கூறுபவளாக) முன்னிட்டுக் கொண்டு தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும் அநந்நியகதித்துவத்தையும் தெரிவித்துக் கொண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகின்றார்.

எம்பெருமானுடைய திருமார்பிலே நித்தியவாசம் பண்ணாநின்ற பெரியபிராட்டியார் 'இறையும் அகல கில்லேன்' (ஒரு கணமும் பிரியமாட்டேன்) என்பதைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறாளாம். ஒரு

நிமிடமும் பிரியாதே நித்திய சமச்லேசத்துடன் (= சேர்க்கையுடன்) இருக்கும்போது அகலுகைக்கு பிரசக்தி (= காரணம்) தானும் இல்லாதிருக்க இந்த வார்த்தை எதற்காகச் சொல்லவேண்டும் என்னில்: போக்கியதையின் (=இன்பத்தின்) கனத்தைப் பார்த்தவாறே "ஐயோ! அகலநேர்ந்து விடுமோ? என்னவோ?" என்ற அதிசங்கை (= ஐயம்) உண்டாகக் கூடியது; அந்த அதிசங்கை சொல்லுவிக்கச் சொல்லுகிறபடி என்ப.

**அலர்மேல் மங்கை:** புஷ்பத்தின் பரிமளம் (=மணம்) தானே ஒரு வடிவு கொண்டாப்போலே தோன்றினவளான ஸ்ரீமகாலட்சுமி அந்தப் பூவில் வசிக்க ருசியாதே அதை விட்டுத் திருமார்பிலே வந்து சேர்ந்தது அப்பூவிற் காட்டிலும் சௌகுமார்யாதி (=அழகு)சயமுள்ள இடம் திருமார்பே என்று அவ்வளவு சிறந்ததான ஸ்தானம் (=இடம்) கிடைத்தும் 'இது நமக்கு நிலைக்குமோ? நிலைக்காதோ? என்று அதிசங்கை தோன்றுவது விஷய வைலட்சண்யப்ரயுக்தம்.

**உறைமார்பா!:** அப்படிப்பட்ட பெரியபிராட்டியார் நித்தியவாசம் பண்ணும் திருமார்பையுடையவனே என்றவாறு. எம்பெருமானுக்கு உபாயத்துவமும் உபேயத்துவமும் ஆகிற இரண்டு தன்மைகளும் உண்டானாப் போலே பிராட்டிக்குப் புருஷகாரத்துவமும் உபேயத்துவமாகின்ற இரண்டு தன்மைகளும் உண்டு; புருஷகாரத்துவம் என்ற தன்மையை நினைத்து இப்போது இங்குப் பிராட்டியின் புருஷகாரம் என்று அறியக்கடவது. எம்பெருமானுடைய நாராயணத்துவ பிரயுக்தமான ஸ்வபாவிக சம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு ஆச்ரயிக்கும்போது இவளைப் புருஷகாரமாக முன்னிடவேண்டிய அவசியம் என்ன?என்னில்: குளிர்ந்த ஜலத்திலும் கூடக் கொடிதான நெருப்பு கிளருமாப் போலே சர்வபூதஸுஹ்ருத்தான அவன் திருவுள்ளத்திலே சேதநன் அளவு கடந்து பண்ணும் அபராதம் அடியாகச்

சீற்றம் பிறப்பதும் உண்டே; அங்ஙனே சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது இப்பிராட்டிக்காக என்க. தம்முடைய உபதேசாதிகளாலே அச்சீற்றத்தை யாற்றி தயையை ஜனிப்பிப்பவள் பிராட்டி; ஆகையாலே சம்பந்த உணர்ச்சியுள்ளவனுக்கும் அபராத பயத்தாலே புருஷகார பரஸ்கரணம் அவசியமேயாகும்.

பிராட்டியின் புருஷகாரம் அவ்வளவு காரியம் செய்யுமோஎன்னில்: 'அகில ஜகந்மாதரம்' என்றபடியே சேதநர்க்கு இவள் மாதாவாய் அந்த சம்பந்தம் அடியாக இவளது வருத்தம் கண்டு பொறுத்திருக்க மாட்டாதே இருக்கிற ஒரு தன்மையும், எம்பெருமானுக்குப் பத்தினியாய் 'பித்தர் பனிமலர்மேல் பாவைக்கும்' என்கிறபடியே அவன்தன் வைலட்சண்யத்தைக் கண்டு பிச்சேறித் தம் சொற்படி நடக்கும்படி அபிமத விஷயமாயிருக்கிற ஒருதன்மையும் உடையளாகையாலே இவளுடைய புருஷகாரம் ஒருவகையாலும் விபலமாக மாட்டாது.

உலகில் புருஷகாரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும்; எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேண்டுமோ அவர் விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்க வேண்டியது ஒன்று; யாரிடத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவரிடத்தில் தம்வாக்கு வெற்றி பெற்றே தீரும்படியான வால்லப்யம் இருக்கவேண்டியது மற்றொன்று, இவை இரண்டும் பிராட்டியிடத்தே புஷ்கலம் என்று சொல்லிற்றாயிற்று.

இதெல்லாம் உண்மையே; ஈசுவரனோ கேட்பாரற்ற சுதந்திரன்; அன்னவன் சேதநருடைய குற்றங்களை நிறுத்து அவற்றுக்குத் தக்கபடி 'தண்டனை செலுத்தியே தீர்வேன்' என்று நிற்குமளவில் பிராட்டிதான் என்ன செய்யமுடியும்? என்னில்: இது இவளுடைய செய்தியறியாதார் செய்யும் ஆட்சேபமாகும். இவள் சீதையாகப் பிறந்து சிறையிருந்த

காலத்தில் இவளைப் பத்து மாதம் இடைவிடாது படாத பாடுகளும் படுத்தின இராட்சசிகளின் கொடுமையை முன்னம் மரத்தின்மேல் மறைந்திருந்து கண்ட அநுமன் 'பெருமாள் வெற்றி பெற்ற பின்பு இவர்களைப் பார்த்துக் கொள்வோம்' என்று ஆறியிருந்து இராவணவதமான பின்பு ஓடிவந்து 'இவ்வரக்கிகளின் அபராதங்களை கணக்கிட்டுச் சித்திரவதம் பண்ண நினைத்திருக்கும் எனக்கு இடம் அளிக்க வேணும்' என்று (பிராட்டியை நோக்கி) கேட்டவளவிலே சொல்மிருங்கனான அவ்வநுமானையும் உட்பட இவள் உபதேசத்தாலே பொறுப்பித்தாள் என்பது ஸ்ரீராமாயண பிரசித்தம். அப்படிப்பட்ட இவள் 'அல்லி மலர் மகள் போகமயக்குளாகியும் நிற்கும் அம்மான்' என்கின்ற படியே தம் போக்யதையிலே மிகவும் ஈடுபட்டிருப்பவனாய் 'நின் னன்பின்வழி நின்று சிலைபிடித் தெம்பிரானே' என்கிறபடியே 'மாயாமிருகத்தின் பின்னே போ' என்றாலும் விளைவதறியாதே அதன் பின்னே தொடர்ந்து போமவனாய் இப்படி தனக்கு விதேயனாய் ரஸிகனாய் இருக்குமவனைப் பொறுப்பிக்கவல்லள் என்பதுபற்றிக் கேட்க வேணுமோ!

**'உறைமார்பா'** என்பதனால் புருஷகாரபூதையான பிராட்டியும் ஈசுவரனுமான இருவருடையவும் சேர்த்தியானது எப்போதும் உண்டென்று காட்டப் பட்டதாகும். ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி எம்பெருமானுக்கு ஸ்வரூப நிரூபகங்களோ அப்படியே ஸ்ரீயபதித்துவமும் நிரூபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வர சதபாவமென்று கொள்க. சேதநர்களின் அபராதங்களைக் கணக்கிட்டுத் தண்டிக்க வல்லவனான எம்பெருமானுடைய சுவாதந்திரியத்தையும் சேதநர்கள் செய்யும் குற்றங்களின் மிகுதியையும் கண்டு 'ஐயோ! என்னாகுமோ!' என்கிற பயத்தாலே எம்பெருமானை விட்டு ஒரு நொடிப்பொழுதும் அகலமாட்டாள். இப்படி இவள் இருந்து நோக்குகையாலே ஈசுவரனுடைய

சுவாதந்திரியத்தைக் கண்டோ தன்னுடைய அபராதங்களை நினைத்தோ சேதநன் அஞ்ச வேண்டிய பிரசக்தி இல்லை.

அன்றியும், பிராட்டியானவள் எப்போதும் எம்பெருமானோடு கூடியே இருக்கிறாள் என்று தெரிந்து கொள்ளுமளவில் எந்த சமயத்திலும் எம்பெருமானை ஆச்ரயிக்கலாம் என்பது தேறி நிற்கும். 'புருஷகாரம் செய்பவள் அங்கே இருக்கும் காலம் பார்த்து ஆச்ரயிக்க வேணும்' என்று சமய பிரதிட்சை வேண்டியதில்லை; ஆச்ரயிக்க வேணும் என்கிற ருசி பிறக்க வேண்டுமத்தனையே.

பிராட்டியின் புருஷகாரம் அவசியம் வேண்டிய தென்பதை விபவாவதாரகாலத்துச் செய்தியாலும் தெரிந்து கொள்ளலாம். இராமாவதாரத்தில் அளவு கடந்த அபராத்தைச் செய்து பிரம்மாஸ்திரத்திற்கு இலக்காய் தலையறுப்புண்ண வேண்டி காகம் கிருபைக்கு இலக்காய்த் தலை பெற்றுப் போனது பிராட்டி அருகில் இருத்ததனா லேயாம். அவ்வளவு அபராதியல்லாத இராவணன் இராம சரத்துக்கு இலக்காய் முடிந்து போனது இவளது சந்நிதி இல்லாமையினாலேயாம்.

இவ்வர்த்த விசேடங்களையெல்லாம் ஈட்டில் மிக அருமையாக அருளிச் செய்யப்பட்டவை; "ஒருநாள் பட்டர் பிள்ளையழகிய மணவாள அரையர்க்குத் துவயம் அருளிச் செய்கைக்காக 'எல்லோரும் போங்கோள்' என்ன, நஞ்சீயரும் எழுந்திருந்து போய் 'நம்மை இராய்' என்று அருளிச் செய்திலர் என்று வெறுத்திருக்க, அப்போதே 'ஜீயர் எங்கிருக்கிறார்?' என்று கேட்டருளித் தேடியழைத்துக் கூட வைத்துக் கொண்டிருந்து துவயத்தை அருளிச் செய்யா நிற்கச் செய்தே அப்போது அருளிச் செய்த வார்த்தை" என்று தொடங்கி ஈட்டு ஸ்ரீசூக்திகள் சேவிக்க.

**நிகரில் புகழாய்!** இத்யாதி. கீழ் முதலடியில் புருஷகார வரணம் பண்ணினவாறே அந்த புருஷகார பலத்தாலே

எம்பெருமானுடைய சுவாதந்திரியமானது தலைமடிந்து தலையெடுக்கும் குணங்கள் சில உண்டு; அந்தக் குணங்கள் ஆச்ரயண சௌகாரிய பாதகங்கள் என்றும் ஆச்ரித கார்யபாதகங்கள் என்றும் இரண்டு வகுப்பாயிருக்கும். அஞ்சாமல் கூசாமல் நாம் ஆச்ரயிக்கும்படி அநுகூலப் படுத்துகின்ற குணங்கள் ஆச்ரயண சௌகர்யா பாதகங்கள் எனப்படும். வாத்சல்யம், சுவாமித்வம், சௌசீல்யம், சௌலப்பியம் என்கின்ற குணங்கள் ஆச்ரயண சௌகர்யா பாதகங்களாம். ஆச்ரயணோன் முகனான இச்சேதநன் தன் தோஷங்களைப்பார்த்து அஞ்சும்போது தோஷ போக்யத ரூபமான வாத்சல்யத்தை நினைந்து அந்த அச்சம் தீரலாம். நம் கார்யம் செய்வானோ செய்யானோ என்ற சங்கை யுண்டானவளவில் இழவு பேறு தன்னதாம்படியான சுதந்திரத்தை நினைத்து அச்சம் தீரலாம். உபய விபூதிக்கும் கடவணாயிருக்கும் பெருமைக்கு பிரகாசமான சுவாமித்வத்தைக் கண்டு தன்னுடைய தண்மையை அநுசந்தித்து அகல நினைக்க நேருமளவில் தாழ நின்றவர்களோடே புரையறக் கலக்கும் சுவபாவமான சௌசீல்யத்தை நினைத்துத் தெளிவு பெறலாம். இந்திரியங்களுக்கு எட்டாதவனான அவனை நாம் எப்படி ஆச்ரயிப்பதென்று பிற்காலத்தில் நினைக்குமளவில், தன்வடிவை சட்சூர்விஷயமாக்குகிற கையாகிற சௌலப்பியத்தை, நினைத்துத் தெளியலாம். ஆக இந்த நான்கு குணங்களும் ஆச்ரயண சௌகர்யா பாதகங்களாகையாலே இவை இங்கு வரிசையாக அநுசந்திக்கப்படுகின்றன. எங்ஙனம் என்னில்:

(1). **நிகரில் புகழாய்** என்று வாத்சல்யத்தைச் சொன்னபடி; (2). **உலகம் மூன்று உடையாய்** என்று சுவாமித்துவத்தைச் சொன்னபடி: (3) **என்னை யாள்வானே** என்று சௌசீல்யத்தைச் சொன்னபடி; (4) **நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே** என்று சௌலப்பியத்தைச் சொன்னபடி.

பக்தர்களில் 'கைங்கர்ய நிஷ்டர்கள்' என்றும் 'குணாநுபவ நிஷ்டர்கள்' என்றும் இரண்டு வகுப்புண்டு. இங்கும் அப்பாகுபாட்டைத் திருவுள்ளம்பற்றியே 'அமரர் முனிக்கணங்கள்' என்றதென்று அருளிச் செய்வர். "வைகுண்டத் தமரரும் முனிவரும் வியந்தனர்" என்று பரமபதத்திலும் இங்ஙனே பாகுபாடு உள்ளதாகச் சொல்லிற்று.

**புகலொன்றில்லா அடியேன்**-ஆகிஞ்சநயமும் அநந்யகதித்வமும் பிரபத்திக்கு அதிகாரமாகையாலே அவை இரண்டையும் சொல்லுகிறதிங்கு. கர்மஞானபக்திகளிலும் அவற்றிற்கு ஏதுவான ஆத்மகுணங்களிலும் அந்வய மின்றிக்கே அவற்றுக்கு விபரீதங்களானவற்றால் தான் பரிபூரணனாயிருக்கிற இருப்பையும், தன்னுடைய ஸ்வரூபம் சர்வப்ரகாரத்தாலும் ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்தர மாயிருக்கிற இருப்பையும் அநுசந்தித்து நம் காரியத்துக்கு நாம் கடவோம் என்றிருக்கை = ஆகிஞ்சந்யம். மாதா பிதாக்கள் புத்திரர்கள் பராதாக்கள் பிரம்மருத்ராதிகள் யாரும் இரட்கரகளல்லர்; சர்வேசுரனே இரட்சகன் என்றிருக்கை = அநந்யகதித்துவம். இவை இரண்டும் உடைமை சொல்லிற்று - 'புகலொன்றில்லா அடியேன்' என்பதனால்.'

**உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன்:** ஆக இவ்வளவாலும் துவயத்தில் பூர்வகண்டம் அநுசந்திக்கப் பட்டதாயிற்று. பிரபத்தியானது வாசிகமாகவும் காயிகமாகவும் மானசீகமாகவும் உண்டு. 'என்னை நீ இரட்சிக்க வேணும்' என்று வாயினால் பிரார்த்திக்கை வாசிகமாகும். **அஞ்சலி:** பரமா முத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ?' என்கின்றபடியே 'பகவத் பிரசாத ஏது பூதமான அஞ்சலியைப் பிரயோகித்தல், காகாசுரன் முதலானோரைப் போலே இரட்சகவஸ்து இருந்த இடத்தே வருதல் செய்கை காயிகமாகும். ஜ்ஞாநாந் மோட்சமென்று சொல்லுகையாலே மானசீகமே சிறந்ததாகும். அதுவே இங்கு உற்றது. அஸ்மதாதிகளுடைய உஜ்ஜீவ நார்த்தமாக ஆழ்வார் பாசுரமிட்டு அருளிச் செய்த வித்தனை; இதனால்

ஆழ்வாருடைய பிரபத்தி வாசிக மென்று கொள்ளக் கடவதன்று.[6]

**குறிப்பு:** இதில் ஈட்டின் தொடர்கள் ஆங்காங்கே பயின்று வருகின்றன.

### எ-டு.2 பெரியதிருமொழி 2.5:3

*உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்*
*உலகுய்ய நின்றானை அன்று பேய்ச்சி*
*விடம்பருகு வித்தகனை கன்று மேய்த்து*
*விளையாட வல்லானை; வரைமீ கானில்*
*தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்*
*தவநெறிக்கோர் பெருநெறியை வையம் காக்கும்*
*கடும்பரிமேல் கற்கியைநான் கண்டு கொண்டேன்*
*கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசய னத்தே*

**(சொ.பொ):** உலகு உய்ய - (படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய மூன்று காரியங்களால்) உலகங்கள் வாழ்வதற்கான; உடம்பு உருவில் - சரீர சரீரிபாவனையை விட்டுப் பார்க்குமளவில்; மூன்று ஒன்று ஆய் - மூன்று தத்துவங்களும் ஒருபடியாய்; மூர்த்தி வேறு ஆய் நின்றானை - (உண்மையில்) சொரூபம் வேறுபட்டு நிற்குமவனும்; அன்று - (கண்ணனாகப் பிறந்த) அக்காலத்து; பேய்ச்சி - பூதனையினுடைய; விடம் - (முலையில் தடவியிருந்த) நஞ்சினை; பருகு-பானம் பண்ணின; வித்தகனை - ஆச்சரிய பூதனும்; கன்று மேய்த்து - கன்றுகளை மேய்த்து; விளை யாடவல்லானை - விளையாடுவதற்கு வந்து பிறந்தவனும்; வரைமீகானில் - மலைமீதுள்ள காடுகளிலே; தடம் - தடாகங்களிலே; பருகு - (கன்றுகளுக்கு நீர்பருகும்

6. இவற்றில் தமிழை நன்கு அறிந்த சுவாமி திரு.வி.க. நடை போன்ற எளிய தமிழ்நடையைக் கையாண்டிருந்தால் வைணவரல்லாதாரும் அறிந்து கொள்ள வாய்ப்பு இருந்திருக்கும். சுவாமி கையாண்டிருக்கும் இந்நடையையும் அறிந்து கொள்ளும் வைணவர்கள் அருகிக் கொண்டே வருகின்றனர்.

விதத்தைப் பயிற்றுவிக்கைகாகத் தான் இறங்கிக் கையை முதுகிலே கட்டிக் கொண்டு) தண்ணீர் குடித்தவனும்; கருமுகிலை - காளமேகம் போன்றவனும்; தஞ்சை கோயில் - தஞ்சை மாமணிக்கோயிலிலே; தவநெறிக்கு ஓர் பெரு நெறியை - (தன்னைக் கிட்டுகைக்கான) உபாயங்களிலே சிறந்த உபாயம் தானாக; வையம் காக்கும் - உலகத்தைக் காப்பதற்காக; கடுபரிமேல் கற்கியை - கடுநடையுடைய குதிரையின்மேலே கற்கி அவதாரம் செய்யப் போகிற வனுமான எம்பெருமானை; கடிபொழில்சூழ் - மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த; கடல் மல்லை தலசயனத்தே - திருக்கடல் மல்லையிலே; கண்டு கொண்டேன் - (நான்) கண்டு கொண்டேன்.

**விளக்கம்: உலகு உய்ய உடம்புருவில் மூன்று ஒன்றாய் மூர்த்தி வேறு ஆய்நின்றானை:** பரமபுருஷனான எம்பெருமானுக்கு சேதநாசேதநங்கள் முற்றும் சரீரங்கள் என்பது சித்தாந்தம்; 'அங்காநி அந்யா தேவதார: என்றும் விசேஷித்தும் ஓதப் பெற்றுள்ளது. ஆகவே, சரீர-சரீரி பாவனையாகிற விசிஷ்டவேஷத்தையிட்டுப் பார்க்கு மளவில் வேற்றுமை ஏற்படுவதற்கு வழியின்றியே 'ஸப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்திரஸ் ஸோக்ஷ; பரமஸ் ஸ்வராட்' என்றும், 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்றும் அபேத மாயுள்ளதாகச் சொல்லும் படியாயிருக்கும்; உலகத்தில், சரீரத்தோடு கூடின ஒரு ஆன்மாவைப்பற்றி நாம் வயவ ஹரிக்கும்போது, சரீரத்தைத் தனிப்பட்ட வஸ்துவாகவும், சரீரியான ஆன்மாவைத் தனிப்பட்ட வஸ்துவாகவும் பிரித்து இரணடாக வ்யஹரிக்காமல் இரண்டையும் சேர்த்து ஒரே பொருளாக வ்யவஹரியா நின்றோமன்றோ? இந்த ஐக்கிய வ்யவ்ஹாரத்திற்கு சரீர-சரீரிபாவனையாகிற சம்பந்தமே நிமித்தம்; அதுபோலவே, பிரமன் முதலிய தேவதைகட்கும் எம்பெருமானுக்கும் சரீர-சரீரி பாவனை சம்பந்தம் சாத்திரச் சித்தமாயிருப்பதால் அந்த சம்பந்தத்தையிட்டு நோக்கு

மளவில் வேற்றுமை தோன்றாது; ஒற்றுமை தோன்றும்; இதனையே '**உடம்புருவில் மூன்றொன்றாய்**' என்பதனால் அருளிச் செய்கின்றார்.

**மூர்த்தி வேறாய் நின்றானை:** உண்மையில் ஸ்வரூப பேதம் உண்டாகையாலே அதைச் சொன்னபடி. ஆக இத்தால் தேறின பொருள்யாதெனில்: "பிரமன், சிவன், இந்திரன், சந்திரன் முதலிய தெய்வங்கள் எல்லாம் நாராயணனே" என்று சாத்திரத்தில் பலவிடங்களில் சொல்லப்பட்டுள்ளது; அவ்விடங்களை எப்படி நிர்வகிக்க வேண்டுமென்றால்: 'பிரமன் முதலிய தெய்வங்களைச் சரீரமாகக் கொண்ட சர்வ சரீரியான சீமந் - நாராயணன் ஒருவனே' என்று சொல்லிற்றாக நிர்வகிக்க வேணும்; தெய்வங்கள் பலபல உள்ளனவாக எவ்விடங்களில் சொல்லப் பட்டுள்ளதோ, அவ்விடங்களில், சர்வசரீரியான சீமந் நாராயணனிற் காட்டில் சரீரங்களான தெய்வங்களுக்கு உள்ள ஸ்வரூப பேதம் சொல்லப்படுவதாக நிர்வகிக்க வேணும் - என்கின்ற இந்த அர்த்தம் இப்பாசுரத்தில் முதல் அடியில் காட்டப்பட்டதாகக் கொள்க.

பிரமன் சிவன் முதலிய தெவங்களைத் தனிப் படவும் நிறுத்தினது ஏதுக்காகவென்னில்: சிருஷ்டி, சம்ஹாரம் முதலிய சில லோக வியாபாரங்கள் நடைபெறுவதற்காக வென்பார் "**உலகுய்ய**" என்றார்.

**'வரைமீகானில் தடம் பருகு கருமுகிலை'** என்பதற்கு **நஞ்சீயர்** பொருள் சொல்லும்போது வேறுவிதமாகச் சொல்லா நிற்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த **பிள்ளையழகிய மணவாளப் பெருமாளரையர்** "இவ்விடத்திற்கு பட்டர் அருளிச் செய்யும் பொருள் இப்படியன்றே" என்று சொல்லி பட்டர் அருளிச் செய்த விசேஷார்த்தத்தை ஸ்மரிப்பித்தாராம்; அதாவது - மலைமேல் காட்டில் உள்ள தடாகங்களில் கன்றுகள் தண்ணீர் குடிக்கப் புகுங்கால் இளங்கன்று களாகையாலே நீரிலே முன்னேயிறங்கிக் குடிக்க அஞ்சுமாம்;

அக்கன்றுகட்கு நீருண்ணும் விதத்தைப் பழக்குவிப்ப தற்காகக் கண்ணபிரான் தான் தன் முதுகிலே கையைக் கட்டிக் கவிழ்ந்து நின்று தண்ணீரமுது செய்து காட்டுவன்; அதைச் சொல்லுகிறது **'வரைமீகானில் தடம்பருகு'** என்று,

**தவநெறிக்கு ஓர் பெருநெறியை:** எம்பெருமானைப் பெறுவதற்குக் கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலிய உபாயங்கள் பல விதிக்கப்பெற்றிருந்தாலும், ஆனையின்மேல் ஏற நினைப்பார்க்கு ஆனையின் காலைப் பற்றியே ஏறவேண்டுவதுபோல் எம்பெருமானது திருவடிகளைப் பற்றியே அவனைப் பெறுதல் வேண்டும் என்றும், அவனே சித்தோபாயம் என்றும் பரமைகாந்தி சித்தாந்த மாயிருத்தலால், எல்லா உபாயங்களிலுள்ளும் சீரிய உபாயம் தானேயாயிருப்பவன் என்றும் சொல்லப்பெற்றது.

தருமங்கள் முற்றும் குன்றி அதருமங்கள் அதிகரித்துக் கலி முற்றுங்காலத்தில் எம்பெருமான் குதிரை மீதேறி வந்து **கல்கி** என்னும் திருநாமம் உடையவனாய் துஷ்டர்களைத் தொலைத்து மண்ணின் பாரம் நீக்குவான் என்று நூற் கொள்கையுள்ளதனால் **'கடும் பரிமேல்கற்கியை'** என்றார்; இது பவிஷ்யவதாரம். இப்படிப்பட்ட எம்பெருமானைத் திருக்கடல் மல்லையிலே சேவிக்கப் பெற்றேன் என்றாராயிற்று.[7]

இவ்வுரையில் உரைமன்னர் பெரியவாச்சான் பிள்ளை யவர்களின் உரைகளிலுள்ள சொற்றொடர்கள் விரவி வருதலைக் காணலாம்.

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளாலும் திவ்வியார்த்த தீபிகை ஒரு **சிறந்த வழிநூலாகத்** திகழ்வதை அறியலாம்.

7. சுவாமி மிக்க தமிழ் புலமை உள்ளவர். இடைஇடையே வரும் வடமொழிச் சுலோகத் தொடர்கட்கு அடிக்குறிப்பில் பொருள் விளக்கம் காட்டியிருப்பின் வடமொழி அறியாதவர்கட்குப் பேருதவியாக இருந்திருக்கும்.

# 10. சம்பிரதாய வைணவ மரபுகள்

தீபிகையை ஆழ்ந்து நுணுகிக் கற்கும்போது வைணவத்திற்கே உரிய சில மரபுகளை அறிய முடிகின்றது. அவற்றை ஈண்டுக் குறிப்பிட்டுவோம்.

(1) **சம்பிரதாயப் பெயர்கள்** : வைணவ உரையில் சில பெரியோர்களின் இயற்பெயர்கள் சம்பிரதாயமாக மாறி வழங்கப்பெறும். அநுமன் '**சிறிய திருவடி**' என்றும், கருடன் '**பெரிய திருவடி**' என்றும், ஆதிசேடன் '**அனந்தாழ்வான்**' என்றும், இலக்குவன் '**இளைய பெருமாள்**' என்றும், இராமன் '**பெருமாள்**' என்றும், வீடணன் '**விபீடணாழ்வான்**' என்றும், சுக்கிரீவன் '**மகராசர்**' என்றும், சடாயு '**பெரிய உடையார்**' என்றும், திருமலை '**திருமலை ஆழ்வார்**' என்றும் ஆழ்வார் திருநகரியின் திருக்கோயிலிலுள்ள புளியமரம் '**திருப்புளியாழ்வார்**' என்றும், திருவரங்கநாதன் '**பெரிய பெருமாள்**' (தெலுங்கு '**பெத்த பெருமாள்**') என்றும், ஆளவந்தார் '**பெரிய முதலியார்**' என்றும் சம்பிரதாயப் பெயர்களுடன் வைணவர்களின் திருவுள்ளத்தில் இடம் பெற்றுள்ளன. இங்ஙனமே கூரத்தாழ்வான் '**ஆழ்வான்**' என்றும், கிடாம்பி **ஆச்சான்** '**ஆச்சான்**' என்றும், திருக்குருகைப்பிரான் பிள்ளான் '**பிள்ளான்**' என்றும், குருகைக் காவலப்பன் '**அப்பன்**' என்றும் பெரியவாச்சான் பிள்ளை '**ஆச்சான் பிள்ளை**' என்றும், முதலியாண்டான் '**ஆண்டான்**' என்றும் சுருக்கமான பெயர்களால் வழங்கப்பெறுவர்.

(2) **எம்பெருமானின் திருக்கழல்கள்** : வைணவத் திருத்தலங்களில் திருவரங்கம் '**கோயில்**' என்றும்,

திருவேங்கடம் '**திருமலை**' என்றும், சம்பிரதாயமாக வழங்கப் பெற்று வருகின்றன. நம்மாழ்வாரின் முதற் பிரபந்தமான **திருவிருத்தத்தில்** திருவரங்கம், திருவெஃகா, திருவேங்கடம் என்ற மூன்று திருப்பதிகளின் பெயர்கள் மட்டிலும் (28, 26, 31) வருவதால் இச்சிறப்புப் பெயர்கள் பெற்றனவாகப் பெரியோர் பணிப்பர். திருவரங்கம் அழகிய மணவாளனின் திருவடி '**திருப்பொலிந்த சேவடி**' (பெரியாழ். திரு. 5.4:7) என்றும் கச்சிநகரிலுள்ள தேவப் பெருமாளுடைய திருவடி '**துயரறு சுடரடி**' (திருவாய் 1.1:1) என்றும், திருவேங்கட முடையான் திருவடி '**பூவார் கழல்கள்**' (திருவாய் 6.10:4) என்றும் சம்பிரதாயத் திருநாமங்களாகப் பெரியோர் பணிப்பர்.

(3) **ஈசுவரனின் திருமேனி** : கருடனது உடலாய் நிற்கும் வேதத்தின் பொருளாய் நிற்பவன். இவன் திருமேனியில் சீவன் இரத்தினங்களுள் சிறந்த '**கௌத்துபமாக'வும்,** மூலப் பிரகிருதி '**ஸ்ரீவத்ஸம்**' என்னும் மறுவாகவும், மான் என்னும் தத்துவம் 'கௌமோதகி' என்னும் கதையாகவும், ஞானம் '**நந்தகம்**' என்னும் வாள் (கத்தி) ஆகவும், மருள் '**வாளின் உறை'யாகவும்,** தாமசாகங்காரம் '**சார்ங்கம்**' என்னும் வில்லாகவும். சாத்விகாங்காரம், '**பாஞ்சசந்யம்**' என்னும் சங்காகவும், மனம் '**சுதர்சனம்**' என்னும் சக்கரமாகவும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகிய பத்தும் '**அம்புகளாகவும்**', தந்மாத்திரைகள் ஐந்தும் பூதங்கள் ஐந்தும் ஆகிய '**இருவித பூதங்களின்**' வரிசையாகவும், **வைஜயந்தி** என்னும் மாலை **வனமாலை** யாகவும், இப்படி எல்லாத் தத்துவங்களும் எம்பெருமானுக்கு ஆயுதமாகவும் ஆபரணமாகவும் இருப்பதாகக் கருதுவது வைணவ மரபு.[1] அஃதாவது எம்பெருமான் சேதநம் அசேதநம் என்னும் தத்துவங்கள் அனைத்தையும் ஆபரண மாகவும் ஆயுதமாகவும் கொண்டுள்ளான்.

1. தேசிகப்பிரபந்தம் - 80

பகவானுடைய ஆபரணங்கள் '**திவ்வியாபரண ஆழ்வார்கள்**' என்றும் திருநாமத்தால் வழங்கப்பெறும். உலகிலுள்ள மற்ற ஆபரணங்களுக்கில்லாத மென்மை, மணம், அழகு, ஒளி முதலியன இவ்வாபரணங்களுக்கு உண்டு. சங்கு சக்கரம் முதலிய ஆபரணங்கள் பகவானை வெறுத்து நிற்பவர்கட்கு ஆயுதங்களாகவும், விரும்பி நிற்பவர்கட்கு ஆபரணங்களாகவும் தோன்றும். ஆபரணங்களுக்கு எங்ஙனம் தோற்றம் அழிவு முதலிய குற்றங்கள் இல்லையோ அங்ஙனமே ஆயுதங்களுக்கும் இவை இல்லை. நித்திய சூரிகளே '**திவ்வியாபரணாழ்வார்கள்**', '**திவ்வியாயுதாழ் வார்கள்**' எனப் பெயர் பெற்றுள்ளனர். இவை பகவானுடைய ஆயுதங்கள் என்னும் நிலைக்கேற்ப ஞானம், சக்தி முதலிய திருக்குணங்களைப் பெற்றுள்ளன.

(4) **நம்மாழ்வாரின் திருமேனி:** ஆழ்வார்கள் பன்னிருவர்களுள் சடகோபர் 'நம்மவர்' என்று போற்றத்தக்க பெருமை வாய்ந்து '**நம்மாழ்வார்**' என்ற சிறப்புத் திருநாமத்தால் வழங்கப்பெறுகின்றார். ஏனைய ஆழ்வார் களை நம்மாழ்வாரின் ஒவ்வோர் அவயவமாகவும் நம்மாழ் வாரை அவயவியாகவும் வழங்குவது மரபு. ஆழ்வாரின் **திருமுடி** நம்மாழ்வார். பூதத்தாழ்வாரைத் **தலையாகவும்** பொய்கை பேயாழ்வார்களைத் **திருக்கண்களாகவும்,** பெரியாழ்வாரைத் **திருமுகமண்டலமாகவும்,** திருமழிசையாழ்வாரைக் **கழுத்தாகவும்,** குலசேகராழ்வாரையும் திருப்பாணாழ்வாரையும் **திருக்கை களாகவும்,** தொண்டரடிப்பொடியாழ்வாரைத் **திருமார்பாகவும்,** திருமங்கையாழ்வாரைத் **திருநாபியாகவும்** மதுரகவிகளையும் எம்பெருமானாரையும் (இராமாநுசர்) **திருவடிகளாகவும்** பெரியோர் அருளிச் செய்வர்.

நம்மாழ்வார் திருமால் திருவடியில் எப்போதும் விளங்குகிறார் என்பது வைணவ சமயக் கொள்கை. அதனால் திருமால் திருக்கோயில்களில் அப்பெருமானைச் சேவிக்க முடிமீது

அவர் திருவடியாக வைக்கப்பெறுவதைச் **சடகோபன், சடாரி** என்று வழங்குகின்றனர். **சடகோபன், சடாரி** என்பன நம்மாழ்வாரின் திருப்பெயர்களாகும்.

**(5) இராமாநுசரின் திருமேனி** : நம்மாழ்வாரைத் **தலை**யாகவும், நாதமுனிகளைத் **திருமுக**மாகவும், உய்யக்கொண்டாரை (புண்டரீகாட்சரைக்) **கண்** ஆகவும் மணக்கால் நம்பியை (இராம மிஸ்ராவைக்) **கன்ன**மாயும், ஆளவந்தாரை (யாமுனாசாரியரை) **மார்பிட**மாகவும், பெரிய நம்பியைக் **கழுத்தா**கவும், திருக்கச்சி நம்பிகையைத் **திருக் கை**யாகவும், திருக்கோட்டியூர் நம்பியை **ஸ்தன**மாயும், திருவரங்கப் பெருமாளரையரை **வயிறா**கவும், திருமாலை யாண்டானை **முதுகா**கவும், கிடாம்பியாச்சானை **இடுப்பா**கவும், எம்பாரை **இடையா**கவும்; பட்டரையும், நஞ்சீயரையும் **புட்டங்களா**கவும், நம்பிள்ளையைத் **துடை**யாகவும், வடக்குத் திருவீதிப் பிள்ளையைத் **முழங்கால்களா**கவும், பிள்ளை லோகாசாரியரைத் **திருவடி**யாகவும், **திருவாய்மொழிப்** பிள்ளையை **பாதரேகை**யாகவும், மணவாள மாமுனிகளைத் **பாதுகை**யாகவும், **சேனாபதி** ஜீயரை **ஊர்த்துவ புண்ட்ர**மாகவும், (திருமண்காப்பு) கூரத்தாழ்வானைப் **புரிநூலா**கவும், முதலியாண்டனைத் **திரிதண்ட**மாகவும், கிடாம்பியாச்சானைக் **கமண்டல**மாகவும், வடுக நம்பியைக் **கல்லாடை**யாகவும், திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் **தோமாலை**யாகவும், பிள்ளையுறங்காவில்லிதாசரை **நிழலா**கவும் - இங்ஙனம் இராமநுசரைச் **சர்வாசார்ய சொரூபராகக்** கொள்வது மரபு.

**(6) கோயில், திருமலை பெருமாள் கோயில்** : திருவரங்கத்து அழகிய மணவாளன் இராமாவதாரக் கூறுடையவன் **(தோலாத தனிவீரன் தொழுத கோயில்)** என்பதும், திருவேங்கடத்துத் திருவாழ்மார்பன் (சீநிவாசன்) கண்ணன் அவதாரக் கூறுடையவன் **(கண்ணன் அடியினைக் காட்டும் வெற்பு)** என்பதும், அத்திகிரி அருளாளன் இந்த

இரண்டு அவதாரக் கூறுகளை யுடையவன் என்பதும் வைணவர்களிடையே வழங்கி வரும் கருத்துகளாகும்.[2]

(7) **திருக்கோயில் அமைப்பு** : திருக்கோயில் சில தத்துவங்கள் விளக்கம் பெறுவனவாக உள்ளன.

(i) **திருவரங்க விமானம்** ஏழு சுற்றுகளுக்கும் நடுவில் உள்ளது. பிரணவ ஆதாரமாயுள்ளது. நான்கு திருமறைகளும் சாத்திரங்களும் தூபிகளாயுள்ளன. பரவாசுதேவன் இதிலிருந்து சேவை சாதிக்கின்றான். '**ஓம்**' என்ற பிரணவம் விமானமாகவும் '**நமோ நாராயணாய**' என்பதிலுள் ஏழு எழுத்துக்கள் ஏழு திருமதில்களாகவும் அமைந்துள்ளன.[3] எட்டெழுத்து மந்திரத்தை ஆராய்பவருக்கு இறைவனின் தன்மை புலப்படுவது போல திருஅரங்கத்திற்குச் செல்பவர் கட்கும் இறைவன் நேரே புலனாவான் என்பது கருத்து.

விமானத்தின் முன்பகுதியில் நிற்பது **காயத்திரி** மண்டபம்; விஷ்ணு காயத்திரியின் அறிகுறியாக 24 தூண்களால் அமைக்கப்பெற்றது (24 தத்துவங்களின் அறிகுறியாக இருப்பனவாகவும் கருதலாம்)

(ii) காஞ்சி வரதராசரைச் (அத்திகிரி[4] அருளாளனைச்) சேவிக்க 24 படிகளை ஏறிச் செல்லவேண்டும். இவை 24 தத்துவங்களின் குறியீடுகள் : அதாவது தந்மாத்திரைகள் 5; ஞானேந்திரியங்கள் 5 ; கருமேந்திரங்கள் 5; பூதங்கள் 5 ; ஆக இவை 20. இவற்றுடன் பிரகிருதி 1, மகான் 1, அகங்காரம் 1, மனம் 1 ஆக நான்கும் சேர 24 தத்துவங்களாகின்றன. இவற்றுடன் புருடன் (ஆன்மா)[5], மகாபுருடன் (பரமான்மா) 1 சேர்ந்து வைணவ தத்துவம் 26 ஆகின்றது.

2. தேசிகப் பிரபந்தம் - 81, 82, 83
3. திருவரங்கமாலை - 95
4. ஹஸ்தி - யானை; கிரி - மலை. 'ஹஸ்தி கிரி' தமிழில் 'அத்தகிரி' என்றாயிற்று.
5. புருடன் - புருஷன். இது சரீரத்தில் வசிப்பவன் என்று பொருள்படும்.

(iii) திருக்கோட்டியூர் திருக்கோயிலின் விமானம் 'அட்டாங்க விமானம்' என்பது; 90 அடி உயரம் உள்ளது. இதன் நிழல் தரையில் விழுவதில்லை. தஞ்சைக் கோபுரத்தின் நிழல்போல ஒன்றன்மீது ஒன்றாக மூன்று தளங்களையுடையது. மேல்தளத்தில் திசைக்கொன்றாக எட்டு விமானங்கள் உள்ளன. எட்டு விமானங்கள் திருமந்திரத்தின் எட்டெழுத்துகள் போலவும் விமானத்தின் மூன்று தளங்கள் திருமந்திரத்தின் மூன்று பதங்கள் (ஓம் + நமோ + நாராயணாய) போலவும், மூன்றெழுத்துகளுடன் கூடிய (அ+உ+ம) பிரணவம் போலவும் அமைந்திருப்பதாக ஐதிகம்.

# 11. அகப்பொருள் தத்துவம்

ஆழ்வார் பாசுரங்களில் அகப்பொருள் பாசுரங்களுக்கு வியாக்கியானம் செய்த ஆசாரியப் பெருமக்கள் சங்க கால நெறியினை யொட்டி பிற்காலத் தத்துவ முறையைக் கலந்து ஓர் அகப்பொருள் நெறியினை அமைத்துக் காட்டியது போல் எந்த சமயத்தாரும் காட்டிற்றிலர். இந்த முறையை எளிமைப்படுத்தி நம் சுவாமிகள் தம் தீபிகையில் காட்டி யுள்ளார்கள். இம்முறையை விளக்குவதால் சுவாமிகளின் ஒப்புயர்வற்ற உள்ளப் பாங்கினைக் காட்டுவதாக அமையும்.

பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள உறவு **ஒன்பது** வகைப்படும் என்று சாத்திரங்கள் சாற்றுவதை எட்டெழுத்து மந்திரமும் குறிப்பிடுவதாக ஆசாரியப் பெருமக்கள் உரைத்து போயினர். இந்த உறவு முறையினை அறிந்து கொள்வதே **சம்பந்தஞானம்** என்பது. இதனை அறிந்து கொள்ளாததால்தான் ஆன்மாக்கள் நெடுங்காலமாக இறைவனை விட்டுப் பிரிந்து பிறவிக்கடலில் ஆழ்ந்து துன்புறுகின்றன. சர்வேசுவரனையும் நம்மையும் பொருத்தி வைப்பது **இச்சம்பந்த ஞானமேயாகும்.** சம்பந்த ஞானம் உடையவர்களிடத்தில் சர்வேசுவரன் விரும்பியடைவன். ஆதலால் சம்பந்த ஞானம் ஈசுவரனையும் விருப்புறுத்து வதற்கு உரியதாகின்றது. இந்த ஞானமில்லாத பிறவி பயனற்ற பிறவியாகின்றது.

இந்த **ஒன்பது** வகையான சம்பந்தங்கள் ஓர் ஆன்மாவுக்கும் பிறிதோர் ஆன்மாவுக்கும் வினைப்பயனால் நேரிடுகின்றது. இவை வினையின் தொடர்பு நீங்கும்போது மாறி விடுகின்றன.

ஒரு பிறவியில் நேரிடும் அனைத்துத் தொடர்புகளும் பிறிதொரு பிறவியில் இருப்பதில்லை. ஆனால் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள சம்பந்தம் **'உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழியாது'** (திருப். 28) என்று ஆண்டாள் அருளியவாறு அழியா திருத்தலாகும். இதனைப் பிள்ளைஉலக ஆசிரியர் அருளிச் செய்த **'நவவித சம்பந்தம்'** என்ற நூலில் தெளிவாகக் காணலாம்.

வேதாந்தங்களில் குறிப்பிடப் பெறும் **பக்தி** இங்ஙனம் ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்றலை அறிய முடிகின்றது. இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் **'பகவத் விஷயகாமம்'** என்று வழங்கப்பெறும். இங்ஙனம் இவர்கள் மாதவன்மீது கொள்ளும் காமம் மக்கள் மங்கையர்மீது கொள்ளும் **'விஷய காமத்தினின்றும்'** மாறுபட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் பகவத் விஷய காமத்திற்கும் கூறப்பெறும், சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பதுபோல பகவத் விஷயாநுபவத்திற்கும் **பரபக்தி**[1], **பரஞானம்**[2], **பரமபக்தி**[3] என்பவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்கள் கூறப்பெறுவனவாக சமயச் சான்றோர்கள் பணிப்பர்.

1. பரபக்தி - எம்பெருமானை நேரில் காணவேண்டும் என்ற ஆவல்.
2. பரஞானம் - எம்பெருமானை நேரில் காணல்.
3. பரமபக்தி - எம்பெருமானை மேன்மேலும் இடைவிடாது அநுபவிக்க வேண்டும் என்னும் ஆவல்.

அன்றியும், எம்பெருமானோடு கூடினபோது சுகிக்கும்படியாகவும், பிரிந்தபோது துக்கிக்கும்படியாகவும் இருப்பது **பரபக்தி**; பகவானுடைய முழுமையான நேர்காட்சி **பரஞானம்**; அவனுடைய அநுபவம் பெறாவிடில் நீரை விட்டுப்பிரிந்த மீன்போல மூச்சு அடங்கும்படி இருத்தல் **பரமபக்தி**, இவ்வாறு நம் பண்டைய ஆசாரியர்கள் நிலைப்படுத்துவர்.

காதல் சுவையின் தொடர்பு சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்க, காதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப் பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமான வேப்பிலை உருண்டையை உட்கொள்ளவேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக்கொடுத்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சருக்கரைப் பாகுபூசி இனிப்புச் சுவையை உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையில் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் பணிப்பர். இது கடையாய காமத்தினை யுடையவர்கட்குக் காட்டப்பெறும் உக்தி முறையாக '**இறையனார் களவியலிலும்**[4] கூறப்பெற்றுள்ளமையை ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தல் தகும். ஆழ்வார்களின் முறுகிய பக்தி நிலையை உணர்த்துவதற்கேற்ற ஓர் **இலக்கியமரபே** இஃது என்று கொள்ளினும் இழுக்கில்லை.

**அகப்பொருள் பாசுரங்கள்** : எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப் பட்டிருக்கும். அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், வடிவழகை வருணித்து அநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லியநுபவித்தல், அவன் உகந்தருளின திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசியநுபவித்தல் என்பவை பகவதநுபவம். இவற்றுள் மிக அருமையான, அற்புதமான மற்றொரு வகையும் உண்டு. அஃதாவது ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக் கொண்டு வேற்று வாயால் பேசி அநுபவித்தல். இம்முறையை '**நாயக - நாயகி பாவனை**' என்று வழங்குவார்கள். இது நவவித சம்பந்தங்களில் நான்காவது சம்பந்தமாக அமையும்; அதாவது **உகாரத்தினால்** பெறப்படுவது இந்த உறவே

4. இறை. கள - நூற்பா - 2. இன்உரை காண்க.

அகப்பொருள். தத்துவமாக விரிகின்றது. இந்த உறவே ஏனைய எல்லாவற்றிலும் சிறந்தது; உயிராயது. இந்த முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து விளக்கும் பாசுரங்கள் எழுகின்றன. இம் முறையை **ஆசாரிய ஹிருதயம்**

*ஞானத்தில் தம்பேச்சு*
*பிரேமத்தில் பெண் பேச்சு (118)*

என்று குறிப்பிடும். அதாவது ஞான நிலையில் இருக்கும் போது - தாமான நிலையில் பேசும் பாசுரங்களாக இருக்கும். பிரேம நிலையில் இருக்கும்போது பெண் தன்மையை அடைந்து வேற்று வாயாலே பேசும் பாசுரங்களாக இருக்கும். இந்நிலையில் நம்மாழ்வார் **பராங்குசர்** என்ற பெயராலும் திருமங்கையாழ்வார் **பரகாலர்** என்ற பெயராலும் வழங்கப்பெறுவர்.

**மரபுகள் - விளக்கம் :** ஆழ்வார்கள் தாமான தன்மையை விட்டுப் பிராட்டியான **பெண்பாவனையை** ஏறிட்டுக் கொள்ளுதல் எதற்காக? என்ற வினா எழுகின்றது. ஆழ்வார்கள் பெண் தன்மையைத் தாமாக ஏறிட்டுக் கொள்ளுகின்றனரல்லர். இந்நிலை (அவஸ்தை) தானே பரவசமாக வந்து சேர்கின்றது. புருடோத்தமனாகிய எம்பெருமானின் பேராண்மைக்கு முன் உலகம் அடங்கலும் பெண்தன்மையாக இருத்தலாலும், சீவான்மாவுக்கு சுவாதந்திரிய நாற்றமேயின்றிப் பாரதந் திரியமே வடிவாயிருப்பதாலும் இவ்வகைகளுக்கேற்பப் பெண்பாவனை வந்தேறியன்றோ என்று கொள்ளுதல் வேண்டும். எனவே, ஆழ்வார்கள் குறிப்பாக நம்மாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் பெண் தன்மை எய்திப் பல திருக்கோயில் எம்பெருமான்களைப் பக்திப் பரவசத்தால் பாடி அநுபவித்ததை அவரவர்களுடைய திருப்பாசுரங்களில் கண்டு மகிழலாம்.

வைணவர்களிடையே நிலவும் இன்னொரு மரபும் உண்டு. தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானது பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆய மங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்ற வழக்கு ஒன்று உண்டு. ஆனால், ஆழ்வார்கள் அப்படி யின்றி அப்பொழுதே பெண்மை நிலையை அடைந்து எம் பெருமானாகிய புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக் கின்றனர் என்பதுதான் அந்த மரபு.

**திருவாய்மொழியில்** 27 பதிகங்கள் பெண் பாவனையில் பேசியனவாக அமைந்துள்ளன. **பெரிய திருமொழியில்** உள்ள அகப் பொருள் துறைகளில் அமைந்த பதிகங்கள் 23; திருநெடுந்தாண்டகத்தில் உள்ளவை 2 பதிகங்கள்; மடல் 2 ஆக மொத்தம் 27 பதிகங்கள். இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து கொண்டு எம்பெருமானை அநுபவிக்கும்பொழுது அவர்கள் **தோழி, தாய், மகள்** என மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர்.

> *"சம்பந்த உபாய பயன்களில் உணர்த்தி துணிவு*
> *பதற்றம் ஆகிய பிரஜ்ஞாவஸ்தைகளுக்குத் தோழி*
> *தாயார் மகள் என்று பேர்" (138)*
> *(பிரஜ்ஞாவஸ்தை - மூன்று காலங்களையும் அறியும்*
> *அறிவின் நிலை)*

என்று **ஆசாரிய ஹிருதயம்** கூறும். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்கட்குத் தத்துவமும் கூறுகின்றது. இந்த மூன்று நிலைகளையும் மூன்று **'பிரஜ்ஞாவஸ்தைகள்'** (அவஸ்தை - நிலை) என்று விளக்கமும் தருகின்றது. இந்த மூன்று நிலைகளும் 'ஞானாவஸ்தைகள்' என்னாமல் 'பிரஜ்ஞாவஸ்தைகள்' என்பதற்குக் காரணம் என்ன? இந்நிலைகள் அவர்கட்கு எல்லாக் காலங்களிலும் உண்டு என்னுமிடம் தோற்று

கைக்காக. திருவெட்டெழுத்தின் **மூப்பதப் பொருள்களைப்** பற்றிய ஞானமும் இவர்கள் திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தேயன்றோ இருப்பது?

**விளக்கம் :** மூன்று வகையாகச் செல்லும் பாசுரங்கட்கு திருமந்திரத்தின் அடிப்படையில் விளக்கமும் தந்துள்ளனர் நம் ஆசாரியப் பெருமக்கள். **'ஓம் நமோ நாராயணாய'** என்பது திருமந்திரம். இதிலுள்ள மூன்று பதங்களும் முறையே மூன்று பொருள்களைச் சொல்லுகின்றன.[5] அவை **சேஷத்துவம், பாரதந்திரியம், கைங்கரியம்** என்பன.[6] அதாவது **'பிரணவம்'** சேஷத்துவத்தையும் (பிறருக்கு அடிமையாய் இருத்தலையும்), **'நமஸ்ஸு'** பாரதந்திரியத் தையும் (பரன் அல்லது பகவானுக்கு வசப்பட்டு இருத் தலையும்), **'நாராயணாய'** சேதநன் ஈசுவரனுக்குப் புரிய வேண்டிய கைங்கரியத்தையும்[7] தெரிவிக்கின்றன.

மற்றும், **'ஓம்'** என்னும் பிரணவம் பிரிந்திருக்கும் நிலையில் **அ, உ, ம** என்ற மூன்று எழுத்துகளைக் கொண்டது. இந்த மூன்று எழுத்துகளும் மூன்று பதங்களாய் மூன்று பொருள்களைத் தெரிவிக்கும். அஃதாவது **அகாரம்** பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள (தொக்கி நிற்கும்) நான்காம் வேற்றுமை சேஷத்துவத்தையும் (அடிமைத் தன்மையையும்), **உகாரம்** அந்த அடிமைத்தன்மையின் அநந்யார்ஹசேஷத்துவத்தையும் (மற்றவருக்கில்லாமல் ஈசுவரன் ஒருவனுக்கே உரித்தாய் இருத்தலையும்) **மகாரம்** ஞானவானான சீவான்மாவையும் தெரிவிக்கின்றன. திருவெட்டெழுத்தின் மூன்று பதங்களாலும் குறிப்பிடப் பெறும் ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தே இருக்கும் என்பதை உணர்த்தவே **தோழி தாய் மகள்** என்ற மூன்று நிலைகளும் எல்லாக்

5. முமுட்சு - 29
6. மேலது - 30
7. கைங்கரியம். கிங்கரன் - வேலையாள்; அவன் செய்யும் பணி கைங்கரியம்.

காலங்களிலும் இருந்தன என்று சொல்லப் பெறுகின்றன. இதனை **ஆசாரியஹ்ருதயம் அவஸ்தா திரயம்** (திரயம் - மூன்று; அவஸ்தை - நிலை) என்று பேசும்.

**பாசுரங்களில் அடங்கிய தத்துவம்;** இனி இந்த மூவகைப் பாசுரங்களில் அடங்கியதாகக் கருதப்பெறும் தத்துவங்களை விளக்க முற்படுவேன்.

## 1. தோழிப் பாசுரங்கள்

திருவாய் மொழியில் தோழிப் பாசுரங்களாக வருபவை. '**தீர்ப்பாரையாம் இனி**' (4.6), '**துவளில் மணிமாடம்** (6.5), '**கருமாணிக்க மலை**' (8.9) என்பவையாகும் இந்த மூன்றிலும் '**அநந்யார்ஹத்துவம்**' தெரியும். அநந்யார்ஹத்துவம் என்பது, மற்றவருக்கில்லாமல் ஈசுவரன் ஒருவனுக்கே அடிமைப் பட்டிருத்தலாகும். இங்குக் குறிப்பிட்ட மூன்று பதிகங்களும் முறையே **வெறிவிலக்கு, தலைவியின் பெருமை, அறத்தொடு நிலை** என்ற கருத்துகளை விளக்கும் பாங்கில் அமைந்துள்ளன. இவற்றுள் மூன்றாவதை மட்டிலும் விளக்குவோம்.

**அறத்தொடு நிலை :** குட்ட நாட்டுத் திருப்பதி (மலைநாடு, கேரளம்) எம்பெருமான்மீதுள்ள திருவாய் மொழி (8.9) தோழிப் பாசுரமாக நடைபெறுகின்றது. இந்தத் திருவாய்மொழி '**தோழி அறத்தொடு நிற்றல்**' என்ற அகப்பொருள் துறையில் அமைந்துள்ளது. 'அறத்தொடு நிற்றல்' என்பது என்ன? 'அறம்' என்பது பல பண்புகளையும் தழுவிய சொல். அகப்பொருள் இலக்கியத்தில் பெண்ணுக்குரிய முதற்பண்பு **கற்பு**. கற்பென்னும் கடைப்பிடியில் நின்று களவொழுக்கத்தைப் பெற்றோருக்கு வெளிப் படுத்தல் என்பது இதன் பொருள். தோழி இதனைத் தலைமகளின் பெற்றோருக்குக் குறிப்பாக வெளிப்படுத்துவாள். தொல்காப்பியர் இதனைப் '**புரைதீர்கிளவி**' (கிளவி - சொல்) என்றும், இறையனார்களவியலுரையாசிரியர் '**மாறு கோள் இல்லாமொழி**' என்றும் குறிப்பிடுவார்.

**பராங்குச நாயகி** வயது முதிர்ந்து மங்கைப் பருவம் அடைகின்றாள். கணவனை நாடி அடைய வேண்டிய வயதல்லவா இது? திருப்புலியூர் எம்பெருமானுடன் இயற்கைப் புணர்ச்சியும் நடைபெற்று விடுகின்றது. தலைவியின் உயிர்த் தோழியானவள் தலைவியின் உருவ வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி நடைபெற்றமையை ஒருவாறு அறிகின்றாள். தன் மகளின் உண்மை நிலையை அறியாத தாய் தந்தையர் இவளுடைய திருமணத்தை உறுதி செய்து மணமுரசும் அறிவிக்கின்றனர். இதனை அறிந்த தோழி மனம் கவல்கின்றாள். 'பரதனே அரசன்' என்று அறிவித்த முரசொலி கேட்டபோது பரதாழ்வான் எங்ஙனம் மனக்கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள். இவ்வாறு சிந்திக்கின்றாள்: **'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'** (நாச்.திரு.1:5) என்று கூறியவள் இவள். **'அன்றிப்பின் மற்றொருவர்க் கென்னைப் பேசுவொட்டேன் மாலிருஞ் சோலை எம்மாயற்கல்லால்'** (பெரியாழ்.திரு. 3.4:5) என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால், இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படியாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனாருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின் அஃது என் காவற்சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும். அறிவியாது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்யவேண்டியது என்ன?' என்பதாக. தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது தலைவியின் பெற்றோருக்கும் அவளுடைய வடிவ வேறுபாட்டிற்கும் காரணம் யாதாக இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்றாள். தானும் அவர்களுடன் சேர்ந்து ஆராய்வதாகக் கொண்டு இதனை விலக்க வேண்டும் என்று உறுதி செய்கின்றாள். இந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே இத்திருவாய்மொழி. இதுவே அகப்

பொருள் நூலார் குறிப்பிடும் '**அறத்தொடு நிலை**', என்பதாகும். திருப்புலியூர் எம்பெருமான்மீதுள்ள திருவாய் மொழி(8:9) இதனையே நுவல்கின்றது.

*கருமா ணிக்க மலைமேல் மணித்தடந்*
*தாமரைக் காடுகள்போல்*
*திருமார்பு வாய்கண் கைஉந்தி கால்உடை*
*யாடைகள் செய்தபிரான்*
*திருமால் எம்மான் செழுநீர்வயல் குட்ட*
*நாட்டுத் திருப்புலியூர்*
*அருமாயன் பேரன்றிப் பேச்சிலள், அன்னைமீர்*
*இதற்கென் செய்கேனோ? (1)*
*(மணித்தடம் - தெளிந்த தடாகம்; உந்தி - கொப்பூழ்;*
*கால் - திருவடி; உடை - தரித்திருக்கும்; செய்ய*
*ஆடை எனக் கூட்டுக; பேர் - திருநாமம்)*

என்று தோழி முதலில் இவ்வாறு தொடங்குகின்றாள். இதில் திருப்புலியூர் எம்பெருமானுடைய திருமேனியின் அழகினைக் கண்டு அதில் ஈடுபட்டாள் இத்தலைவி என்று தோழி தாய்மார்க்கு உரைக்கின்றாள்.

அநுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையுடையதாய் பிரகாசத்தால் மிக்கு இருப்பதாய், தனக்குமேல் ஒன்று இல்லாததான இனிமையுடையதாய் இருப்பது ஒரு மலை மேலே என்ற கருத்துத் தோன்ற '**கருமாணிக்கமலைமேல்**' என்கின்றாள். இத்தகைய ஒரு மலைமீது தெளிந்த ஒரு தடாகம் தாமரைக் காடுகள் பூத்தனபோல் எம்பெருமானது எழில் நீலமேனியில் திருமார்பு, திருவதரம், திருக்கண்கள், திருக்கைகள், திருவுந்தி, திருவடிகள் முதலிய உறுப்புகள் அமைந்துள்ளன என்பது தோன்ற '**மணித்தடம்..... ஆடைகள் செய்தபிரான்**' என்கின்றாள். பக்தர்களுக்குப் பற்றுக்கோடாகவுள்ள பெரியபிராட்டியார் எழுந்தருளியிருக்கும் திருமார்பாதலால் அது சிவந்து காணப் பெறுகின்றது.

அப்பிராட்டி வழியால் உறவு செய்தாருக்கு அநுகூலமான சொற்களைப் பேசுகின்றது அவரது திருப்பவளம்; இச் சொற்கள் சொல்லப்புக்கு இனியனான தன்னைக் கண்ட காட்சியாலே தடுமாறினால், குறையும் தலைக் காட்டிக் கொடுப்பது செவ்வரி படர்ந்த திருக்கண். அவனது நோக்கிற்குத் தோற்றாரை அணைப்பது திருக்கை. உத்தேசியமான நிலத்தில் (அதாவது திருவடியில்) விழ நின்றால் காற்கட்ட வல்லது திருவுந்தி. இது நடுவே அமுக்கும் சுழி அன்றோ? இவை எல்லாவற்றுக்கும் தோற்று விழும் இடம் எம்பெருமானது திருவடிகள். இவையாவும் காட்டிலெறிந்த நிலாப்போலாகாமல் பக்தர்களுக்கு அநுபவிக்கக் கொடுக்குமவன் என்பதைப் குறிப்பிடவே '**பிரான்**' (உபகாரகன்) என்கின்றாள். இங்ஙனம் எம் பெருமான் திருமேனி அழகினை,

*என்அரங்கத்து இன்னமுதர்*
*குழலழகர் வாயழகர்*
*கண்அழகர் கொப்பூழில்*
*எழுகமலப் பூஅழகர் (நாச்.திரு. 11:2)*
*(குழல் - திருமுடி)*

என்று **ஆண்டாள்** கூறி அநுபவித்ததையும் நினைத்துப் பார்க்கின்றோம். மேலும், இங்குப் பர, வியூகம், விபவம், இவற்றிற்குரிய திருநாமங்களையும் சொல்லாமல் அல்லாத உகந்தருளின திவ்விய தேசங்களில் நிற்கின்றவர்களின் பெயர்களையும் சொல்லாமல் குட்ட நாட்டுத் திருப்புலியூர் எம்பெருமானுடைய திருநாமங்களையே வாய்வெருவா நிற்கின்றாள் என்பது தோன்ற '**திருப்புலியூர் அருமாயன் பேரன்றிப் பேச்சிளள்**' என்கின்றாள். அவள் நிலை தனக்கு அப்போதுதான் தெரியும் என்பது தோன்ற '**அன்னையீர்! இதற்கு என் செய்வேன்?**' என்கின்றாள்.

இந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதியைச் சதா புகழ்ந்து கொண்டிருக்கின்றாள் தலைவி என்பதையும்

குறிப்பிடுகின்றாள். **'புன்னை யம்பொழில் சூழ்திருப் புலியூர் புகழும் இவளே'** என்பதாக.

*அணிமேருவின மீதுலவும்*
*துன்னு சூழ்சுடர் ஞாயிறும்*
*அன்றி யும்பல் சுடர்களும்போல்*
*மின்னு நீள்முடி யாரம்*
*பல்கலன் தானுடை எம்பெருமான் (2)*

என்ற் பாசுரப்பகுதியால் அத் திருப்பதி எம்பெருமானது திவ்விய ஆபரண அழகில் தலைவி ஈடுபட்டுப் பேசும் படிகளை விரித்துரைக்கின்றாள். "மேரு மலையின்மீது ஆயிரம் கதிர்கள் விரித்தாற் போன்று திருவபிடேகமும், விண்மீன் கூட்டங்கள் மன்னினாற் போன்ற பல மாலை வரிசைகளும் மற்றும் அணிவகைகளும் ஒளிரும் அழகை என்ன வென்று சொல்வது?" என்று வாய்வெருவி நிற்கின்றாள் என்று குறிப்பிடுகின்றாள் தோழி. இவளுக்கு அத்தலத்து எம்பெருமானோடு கலவி நேர்ந்ததாகவே நினைக்கத் தோன்றுகின்றது என்பது தோழியின் குறிப்பு.

## 2. தாய்ப் பாசுரங்கள் :

அகப்பொருள் பாசுரங்களையுடைய திருவாய்மொழியில் தாய்ப் பாசுரங்களாக நடைபெறுபவை ஏழு பதிகங்கள்.[8] இவை ஈசுவர பாரதந்திரியத்தையும்,[9] அவனே உபாய மாகின்றான் என்ற கருத்தையும் தெரிவிக்கின்றன.[10] ஒரு பாசுரத்தைக் கொண்டு இதனை விளக்குவேன்

**'மண்ணையிருந்து'** (4.4) என்ற திருவாய்மொழி தாய்ப்பேச்சாக ஆழ்வாருடைய பரம வைணவத்தை வெளியிடும் போக்கில் அமைந்துள்ளது. எம்பெருமான்

8. திருவாய் 2.4; 4.2; 4.4; 5.6; 6.6; 6.7; 7.2.
9. பாரதந்திரியம் - பரனுக்கு ஆட்பட்டிருத்தல்.
10. ஆசா. ஹிரு. சூத்திரம் - 133

சம்பந்தம் பெற்ற பொருள்களையும் எம்பெருமானுக்குப் போலியான பொருள்களையும் கண்டு அப் பெருமானையே கண்டதாகக்கொண்டு களித்தலே பரம வைணவத்துமாகும். இந்நிலைமையே இத்திருவாய்மொழியில் உண்டாகிறது. இதற்கு முன்னைய திருவாய்மொழியில் (4.3) ஆழ்வார் தாமான தன்மையிலிருந்து கொண்டே எம்பெருமானுடைய காதல் குணத்தை அநுசந்தித்தார்; ஏன்? பெரிய திருவந்தாதியிலும்,

*பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற*
*காவிமலர் என்றும் காண்தோறும், - பாவியேன்*
*மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை*
*எல்லாம் பிரான்வுருவே என்று (73)*

என்று போலிப்பொருள்களைக் கண்டு பூரிப்பு அடைந்த வரல்லவா? ஆகவே, இத் திருவாய்மொழியில் பிச்சேறி நிற்கின்றார்.

இத் திருவாய்மொழிக்கு அவதாரிகை அமைத்த **நம்பிள்ளை** கூறுவார் : சென்ற திருவாய்மொழியில் பிறந்த நிரவதிகப் பிரீதியானது இவரது சொரூபமும் அழியும் படியாக இருந்தது. இந்த நிலைமையைக் கண்ட எம்பெருமான் அந்த ரசத்தை அரையாறுபடுத்திப் பொறுக்கும்படி செய்கைக்காக அந்தக் கலவியைச் சிறிது குறைத்து நின்றான்; இதனால் ஆழ்வாருடைய ஆற்றாமை மீதூர்ந்தது. பணமுடிப்பைப் போக்கடித்தான் ஒருவன் அதோடு போலியான முடிப்புகள் எல்லாவற்றையும் அவிழ்த்து அவிழ்த்துப் பார்க்குமாப் போலவே அவனோ டொத்த பொருள்களையும் அவனோடு சம்பந்தப்பட்ட பொருள்களையும் எல்லாம் அவனாகக் கருதி மயங்கிக் கிட்டிப்பார்த்துப் பிச்சேறுகிறபடியாக நடைபெறுகிறது இத்திருவாய்மொழி. 'வைப்பாம் மருந்தாம்' (1.7:2) என்று சொல்லும்படி இவர்க்குச் சேமநிதி அன்றோ அவன்?

திருத்தாயார் பேசுகின்றாள் (திருவாய் 4.1:4) :

*மண்ணை யிருந்து துழாவி*
*'வாமனன் மண்ணிது' என்னும்;*
*விண்ணைத் தொழுதவன் மேவு*
*வைகுந்தம் என்றுகை காட்டும்;*
*கண்ணையுள் நீர்மல்க நின்று*
*'கடல்வண்ணன்' என்னும்; அன்னே!என்*
*பெண்ணைப் பெருமயல் செய்தாற்கு*
*என்செய்கேன் பெய்வளை யீரே? (1)*

என்பது முதற்பாசுரம். இதில் பராங்குச நாயகியின் திருத்தாயார் மகளுடைய செய்தியை வினவ வந்தவர்கட்கு 'இப்படி இவளை எம்பெருமான் பிச்சேற்றினான்; இதற்கு என் செய்வேன்?' என்கின்றாள்.

உலகத்தில் எல்லோரும் மண்ணை மண்ணாகவே நினைப்பர்; ஆழ்வார் நாயகி வேறுவிதமாக நினைக்கின்றாள். எம்பெருமானுடைய நறுமணம் மிக்க திருவடியின் சம்பந்தம் பெற்றதனால்தான் மண்ணுக்கு மணம் உண்டாயிற்று என்பது இவள் நினைப்பு. கையினுடைய செயலாலே திருநாட்டைக் காட்டியதுடன், திருநாட்டில் அவன் இருக்கிற படியைக் காணப்பெறாமையிலே கண்ணீர் மல்க நின்று தன் ஆற்றாமையாலே திருவடிவத்தை நினைத்துத் 'கடல் **வண்ணனே!**' என்கின்றாள். 'கடல் போன்ற திருமேனியைக் காட்டியன்றோ என்னை இங்ஙனம் வியாமோகிக்கச் செய்தது' என்று தெரிவித்தவாறு. 'இங்ஙனம் என் மகளைப் பிச்சேறும்படி செய்த பெருமான் விஷயத்தில் நான் செய்யக் கூடியது யாது? அவரை இங்கு வந்து சேரும்படி செய்ய வல்லேனோ? ஒன்றும் மாட்டுகின்றிலேன்' என்பது கருத்து.

இத்திருவாய்மொழியின் இன்னொரு பாசுரம் இது :

*கோமள ஆன்கன்றைப் புல்கிக்*
*'கோவிந்தன் மேய்த்தன' என்னும்,*
*போம்இள நாகத்தின் பின்போய்*
*'அவன்கிடக் கையீ' தென்னும்;*
*ஆம்அள வொன்றும் அறியேன்*
*அடுவினை யாட்டியேன் பெற்ற*
*கோமள வல்லியை மாயோன்*
*மால்செய்து செய்கின்ற கூத்தே (5)*

என்பது, 'இவளுக்கு இத்துன்பம் எவ்வளவாய் முடியக் கூடியது? என்று அறிகிறேன்' என்கின்றாள்.

## 3. மகள் பாசுரங்கள்

திருவாய்மொழியில் மகள் பாவனையில் நடைபெறும் பதிகங்கள் **பதினேழு**[11]. இவற்றுள் தூதுப் பதிகங்களாக நடைபெறு பவை **நான்கு.**[12]

**மாசறு சோதி** (5.3) : இத் திருவாய்மொழி மகள் பாசுரமாக நடைபெறுவது. **'மடலூர்தல்'** என்ற **துறையின்** அடிப்படையில் நடைபெறுவது.

இத் திருவாய்மொழியின் அவதாரிகையில் நம்பிள்ளை அருளிச் செய்வது: '**மலியும் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை** (5.2:11) என்று எம்பெருமானின் வடிவழகையும் குணங்களையும் அநுசந்திக்கவே '**ஏறாளும் இறையோனும்**'(4.8) என்கிற திருவாய்மொழியில் **உண்டாயிருந்த** காதலே மீண்டும் கிளர்ந்தெழுந்து எம்பெருமானுடன் மெய்யுறு புணர்ச்சியை விரும்பி அவனை அணைக்கக் கைநீட்ட, அவன் அகப்படாமல் கைகழிந்து நிற்க, அதனாலே ஒரு பிராட்டியின் நிலையை அடைந்து **'மடலூர்வேன்'** என்று அச்சமுறுத்திக் காரியம்கொள்ளப் பார்க்கின்றார்.

11. ஆசா. ஹிரு சூத்திரம 134
12. திருவாய. 1.4; 6.1; 6.8; 9.7 என்பவை

சக்கரவர்த்தி திருமகன் வருணனைச் சரண்புகுந்து வழிவேண்டின இடத்தும் அக்கடலரையன் இறுமாப்பையே பாராட்டி முகம் காட்டாமல் அலட்சியம் செய்து கிடக்க, பெருமான் சீறிச் சிவந்த கண்ணினராய், 'இதோ இக்கடலை வற்றி அழித்து விடுகின்றேன்; இலட்சுமணா சார்ங்க வில்லைக் கொண்டு வா; வானரமுதலிகள் காலாலே நடந்து செல்லட்டும்; ஒருக் கணத்தில் இக்கடல் படுகிற பாட்டைப் பார்' என்று அருளிச் செய்து கடலரையனையே அழிக்க முயன்றாப்போலே 'நமது விருப்பத்தை நிறை வேற்றாத எம்பெருமான் ஏதுக்கு? என்று பகவத் தத்துவத்தையே இல்லையாம்படிச் செய்துவிடப் பார்க்கிறார் என்று மடல்எடுக்கையில் புகுகின்றார் இத்திருவாய்மொழியில். 'மடல் எடுக்கையாவது போர்சுட்டுப் பொரி கொறிக்கையைப் போன்றது ஒன்றாகும். மடல் எடுத்தல் என்பது, துணிவுள்ள காரியமுமாய் மிகச் சிறிய பலமுமாயிருக்கும் என்பதனைக் காட்டுகின்றார். பகவத்விஷயத்தில் ஈடுபடும்படியாய்ப் பிறரைத் திருத்துகின்ற இவரைப் 'பகவானிடத்தில் ஈடுபாடு ஆகாது' என்று திருத்தப் பார்த்தால் திருந்தாயேயன்றோ?

**'மடலூர்தல்'** என்பது தமிழிலே ஒருமுறை உண்டு. நாயகனும் நாயகியும் ஊழ்வசத்தால் சந்தித்து அவர்களிடையே **'கண் கலவி'** உண்டாக, பின்னர் அதே ஊழ்வினையின் காரணமாகப் பிரிவோடே முடிவுற்றுப் பிரிய, இருவரும் குணாதிகர்களாககையாலே இருவருக்கும் ஆற்றமை விஞ்சி நிற்க, அவனுடன் கூடுதற்காக நாயகி செய்யும் சாகச்செயலே மடலூர்தல் என்பது. நாயகனை ஒரு படத்தில் எழுதி வைத்தகண் வாங்காமல் அதனைப் பார்த்துக்கொண்டு மலர் சந்தனம் முதலிய மணப் பொருள்களையும் நஞ்சென உதறித் தள்ளி ஊனும் உறக்கமும் நீராடலுமின்றி பனைமடலைக் கையிலே ஏந்திக் கொண்டு அதனால் உடம்பையும் குருதிவர மோதிக் கொண்டு விரித்த கூந்தலுடன் 'இந்தப் படுபாவி என்னைக் கைவிட்டான்; அவன் கண்ணோட்டமில்லாத

கடியன்; அவனிலும் விஞ்சிய கொடியன் இல்லை' என்று கூறிய வண்ணம் தெருவேறக் கதறிக்கொண்டு கேட்டா ரெல்லாரும் நடுங்கும்படியும் இரங்கும்படியும் திரிந்து உழல்வதைத்தான் தமிழர்கள் 'மடலூர்தல்' என்று திருநாமம் இட்டனர்.

**மடலூர்தலுக்குப் பயன் :** இந்தச் சாகசச் செயலைக் கண்டு அரசரும் பெரியோரும் இந்த ஆர்த்தியைப் பொறுக்க மாட்டாத கருணையினால் இருவரையும் கூட்டி வைப்பர்; தோழிமாராவது கூட்டி வைப்பர்; பழிக்கு அஞ்சி நாயகனே வந்து கைபிடிப்பான்; இவையொன்றும் இல்லையாகில் நாயகி தான் முடிந்து பிழைத்துப் போவாள். இவையே பயன்கள்.

ஆழ்வார் இப்படி எம்பெருமானைப் பழித்துக் கொண்டு சாகசத் தோற்றத்துடன் தெருவில் கிளம்பினாளா?எனில்; இல்லை. 'மடலூர்வன்' என்று சொல்லி அச்சமுறுத்தின மாத்திரமேயன்றி அதை முற்ற முடியக் கொண்டு செலுத்தவில்லை. "தோழீ! உலகு தோறலர் தூற்றிஆம் கோணைகள் செய்து குதிரியாய் மடலூர்துமே" (5.3:9) என்றும், "ஆம்மடம் இன்றிதெருவு தோறயல் தையலார், நாமடங்காப் பழிதூற்றி நாடும் இரைக்கவே" (5.3:10) என்றும் கூறுவதால் இதை அறியலாம். திருமங்கையாழ்வாரும் **"பெருந்தெருவே ஊரார் இகழிலும் ஊரா தொழியேன் நான், வாரார்பூம் பெண்ணை, மடல்'** (சிறிய. திருமடல்) என்றும், **"உலகறிய ஊர்வன் நான், முன்னி முளைத்தெழுந்தோங்கி யொளி பரந்து, மன்னிபூம் பெண்ணை மடல்"** (பெரிய. திருமடல்) என்றும் மடல் ஊர்வதாகச் சொல்லி அச்சமுறுத்துவதைக் காணலாம். இத் திருவாய்மொழியில் ஆழ்வார், நாயகி சமாதியில் நின்று தம்முடைய ஆசையின் மிகுதியைக் கூறுவதே இதன் உள்ளுறையாகும்.

'எம்பெருமான் தனக்குத் திருவுள்ளமானபோது நம்மை நோக்கியருள்வன்; நாம் பதறவொண்ணாது' என்று அநுசந்தித்து ஆறியிருக்க வேண்டியதன்றோ சொரூபம்? அங்ஙனம் இராமல் தாம் பதறி இயல்புக்கு மாறாக நடந்து கொள்வது பெருங்குற்றமன்றோ? அதிலும் பிரபந்ந ஜன கூடஸ்தரான ஆழ்வார் இப்படி மடலூர்வதாகச் சொல்வது பொல்லாங்கன்றோ? என்னில்; அன்று; அடைய வேண்டிய பொருளின்மீது கழிபெருங்காதலினால் ஏற்படும் முயற்சி எம்பெருமானுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தினால் உண்டான முயற்சி அல்ல. மீறி நிற்கும் காதலை உடையார்க்கு இது குற்றமுமன்று. **'ஞானம் கனிந்த நலம்'**[13] என்றபடி ஞானபரிபாக ரூபமான பக்தியின் காரியமாகச் சம்பவிக்கின்ற கழிபெருங்காதலால் வரும் சிறப்பு முயற்சிகள் யாவும் மிகவும் ஆதரிக்கத் தக்கவையே. கரும மடியான அஞ்ஞானத்தினால் வருபவையே விடத்தக்கவை; கீழ்த்தரமானவை.

ஆனாலும் சேதநனிடத்து ஒருவகையான முயற்சியும் சகியாத சித்தோபாயத்தின் தத்துவத்திற்கு உரிய இந்த முயற்சிக்கு இடையூறாக மாட்டாதோ என்னில்; இந்த முயற்சியும் சித்தோபாயமான எம்பெருமான் பண்ணின கிருஷியின் பயன் எனக் கருதத் தக்கது. "பேரமர் காதல் கடல் புரைய விளைவித்த காரமர் மேனி நம் கண்ணன்" (5.3:4) என்று இப்படிப்பட்ட அதிப்ரவர்த்திக்குக் காரணமான பக்தியைப் பிறப்பிப்பவனும் வளரச் செய்பவனும் அவ்வெம்பெருமான்தான் என்றன்றோ சொல்லப்பட்டுள்ளது? ஆகையால் இம்முயற்சி உபாயபலன் என்பது பூருவாசாரியர்களின் சித்தாந்தம். அன்றியும் பலனைக் கடுகப்பெறவேண்டும் என்ற விரைவின் மிகுதியால் கண்ணாஞ் சுழலையிட்டு இத்தலைப்படுகின்ற அலமாப்பெல்லாம் 'நம்மை யாசைப்பட்டு

13. இரா. நூற்.-66

இங்ஙனம் துடிக்கப் பெறுவதோ?' என்று அவன் திருமுகம் மலருகைக்கு உறுப்பாகையால் இத்தகைய முயற்சிகள் எல்லாம் அவனுடைய முகமலர்ச்சிக்காகப் பண்ணும் கைங்கரியத் தோடொத்து உபேயத்தில் கலந்து மறைந்து விடும் என்றே அறுதியிடத்தக்கது.

*மாசறு சோதிஎன் செய்யவாய்*
*மணிக்குன் றத்தை*
*ஆசறு சீலனை ஆதி*
*மூர்த்தியை நாடியே*
*பாசற வெய்தி அறிவி*
*ழந்துஎனை நாளையம்*
*ஏசறும் ஊரவர் கவ்வை*
*தோழி! என்செயுமே (5.3:1)*

என்பது இத் திருவாய்மொழியின் முதற்பாசுரம். பராங்குச நாயகி மடலூர்வதாக எண்ணினபடியை அறிந்த தோழி அதனை விலக்கப்புகுந்து 'ஊரார் பழிச் சொல் காண்!' என்ன: 'அவனுடைய அழகு முதலியவற்றில் அகப்பட்டுக் கலங்கின நான் ஊரார் பழியை அலட்சியம் பண்ணும் நிலையில் இலேன்' என்கின்றாள் தலைவி. "மடல் எடுக்கை மாசு என்றிருக்கின்றாள் தோழி; மடல் எடா தொழிகை மாசு என்றிருக்கின்றாள் இவள். பிரிவில் இப்படி ஆற்றாமை விளையாதாகில் நாம் காண்கின்ற விஷயங்களைப் போன்றது ஆகுமே. வடிவிலே அணைந்தவள் ஆகையாலே முற்பட வடிவிலே மண்டுகின்றாள்" என்பது ஈடு.

'வெறும் வடிவழகை மட்டிலும் கண்டு துடிக்கின்றேன் அல்லேன்; அகவாயில் சீலகுணத்தைக் கண்டு துடிக்கின்றேன் காண்' என்கின்றாள் மாசறுசோதி என்பதனால்.

எம்பெருமாள் தம்மை நாடிக்கொண்டு வரவேண்டுமே யன்றி தாமாக அவனை நாடுவது சொரூப ஞானத்திற்குப் போராதே என்று சிலர் சொல்ல, 'அறிவிழந்து எனை

நாளையும்' (= எத்தனைகால முடையேம்) என்கிறாள். அறிவு (சொரூப ஞானம்) அடியோடே தொலைந்து எத்தனையோ நாள் ஆயிற்றே என்பது இதன் கருத்து.

இங்கே **நம்பிள்ளை ஈடு** : ''மயர்வற மதிநலம் பெற்ற அன்றே போயிற்று நம்முடைய அறிவு. பறவை முதலானவற்றின் (திர்யக்குகள்) காலிலே விழுந்து தூது விட்ட அன்று 'அது ஞான காரியம்' என்றிருந்தாயோ இன்று இருந்து கற்பிக்கைக்கு; அன்றே மதியெல்லாம் உள் கலங்கிற்று இல்லையோ? தன் பக்கல் கைவைத்தால் மற்றொன்று அறியாதபடி செய்யும் விஷயமன்றோ?' பேரின்பமெல்லாம் துறந்தார், தொழுதார், அத்தோள்' என்னக் கடவதன்றோ? பேற்றினைப் பெறுகின்ற சமயத்திலே இவ்வருகுள்ளவற்றை நினையாதபடி செய்கையே அன்றிக்கே, ஞானம் பிறந்த சமயமே பிடித்தும் இவ்வரு குள்ளவற்றை நினையாமே பண்ணவல்ல விஷயமன்றோ? தன்னையும் அநுசந்தித்து உலக யாத்திரையையும் அநுசந்திக்கும்படியோ அவன் படி" என்பதாம்.

ஆனாலும் ஊரார் சொல்லும் பழிக்கு அஞ்ச வேண்டாவோ என்ன, 'ஏசறும் ஊரவர் கவ்வை தோழி என் செயுமே' என்கின்றாள். ஏசுவதற்கென்றே பிறந்திருக்கின்ற ஊராருடைய பழிமொழிகள் நமக்குப் பழியோ? அதுவே நமக்குத் தாரகம் அன்றோ? என்கின்றாள். அவர்கள் பழி தாரகமாக அன்றோ மடல் எடுக்க இருக்கிறது?

**தூதுபற்றிய மகள் பாசுரங்கள்** : தூது என்பது ஒருவர் தம்முடைய கருத்தை வேறொருவருக்கு இடை நின்ற ஒருவர் வாயிலாகக் கூறி விடுப்பது. சங்க இலக்கியங்களில் **'காமம் மிக்க கழிபடர் கிளவிகளாக'** இருந்த துறையே பிற்காலத்தில் தூது கொண்டன என்பது ஆய்வாளர்களின் கருத்து. பக்தி இலக்கியஙகள் வளர்ந்த காலத்தில் ஆழ்வார்

பெருமக்கள் இந்த அகத்துறையைப் பயன்படுத்திய அருமைப் பாட்டை எடுத்துரைப்பது சொல்லுந்தரமன்று.

ஆழ்வார் பெருமக்கள் தாமான தன்மையை விட்டு பிராட்டியாரின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பாசுரங்கள் அமைக்கும்போது தூதுபற்றிய பாசுரங்கள் ஏற்கும் நயப்பாடு அற்புதம். ஆழ்வார்கள் பிராட்டியின் நிலையில் பெரும்பாலும் புள்ளினங்களையே தூது போகும்படியாகப் பாசுரங்களை அமைப்பர்; குருகினங்கள், நாரைகள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, மயில், பூவை, அன்றில்கள், வண்டினங்கள் முதலியவை தூது விடும் பொருள்களாக அமைந்திருப்பதைக் காணலாம். இவற்றைத் தவிர வாடை, மேகம், நெஞ்சு முதலியவற்றையும் இவர்கள் பாசுரங்களில் தூதுப் பொருளாக அமைந்திருப்பதையும் காணலாம்.

இங்ஙனம் பறவைகளைத் தூது விடுத்தற்கு உட்பொருள் உண்டு.

> *சேர்ப்பாரைப் பட்சி களாக்கி ஜ்ஞானகர்மங்களைச் சிறகு என்று, குரு, ஸப்ரமசாரி, புத்ர சிஷ்ய ஸ்தானே ஸ்தா னேபேசும் (சூத்திரம் - 150)*
> (ஸப்ரமசாரி - ஒரு சாலை மாணாக்கர்; ஸ்தானே - இடத்தில்)

என்று ஆசாரிய ஹிருதயம் இந்த உட்பொருளை சூத்திரமிட்டு விளக்கும். "விண்ணோர் பிரானார், மாசுஇல் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே" (திருவிருத்-55) என்று ஆழ்வாரே அருளிச்செய்துள்ளமையால் பகவத் விஷயத்தில் கொண்டுசேர்க்குமவர்கள் பறவைகளாகக் கொள்ளப் பெறுவர். இரண்டு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ அங்ஙனம் ஞானம் ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப் பெறுகின்றான்

என்பது ஆன்றோர் கொள்கை. எனவே ஞானத்தையும் அநுட்டானத்தையும் சிறகுகளாகக் கொள்ளல் வேண்டும். ஆசாரியர்களும் ஒருசாலை மாணாக்கர்களும் புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது **அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின்** கருத்தாகும்.

இவண் குறிப்பிட்ட அன்னம் வண்டு முதலியனவாகச் சொல்லப் பெறுபவர்கள் இன்னார் இன்னார் போன்றவர்கள் என்னும் உள்ளுறைப் பொருளும் அருளிச்செய்யப் பெற்றுள்ளது. அவற்றை ஈண்டுக் குறிப்பிடுவேன்.

**அன்னம்** : அன்னமாகப் பேசப்பெறுபவர்கள் :

**செல்வநம்பி**
**பெரியாழ்வார்,**
**நாதமுனிவர்**
**ஆளவந்தார்**

ஆகியோர்.[14]

**தும்பி, வண்டு** : இவ்வாறு பேசப் பெறுபவர்கள் :

**நாரத முனிவர்**
லோகசாரங்க முனிவரால்
தாங்கப்பெற்ற
**திருப்பாணாழ்வார்**
**தம்பிரான்மார்** (அரையர்)

போன்றவர்கள்.[15]

**கிளி, பூவை, குயில், மயில்** : இவ்வாறு பேசப் பெறுபவர்கள் :

14. ஆசா. ஹிரு. 151 சூத்திர உரையில் விளக்கம் தரப்பெற்றுள்ளது.
15. மேலது. 152 உரையில் விளக்கம்.

**மதுரகவிகள்**
**தொண்டரடிப்பொடியாழ்வார்**
**கூரத்தாழ்வான்**
**திருமாலையாண்டான்**
**எம்பார்**
**அருளாளப் பெருமாள் எம்பெருமானார்**
முதலாயினோர்கள்.[16]

**நாரை, கொக்கு, குருகு** : இவ்வாறு பேசப் பெறுபவர்கள் :

**குலசேரகரப் பெருமாள்**
**ஆசாரிய பதத்தில் நின்றவர்களான முதலிகள்**

முதலாயினோர்கள்.[17]

**மேகம்:** இதற்கு உள்ளுறையாகப் பேசப் பெறுபவர்கள்.

**திருமழிசைபிரான்**
**திருமங்கையாழ்வார்**
**இராமாநுசர்**
**முதலியோர்.**[18]

**தூதுப் பதிகங்களாக**

1. **வியூகத்தில்** : அஞ்சிறைய மடநாராய் (1.4)
2. **விபவத்தில்** : 'வைகல் பூங்கழிவாய்' (5.1)
3. **பரத்துவ. அந்தர்யாமித்துவத்தில்:** 'பொன்னுலகாளீரோ' (6.8)

16. மேலது - 153 - சூத்திர உரையில் விளக்கம்
17. மேலது - 154 - சூத்திர உரையில் விளக்கம்
18. மேலது - 155 - சூத்திர உரையில் விளக்கம்

**4. அர்ச்சையில் :** 'எம்கானல் அகம் கழிவாய்' (9.7)

இவற்றுள் முதலாவது மட்டிலும் ஈண்டு விளக்கப் பெறுகின்றது. ஏனையவற்றை என் பிறநூல் ஒன்றில் காணலாம்.[19]

**வியூகத்தில் தூது : 'அஞ்சிறைய மடநாராய்'** (1.4) என்ற திருவாய்மொழியில் 'கடல் ஆழி - நீர்தோற்றி அதனுள்ளே கண்வளரும் அடலாழி அம்மானைக் கண்டக்கால் (10) என்பதால் 'வியூகத்தில் தூது' அறியக் கிடக்கின்றது (கடல் - திருப்பாற் கடல் என்பதால்). 'என் பிழையே நினைந்தருளி' (7) என்பதனால் எம்பெருமான் தனது சீல குணத்தால் முதலில் ஆழ்வாருடன் கலந்து விட்டான்; கலந்த பிறகு அவரிடமுள்ள குற்றங்களைக் கண்டான். அதனால் அவரை வெறுத்துப் பிரியலுற்றான். அவனிடத்திலோ பொறுக்கும் பண்பு (க்ஷமைகுணம்) நிரம்பியிருக்கும்போது ஆழ்வாரின் பிழைகளைப் பொருட்படுத்தக் காரணம் இல்லை. தன்னுடைய பிழைகள் அவனுடைய பொறுக்கும் பண்பையும் மறப்பித்தன போலும் என்று கருதிய ஆழ்வார் நாயகி அப்பெருங் குணத்தைச் சிறிது நினைப்பூட்டி விட்டால் போதும் என்று நினைத்துப் பறவைகளைத் தூது விடுகின்றாள். சீதாப்பிராட்டியை ஆயிரக்கணக்கான வானரங்கள் தேடுவதைப் போலவே, தன் கண்களில் கண்டவற்றை யெல்லாம் தூது போகுமாறு ஏவுகின்றாள். ஆழ்வார் நாயகி. பறவைகளைத் தூதுவிடும் ஐதிகத்தைக் குறிப்பிடும் **பராசர பட்டர்,** "சக்கரவர்த்தி திருமகனார் திருவவதரித்த பின்பு வானாசாதி வீறு பெற்றது போல ஆழ்வார்கள் திருவவதரித்த பின்பு பட்சி ஜாதி வீறு பெற்றது." என்று சுவையுடன் அருளிச் செய்வர். இத்திருவாய் மொழியில் '**நாரை, குயில், அன்னம், அன்றில், குருகு**

19. சடகோபன் செந்தமிழ் - 11-ஆம் இயலில் (கழகத்தில் கிடைக்கும்)

**வண்டு, கிளி, பூவை** ஆகிய பறவைகளைத் தூது விடு வதைக் காண்கின்றோம்.

ஈண்டு ஓர் **இதிகாசம்.** *நஞ்சீயர் காலத்தில் சாமான்ய* மாயிருப்பவன் ஒருவன் விரக்தர்களும் வைதிகர்களுமான மகான்கள் பலரும் திருவாய்மொழி காலட்சேபத்தில் இது தத்துவபரமாயிருக்குமென்று கருதித் திவ்விய பிரபந்தத்தைச் சேவிக்க வந்து, இத்திருவாய்மொழியில் வந்தவாறே 'இது காமுகவாக்கியமா யிருக்கிறது' என்று வெறுப்பு காட்டிச் சென்றானாம். வேதாந்தங்களில் விதிக்கப் பெறுகின்ற பகவத்காமமே இப்படிப்பட்ட பாசுரங்களாகப் பரிணமித்த தென்று அவன் அறிந்திலன் கருவிலே திருவில்லாமையாலே என்று நம்பிள்ளை வருந்திப் பேசுவர்.

பிரிவாற்றாமையுடன் இருக்கும் பராங்குச நாயகி நெய்தல் நிலத்தில் இருக்கின்றாள். பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலன்றோ? நீர் நிலத்தருகே இராநின்ற ஆழ்வார் நாயகி அண்மையிலிருக்கும் **நாரையைப்** பார்த்து, 'நாராய் நீ என் நிலைமையைக் கருடக் கொடியானுக்கு அறிவித்து என்னையும் அவனையும் சேர்க்க வேண்டும்' என்று இரக்கின்றாள்.

*அஞ்சிறைய மடநாராய்*
*அளியத்தாய் நீயும்நின்*
*அஞ்சிறைய சேவலுமாய்*
*'ஆஆ!' என்று எனக்கருளி*
*வெம்சிறைப்புள் உயர்த்தார்க்கு*
*என்விடுதூதாய் சென்றக்கால்*
*வன்சிறையில் அவன்வைக்கில்*
*வைப்புண்டால் என்செயுமே (1)*

என்பது பாசுரம். குழந்தை தாயினுடைய எல்லா உறுப்பு களையும் விட்டு முலையிலே வாய் வைப்பது போல, இங்கு நாரையின் மற்ற உறுப்புகளைவிட்டு அதன் சிறகிலே கண்

வைப்பது விரைந்து செல்வதற்கு அதுவே சாதனம் என்பது பற்றி. சொன்ன சொல் மறுக்காமல் உடனே புறப்படத் தயாராயிருப்பதுபோல் ஆழ்வார் நாயகியின் கண்ணுக்குத் தோற்றியதால் 'மட' என்ற அடைமொழியால் (மட-இளமை) சிறப்பித்தார். நாயகன் விடுகின்ற தூதைக் காட்டிலும் நாயகி விடுகின்ற தூதுக்கு ஏற்றமுண்டு. இராமனால் தூதுவிடப் பெற்ற சிறிய திருவடிக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. பிராட்டியின் தூதனாக அவன் இராமனிடம் மீண்டு வந்தபோது அவனுடைய திருமார்போடே அணைக்கப் பெற்றான். நாரையின் உள்ளும் புறமும் வெண்மையாய் இருப்பதுபோல ஆசாரியர்களும் தூய்மை வாய்ந்த மனம் மெய் மொழிகளையுடையவர்கள் என்பது நாரையின் உள்ளுறைப் பொருள்.

நாரையைத் தூது செல்லுமாறு இரந்த தலைவி, அங்குச் சென்றால் சொல்ல வேண்டிய செய்திகளைச் சில **குயில்கட்குக்** கூறுகின்றாள். ஒருவரை அழைத்துவிட்டு மற்றொருவருக்குச் செய்தி சொல்லுகின்ற போக்கிலிருந்து ஆழ்வார் நாயகியின் மிகுதியான **கலக்கம்** நன்கு புலனாகின்றது. இத்தகைய கலக்கத்தை உண்டு பண்ணியது **விஷயாந்தரங்களைவிட பகவத் விஷயத்தில் உண்டான** ஏற்றம். இனக் குயில்கட்கு ஆழ்வார் நாயகி கூறும் செய்தி:

*முன்செய்த முழுவினையால்*
*திருவடிக்கீழ்க் குற்றேவல்*
*முன்செய்ய முயலாதேன்*
*அகல்வதுவோ? விதியினமே (2)*

என்பது, 'அநாதிகாலமாகத் திரட்டின பாவத்தாலே (வினை) திருவடிவாரத்திலே அந்தரங்க கைங்கரியம் பண்ணுவதற்கு ஏற்கெனவே முயலப்பெறாத நான் அகன்று போக வேண்டியதுதானே? என்று கேளுங்கள்" என்கின்றாள்.

**முழுவினை :** என்ற விடத்து நம்பிள்ளை காட்டும் ஓர் **ஐதிகம் :** பட்டர்[20] திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருந்த காலத்து அங்குத் **தெற்காழ்வான், கோளரியாழ்வான்** என்ற இருவர் வாழ்கின்றனர். கோளரியாழ்வான் நற்குண நல்லொழுக்கமுடையவன்; தெற்காழ்வான்[21] சாதாரணமாகக் காணப்பெறும் மனிதன். இருவரும் ஒருசிறப்பான திதியன்று ஒரு குளக்கரையில் சந்திக்கின்றனர். கோளரியாழ்வான் தெற்காழ்வானை நோக்கி, "அப்பா, இன்று புண்ணிய தினமாயிற்றே; இன்றாகிலும் ஒரு முழுக்கிடமாட்டாயா?" என்கின்றான் அது கேட்ட தெற்காழ்வான், "முழுக்கிட வேணுமென விதிக்கிற உன் அபிப்பிராயம் என்னுடைய பாவங்கள் இந்த முழுக்கினால் சில தொலையக் கூடும் என்பது தானே; அந்தோ! என்னுடைய பாவம் திருக் கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் சௌமிய நாராயணப பெருமாளுடையக் கையிலுள்ள திருவாழியால் போக்கினால் போகுமேயல்லாது ஒன்றிரண்டு முழுக்கால் போகக்கூடியது அன்று காண்!" என்கின்றான். இச்சொற்கள் பட்டருடைய திருச்செவிக்கு எட்டின அளவில் "ஆ! அ! எவ்வளவு ஆத்திகனாக இருந்தால், இந்த வார்த்தை சொல்ல முடியும்? இவனை மேலெழுந்த வாரியாகப் பார்த்து நாத்திகன் என்று நினைத்திருந்தோமே. இவ்வளவு பேசும் பரிபாக முடையவனா இவன்?" என்று மிகவும் ஈடுபட்டதாக வரலாறு.

நாயகி நிலையிலிருக்கும் ஆழ்வார், "கொம்மை முலைதன் இடர்தீர கோவிந்தற்கோர் குற்றேவல்" (நாச்.திரு.13:9) என்ற ஆண்டாளைப் போல் "முலையால் அணைக்க" என்று சொல்ல வேண்டியிருந்தும் "திருவடிக்கீழ்க் குற்றவேல்" (2) என்று சொல்லுகின்ற அழகு காண்மின்!

20. கூரத்தாழ்வானின் திருக்குமாரர்; எம்பாருடைய மாணவர்; நஞ்சீயருடைய ஆசாரியர்.
21. திருக்கோட்டியூர் திருக்கோயிலில் இப்படி ஒரு சந்நிதி உண்டு.

இங்கே நம்பிள்ளை ஈடு : "பிராமணர் பிச்சேறினாலும் ஓத்துச் சொல்லுமாப்போலே இவர் பிராட்டியானாலும் முலையால் அணைக்க நினையார்; திருவடிகளில் அணையத் தேடும் அத்தனை" என்பதாக, வேதமோதிய அந்தணனுக்குப் பைத்தியம் பிடித்தாலும் வேதாத்யாயனமே சொல்லித் திரிதல் போல ஆழ்வாருக்கு நிலைமை மாறினாலும் பாசுரம் பேசும் முறைமை மாத்திரம் மாறவில்லை என்பது ஈண்டு அறியத்தக்கது

*"தேறியும் தேறாதும் மாயோன்*
*திறத்தினளே இத்திருவே"* (திருவாய் 4.4.)

என்பதும் ஈண்டு அநுசந்திக்கத்தக்கது.

பராங்குச நாயகியின் கண்வட்டத்தில் பெடையோடு களித்திருக்கும் **அன்னங்கள்** தென்படுகின்றன. அவற்றை நோக்கி தூது செல்ல வேண்டிய இடத்தையும் தூதுச் செய்தியையும் குறிப்பிடுகின்றார்.

*விதியினால் பெடைமணக்கும்*
*மென்னடைய அன்னங்காள்*
*மதியினால் குறள்மாணாய்*
*உலகிரந்த கள்வர்க்கு*
*மதியிலேன் வல்வினையே*
*மாளாதோ என்றொருத்தி*
*மதியெலாம் உள்கலங்கி*
*மயங்குமால் என்னீரே (3)*

என்ற பாசுரத்தில் **'விதி'** என்பதற்குச் 'சாத்திர விதி' என்றும் **'பாக்கியம்'** என்றும் இரண்டு விதமாகப் பொருளுரைப்பர். பின்னதே சிறந்தது. இதனையொட்டி **நம்பிள்ளை** ஈடு **காண்மின்** : "பெருமாள் பிராட்டியைப் பிரிந்து கடலும் மலையும் அரித்துக் கொண்டு வாரா நிற்கச்செய்தே இராஜ்ய தாரங்களை இழந்து கிடந்த மகாராஜரைக் (சுக்கிரீவன்)

கண்டு. அவர் குறையைத் தீர்த்த பின்னரே தம் இழவில் நெஞ்சு சென்றது. அங்ஙனன்றிக்கே, இப்போது இவை குறைவற்றிருக்கின்ற இதுதான் இவள் பாக்கிய மாயிருக்குமிறே"

மேல் வருவதைத் தெரிந்து கொண்டு அதற்கிணங்கக் காரியம் செய்யல்ல சாதுரியமே 'மதி' எனப்படும்.[22] அப்படிப்பட்ட சாதுர்யத்தினால் மாணிக்குறள் கோல வடிவு காட்டி[23] யாசகனாயினான், 'அந்தக் குணத்தினால் என்னை ஈடுபடுத்தி என்னை இப்பாடு படுத்துவதற்காகவே' என்ற ஆழ்வார் நாயகியின் கருத்து 'மதியினால்' 'கள்வர்க்கு' என்ற சொற்களில் கண்டு மகிழலாம். 'கள்வம்' என்று முதலில் சிறிய வடிவினைக் காட்டிய பிறகு பெரிய வடிவானது வஞ்சகம் என்று கூறுவர் திருமாலையாண்டான்.[24] ஒன்றை நினைத்து

22. கீழே கழிந்து போன விஷயத்தைப் பற்றின உணர்வு 'ஸ்மிருதி' எனப்படும். மேலே வரப்போகிற விஷயத்தைப் பற்றின உணர்வு 'மதி' ஆகும். அப்போதைக்கப்போது நடக்க வேண்டிய உணர்வு 'புத்தி' எனப்படும்; முக்காலங்களையும் பற்றின உணர்வு 'பிரஜ்ஞை' எனப்படும்.
23. கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது என்ற உலக வழக்கும் இதனால் எழுந்தது.
24. 'கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பாதே' என்பது பழமொழி. நாடளாவிய புகழ்மிக்க கோவையைச் சார்ந்த ஜி.டி. நாயுடு அவர்கள் சொன்னது : திருமால் வரும்போது சரியான உருவத்தில்தான் வந்தான். கைநீட்டி வாங்கும் உள்ளத்திலிருந்த இழிகுணம் அவன் உருவத்தையே குறுகச் செய்து 'வாமனனாக்கி' விட்டது. இவர் நான் திருப்பதியில் பணியாற்றியபோது என்னுடன் ஒரு வாரம் தங்கியிருந்தார். திருப்பதி, ரேணிகுண்டா, பாக்காலா போன்ற இடங்களில் நான் முன்னின்று நிறுவிய தமிழ்ச் சங்கங்களில் பேச ஏற்பாடு செய்தேன். படித்துப் பட்டம் பெறாத விஞ்ஞானி. இவர்தம் கண்டுபிடிப்புகளில் ஒன்று பப்பாளிப் பழத்தின் இயல்பான சுவையை நீக்கி 'பாதம் அல்வா' சுவை போன்ற சுவையை விளைவிக்கும் புதிய பப்பாளி வகையை (விதையில்லா) உற்பத்தி செய்து காட்டியவர். தம்முடன் 6 பழங்களைக் கொண்டு வந்து சில இடங்களில் துண்டுகளாக்கி கூடியிருந்தோருக்கு வழங்கிச் சிறப்பித்தவர்.

ஒன்றைச் செய்தமாயமே '**கள்வம்**' என்பதாக எம்பெருமானார் (இராமாநுசர்) நிர்வகிப்பர்.

*முன்னன் குறளுருவாய்*
*மூவடிமண் கொண்டளந்த*
*மன்னன் சரிதைக்கே*
*மாலாகிப் பொன் பயந்தேன் (பெரி.திரு.9.4:2)*

என்ற பரகாலநாயகி(திருமங்கையாழ்வார்) வாக்கும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

'ஒருத்தி மதியெலாம் உள்கலங்கி மயங்குமால்' என்ற செய்தியைக் கூறிவருமாறு பணிக்கின்றாள். 'ஒருத்தி' என்றால் தெரியுமோ? இன்னாள் என்று குறிப்பிட வேண்டாவோ? என்னில்; வேண்டா; ஒருத்தி என்றபோதே அவள் பராங்குச நாயகி என்று அறிந்து கொள்வான்.

இங்ஙனம் மதியெல்லாம் உள்கலங்கி மயங்கும் படியாகத் தன்னால் செய்து வைக்கப் பெற்றவள் இந்நிலத்தில் பராங்குச நாயகி ஒருத்தி தவிர, வேறுயாரும் இல்லையாதலால் சிறப்பித்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இங்கே நம்பிள்ளை ஈடு: "ஒருத்தி என்றால் அறியுமோ? என்னில்; எய்தவன் கை உணராதோ? இன்ன காட்டில் மான் பெடை ஏவுடனே கிடந்து உழையா நின்றதென்று ஊரிலே வார்த்தையாடினால் எய்தவன் கை உணராதோ? 'நீயன்றோ எய்தாய்?' எனச் சொல்ல வேண்டாவிறே" என்பதாகும்.


பாசுரத்தின் இறுதி அடியின் நயத்தையும் கண்டு மகிழவேண்டும் "ஒருத்தி அறிவு கலங்கினாள்" என்று கூறுங்கள் அது கேட்ட எம்பெருமான் 'தன்னதான அறிவு கலங்கப் பெற்றாலும், நாம் கொடுத்த அறிவு இருக்குமே; அது கொண்டு ஆறியிருப்பள்' என்பன்; அப்போது 'மதியெலாம் கலங்கிற்று' என்று கூறுங்கள். அதுகேட்ட

எம்பெருமான் 'நாம் கொடுத்த அறிவு அப்படிக் கலங்கி விடாது; கலங்கினாலும் மேலெழச்சிறிது கலங்குமேயல்லது உள்ளே கம்பீரமாகவே இருக்கும்' என்பன். அப்போது 'மதியெலாம் உள்கலங்கிற்று' என்று எடுத்து இயம்புங்கள். அது கேட்ட எம்பெருமான் 'எல்லாம் கலங்கிப் போனால் என்ன? நாம் இருக்கிறோம். பின்பு நாம் அணுகும்போது அறிவு கொடுத்துக் கொள்ளுகிறோம்' என்பன். அப்போது 'மயங்குமால்' என்று கூறுங்கள். அதாவது 'முடியும் தருணமாயிற்று' என்று விளக்குங்கள்' 'மயங்கினாள்' என்று முடித்ததாகவே சொல்லிவிட்டால், 'அப்படியா? முடிந்து போய் விட்டாளா? இனிப் போய் நாம் என்ன செய்வது!' என்று சொல்லி ஒரு முழுக்கு போட்டு விட்டு நிற்பன். அப்படியின்றி 'அரைகுறையத்தலைகுறைய ஆனைக்கு உதவ ஓடிவந்தாற்போலே கடுக ஓடி வரும்படியாகச் சிறிது பசையிருப்பதாகச் சொல்லுங்கள்' என்கின்றாயிற்று.

'பூவை என்ற பறவையிடம் பேசுகின்றாள் பராங்குச நாயகி "ஏற்கெனவே உன்னை வேண்டிக் கொண்டிருந்தும், எனக்காக நீ தூது செல்லாது அசட்டையாய் இருந்து விட்டாய். நோயெனது நுவலென்ன நுவலாதே இருந் தொழிந்தாய்" என்கின்றாள்.

*சாயலொடு மணிமாமை*
*தளர்ந்தேன்நான் இனியுனது*
*வாயலகில் இன்னடிசில்*
*வைப்பாரை நாடாயே (8)*

என்று தற்கால நிலையைக் கூறுகின்றாள். சாயல் என்பது சமுதாயச்சோபை; இது வடமொழியில் 'இலாவண்யம்' எனப்படும். மணிமாமை என்பது அழகு. 'இவ்விரண்டும் நீங்கப்பெற்றேன்' என்கின்றாள். இங்ஙனம் இவள் சொல்லக் கேட்ட பூவை 'இதோ விரைந்து சென்று எம்பெருமானுக்கு அறிவிக்கின்றேன்' என்று புறப்படத் தொடங்கும்போது



'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'வைணவ இலக்கியமாமணி'
'தமிழ் வாகைச் செம்மல்'

**பேராசிரியர். டாக்டர். ந. சுப்புரெட்டியார்**

எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி., டி.லிட்.,

**இந்நூலாசிரியர் பற்றி...**
**89 - அகவையைக் கடந்தவர்**

**பணிகள் :**

1. 9 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941- 50)
2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக்கல்லூரி - தமிழ்ப் பேராசிரியர் - துறைத்தலைவர் (1950 - 60)
3. திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் ( 1960 - 1980)

**ஓய்வுக்குப் பின்னர் பணிகள் :**

1. 18 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சியம் தலைமைப் பதிப்பாசிரியர்.
2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மதிப்பியல் பேராசிரியர்.
3. சென்னைப் பல்கலைக் கழகம் - தமிழ் இலக்கியத்துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.
4. மதிப்பியல் இயக்குநர் - மரபியல் பண்பாடு நிறுவனம் (1995 - 2002) சென்னைப் பல்கலைக் கழகம்.

**பிற பணிகள் :**

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக் கழகங்களில் பல்வேறு பணிகள் - பொறுப்புகள். 125 நூல்களுக்கு மேற்பட்ட பல்துறை நூல்களின் ஆசிரியர்.

**பெற்ற பரிசுகள்** : 16 நூல்கள் பரிசு பெற்றவை.

**பெற்ற விருதுகள்** : 15க்கு மேல் - பல்வேறு நிறுவனங்கள் மூலம்.